புலோலியூர்
க. சதாசிவம்

# மூட்டத்தினுள்ளே




வீரகேசரி
பிரசுரம்

வீரகேசரி பிரசுரம்: 75

# மூட்டத்தினுள்ளே....!

எழுதியவர்:

புலோலியூர் க. சதாசிவம்

வெளியீடு
வீரகேசரி
த.பெட்டி 160,
கொழும்பு.

# MOODDATHINULLE

*Written by*: **K. SATHASIVAM**
"Kalai Aham"
Puttalai
Puloly South
Puloly

First Edition
**JULY 1983**

**Price Rs.** 150/-

COPY RIGHTS
RESERVED WITH
THE PUBLISHERS

VIRAKESARI
PIRASURAM **75**

Published by:

**VIRAKESARI**
P.O. Box: 160, COLOMBO.

Express Newspapers (Cey.) Ltd.
185, Grandpass Road, Colombo - 14.

# ஆசிரியர் முன்னுரை

ஈழத்துத் தமிழ் நாவலிலக்கியத்தை, தமிழ் இலக்கியப் பரப்பிலே மதிப்பிடுகையில் பிரதேசப் பண்பு முனைப்பாக மிளிர்வதை உணரலாம். பிரதேசம் வெறும் களமாக மட்டும் அமையாது, கதை மாந்தரின் வாழ்க்கைப் பின்னணியின் ஊடகமாக அமைய வேண்டும் என்பது என் கருத்து.

இது ஒரு மலையக நாவல். மலையகம் என்றால் என்ன? வெறும் மலையும், மலைசார்ந்த இடமும் மலையகமாகி விடாது. வரலாற்று நிர்ப்பந்தத்தால் பிழைப்புத்தேடிப் பிறந்த மண்ணை விட்டு இந்நாட்டிற்கு வந்த ஒரு மக்கட் கூட்டத்தின் சோகச் சரித்திரமே மலையகத்தின் வரலாறு. குடியுரிமை பறிக்கப்பட்ட நவீன அடிமை விலங்கு ஒரு புறம்; பலவித உருவில் அமுக்கி உருப்பட விடாத சுரண்டலின் சுமை மறுபுறம்!! இந்நாட்டிற்குள் அடியெடுத்து வைத்த நாள் தொட்டு இற்றை நாள் வரையுள்ள சோதனையும் வேதனையும் நிறைந்த மலையகத்தின் வரலாறு இந்நாவலில் இழையோடுகிறது.

பிரதேச இலக்கியத்தின் ஒரு பரிமாணமாக சமூகவியல், மானிடவியல், நாட்டுப் பண்பாட்டியல் ஆகிய அம்சங்களின் பகைப்புலத்தில்—இந்நாவலை அமைக்க முயன்றிருக்கிறேன். மலையகத்தின் மத்தியில் உருவாகியுள்ள பிரச்சினைகளையும் அவற்றுக்கான காரணிகளையும் ஆழமாக நோக்கி அறிவு பூர்வமாக அணுகிப் பெற்ற தரவுகளுடன் சூழலுக்கேற்ற, உணர்ச்சி பூர்வமான பாத்திரங்களை உருவாக்கி நாவலை வளர்த்துச் சென்றிருக்கிறேன்.

சாகித்திய மண்டலப் பரிசு பெற்றுள்ள எனது யாழ்ப்பாணப் பிரதேச நாவலாகிய 'நாணய'த்தையும் இம்மலையக நாவலையும் நான் ஒரே ஆண்டில்தான் எழுதினேன். கடந்த பதினெட்டாண்டுகளுக்கு மேலாக

தொடர்ந்து மலையகத்தில் வாழ்ந்து வரும் நான், நேர்மையின் ஒளியில் மானிடப் பரிவுடன் மலையகத்தை நோக்கியுள்ளேன். உழைப்பையே மூலதனமாக நம்பி வாழும் இம்மக்கள் பலவகை அவலங்களுக்குள்ளும் அபிலாஷைகளுடன் வாழத்துடிக்கும் மனிதப் பண்பினை இந்நாவலில் தரிசிக்கலாம்.

இதுவரை வெளிவந்த மலையக நாவல்கள் தராத ஒரு பூரணத்துவத்தை இந்நாவல் தரும் என மனப்பூர்வமாக நம்புகிறேன்.

எனது மலையகச் சிறுகதைகளின் தரத்தால் வெகுவாகக் கவரப்பட்ட மலையக முன்னோடி எழுத்தாளர் திருச்செந்தூரன் அவர்களே என்னை மலையக நாவல் எழுதத் தூண்டியவர். அன்னாரை இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூர்கிறேன். இந்நாவலைப் படைக்கும் போது உத்வேகம் அளித்த இளம் எழுத்தாளர்களான ஸ்ரீ தேவகாந்தன், புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் ஆகியோருக்கு என் அன்பு. வீரகேசரி 75 ஆவது வெளியீடாக எனது மலையகப் பரிசு நாவலை வெளியிட முன்வந்த பண்பாளரும், பழகுவதற்கு இனியவருமான வீரகேசரி புத்தக வெளியீட்டு நிருவாகி திரு. சி. பாலச்சந்திரன் அவர்கட்கு என் அன்பு என்றும் உரியது.

கலை அகம்,
புலோலி.

புலோலியூர் க. சதாசிவம்.

# இந் நாவலாசிரியர்...
# ஓர் இலக்கிய சாதனையாளர்!



* 1961 ஆம் ஆண்டு 'மரகதம்' மாத சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் - தனது 19 ஆவது வயதில் பரிசு பெற்று இலக்கிய உலகில் பிரவேசம்.

* 1971 ஆம் ஆண்டு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நடத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் முதற்பரிசாக தங்கப் பதக்கம்.

* 1972 ஆம் ஆண்டு நாவலர் சபை நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்று, நாவலர் 150 ஆவது ஜெயந்தி விழாவில் கௌரவம்.

* 1973 ஆம் ஆண்டு 'யுகப்பிரவேசம்' என்ற சிறுகதைத் தொகுதி.

* 1976 ஆம் ஆண்டு தமிழ் சாகித்திய விழா தொடர்பாக இலங்கை கலாசாரப் பேரவை நடத்திய இலக்கியப் போட்டியில் ஓரங்க நாடக எழுத்துப் போட்டியிலும் கட்டுரைப் போட்டியிலும் பரிசுகள்.

* 1978 ஆம் ஆண்டு 'வீரகேசரி' நடத்திய பிரதேச நாவல் போட்டியில் மலையக நாவலுக்கான முதற்பரிசு.

* 1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பிரதேச நாவலாகிய 'நாணய'த்திற்கு சாகித்திய மண்டலப் பரிசு.

* 1982 ஆம் ஆண்டு வர்த்தக கப்பற்றுறை அமைச்சைச் சேர்ந்த ஆக்கவுரிமைகள், வியாபாரக் குறிகள் பதிவகம் நடத்திய இலக்கியப் போட்டியில் அதி உன்னத படைப்பாக சிறுகதைத் தொகுதி தெரிவு செய்யப்பட்டு ஐயாயிரம் ரூபா பரிசு பெற்று ஈழத்தில் இதுவரை இலக்கியத்திற்காக ஆகக் கூடிய தொகை பரிசு பெற்ற சாதனை.

புலோலியூர் க. சதாசிவம் கட்டுரையாக்கம், வானொலி நாடகப்பிரதி எழுதுதல் ஆகியவற்றிலும் ஈடுபாடுடையவர். இவர் சிங்கள இலக்கிய உலகத்திற்கும் அறிமுகமானவர். 'அக்கா ஏன் அழுகிறாய்' என்ற சிறுகதை சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு சிங்கள சிறுகதைத் தொகுதி ஒன்றில் இடம் பெற்றிருக்கிறது.

புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பண்டாரவளை டைறபா பெருந்தோட்டத்தில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றுகிறார். இவரது மனைவி ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியை. கலையழகன், கலைவாணி என்ற குழந்தைகள் உளர்.

ஈழத்துப் புனைகதை இலக்கியத்திற்கு அணியும் வளமும் சேர்க்க வேண்டுமென்பது இவரது ஆசையாகும்.

வெளியீட்டாளர்


## அடுத்த வீரகேசரி பிரசுரம்

வீரகேசரி 1978 ஆம் ஆண்டு நடத்திய பிரதேச நாவல் போட்டியில் கொழும்பு - நீர்கொழும்பு மாவட்டத்திற்கான சிறந்த நாவலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட

# "மனித நிழல்கள்"

(சமூக நாவல்)

கே. விஜயன்

எழுதியது.

# மூட்டத்தினுள்ளே...!

அந்தத் தோட்டத்து அன்றைய நாளின் உழைப்பின் ஆரம்பத்தை அறைகூவி அழைப்பது போல் முதற் சங்கொலி எண்டிசையும் பரந்தொலிக்கிறது.

தோட்டம் முழுவதும் பனிமூட்டத்துள் மூழ்கிக் கிடக்கிறது.

ஆண் தொழிலாளர்கள் சிலர் போர்வையாலும், சிலர் வேட்டியாலும் போர்த்துக்கொண்டு ஊசிமுனையாக் குத்தும் அக் கடுங் கூதலை ஈடுசெய்யமுடியாமல் நடுங்கிக் கொண்டே பிரட்டுக் களத்தை நோக்கி விரைகிருர்கள்.

எந்தக் கூதலையும் தாங்கக்கூடிய மேனாட்டு 'ஸ்வெட்டரும்' குரங்குத் தொப்பி என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பனிக்குல்லாத் தொப்பியும் அணிந்து சிகரெட்டைப் புகைத்தவண்ணம் உடலுக்கு சூடேற்றிக்கொண்டிருக்கும் கண்டக்டர் கொழுந்துமடுவத்தை வந்தடைந்துவிட்டார். அவரைப் புடைசூழ்ந்து சின்னக் கணக்குப்பிள்ளையும் 'சூப்பர்வைசர்'மார்களும் நிற்கிருர்கள்.

கொழுந்து மடுவத்துக்கு வெளியேதான் பிரட்டுக்களம் அமைந்திருக்கிறது.

சிறைக் கைதிகள் போலக் கைகட்டி, ஒருவர்பின் ஒருவராய் நிரையில் பிரட்டுக் களத்திற்கு ஆஜராகியிருக்கும் தொழிலாளர்களை மூக்குக் கண்ணுடியின் கீழ்க் கண்களால்

கண்டக்டர் ஒரு கணம் நோட்டம் விடுகிறார். யாரோ ஒருவனை அவர் கண்கள் தேடுகின்றன. அவர் தேடும் பெருமாள் அங்கேதான் நிற்கிறான். அவன் நிற்குமிடத்தில் நிரை நெளிந்து வளைந்திருக்க, வாலிபர்கள் சிலர் அவனுடன் ஏதோ பேசிக்கொண்டிருக்கின்றனர். மழை, காற்று, பனி, வெயில் இவற்றுடன் போராடி அனுதினமும் உடலுழைப்பில் நசியும் எல்லோர் முகங்களிலும் நிரந்தர வாட்டம் குடிகொண்டிருப்பது போலிருக்கிறது. கறுத்து, சூம்பி, வாடிய முகங்கள்; சுருங்கி ஒடுங்கிய கன்னங்கள்; காவி படிந்த பற்கள்...! அவர்களுள் சிறிது வாட்டசாட்டமானவனும் எந்தக் கூட்டத்தில் நின்றாலும் துடிப்பான செயல்களால் இனங்காணக்கூடியவனுமே பெருமாள்.

சாக்குக்கார சங்கிலி கொழுந்துமடுவக் காம்பராவைத் திறந்து உயர்ந்த மேசையொன்றை எடுத்து வெளியே வைக்கின்றான். உயர்ந்த ஆஜானுபாகுவான தோற்றமுடைய கண்டக்டரின் நெஞ்சளவு வளர்ந்து, முற்பகுதி உயர்ந்து பிற்பகுதி பதிந்த அந்த மேசையில் கைகளை ஊன்றி அதன்மேல் பிரட்டுத் துண்டை வைத்துக்கொண்டு பிரட்டுக் கலைக்க ஆரம்பிக்கிறார் கண்டக்டர். அப்பொழுதுதான் மூச்சிரைக்க ஓடிவரும் சிலர், ஐயாவுக்குத் தங்கள் வரவைக் காட்டி சலாம் வைக்கிறார்கள். அவர்களது சலாமிலுள்ள குழைவு, சுணங்கி வந்தமைக்கு மன்னிப்புக் கேட்கிறது.

பெருமாளை அண்டி நிற்பவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்வது பேரிரைச்சலாகக் கண்டக்டரின் செவிகளில் விழுகின்றது. ''இதென்ன பெரட்டுக்களமா இல்லாட்டி லயமா?''—கண்டக்டரின் குரல் அதிகாரத்துடன் ஒலிக்கிறது. அவரது பார்வை மீண்டும் பெருமாளை விழுங்குகிறது. மனம் கறுவிக்கொள்கிறது. 'நேத்து சின்னபீசிலே எங்ககூட எவ்வளவு ருங்கி பேசுனான். சின்னதொர கூடவே முட்டிக்கிட்டானே. ஐயா மாருட்டு சங்கதியளப் புட்டுப்

புட்டுக் காமிக்கப்போருனுமே. நா இருவத்தைஞ்சு வருச சர்வீசுல இவனப்போல எத்தன தலவருமாரை கண்டுட்டேன்.'

அவர் ஒவ்வொரு தொழிலாளியையும் அன்றைக்குச் செய்யவேண்டிய வேலேக்குத் தள்ளுகின்றூர்.

''இன்னிக்கு பத்தேக்கர் துண்டு கவாத்துக்குப் பத்துப் பேரத்தான் போடுறது. சின்னத்தொர சொல்லிட்டாரு. கவாத்து வேலயால மத்த வேலயெல்லாம் சுணங்கிப் போச்சுன்னு புதுமலே வேலயும் இன்னிக்கே தொடங்கணும். கவாத்துக்கு வீரன், மொட்டையன்...... பெருமாள்...'' கண்டக்டர் மீண்டும் பெருமாளேக் கடைக் கண்களாற் பார்க்கிறூர்.

பெருமாள் முகம் சற்று சிவக்கிறது. இந்த ஏற்பாடுகளெல்லாம் ஏனென்று அவனுக்கு ஒரு கணத்தில் புரிகிறது. 'கண்டாக்கு கரைச்சல்கொடுக்கத் தொடங்கிட்டான்...!'

''ஐயா, நம்ம லயத்துக் கோடியில செடிக மண்டிருச்சி நேத்து ராத்திரியில திடுதிடுன்னு பாம்பு வந்திருச்சி. ஒரு ஆளப் போட்டா நல்லதுங்க.'' 'ஐஸ்' அய்யாச்சாமி லேசு வேலேக்கு அடி போடுகிறுன் என்பதை உணர்ந்த கண்டக்டர், ''டாக்டரய்யாக்கிட்ட போய் துண்டு வாங்கிட்டு வா'' என்று 'தட்டிக்கழிக்கிறூர். கண்டக்டர் பிரட்டுக் கலேத்து முடிகிறூர்.

ஐயாவின் அனுசரணேயுடன் சிலர் பிரட்டுக்கு வராமலே வேலேக்குப் போவார்கள். பிரட்டுத் துண்டில் குறிக்கப்பட்ட தொகையினரில் ஒன்றிரண்டு குறைவாகவே வேலேக்குப் போவர். அதுஐயாவின் தேவையைப் பொறுத்திருக்கும். சிலருக்கு பிரட்டுக்கு வராமலும் வேலேக்குப் போகாமலும் 'பேர்' விழும்.

தொழிலாளர்கள் லயத்தை நோக்கிப் போகின்றனர். மரக்கறிகள் எட்டிப்பார்க்கும் கூடை ஒன்றுடன் நாட்டிலி

ருந்து வரும் ஆரியதாசா, ஐயாவுடன் பங்களாவிற்குப் போவதற்காகத் தயங்கித் தயங்கி நிற்கிறுன். வழக்கம் போல மாரிமுத்துக் கங்காணி ஐயாவுடன் பலதும் பத்தும் பேசிக்கொண்டிருக்கிறுன்.

மூட்டம் கலேயவில்லே. பெருமாள் செல்லும் பாதையின் முன் சிறிது தூரம் மட்டும்தான் தெளிவாகத் தெரிகிறது.

பெருமாள் தோட்டத்தில் செய்யாத வேலேயே கிடையாது. எந்த வேலேக்குத் தள்ளினுலும் முகம்சுளிக்காமல் செல்லக்கூடியவன். ஆனல் கடந்த ஒரு மாதமாக கவ்வாத்து வெட்டுவதென்ருல்...! கவ்வாத்து வெட்டுவது சிறிது கடினமான வேலேதான். காலேயிலெழுந்திருக்கும் போது கைகால் மூட்டுக்கள் கழருவதுபோல் வலியெடுக்கும். தொடர்ந்து எல்லோரும் கவ்வாத்து வெட்டினல் இன்னுமொரு கிழமைக்குள் கவ்வாத்து முடிந்துவிடும்.

'இது ஐயாவூட்டு வேலதான். என்ன இம்சப்படுத்துறதுக்காக இன்னும் இருவது நாளக்கி இழுத்தடிக்கப் போருரு.' பெருமாள் உள்ளங்கைகளே உராய்ந்து உடலிலும் உள்ளத்திலும் உரமேறக் கீழுதட்டைக் கடித்துக் கொள்ளுகிறுன். 'நம்ம கைகால்ல பெலமிருக்கிறவரெய்க்கும் வுட்டுக் கொடுக்குருப்போல இல்ல.'

மேட்டு லயத்துக்குப் பெருமாள் வந்துவிட்டான். தொழிலாளர்கள் வாழும் லயங்கள் துடிப்புடன் இயங்கிக் கொண்டிருக்கின்றன. வேலேக் காட்டிற்குப் போகவேண்டுமென்ற அவசரம் எல்லோருக்கும். தீட்டுக்கட்டையை எடுத்துக் கவ்வாத்துக் கத்தியை கூராக்குகிறுன் பெருமாள். அவன் கைகள் கத்தியைத் தீட்டுகின்றன. அவன் காதும் மனமும் அடுத்த காம்பரா அஞ்சலே வீட்டில் நடக்கும் உரையாடலே உள்வாங்குகின்றன.

''ஆயா எனக்கு ரொட்டி பத்தாது.''

''நா என்னுடா செஞ்சித் தொலெக்க. இன்னிக்கு அந்திக்கு அரிசி மாவு போடுவாங்க. இருக்கிற மாவுல ரொட்டி தட்டிருக்கேன். பவலெக்கி ஒப்பத்திக்கலாம். அப்புரம் அந்திக்குப் பாத்துக்கலாம்.

''ஆயா எனக்கு நேத்திக்கும் பாதி ரொட்டிகூடக் கெடைக்கிலியே.''

''இந்தக் கண்ராவியப் பாக்காமலே ஓங்கப்பன் கண்ணமூடிட்டாரு. நாகெடந்து வதபடுறேன்.''

பெருமாள் அடுத்த காம்பரா அஞ்சலெக்காக இரங்குகிறுன். பாவம், அவள் புருசன் ஒரு மொட்டும் இரு இலெகளுமாக வயிற்றில் ஒன்றையும் கையில் இரண்டையும் பாரங்கொடுத்துவிட்டு, ஒரு வருடத்துக்கு முன்புதான் தேயிலெக்கு உரமானுன்.

அஞ்சலெ வீட்டில் ஒவ்வொரு கிழமையும் இப்படித்தான். அந்தத் தோட்டத்து மேற்கணக்குக்கு செவ்வாய்க் கிழமைதான் அரிசி போடுவார்கள். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பே பலருக்கு அரிசியும் மாவும் முடிந்துவிடும். மிகுதி நாட்கள் அரை வயிறும் கால் வயிறுமாகக் கழியும். அஞ்சலெ இன்று சாயத் தண்ணீர் மட்டுந்தான் குடித்துவிட்டு மலெக்குப் போகப்போகிறுள். தனது தாயிடம் தேயிலெத்தூள் கடனுக வாங்க அஞ்சலெ வரும்போதே அவனுக்குப் புரிந்துவிட்டது. 'இன்னெக்குத் தேதி எத்தன? இன்னும் தோட்டத்துல தூளு போடல. மலெக்காட்டுல மாடா ஒழய்க்கிற நம்மளுக்கு வயிருர சாயத்தண்ணிகூட குடிக்க முடியலியே. தேயிலெத்தூளும் வெளிநாட்டுலருந்து கப்பல்லயா வருது. இதுகள தொரைக்கிட்ட கேட்டா நாம ராங்கிக்காரன்.'

''பெருமாளு ஒனக்கு ரொட்டி சுட்டு வச்சிருக்கேன். இன்னிக்கு எங்களுக்கு நாட்டுத் தொங்க மலெக்கொளுந்து

நா பொறப்படப் போறேன்.'' தாய் செல்லாயியின் அழைப்பு அவளின் சிந்தனையைக் கலைக்கிறது.

''சரிங்க ஆயா'' என்று கூறிக்கொண்டு கவ்வாத்துக் கத்தியைப் பளபளக்கத் தீட்டுகிறான் பெருமாள்.

''என்ன தலவரய்யா கவாத்து இன்னும் முடியலயா? பொழைக்கத் தெரியாத தலவரு. அய்யாவும் சின்னத் தொரயும் குடுத்த கங்காணி வேலய வேணுமுன்னிட்டு இடுப்பு முறிய மலையில கஷ்டப்படுறாரு... பாவம்.'' கணீரென்ற வெண்கலக் குரலொலிக்க பூவாயி கூறிக்கொண்டு பெருமாளின் காம்பரா வாசற்படியை நோக்கி வருகிறாள். தலையிலே கொழுந்துக் கூடையுடனும், கையிலே மட்டக் கம்புடனும், வழக்கம்போல நெற்றியிலே விபூதி துலங்க சாந்துப் பொட்டிட்டு சிரித்த முகத்துடன் ஸ்தோப்பு வாசலில் நிற்கிறாள்.

பெருமாள் நிமிர்ந்து அவளைப் பார்க்கிறான்.

''அத்தை பொறப்பட்டுட்டீங்களா? வெறசாப் பொறப்படுங்க. நாட்டுத் தொங்கபோக எத்தினி மணியாகுமோ! பிந்திப்போனா கங்காணி வெரட்டிப்புடுவாரு.''

செல்லாயி, நேற்று மழையில் நனைந்து இன்னும் உலராத சாக்குப் படங்கை இடுப்பில் கட்டி, தலை வேட்டியால் கொங்காணி போட்டு, லயத்துக் காம்பரா வாசலில் தொங்கிக்கொண்டிருந்த கூடையை இலாகவமாக தலையில் மாட்டிக்கொண்டு வேலைக்குப் புறப்பட்டுவிட்டாள்.

''தலவரய்யா வரட்டுங்களா?'' என்கிறாள் பூவாயி, பெருமாளை ஓரக்கண்களால் பார்த்துக்கொண்டே. பெருமாள் தனக்குள் சிரித்துக்கொள்கிறான். 'கிண்டல் பேச்சு பூவாயிய உட்டுப் போகாதுபோலிருக்கே!'

இரண்டாம் சங்கு அலறுகிறது. அச் சங்கொலி 'வெரசா வேலக்காட்டுக்குப் போங்க' என எல்லோரையும் லயத்தைவிட்டுத் துரத்துகிறது.

பெருமாளுக்கு ரொட்டி தொண்டைக்குள் இறங்க மறுக்கிறது. அஞ்சலையின் குழந்தைகளின் நினைவு மேலோங்க ரொட்டியை எடுத்துக்கொண்டு அஞ்சலையின் காம்பராவுக் குள் புகுந்து அவர்களின் கைகளில் கொடுக்கிறுன்.

''ஏன் பெருமாள் இதெல்லாம் நாந்தான் அவுங்க ளுக்கு வவுரு ரொம்ப ரொட்டி சுட்டுக் கொடுத்துட் டேனே.''

''பரவாயில்ல அஞ்சல, அவுங்க வச்சி சாப்புடட்டும்.''

மூட்டத்துடன் மழையும் மெல்லத் தூறுகிறது. அஞ் சலை வேலைக்கு அவசரமாகப் புறப்படுகிருள். அவளது தலை யில் கூடை தொங்குகிறது. தூங்கிக்கொண்டிருக்கும் குழந்தை அவளது தோளில் நிறுவைத் தட்டிலே போடும் கொழுந்துபோலத் துவண்டு துவண்டு விழுகிறது, குழந் தையை வாடை சீண்டி விளையாடுகிறது. ரெட்டால் குழந் தையை மூடிமறைக்க அஞ்சலையின் உடல் மழையில் நனை கிறது. பெருமாள் பின்செல்கிருன், பிள்ளைக் காம்பரா வில் நொண்டிக் கிழவியிடம் குழந்தையை அஞ்சலை திணிக் கும்பொழுது, அது வீலென்று கத்துகிறது. பிள்ளை மடு வம் தெப்பக்குளமாகக் கிடக்கிறது, பெருமாள் பெருமூச் சுடன் பிள்ளைக் காம்பராவைப் பார்க்கிருன்.

பெருமாள் போகும் வழியில் உள்ள மலையில் பெண் கள் கொழுந்தெடுக்கிருர்கள். ஒரு பெண் முதற்பிடி கொழுந்தைக் கூடைக்குள் போடும்போது, 'பொலி பொலி பொலி...' என்றெழுப்புங் குரல் பெருமாளுக்கு மெல்லக் கேட்கிறது. குரலினிமை குரலிற்குரியவளை இனங் காட்டிக்கொடுக்கிறது. 'ஆமா அது சோமாவதிதான்.'

அவளது கைகள் ஒரு மொட்டையும் இரு இலைகளை யும் கொண்ட தளிர்களைக் கொய்யும் கைங்கரியத்தில் ஈடு பட்டிருக்க, முகந் திரும்பி பெருமாளைப் பார்த்துப் புன்ன

கைக்கிறது. பெருமாள் சிரித்துக்கொண்டே முன்னேறு கின்றான்.

அவனைக் கண்டதும் மாரிமுத்துக் கங்காணியின் குரல் ஓங்காரமாய் ஒலிக்கிறது. "இந்தா புள்ள ஒசந்த வாத ஓடச்சிப்போடு முத்தெல இல்லாம, மூட்டுப் புடுங்கு இல் லாம கிள்ளுங்க. இந்தா பாப்பாத்தி ஒன் நிரையில மட் டத்துக்கு மேல முடிச்செல்லாம் ஒடய்க்காம கெடக்கு."

மூட்டத்தினூடே மாரிமுத்துக் கங்காணி பெருமாளை முறைத்துப் பார்ப்பது தெளிவாகத் தெரிகிறது. பெரு மாள் வலிந்து சிரிப்பை வரவழைத்துக்கொள்கிறான்.

ஸ்டோருக்குக் கிட்ட வந்துவிட்டான் பெருமாள். இராட்சதனொருவன் மூச்சு விடுவதுபோல் இயந்திரங்களை ஓட்டும் மோட்டார் சத்தம் கேட்டுக்கொண்டிருக்கிறது. தேயிலைக்கொழுந்து அரைக்கும் வாசனை அவனது மூக்கைத் துளைக்கிறது. ஸ்டோருக்கு முன்னுள்ள வாசலில் டீமேக் கரின் கார் அவனைத் தாண்டிப்போகின்றது. பெரிய கிளாக்கரின் பிள்ளைகளும், டீமேக்கரின் பிள்ளைகளும் காரில் டவுன் ஸ்கூலுக்குப் போகிறார்கள்.

பெருமாளின் நடை விரைகிறது.

மூட்டத்தின் மறைவில்—தூரத்தில் வருவது அதன் உறுமலொலியில் பெரிய துரையின் 'வேனெ'ன இனங்கண்டு தேயிலைக்குள் ஒதுங்கி 'சலாம்' வைக்கும் ஏற்பாட்டுடன் 'வேனைக்' கூர்ந்து பார்க்கிறான் பெருமாள். வேனில் துரை யில்லை. டிரைவர்தான்'வேனை'ஓட்டிவருகிறான். 'வேனின்' முன்னாசனத்தில் துரைசாணியும் பின்னாசனத்தில் துரை யின் நாயும் இருப்பது தெளிவாகத் தெரிகிறது. பெருமாளுக்கு அப்பொழுதுதான் அவன் லயத்திலிருக்கும் மூன்றாவது அப்பையா காலையில் சொன்னது நினைவுக்கு வருகிறது. "தொரவூட்டு நாய்க்கி சொகமில்ல. தொர சாணி காலையில நாய டவுனுக்கு எடுத்துக்கிட்டுப் போற

துக்காக என்ன நேரத்தோட பங்களாவுக்கு வரச்சொன்னுங்க.''

'நாய்க்கு சொகமில்லன்னு 'வேன்' இருக்கு. தோட்டத்துல மாடா ஒழய்க்கிற நம்மளுக்கு சொகமில்லன்னு ஆசுப்பத்திரிக்குப் போக வேனில்ல. பாவம், அன்னிக்கு லொறி நேரத்துக்குக் கெடச்சிருந்தா வவுத்துப் பிள்ளைக் காரி மாரியாயி பொழைச்சிருப்பா- இதைக் கேட்டா நாம கொழப்பக்காரன். நேத்து சின்னுபீசிலே தொரய்க்கி எவ்வளவு கோபம் வந்திருச்சி. நா தப்பா ஒன்னும் கேக்கலியே! ''தொர இப்பவும் நம்ம தோட்டம் கம்பனி தோட்டமில்ல, அரசாங்கத் தோட்டம், தொரமார், ஐயாமார் தொழிலாளிங்க எல்லாரும் தோட்ட வேலைக்காரங்கதான். எங்களுக்கிருக்கிற உரிமை மத்தவங்களைவிட கொறஞ்சதில்ல''ன்னு கேட்டேன். இது தப்பா என்ன?'

எங்கோ பூச்சிகளுக்கு மருந்தடிக்கும் மெஷினின் சத்தம் தெளிவாகக் கேட்கிறது. மருந்தடிக்கும் தொழிலாளியின் உருவம் மூட்டத்துள் மறைந்து கிடக்கிறது.

பெருமாள் இடது கையிலிருந்த கத்தியை வலது கைக்கு மாற்றிக்கொள்கிருன், இடது காலில் ஏதோ தட்டுப்பட காலைத் தடவிப் பார்க்கிருன். கையில் இரத்தம் தோய்ந்திருக்கிறது. அட்டையொன்று காலில் கடித்து இரத்தத்தை உறிஞ்சிவிட்டு எங்கோ விழுந்திருக்கவேண்டும். இரத்தம் மட்டும் வடிந்துகொண்டிருக்கிறது.

பெருமாள் கவ்வாத்து மலைக்கு வந்துவிட்டான். மற்றத் தொழிலாளர்கள் வேலை ஆரம்பிக்கு முன்பு ஒரு வாய் வெற்றிலை போட்டுக்கொள்கிருர்கள்.

பெருமாள் நேற்று வெட்டப்பட்ட கவ்வாத்து மலையை ஒரு கணம் நோட்டம் விடுகிருன். அவன் வெட்டிய நிரையில் பின்னல் வாது, பீலிவாது ஒன்றுமேயில்லை. முகங்கள்

ஒரு பக்கமாகத் திருப்பப்பட்ட 'பொட்டு' வெட்டுடன் நிரை அழகாக இருக்கிறது. அடுத்த நிரையில் மொட்டையன் தவறுதலாக விட்ட 'நாய் முடிச்சு' வாதை ஒட்ட எடுக்கிறான் பெருமாள்.

அட்டை கடித்த காலில் இன்னும் இரத்தம் வடிந்து கொண்டேயிருக்கிறது. பெருமாள் இரத்தத்தைத் துடைத்துக்கொண்டு தொங்கல் நிரைக்கு வருகிறான். புல்லுக்கானில் மனித வாடையை மோப்பம்பிடித்து இரண்டு மூன்று அட்டைகள் உயர்ந்து ஆடிக்கொண்டு நிற்கின்றன. அவன் ஜாக்கிரதையாக இருக்கிறான். மலையாண்டி அடிக்கடி சொல்வதை பெருமாள் நினைத்துப்பார்க்கிறான். 'வெள்ளைக்கார அட்டைங்க நம்ப ரத்தத்தை ஒட்ட உறிஞ்சிட்டுப் போயிட்டாங்க. இப்ப இந்தக் கறுத்த மனுஷ அட்டைங்க நம்ம ரத்தத்தைக் குடிக்குது. அதுங்கக்கிட்ட ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்.'

பெருமாள் கவ்வாத்து வெட்டும் வேலையுடன் ஒன்றி விடுகிறான்.

பொழுது விடிந்து எவ்வளவோ நேரமாகியும் இன்னும் பனிமூட்டம் விலகாமல் சூரிய ஒளியை விழுங்கி சாம்பல் நிற மேகமண்டலமாக எங்கும் கவிந்திருக்கிறது.

## (2)

மலையாண்டி பெருமாளின் வரவுக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றான். பெருமாளின் லயத்துக் காம்பரா ஸ்தோப்பிலிருக்கும் சின்ன மேசையில் தன் கையிலிருந்த பேப்பரை விரித்துவைத்துப் படிக்கிறான்.

'என்ன தம்பி நல்லா இருட்டிரிச்சி இன்னும் அரிசி புடிக்கப்போன பெருமாள் காணலியே. பொட்டு இன்

னுமா முடியல!" காம்பராவின் உள்ளிருந்து வந்த செல்லாயி, மடியிலிருந்த கொக்கணியை அவிழ்த்து வெற்றிலையை எடுத்து வாய்க்குள் குதப்பியவண்ணம் கூறுகிறாள்.

"நம்ம அரிசிக் கௌாக்கரூட்டு சங்கதி தெரியாதுங்களா? சங்கு அடிச்சபெறவுதான் அரிசி போடத் தொவங்கியிருப்பாரு. கடசி பெரட்டு வர நல்லா இருட்டீரும்."

மலையாண்டி சொல்வதைக் காதில் வாங்கியவண்ணம் குசினிக்குள் சென்று பலகைக் கட்டையை எடுத்து வந்து ஸ்தோப்பில் வைத்து அவன் முன் உட்காருகிறாள் செல்லாயி.

"என்ன எழவோ இனி எத்தினி மணிக்கு அரிசி தீட்டி சோறாக்கிச் சாப்புடுறது. இந்தப் பயணமும் 'நிமுடு' அரிசிதான்னு மலையில பொம்பிளக பேசிக்கிட்டாக. நம்மதோட்டத்துக்கு பயணம் பயணம் இந்த அரிசிதான் வருது. நம்ம அய்யா எங்கிருந்துதான் கொண்டுவாராரோ?"

"டவுனிலும் நாட்டிலும் நல்ல அரிசி கொடுக்கிறாங்க. தோட்டத்துக்கு மட்டும் ஏந்தா இந்த அநியாயமோ?" மலையாண்டி பெருமூச்சு விட்டுக்கொண்டே சொல்கிறான். கையிலிருந்த புகையிலைத் துண்டால் வாய் விளிம்பைத் துடைத்து வாய்க்குள்ளே அடக்கிக்கொண்டே செல்லாயி கேட்கிறாள்.

"தம்பி நம்ம சின்னப்பாப்பா சொகமா இருக்குதா?"

"இல்ல அத்த நேத்தும் நம்ம தோட்டத்து டாக்டரய்யாக்கிட்ட மருந்து எடுத்தாங்க. இப்ப கொஞ்சம் தேவல."

சின்னப் பாப்பா என்று எல்லோராலும் அழைக்கப்படுவது செல்லாயியின் மூத்த மகளான பொட்டுவின் கடசி மகளைத்தான். பொட்டுவை இதே தோட்டத்துப் பணியக்கணக்கிலுள்ள மலையாண்டியின் அண்ணனான காத்தமுத்துவிற்குக் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள்.

சின்னப்பாப்பா சுகமாக இருக்கும் நாட்களைவிட சுக மில்லாமலிருக்கும் நாட்களே அதிகம். மலையாண்டி சின் னப் பாப்பாவின் உடல்நிலை பற்றியும் அதற்குரிய கார ணம் பற்றியும் சிந்திக்கிறான். சின்னப்பாப்பா பிறந்த போதுதான் தோட்டத்திலே அந்தக் கொடிய பஞ்சம் நிலவியது: அன்றாடக் கஞ்சிக்காக தங்க நகைகளை மட்டு மின்றி வீட்டுப் பாத்திரங்களையும் அடகு வைத்தும் விற் றும் 'இனி என்னத்தை விற்க' என ஏங்கிய அந்த நாட் கள்...... தோட்டங்களின் ஊத்தைக் கான்களில் வளர்ந்த கீரை போன்ற புல்லுகளையும், கருஞ் சேம்புக் கிழங்கு களையும் கிண்டித் தின்று பசியைப் போக்கிய நாட்கள்...! லயத்து நாய்கள், பென்சன் எடுத்த கிழடுகள் லயம் லய மாக, நாளுக்கு நாள் பட்டினியால் செத்த நாட்கள்...! அப்போதுதான் சின்னப்பாப்பா வயிற்றிலே கருவாகி வளர்ந்து பிறந்தாள். உடலுறுப்புகள் போஷாக்கின்மை யால் ஊறு அடையுமென்பதற்கு அசல் உதாரணமாக சின்னப்பாப்பா இருக்கிறாள். மூன்று வயதாகியும் ஒரு வயதுக் குழந்தையின் நிறையும், குச்சிகள் போன்ற கை கால்களும், ஏனைய உறுப்புக்களைவிட பார்வைக்கு முன் னிற்கும் உப்பிய வயிறும் திடீரென்று திடுக்கிடும் சுபாவ மும்......!

செல்லாயி வாயில் குதப்பியிருந்த வெற்றிலையை அசிங்கமாக பலகைக் கட்டையிலிருந்தவாறே வெளியே துப்புகிறாள். பாதி வெளிக் கானிலும் பாதி ஸ்தோப்பு வாசலிலும் தெறிக்கிறது.

''தம்பி எனக்கு கைகால் ஒரே கடுப்பாயிருக்கு. ராத்திரியில சுள்ளு சுள்ளுன்று குத்திக்கிட்டே இருக்கு. ஒரு பொட்டுத் தூக்கமுமில்லே. பவல் பூராவும் மலையில அலைஞ்சிட்டு ஊட்டுக்கு வந்தா ஒரு நாதியுமில்ல. நாந் தானே எல்லா செய்யவேண்டியிருக்கு பெருமாளூட்டுக் கண்ணுலக் காச்சியக் கண்டுட்டா... ! ஊட்டுக்கு ஒரு லெச்

சுமி வந்துட்டா நாம கொஞ்சம் ஓஞ்சிக்கலாம். பெரு மாள்ன்னு, 'அதுக்கென்னுயா அவசரம்' அப்பிடிங்கிருன்.''

''ஏங்கத்த எங்காச்சும் பாத்து வச்சிருக்கிறீங்களா?''

''ஆமா தம்பி நம்ம ரெண்டாவது மக வேலாயியக் கட்டிக்குடுத்திருக்கோமே. தலவாக்கொல்லே பசுமலத் தோட்டம் அவளூட்டுக் கொழுந்தியா ஒருத்தி இருக்கா மூக்கும் முளியுமா......அவ பேரு மரகதம். கொழுந்தெடுக் குறதுல ஆள் கெட்டி. எங்கள அவங்க தோட்டத்து மாரி யம்மன் கோவில் திருவிழாவுக்கு வரச்சொல்லி ஒவ்வொரு வருசமும் கரச்சல். மூணும் மாசம் அவங்க வூட்டுக்கு விருந் தாடி போயிருந்தோம். நாங்க போனப்போ அந்தப் புள்ள மலேயிலதான் இருந்திச்சி. காலயில ஒம்பது மணீ யாகல கூடை ரொம்பிருச்சி, மடிகட்டி எடுத்துக்கிட்டி ருந்தா அன்னிக்கு அந்தப் புள்ளய்க்குத்தான் இருத்த— கிலோ கூடவாம், மாசாமாசம் நல்ல சம்பளமும் எடுக் குமாம். நேத்துக்கூட வேலாயிவூட்டுக்காரன் காயிதம் போட்டிருந்தான். அவுங்களுக்கு ரொம்பப் பிரியமாம்.''

''மச்சான் என்ன அத்தை சொல்லுறுங்க?''

''அவனுக்கிப்ப கண்ணுலமே வேணுமாம். அவனுக்கு தலேவரு வேல வேற கெடச்சிருக்கு. அய்யாமாரோடை யும் தொரமாரோடையும் முட்டிக்கிட்டிருக்கான்.''

''அக்கா இன்னும் பெருமாள் வரில்லியா? எம்மவ னும் அவருகூட அரிசி புடிக்கப்போயிருந்தான்.'' அடுத்த காம்பரா அஞ்சலேயின் குரல் கேட்டு செல்லாயி திரும்பிப் பார்க்கிருள். அவளது தலே மட்டும் வாசலில் எட்டிப் பார்க் கிறது. அவள் அங்கு வந்து எவ்வளவு நேரமோ? செல் லாயி—மலேயாண்டி சம்பாஷணையைக் கேட்ட காரணத் தாலோ அல்லது மலேயாண்டி அங்கிருப்பதால் ஏற்பட்ட கூச்சமோ என்னமோ அஞ்சலேயின் குரல் கரகரத்து ஒலிக் கிறது.

''இல்ல அஞ்சல இன்னும் காணலியே.''

''சரிக்கா நா போயிட்டு அப்புறமா வாரேன்.''

அப்பொழுதுதான் பெருமாளும் அஞ்சலையின் மகன் காளிமுத்துவும் அரிசி பிடித்துக்கொண்டு மேட்டு லயத்துப் படிக்கட்டில் ஏறுகிறார்கள்.

''ஏழைங்க வவுத்தில அடிக்கிறவுங்க நல்லா இருப்பானுகளா?'' பெருமாளின் குரல் ஆத்திரத்துடன் ஒலிக்கிறது.

அஞ்சலை லயத்துக் காம்பரா வாசலுக்கு வந்துவிட்டாள்.

''ஒங்கவூட்டு அரிசியில ஒன்னர ரூத்தலும் மாவுல ஒரு ரூத்தலும் அரிசிக் கௌாக்கரு முழுங்கிட்டாரு.''

''ஆமா பொன கெழமையும் கொறவாத்தான் இருந்திச்சி. நாம என்ன ஒடனேயேவா அளந்து பாக்குறோம். கடசில தட்டுக் கெட்டுப் போக்குள்ளத்தான் தெரியுது'' அஞ்சலை பதில் சொல்கிறாள்.

''இந்த அநியாயம் ரொம்பநாளா நடந்துகிட்டு வருது.''

பெருமாள் லயத்துக் காம்பராவுக்குள் நுழைகிறான்.

''ஆரு மலையாண்டி மச்சானா? என்ன ஓய் வந்து ரொம்ப நேரமா?''

''இல்ல மச்சான் இப்பத்தான் வந்தேன்.''

அரிசியைத் தாயிடம் கொடுத்துவிட்டு மலையாண்டியின் அருகிலுள்ள நாற்காலியில் உட்காருகிறான் பெருமாள்.

''பாத்தியா மச்சான் நம்ம தோட்டத்துலே நடக்கிற அநியாயத்த. நம்ம காரியதரிசி ஆப்தீன் இதுகளயெல்லாம் ரொம்பநாளா கவனிச்சிகிட்டு வந்திருக்கான். காலயில பெரட்டுல வச்சி எங்கிட்ட சொன்னான்.

நானும் இத சோதிச்சு கண்டுபிடிக்கனும்னுதான் இன்னிக்குப் போனேன். நா போறப்போ அஞ்சல மகன் அரிசி புடிச்சி முடிஞ்சிச்சு. அஞ்சலே வூட்டு அரிசி ரொம்ப கொறவாயிருக்குமென்னு ஆப்தீன் ஓடியாந்து காதுக்குள்ள சொன்னுன். நா மருக நிறுக்கச்சொல்லி அய்யாகிட்ட கேட்டேன். 'நீ யாரு என்னக் கேக்க?' அப்பிடின்னு என்னக் கேட்டாரு. நா தோட்டத்து தலவருன்னு சொன்னேன். 'அதெல்லாம் முடியாது. நீ தோட்டத்து ஆளுகளுக்குத்தான் தலவரு. நமக்கு இல்ல தெரியுமா?' அப்படீன்னு ஒரு மாதிரிப் பேசிப்புட்டாரு. நானும் ஆப்தீனும் அரிசி—மாவை எடுத்துக்கிட்டுப் போயி ஒத்தக் கடயில நிறுத்துப் பார்த்தோம். அரிசி ஒன்னரை ருத்தலும் மாவு ஒரு ருத்தலும் கொறஞ்சிது. ஒடனே அரிசி மடுவத்துக்குப் போயி அரிசி கௌாக்கருக்கிட்ட சொன்னேம். 'நீ கொளப்பம் பண்ணுறதுக்காக அரிசி—மாவுல கொஞ்சத்த அள்ளி வச்சிட்டு வாறது' அப்பிடின்னுட்டாரு ''

''ஆமா மச்சான் அவரு அப்படி சொல்லலாந்தான். நீங்க நிறுக்குற நேரமே கையோட புடிச்சிருக்கனும். பரவாயில்ல, இனிமே அய்யா கொஞ்சம் முழிப்பாயிருப்பாரு. அடுத்த கெழம அரிசி போடுறப்போ சந்தேகமாயிருந்தா ஒடனே கையோட நிறுக்கச்சொல்லிக் கேக்கணும்.''

''நம்ம அரிசி போடுற பெரியசாமி இருக்கானே அய்யா ஒண்ணுன்னு இவேன் ரெண்டு செய்வான். அரிசிய தராசுல போட்டுட்டு, படிக்கல்ல வச்சி அப்பிடியே ஒரு தட்டுத் தட்டி நம்ம குட்டிச் சாக்குல திடுதிபுன்னு திணிச்சுப் புடுவான்.''

''பெரியசாமிய கொற சொல்லி என்னு செய்ய. 'எய்தவனிருக்க அம்ப நோவானேன்னு' ஒரு பேச்சிருக்கு. அய்யா சொல்றத பெரியசாமி கேக்காட்டா ஆள மாத்திடுவாரு.''

''மச்சான் இதுல இன்னொரு சூழ்ச்சியுமிருக்கு. நாம முழிப்பாயிருக்கோம் பாரு நம்மள நொட்டிக்கமாட்டாங்க. இளிச்சவாயனுட்டம் இருக்கற ஆளுக்கிட்டத்தான் அவுங்க திருக்கீசு எல்லாம்.''

''அவுங்க மட்டுமில்ல யாருமே அப்பிடித்தான். அதான் நா சொல்றது நாம எப்பவும் முழிப்பாயிருக்கணும். கொஞ்சம் அசந்திட்டாப் போச்சு.''

''சரி மச்சான் இந்தப் பெரச்சனைய நம்ம ஜில்லா பிரதிநிதிக்கிட்ட சொல்லி பெரிய தொரய்க்கி ரிப்போட் பண்ண சொல்லணும்.''

முதுமையடைந்தும் செல்லாயியின் காதுக் கூர்மை இன்னும் குறையவில்லை. ''ஆமா பெரிய கௌாக்கருட்டு கொழுந்தியா புருஷன்தான் இந்த அரிசிக் கௌாக்கரய்யா. எந்தப் பெராது போனாலும் பெரிய கௌாக்கரு மூடி மறைச்சிருவாரு'' அரிசியைக் களைந்துகொண்டே குசினிக்குள்ளிருந்துகொண்டு செல்லாயி சொல்கிறாள்.

பெருமாள் தாயை அர்த்தபுஷ்டியுடன் பார்த்துக் கொள்கிறான்.

''எப்பிடி மூடிமறைச்சாலும் நாம பிராது பண்ணி தெரியப்படுத்தவேண்டிய எடத்துக்கு தெரியப்படுத்துனா மனசுக்குள்ள அவங்களுக்கு ஒரு பயமிருக்கும். நம்ம ரிப்போட்டு இன்னிக்கில்லாட்டியும் பின்னாடி ஒரு நாளய்க்கி நமக்கொதவும்'' பெருமாள் தலையாட்டி மலையாண்டியின் கருத்தை ஏற்றுக்கொள்வதாக உறுதிப்படுத்துகிறான்.

சிறிது நேரம் அமைதி நிலவுகிறது. மலையாண்டியின் கை பத்திரிகையை மாறி மாறிப் புரட்டுகின்றது. கண்கள் அநாயாசமாகப் பத்திரிகையில் அங்குமிங்கும்

மேய்கின்றன. அவன் எதையோ சொல்ல பீடிகை போடு கிறுனே!

மலேயாண்டி பிரச்சினைகளை அடித்துப் பேசும் திறமை களை பெருமாள் மெச்சுகிறுன். 'பாவம் மலேயாண்டி எம் புட்டுப் படிச்சும் இன்னும் நல்ல வேலெயெதுவும் கெடக் கிலியே' மலேயாண்டிக்காக பெருமாளின் மனம் இரங்கு கிறது. மலேயாண்டி டவுன் ஸ்கூலில் படித்து முதல் தட வையிலேயே க. பொ. த. பரீட்சையில் மூன்று திறமைச் சித்திகளுடன் தேறியவன். அவனுே தான் படித்தவ னென்று சொல்லிப் பெருமைப்பட்டுக்கொள்வதில்லே. 'நம்ம தோட்டத்துல சில பசங்க டவுன் ஸ்கூல்ல ஏழெட்டு வரெய்க்கும் படிச்சிட்டு லோங்குசும் சப்பாத்தையும் மாட் டிக்கிட்டு கையில ஒறுலோசும் கட்டிக்கிட்டு தொரமாரு மாதிரி சுத்திக்கிட்டு திரிவாங்க அவுங்களப் பாக்க நம்ம மலேயாண்டி எம்புட்டு ஒசத்தி,'

''மச்சான் நான் முடிவா தீர்மானிச்சுட்டேன். எத் தினி நாளெய்க்குத்தான் வீட்டுக்குப் பாரமாயிருக்கிறது. கண்ணுரெண்டும் தெரியாத அப்பாவ பாக்கவேண்டிய நானே அவங்களுக்குப் பாரமாயிருந்தா......? பாவம் தங் கச்சி. கல்யாணம் செஞ்சி புள்ளகுட்டியளோட இருக்க வேண்டிய வயசுல ஒழச்சி எல்லாத்துக்கும் சோறு போடுது. நா வார்ர மாசத்துலருந்து தோட்டத்துல பேர் பதிஞ்சி வேல செய்யப் போறேன்.''

''என்ன மச்சான் இப்பிடி ஒரேயடியா தீர்மானிச் சிட்டா? வூட்டுல எல்லாம் ஒத்துக்கிட்டாங்களா? பெரிய கௌாக்கரய்யா, சூப்பர்வைசரு வேல எடுத்துக்குடுக்கு றேன்னு ஒங்கண்ணுகிட்ட சொன்னுருதானே?''

''அது சரிவராதுபோலருக்கு. ரெண்டு வருசமா அவ ரும் ஏய்ச்சுக்கிட்டே வாராரு. பெரிய தொரெய்க்கும்

தோட்டத்துல நமக்கு அப்பிடியான வேலதர விருப்ப மில்லபோல. காலமும் போய்க்கிட்டேருக்கு.''

''மச்சான் டவுன்ல நம்ம மாமாவூட்டுக் கடைக்கு ஆளு தேவைப்படுதான்னு பேசிப்பாக்கட்டுமா?''

''வேணும் மச்சான் கொழும்பு கடையில நின்னு பாத்தேன். மொதலாளிமாருக்கு ஒழச்சி அடிமைப்படுறதவிட தோட்டத்துல பேர் பதிஞ்சி ரெஸ்பெக்டா இருக்கலாம்.''

பெருமாள் எதையோ சிந்திக்கிறான், மலையாண்டியின் முடிவு அவனுக்கு திருப்தியைத் தரவில்லை. 'கூலிக்காரன் மவன் படிச்சும் கூலி வேலதான் செய்யணுமா?' இது பற்றி ஆறுதலாக சிந்திக்கவேண்டும் போல் தோன்றுகிறது பெருமாளுக்கு. மனநிறைவுக்காகக் கதையைத் திசைதிருப்புகிறான்.

''மச்சான் இன்னிய பேப்பரு என்ன சொல்லுது?'' அன்றைய பத்திரிகைச் செய்திகளைப்பற்றியும் நாட்டு நடப்புகள் பற்றியும், அரசியல் போக்கு பற்றியும் அவர்களது உரையாடல் விரிகிறது. நேரம் போவதே தெரியவில்லை. வெளியில் நன்றாக இருட்டிவிட்டது.

''மச்சான் நல்லா இருட்டிரிச்சி. நா பணியக்கணக்கு போவணுமே,'' பெருமாள் வெளியே சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே ''மச்சான் நா ஒரு பந்தம் கட்டித் தாரேன்'' என்கிறான்.

சில நிமிடங்களுக்குள் வாயுடைந்த போத்தலொன்றில் எண்ணெய் ஊற்றி பழைய துணியால் திரி போட்டு பந்தமொன்றை உருவாக்கிவிட்டான் பெருமாள், கையில் பந்தத்துடன் மலையாண்டி குறுக்குப் பாதையில் போய்க்கொண்டிருக்கிறான், பெருமாள் தனது காம்பரா வாசலில் நின்று பார்க்கிறான். மலையாண்டியின் உருவம் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் பந்தத்தின் ஒளி தெளிவாகத் தெரிந்துகொண்டேயிருக்கிறது.

# (3)

புதுமலை வேலையை மேற்பார்வை செய்து கொண்டிருக்கின்றார் கண்டக்டர். பல்லாண்டு காலமாகப் பலனளித்து வந்த கொட்டைத்தேயிலையைப் பிடுங்கி வங்கித் தேயிலையை நாட்டுவது படிப் படியாகத் தோட்டங்களில் நடந்து வருகிறது. வங்கித்தேயிலையால் வருமானம் கூட வென்று தேயிலை ஆராய்ச்சி நிலையம் கண்ட முடிவை எல்லாத் தோட்டங்களிலும் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

இம்மலையை பத்தாம் நம்பர் மலையென்று தோட்ட நிருவாகம் அழைத்தாலும், 'சுடுகாட்டுமலை' யென்றே தொழிலாளர்கள் அழைப்பார்கள். ஒரு காலத்தில் இந்த மலையில் தோட்டத்திலிருந்தவர்களைப் புதைத்த காரணத்தினால் தான் சுடுகாட்டுமலை யென்ற பெயர் வந்திருக்க வேண்டும். பழைய தேயிலையைப் பிடுங்கும் போது கண்டெடுக்கப்பட்ட மண்டை யோடுகள் இப் பெயர்ப் பொருத்தத்திற்குச் சான்றாக அமைகின்றன. இரண்டு வருடத்திற்கு முன்பு, மனித எலும்புரத்தை யுண்டு மதாளித்திருந்த தேயிலைச் செடிகளை வேரொடு பிடுங்கி, மண்ணைப் பதப்படுத்த மீனுப்புல் நாட்டினர். அதனைப் பிடுங்கி இப்போது மட்டமடிக்கிறார்கள். இன்றுடன் மட்டமடிப்பது முடிந்து விடும். நாளைக்குக் கூனியடிக்க வேண்டும். கூனியடிப்பது இலகுவான வேலையல்ல. தேயிலைச் செடிகள் ஜீவியப் பரியந்தம் நின்று நிலைக்கும் ஒழுங்கை நிர்ணயிக்கும் வேலை. முதற் கோணல் முற்றுங் கோணலாய், நிரை பிடித்து கொழுந் தெடுப்பது முதல் உரம் போடும் வேலை வரையும் ஒழுங்கீனத்தைக் கொடுத்து இடர் தருவதாக இருக்கக் கூடாதல்லவா? எல்லாத் தொழிலாளர்களாலும் இவ்வேலையைச் செய்ய முடியாது. மனத்தில் படம் போட்டுச் சிறிது சிந்தித்து செய்யவேண்டிய வேலையிது.

சென்ற வருடம் எட்டாம் நம்பர் புதுமலைக்கும் கூனி யடிக்கும் வேலையைத் திறம்படச் செய்த தொழிலாளர் களை "கண்டக்டர் ஒரு கனம் நினைவு படுத்துகிறார். அவர் மனக் கண்முன் பெருமாள் வருகிறான். அவனே தான் 'ராஜ கூனி' யடித்து மற்றக் கூனிகளையடிக்க வழிவகுத் தான். தற்செயலாக அன்று மலைக்கு வந்த பெரியதுரை அந்த வேலையைப் பார்த்துவிட்டு 'ராஜ கூனி' யடித்தது தானே யென்று கண்டக்டர் கூறியதால் அவரைப் புகழ்ந்து விட்டுப் போனதை எண்ணுகிறார். ஆனால் இந் தத் தடவையோ அவர்மனம் பெருமாளை வெறுக்கின்றது, 'அவனை இந்த வேலைக்குப் போட்டா ரொம்ப கெமபர் அடிப்பான்.'

சின்னத்துரையின் மோட்டார் சைக்கிள் முரட்டுத்தன மாய் ஓடிவந்து பத்தாம் நம்பர் மலைரோட்டில் நிற்கிறது. கண்டக்டர் அவசர அவசரமாக ரோட்டுக்கு வந்து, தனது தலையிலிருந்த தொப்பியைப் பவ்வியமாய்க் கழற்றி, கைகள் சலாம் போட, வாய் பணிவுடன் கூறுகிறது "குட் மோணிங் சேர்."

ஏதோ வேண்டா வெறுப்புடன் செய்வது போல சின்னத்துரை சொல்கிறார், "குட் மோணிங்" சின்னத் துரை மலைக்கு வந்தால் பெரியதுரை தோட்டத்தில் இருக் கிறார் என்பது அர்த்தம். பெரியதுரை தோட்டத்தில் இல்லா விட்டால் சின்னத்துரை ஸ்டோரைச் சுற்றிவிட்டு பங்களாவில் முடங்கி விடுவார்.

துரையைக் கண்டதும் தொழிலாளர்கள் துரிதமாக இயங்குகின்றனர். சின்னத்துரை மலையை நோக்கிச் செல்ல, கண்டக்டர் பின் தொடர்கிறார். அவர்களது உரையாடல் ஆங்கிலத்தில் தான் அமைந்திருக்கும்.

"நாளைக்குக் கூனியடிக்கும்வேலை தொடங்க வேண் டும்."

"யேஸ் சேர்."

"இதற்குரிய தகுதியான ஆட்களை ஏற்பாடு செய்ய வேண்டுமல்லவா?"

''வெறி வெல் சேர்''

சின்னத்துரை எதையோ யோசிக்கிருர். புதுமலேக்குக் கூனியடிக்கும் வேலே யென்ருல்.........?

சின்னத்துரை ஓர் ஆங்கிலத் துரையிடம் வேலே பழகிஞர். பேர்பெற்ற ஒரு டாக்டரின் சிரேஷ்ட புத்திரஞன சின்னத்துரை பெரிய பணக்காரரின் செல்லப்பிள்ளேகள் படிக்கும் 'டிரின்டி காலேஜில்' படித்தார். படிப்பில் படு மோசம்; விளேயாட்டில் வீரன். சீனியரில் பலமுறை தோல்வி கண்டாலும், தந்தையின் செல்வாக்காலும் விளே யாட்டுத்திறஞலும் நீண்ட நாட்கள் பாடசாலேயில் மாண வஞக இருக்க நேர்ந்தது. 'றகர்' 'செம்பி'யனல்லவா! கணக்குப் புகமுடியாத மூளேயென ஆசிரியரால் ஒதுக்கி வைக்கப்பட்ட மூளேயையுடையவர் சின்னத்துரை. தொழில் தேடும் படலம் ஆரம்பித்ததும் டாக்டரின் நீண்ட நாளேய நண்பஞன ஆங்கிலத் தோட்டத் துரையிடம் 'பிளான்டர்' வேலே பழக அனுப்பிஞர் தந்தை. அந்த ஆங்கிலத் துரைக்கு வேலே நன்ருகத் தெரியும். ஒரு நாள் அந்தத் துரையிடம் சின்னத்துரை வேலேபழகும் போது, புது மலேக்குக் கூனியடிக்கும் வேலேயைக் காட்டிக் கொடுத் தார். அவரது முயற்சி படுதோல்வி யடைந்தது. கோப மடைந்து ஆங்கிலத்துரை தனது நண்பஞன டாக்டருக்கு அவசரக் கடிதம் எழுதிஞர். துரையின் மனதை மாற்றித் தொடர்ந்தும் வேலே பழகுவதற்கு டாக்டரும் மனேவியும் துரையின் பங்களாவிற்கு நல்லெண்ண விஜயம் செய்து ஒரு வாரம் தங்கவேண்டியிருந்தது. இன்னும் சின்னத் துரைக்கு புதுமலேக்குக் கூனியடிக்கும் வேலே யென்ருல் சிம்ம சொப்பனம்தான்.

''யார் யாரை கூனியடிக்கப் போட உத்தேசித்திருக் கிறீர்?'' கண்டக்டர் ஒருகணம் யோசித்துவிட்டு, ஒரு சில தொழிலாளர்களின் பெயர்களேச் சொல்கிருர்.''... ..... பெருமாள் இந்த வேலே நன்ருய்த் தெரிந்தவன். ஆஞலும் நான் அவனேப் போடவில்லே.''

''யார் தலைவனு? அவனைப் போட வேண்டாம் அவனுக்கு உடல் கஷ்டப் படக்கூடிய வேலையைத்தான் கொடுக்க வேண்டும்''.

''யேஸ் சேர். கவாத்துக்குப் போட்டிருக்கிறேன்.''

''மூக்கையா''

''யேஸ் சேர்''

சின்னத்துரை பேசுவது ஆங்கிலம். ஆனுல் அந்த மொழியிலுள்ள பண்பாட்டு வழியான — வளமான சொற்களை உபயோகிப்பதில்லை. 'பஹர்' என்ற சொல்லை அவர் அடிக்கடி உபயோகிப்பார். கண்டக்டரை 'மிஸ்டர் மூக்கையா' என்று தான் அழைக்க வேண்டுமென்று அவருக்கு தெரியும். ஆனுல் அப்படியழைப்பது வெகு குறைவு. கண்டக்டரை மட்டுமல்ல பெரிய கிளாக்கரைத் தவிர்ந்த மற்றைய ஊழியர்களை யெல்லாம் அப்படித்தான் அழைப்பார்.

''நேற்று ஸ்டோர் கீப்பர் அபேரட்ணவுடனும் பெருமாள் நடந்து கொண்ட விதம் சரியில்லை. குழப்பம் உண்டாக்க வேண்டுமென்று திட்டம் போட்டு அரிசி மடுவத்துக்கு வந்து, யாரோ அஞ்சலை யென்ற பெண்ணின் அரிசி —மாவை எங்கோ கொண்டு போய் அள்ளிவைத்து விட்டு மறுபடியும் நிறுக்கும்படி கேட்டிருக்கிருன். தட் பஹர் ஈஸ் அப்ரூ சம்திங்''

''யேஸ் சேர்''

''மூக்கையா இவனை மாற்றமுடியாது போலிருக்கு. கங்காணி வேலை கொடுத்து ஆளைக் கைக்குள் போடலாமென்று பார்த்தோம். அவன் வேண்டாமென்று மறுத்து விட்டான். இனி ஒரேயொருவழி அவன் கட்சியை உடைத்துப் புதுக் கட்சி ஆரம்பிக்க சில ஆட்களைத் தூண்ட வேண்டும்''

''வெரி வெல் சேர். இதற்கான வேலையை நான் ஏற்கனவே ஆரம்பித்து விட்டேன். மாரிமுத்துக் கங்காணி இந்த வேலைக்குத் தகுந்தவன்''

''வெரிகுட்; எனக்குத் தெரியும் பெருமாளுக்கு எப்படி வயிற்றில் அடிப்பதென்று. பண்டாரவளை பொலிஸ் இன்ஸ்பெக்டர் எனது நெருங்கிய நண்பர் தானே? பெருமாளுக்கு நல்ல பாடம் படிப்பிக்கிறேன் பார்''

ஏக காலத்தில் சின்னத்துரையும் கண்டக்டரும் அவர்களது கைப் பொம்மையாக விருந்து, பழைய தலைவரை எதிர்த்து எழும்பிய காளிமுத்து என்பவனிற்கு லயத்தில் ஒரு கரைச்சலை உண்டாக்கி, அதனை உடனே பொலிஸுக்கு அறிவித்து, பொலிஸை தோட்டத்திற்கழைத்து காளிமுத்துக்கு அடியும் உதையும் வாங்கிக் கொடுத்து......... இது தொடர்பாக அவன் பொறுமையைச் சோதித்து, தோட்டத்தில் குழப்பக்காரன் என்று பற்றுச் சீட்டைக் கொடுத்து, குடும்பத்துடன் தோட்டத்தை விட்டு வெளியேற்றியதை நினைக்கிறார்கள்.

''மாரிமுத்து கங்காணிக்கு வேண்டிய சலுகைகள் செய்ய வேண்டும், புரிகிறதா?''

' வெறி வெல் சேர்'' கண்டக்டரின் கைகள் பிடரியைச் சொறிந்து எதையோ கேட்பதற்குப் பீடிகை போடுகிறது. 'இதுதான் தருணம் துரை ஆமென்று சொன்னால் போதும். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும், கண்டக்டரின் மனம் திட்டம் போடுகிறது.

''சேர் எட்டாம் நம்பர் முள்ளுக்குத்து, அப்புறம் இந்த மலை கூனியடித்தவுடன் குழிகுத்துதல், 'நாட்டுத் தொங்கல்' மலை நஞ்சு முருங்கை வெட்டுதல், முதலியவற்றுக்கு கொண்டிராக்ட் கொடுப்போம் என்று நேற்று ஆபீஸில் பேசினோமல்லவா? அதை மாரிமுத்துக் கங்காணிக்கே கொடுக்கலாமென யோசிக்கிறேன் உங்கள் தாழ்மையான அனுமதியுடன்''

''ஓல்றைட், தொடரும் உமது வேலையை''

''தேங்யூ சேர்'' கொண்டக்டரின் அகமகிழ்ச்சி முகத்தில் பிரதிபலிக்கிறது. இவ்வளவு விரைவாக அவரது திட்டம் நிறைவேறுமென அவர் எதிர்பார்க்கவில்லை.

சின்னத்துரை மோட்டார் சைக்கிளில் ஸ்டோரை நோக்கிப் பறக்கிறார். கண்டக்டர் மரங்களின் பட்டையுரிக்கும் மலையை நோக்கிப் போகிறார். கண்டக்டர் ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை விழுத்தப் போகிறார். பெருமாள் தலைவனாக உள்ள கட்சியை உடைப்பதற்கு மாரிமுத்துக் கங்காணிக்கு உதவி செய்வதால், அவரது கையாளாக விளங்கும் அவனுடன் சில இரகசிய ஒப்பந்தங்களைச் செய்துகொண்டிராக்ட் வேலையால் ஒரு தொகையை ஒதுக்கி விடுவார். ஆயினும் பெருமாளைப் பற்றியசிந்தனை அவருக்கு மனக்கிலேசத்தைத்தான் தருகிறது. முந்தின காலம் போலல்ல இப்ப, தொழிலாளர்களுக்கு சட்டதிட்டம் கூட, எப்படியும் தலைவர்மாரகைக் குள்ளபோட்டுக்கணும்.என்ன பிராது என்றாலும் தலைவர் மாரு மூலியமாத்தானே அவுங்க யூனியனுக்குப் போகும்.'கண்டக்டர் இந்தியாவுக்குப்போன பழைய தலைவரையும் அவரது சாணக்கிய தந்திர மூளையையும் மானசீகமாக மெச்சுகிறார் பழைய தலைவர். தொழிலாளருடன் பேசும்போது ''இந்தப் பெரச்சினைய வுடப்படாது — தாட்டுப் பூட்டு தஞ்சாவூருலே'' என்பார். பிரச்சினையின் தாற்பரியத்தையும், நெளிவு சுளிவுகளையும் அப்படியே வந்து ஒருவருக்கும் தெரியாமல் கண்டக்டரிடமும் சொல்லி விடுவார். ஐயா வெள்ளம் வரு முன்னே அணைகட்டி விடுவார். அப்புறம் தோல்விகண்ட தொழிலாளரிடம் போய், ''சே........ ஒன்வாயால நீ கெட்ட'' என சமாதானம் கூறித் தப்பி விடுவார். 'இவன் பெருமாள் அசய்ராப்புல இல்ல 'பழைய தலைவர் இந்தியாவுக்கு போகிறார்' என்றவுடன் அடுத்து தலைவர் பதவி பெருமாளுக்குத்தான் . வருமென்பதை எப்படியோ மோப்பமிட்டு அறிந்து கொண்டார் கண்டக்டர். கமிட்டித் தேர்தல்

நடக்குமுன்பே நீண்ட நாளாக பெருமாள் கேட்ட கோரிக்கையை பெருந் தன்மையுடன் நிறைவேற்றினர். மாட்டுப்பட்டி லயத்திலிருந்த பெருமாள் மேட்டு லயத்தில் ஒரு காம்பரா கேட்டிருந்தான். கண்டக்டர் வலியக் கூப்பிட்டு மேட்டு லயத்திற்கு மாறிப்போகச் சொன்னர். தேர்தல் முடிந்தது. கண்டக்டரின் அடுத்த திட்டம் படுதோல்வி கண்டது. கங்காணி வேலை கொடுத்து பெருமாளைக் கைக்குள் போட்டுவிடலாமென எண்ணினர். பெருமாளுக்கு ஐயாவின் திட்டம் புரிந்து விட்டது. அவன் அறவே மறுத்து விட்டான்.

கண்டக்டர் பட்டையுரிக்கும் மலைக்கு வந்து விட்டார். தேயிலைச் செடிக்கு நிழலையும் மண்ணுக்குப் பதனையும் பச்சை உரத்தையும் கொடுப்பதற்காக மலைகளில் சவுக்கு, முருங்கை போன்ற மரங்களை நாட்டியிருப்பார்கள். அதிகம் சடைத்து வளர்ந்த மரங்களை அவ்வப்போது அகற்றிவிடுவார்கள் அகற்றப்படும் மரங்கள் மீண்டும் துளிர்க்காமலும் தேயிலைச் செடிக்கு ஊறு செய்யாத வகையிலும் படிப்படியாகவே சாகடிக்கப்படும். முதற்கட்டமாக பட்டையுரிப்பது இன்று இந்த மலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

'பெருமாளுக்கு கொஞ்சம் கொஞ்சமாகத்தான் கரச்சல் கொடுக்கனும். இன்னிக்கிருக்கிற சட்டதிட்டங்களில் ஒரேடியா கரச்சல் குடுத்தா நாமதான் மாட்டிக்கிட்டு முழிக்கனும்'

அந்த மலையில் தேயிலைகளின் நடுவே பட்டை யுரிப்பதற்கு ஒதுக்கப்பட்ட கம்பீரமாய் நிற்கும் ஒரு சவுக்கு மரத்தின் மேல் கண்டக்டரின் பார்வை குத்திட்டு நிற்கிறது.

## (4)

இரவு இருளைப் பரப்பும் தன் வேலையைச் செய்யத் தொடங்கிவிட்டது. மாரிமுத்துக் கங்காணி உடைந்திருக்கும் லயத்துப் படிக்கட்டுகளில், நாளும் பொழுதும் பழகியதால் தட்டுத்தடுமாறுது ஏறி கறுத்த ரோட்டுக்கு வந்து விட்டான். கங்காணியின் நாய் கறுப்பனும் அவனைப் பின் தொடர்கிறது. இன்று அந்தியில் பேர் போட்டு விட்டுப் போகும் போது கண்டக்கையா மாரிமுத்துக் கங்காணியைக் கூப்பிட்டு இரகசியமாகச் சொன்னார்: ''இன்னிக்கு அந்திப் பட்டாப்புல நம்ம பங்களாப் பக்கம் வந்துட்டுப் போறது''

கங்காணிக்கு ஒரே ஆவலாக இருக்கிறது, 'ஏன் அய்யா வரச்சொன்னார். ஏதாச்சும் அவசரம் இருக்குமோ?' கறுத்த ரோட்டிலிருந்து பார்க்கும் போது பள்ளத்திலிருக்கும் தார் பூசிய கூரைகளையுடைய லயன்கள் இருட்டிலே அமிழ்ந்து கிடக்க, அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒளியுமிழும் குப்பிலாம்பின் மங்கிய வெளிச்சம் மட்டும் மின்னிக் கொண்டிருக்கிறது. ரோட்டுக்கு மேலேயுள்ள ஐயாமாரின் பங்களாக்கள் மின்விளக்குகளின் ஒளியில் பளபளப்பில் ஒய்யாரமாக நிற்கின்றன. இன்னும் மேலே கலங்கரை விளக்கு ஒளிபோன்ற வெளிச்சத்தை வீசிக் கம்பிரமாக நிற்கிறது சின்னத்துரையின் வண்ண நிறக் கூரையுடைய பங்களா. ஏதோ ஒரு வைபவமொன்றிற்கு அலங்கரிக்கப்பட்ட மண்டபம் போல் தெரிகிறது துரை பங்களா.

மாரிமுத்துக் கங்காணியின் நடை, கேட்கப் போகும் செய்தியை அறியும் ஆவலில் விரைகிறது. ஒழுங்காக உறுதியான கற்களால் கட்டப்பட்ட கண்டக்டரின் பங்களாப் படிகளிலே மாரிமுத்துக் கங்காணியின் கறுப்பு நாய் ஐயாவின் அல்சேஷன் நாய்க்குப் பயந்து படிக்கட்டிலேயே தங்கி

விடுகிறது. கண்டக்டர் பங்களாவின் முன் காம்பரா ஐயாவின் ஆபீஸ் காம்பராவாகவே எப்போதுமிருக்கும். அந்தியில் பேர் போட்டு வீட்டுக்குப் போன பின்பு செக்ரோல் சம்பந்தமான ஏகப்பட்ட வேலையிருக்கும். ஐயாவுக்கு இரவிளெளியில் உள்ளே ஐயா செக்ரோல் செய்து கொண்டிருக்கிறார் என்பது வெளியில் நின்று பார்க்கும் போது கங்காணிக்குத் தெளிவாகத் தெரிகிறது. சத்தம் செய்யாது கங்காணி பின் வழியாகக் குசினியை நோக்கிப் போகிறார். ஐயா வீட்டு அல்சேஷன் நாய் தடித்த குரலில் குரைக்கிறது. 'ஆரது?' அம்மாவின் குரல் அதிகாரத்துடன் ஒலிக்கிறது.

''நம்ம டைகருக்கு, தோட்டத்துல களவாணியாரு நல்ல மனுசன் யாருன்னு இன்னும் தெரியல'' என்று சொல்லிக்கொண்டு, காவி படிந்த பற்களைக் காட்டிக் குழைவுடன் அம்மாவின் பார்வைபட நிற்கிறான் கங்காணி.

''ஆரு மாரிமுத்துக் கங்காணியா? வாங்க கங்காணி வாங்க!''

கங்காணி குசினிக்குள் புகுந்து கதவுக்குப் பின்பக்கமாக ஒதுங்கி நிற்கிறான். அப்பொழுதுதான் ஐயாவீட்டு மாட்டுப்பட்டி வேலையைத் தினமும் செய்து தோட்டக் கணக்கில் பேர் போட்டு வரும் பழனியும், மருதையும் வேலை முடிந்து வீட்டிற்குப் போவதற்கு அம்மாவிடம் விடை பெற்றுச் செல்ல வந்திருக்கின்றனர். ஐயா வீட்டில் அம்மாவுக்குத்தான் முழு அதிகாரமும். கங்காணியைக் கண்டதும் பழனியையும் மருதையையும் அனுப்புவதில் அவசரங் காட்டுகிறாள் அம்மா.

''பழனி, மருத நாளக் காலேல வேலய்க்கு வரக்குள்ள ரெண்டு ரெண்டு சாக்கு பில்லு கொண்டாந்துடுங்க. மருத இன்னிக்கு ஒஞ்சாக்லே பாதிப் பில்லுதான் இருந்திச்சி

நாலு மாட்டுக்கும் ரெண்டு கன்றுக்குட்டிக்கும் நீங்க அறுக்குற பில்லு போதுமா? பாவம்...... வாயில்லா ஜீவனுக."

"சரிங்கம்மா" பழனியும் மருதையும் போய் விடுகிறார்கள்.

"அப்புறம்...... கங்காணி எப்பிடி சொகம்"?

"ஏதோ ஒங்க புண்ணியத்துல நல்ல சொகமா இருக்கேன்மா."

"தோட்டத்துல என்ன புதுனம் கங்காணி?"

"ஒண்ணுமில்லீங்கம்மா. இவன் தலைவன் பெருமாள் பய வூட்டு கூத்து தானுங்க பெரிய கூத்தாயிருக்கு. நம்ம தோட்டத்துல நடக்கிற தில்லு முல்லுகள அம்பலப் படுத்தப் போறானும்."

"ஆமா கங்காணி சின்னதொரை நம்ம அய்யாகிட்ட சொல்லியிருக்காரு அவனயே ஒழிச்சிக் கட்டுறதா"

"ஆமாங்கம்மா நம்ம சின்னதொரை சங்கதி தெரியாதுங்களா? ஒண்ன நெனச்சா அத செஞ்சி முடிச்சிட்டுத்தான் மத்தக் காரியம் பாப்பாரு. அதுக்கு மொதல்ல பெருமாள் லயத்து சங்கதி ஒண்ணுல மாட்டிக் கிட்டுக் கெடக்குறான். ஒங்களுக்குத் தெரியுந்தானுங்களே, முந்தி மாத்துக் கட்டு வேலயா நம்மவூட்டுக்கு வந்தானே செத்துப்போன ராமய்யா அவனோட பெஞ்சாதி அஞ்சலயோட இவன் கூட்டாயிருக்கான்"

"நெசமாவா கங்காணி" அம்மாவின் ஆவல் கரை புரள்கிறது.

"ஆமாங்கம்மா போன கெழமையில ஒரு நா காலங் காத்தால பெருமாள் அஞ்சல வூட்லருந்து வாரத எம் பெஞ்சாதி தங் கண்ணுலயே பாத்திருக்கா."

''சரிதான் கங்காணி அன்னிக்குப் பழனி கூட ஒரு சங்கதி சொன்னுன். அரிசி — மாவு புடிக்கயில அஞ்சலவூட்டு அரிசி கொறையிதுன்னு மடுவத்துல பெரிய லோ போட்டானுமே, அதுதான் சங்கதியோ? இதுல உழுந்தவன் உருப்பட்டாப்புலதான்''

அம்மா தனது இளமைக்காலக் கசப்பான சம்பவங்களை வெறுப்புடன் அசைபோடுகிருள். 'ஐயா முன்பு வேலை செய்த தோட்டம்...... அந்தப் பறங்கித் துரை இப்போது எந்தத் தோட்டத்திலோ......! அப்பொழுது ஐயா கொழுந்துக் கணக்கப்பிள்ளை, அம்மாவைக் கல்யாணம் செய்து இரண்டு வருடங்களாகப் பிள்ளை குட்டி ஒன்றுமில்லை. கணக்கப்பிள்ளையின் வீடு துரை பங்களாவிற்கு பணியத் தானிருந்தது. கணக்குப்பிள்ளை பிரட்டுக் கலைக்கப்போக துரை கணக்கப்பிள்ளை வீட்டிற்கு வந்துவிடுவான். இதனுல் அழகான மகளொருத்தி அவர்களுக்குப் பிறந்தாள். கணக்கப்பிள்ளை கண்டக்டராகப் பதவியுயர்வு பெற்ருர். ஆனுல் இவற்றை இன்று நினைத்துப் பார்க்கும் போது அம்மாவுக்கு அருசையாகவே இருக்கிறது.

அம்மாவின் பெரியமகள் 'குசினிக்குள் யாருடன் அம்மா பேசுகிருர்' என்பதை எட்டிப்பார்த்து விட்டுத் தனது அறைக்குப் போகிருள். கங்காணி அவளைப் பார்க்கிருர், பறங்கிப் பெண் போன்ற நிறம், பளபளக்கும் பூனைக் கண்கள், பார்த்தால் இன்னொரு தடவை பார்க்கத் தூண்டும் உருண்டு திரண்ட அங்க அவயவங்கள்.

''சின்னம்மாவோட கலியாண சங்கதி எப்பிடிங்க''

''அதுசரிவருங்க கங்காணி. மாப்பிளைக்கு பெண்ண நல்லா புடிச்சிருக்காம். நாம கொடுக்கிற சீரில்லாம பணமா பத்து கேக்குருங்க, மாப்புள கொழும்புல அக்கவுண்டனு இருக்காரு. பணத்துக்குத்தான் கங்காணி கொஞ்சம் மொடயா இருக்கு''

''ஏங்கம்மா அய்யாகிட்ட பணம் இல்லீங்களா''

''என்னு கங்காணி பேசுறது. பணம் எடுக்க எடுக்க கூடுமா? பெரிய மகள கண்டியில போடிங்ல போட்டுப் படிப் பிச்சோம். பெரிய மகனும் சின்ன மகனும் செந் தோமஸில படிக்க மாசம் முந்நூறுக்கு மேல போவுது''

கங்காணி தலையாட்டுகிறுன். அம்மா தொடர்கிறுர்.

''நம்ம சாதியில இப்பிடி மாப்புள கெடய்க்கிறது கஷ்டந்தான் கங்காணி. அவுங்களுக்கு பணம் கேக்குறது, காரொன்னு வாங்கத்தான்''

''ஆமாங்கம்மா அவரோட பெரிய வேலய்க்கி காரெல்லாம் வேணுந்தானுங்களே...... காரில்லாட்டா அந்த வேலைக்கே மதிப்பில்லீங்க'' அம்மா எதையோ யோசிக்கிறுள். காரென்றவுடன் கங்காணிக்குத் தோட்டத்தில் பெரிய டீமேக்கர் சமீபத்தில் வாங்கிய காரின் நினைவு வர, கதையைத் திசை திருப்புகிறுன்.

''அம்மா பெரிய டீமேக்கரய்யா வாங்குன காரு இருவதினுயிரம் ரூபான்னு பேசிக்கிட்டாங்க''

''டீமேக்கர் காரெடுத்தது, திட்டத்தோடதான் இப்ப அவங்களுக்கு நல்ல வாசி''

''ஆமாங்கம்மா டவுனுக்கு போற காரு டிக்கியில தூளும் போவுது'' — தோட்டம் ஒரு தனியுலகம். குறுகிய ஓர் சமூகம். பெரிய பங்களா தொடக்கம் லயம் வரைக்கும் என்ன நடந்தாலும் அது இரகசியமாயிருக்க முடியாது,

''அம்மா டீமேக்கரம்மா வரவர நல்ல 'சைஸ்' ஆகுறுங்க. கவலயில்லாத தீனி தானுங்களே. இப்பெல்லாம் அந்தம்மா ஒத்தக் கதவுல போறது பெரிய சங்கட்டம்''

அம்மா களுக்கென உரக்கவே சிரித்து விடுகிறுள்.

''என்ன அங்க பெரிய சிரிப்பு போவுது'' முன் ஹாலிலிருந்து கொண்டு ஐயா குரல் கொடுக்கிறுர். ஐயாவுக்கு

செக்ரோல் வேலை முடிந்தது என்பது கங்காணிக்குப் புரிந்து விட்டது. குசினியிலிருந்து மெல்ல நடந்து முன் ஹாலுக்கு வருகிறான் கங்காணி.

''என்ன கங்காணி வந்து ரொம்ப நேரமா?''

''இல்லீங்கய்யா கொஞ்சம் முன்னுடித்தான் வந்தது. அம்மாவோட பேசிக்கிட்டிருந்தேனுங்க'' கூனிக் குறுகிக் குழைந்தபடி ஹாலின் ஒரு மூலையில் ஒதுங்கி நின்று கொண்டு, சுவரில் மாட்டப்பட்டிருக்கும் மாலை போடப் பட்ட தோட்டத் தொழிலாளியாக இருந்த ஐயாவின் தகப்பனாரின் புகைப்படத்தில் ஓர் கணம் கங்காணியின் பார்வை சென்று திரும்புகிறது.

''நா ஒன்ன வரச்சொன்னது முக்கியமா ரெண்டு சங் கதிபேச. இந்தப் பயணம் கொந்தரப்பு வேலயெல்லாம் ஒம்பேருலதான் கொடுக்குறதுன்னு சின்ன தொரகிட்ட பேசி முடிச்சிட்டேன்''

''நல்லதுங்க அய்யா''

''ஸ்கூல் மலையில பதினஞ்சேக்கர் முள்ளுக் குத்த இருக்கு. தொரயோட எஸ்டிமேட்டுப்படி முந்நூற்றம்பது ரூபா வரும். நீ வேலய்க்கி எடுக்கிற ஆளுகளுக்கு சல்லி யைக் கொறைச்சுச் சொல்லிப்புடு. எரநூத்தம்பதுக்குள்ள வேலய முடிச்சிடனும்''

''சரிங்கய்யா''

''அப்புறம் — நாட்டுத்தொங்க மலையில முருங்க வெட்ட இருக்கு. பெரட்டுல ஆளத்தள்ளி வேலய முடிக்கி றேன். நீ ஒப்பம் போட்டு காச வாங்கிடு. இது கொந்த ரப்பு வேலன்னு ஒன்னயும் என்னயும் தவிர யாருக்குந் தெரியப்படாது''

''மிச்சம் நல்லதுங்கய்யா''

''இதெல்லாம் ரொம்ப ரகசியமாயிருக்கனும்.. ... கங் காணியும் சொன்ன பேச்சுப்படி நடந்துக்கனும்''

''என்னங்கய்யா அப்பிடி சொல்லிப்பூட்டிங்க. அய்யாவும் இந்த தோட்டத்துக்கு வந்து பத்து வருசத்துக்கு மேலாச்சு. நா எப்பவாச்சும் பொய் களவு பித்தலாட்டம் ஏதாச்சும் செஞ்சிருக்கேங்களோ? தொரமாரு கிட்டயும் அய்யாமாரு கிட்டியும் கெட்டபோரு வாங்கினதில்லீங்களே''

''அதுதானுங்க நா அம்மாகிட்டியே சொல்லிப்புட்டேனே அவனூட்டு பாச்சா ஒண்ணும் பலிக்காது''

''சின்னதொரை இன்னிக்கும் கேட்டார். எத்தன பேர் புது யூனியனுக்குச் சேத்தாச்சின்னு''

''ஆறு ஆளுகளை இதுவரை சேத்திட்டினங்க''

''என்ன கங்காணி அம்மட்டுந்தானா?''

''என்னங்கய்யா பொய் சொல்லச் சொல்லிறீங்களா. நேத்துரவு ஐஸ் அய்யாச்சாமியையும் விருந்தாடி வேலுவையும் புடிச்சிட்டே''

''ஆமா கங்காணி நல்ல ஆளுகளத்தான் சேத்திருக்கீங்க. அய்யாசாமி ஐஸ்ஸடிக்கத்தான் சரி. விருந்தாடி வேலு மாசத்துல பாதி நாளய்க்கிமேல விருந்தாடி போயிருவான்''

''அய்யாவுக்குத் தெரியாத யோசினங்களா திருடனை புடிச்சி ராசமுளி முளின்னா ஒடனே முளிச்சிடுவோனுங்களா? இப்பதானுங்களே கொஞ்சம் கொஞ்சமா சேர்ராங்க''

''சரி கங்காணி தண்ணி சுட்டிருச்சி—நா குளிக்கப் போறேன்''

ஐயா எழுந்து குளிக்குமறைக்குப் போகிறார். கங்காணி குசினிக்குப் போகிறான். அவன் கண்களில் குசினியிலிருக்கும் மரக்கறி—யாரோ நாட்டிலிருந்து கொண்டுவந்தது—தட்டுப் படுகிறது.

"அம்மா, சம்சாரம் சொல்லிச்சிங்க மரக்கறி ஒண்ணு மில்லேன்னு. மாசக்கடசி தானுங்களே. கொச்சிக்கா தேங்கா வாங்க கையில மடியில ஒண்ணு மில்லீங்க. காசு ஒரு பத்து ரூவா கைமாத்தாத் தந்தா சம்பளம் போட்ட கையோட, மத்த காசோட சேத்து கண்டிப்பா தந்திடு வேங்க" -கைகள் பிடரியைத் தடவ குழைவுடன் கங்காணி கேட்கிறுன். பத்துகேட்டாத்தான் அம்மா அஞ்சி குடுக்கும். அம்மா கொடுத்த ஐந்து ரூபாவையும் வாடிப்போன பீட் ரூட் கிழங்குகளையும் இரண்டு கைகளால் வாங்கிக் கொண்டு "அம்மா நா போயிட்டு வாறேன்" என்று அம்மாவிடம் விடை பெற்றுக் கொண்டு, ஐயா பங்களாவை விட்டு வெளி யேறுகிறுன் கங்காணி. அம்மாவிடம் ஏய்த்து வாங்கிய காசு தரப்போகும் சாராயப் போதை உந்தித்தள்ள, கால் கள் லயத்தில் சாராயம் விற்கும் ஸ்டோர் லயத்துத் தொங் கக் காம்பராவை நோக்கி விரைகின்றன.

லயத்து நாய்கள் தொடர்ந்து குரைக்கின்றன. பெரு மாள் இருக்கும் மேட்டுலயத்துப் பக்கமாக ஆக்ரோஷத்து டன் குரைத்த ஒரு நாய் ஓடிவந்து கங்காணியின் கறுப்பன் நாயை லயத்தை வுட்டுத் தேயிலைக் காட்டுப் பக்கமாக வெருட்டித் துரத்துகிறது.

## (5)

அன்று ஞாயிற்றுக்கிழமை.

அதிகாலை தொட்டு மாலைவரை இயந்திரமாகத் தோட் டத்தில் உழைக்கும் மக்களுக்கு இன்றுதான் ஓய்வு நாள். கொழுந்துக் காலமென்றல் அதுவும் கிடையாது. ஒன்றரைப் பேரென்று — உடல் நலங் குன்றியவரும்— கொழுந்துக் கூடையுடன் மலைக்கு ஓடி விடுவார்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் தானே தங்களது சொந்த வேலை

களை யெல்லாம் செய்து முடித்து விட வேண்டும். சற்று அசந்து விட்டால் யார் செய்வது எப்போது செய்வது!

பூவாயி இன்று கோழி கூப்பிடும் நேரத்துக்கு முன்பே எழுந்து விட்டாள். அவளுக்குத் தலைக்கு மேலே வேலையிருக்கிறது. அவளேதான் எல்லாம் செய்ய வேண்டும். பாத்திரங்களைத் துலக்க வேண்டும், அடுப்புப்பூசி வீடு வழிக்க வேண்டும். உடுப்புகளைத் துவைத்துக் குளிக்க வேண்டும். பூவாயியின் அப்பன் வேலுச்சாமி காம்பரா மூலையில் கூனிக்குறுகி, கிழிந்த போர்வையால் உடலை தலையிலிருந்து கால்வரை மூடிக்கொண்டு நிலத்தில் விரிந்திருக்கும் கிழிந்த சாக்குப் படங்கில் கிடந்து, கண்விழித்திருக்க மனதைச் சிந்தனை என்ற மலைக்காட்டில் அலையவிடுகிறுன்.

வேலுசாமி இந்தியாவிலிருந்து நேரே இந்தத் தோட்டத்துக்குத்தான் வந்தான். இங்கேயே கல்யாணம் செய்து, பிள்ளை குட்டிகளைப் பெற்று, வந்த நாள் தொட்டு இன்று வரை உழைத்துக் கொடுக்கும் இந்தத் தோட்டத்துத் தேயிலைக்கு தன் மனைவியை உரமாக்கி, இன்று வாழ்க்கையில் அந்திச் சங்கடிக்கும் நேரத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறுன். வேலுசாமியின் மனைவிக்கு நாலு குழந்தைகள் செத்துப் பிறந்தன. நாலு பிறந்து செத்தன. இன்றிருப்பது ஒரே யொரு பிள்ளையான பூவாயிதான். இப்போது வேலுச்சாமிக் கிருப்பது ஒரேயோர் ஆசைதான். தனது ஒரே மகள் பூவாயியை அக்கரைக்குக் கொண்டு போய்ச் சேர்த்து, மாஸ்டராக வேலை பார்க்கும் தனது தங்கையின் மகனுக்குக் கல்யாணஞ் செய்து கொடுத்து, கண்குளிரப் பார்க்க வேண்டுமென்பதே. தோட்டத்தில் வேலையிருக்கும் நாட்கள் பூராவும் வேலுச்சாமியின் பெயரும் செக்ரோலிலிருக்கும். மேலும் மூன்றேக்கர் கொந்தரப்பும் அவன் பேரிலிருக்கிறது.

''அப்பா பெரிய கெளாக்கரய்யா வூட்டுக்குப் போகனுன்னு ராத்திரி சொன்னீங்களே! போகிலியா?''

"ஆமா ஆயா. அய்யாவ சந்திக்க ஒம்பது மணிக்குள்ள போவணும். அதுக்கு முந்தி காய் கறித் தோட்டத்துல கொஞ்சம் வேலயுமிருக்கு. போஞ்சி கொடி விட்டிரிச்சி. வரிச்சி தேடனும். கொந்தரப்பயும் இன்னிக்கு வெட்டி முடிச்சுறணும். கணக்கப்புள்ளயா மலயில பில்லக் கண்டா கண்டக்கய்யாகிட்ட சொல்லிப் புடுவாரு. அவரு பெரட்டுள ஆள தள்ளிப் புடுவாரு. பில்லு வெட்ட ஏக்கருக்கு பத்து ரூவாதான் குடுக்குறுங்க. ஆள போட்டுட்டா அதுலன்ன பிரயோசனம்?" —வேலுச்சாமி எழுந்து படங்குச் சாக்கை மடித்து மூலையில் வைக்கிறன். கை—கால் கழருவது போன்று வலியெடுக்கின்றன. அவனுக்கு என்றுதான் ஓய்வு! காலைக் கூதலுக்கு உடன் பிரிவுபசாரம் செய்ய முடியாமல், போர்வையை உதறி மீண்டும் போர்த்திக் கொள்கிறன். கால்கள் காலைக் கடனை நிறைவேற்ற தேயிலைக் காட்டை நோக்கி விரைகின்றன. வேலுச்சாமிக்குத் தனது திட்டத்தைப் பற்றி மீண்டும் மீண்டும் யோசிப்பதில் இன்பம் பிறக்கிறது. இன்னும் ஆறு மாதத்திற்குத் தான் இந்த நாட்டிலிருப்பதற்கு விசா வேலுச்சாமிக்கு. புனர் வாழ்வில் போகும் யோசனையில்லை. சொந்த ஊருக்குப் போய் அங்கிருக்கும் சொத்துக்களை மருமகனுக்குக் கொடுத்து, மகள் பூவாயியின் கல்யாணத்தைச் சிறப்புடன் செய்ய வேண்டும். இந்தியாவுக்குப் போய்வரும் கட்டுப்பாடு இறுக்கமாகியதற்குப் பின்பு வேலுச்சாமி ஊருக்கு ஒரு தடவை கூடப் போகவில்லை. மருமகனைச் சின்ன வயதில் கண்ட ஞாபகம். பூவாயி அவனைக் கண்ணாலும் கண்டதில்லை. கடிதத்தின் மூலம் தான் அவர்களது உறவு காக்கப்பட்டு வருகிறது. குடும்பப் பாசம் பேணப்படுகிறது. மருமகனின் வளர்ச்சியைக் கற்பனையில் கண்டு களித்தான். வாயைக் கட்டி வயிற்றைக்கட்டி சம்பாதித்து பணத்தை அரைக்கு அரைவாசி 'கமிசன்' கொடுத்து மருமகனுக்கு அனுப்பி அவன் ஊரில் வீடுகட்ட உதவியும் செய்தான். 'மாமா காலந்தாழ்த்தாம வாங்க' என்று அவன் அடிக்கடி கடிதம் எழுதுவான். ஏனே இரண்டு மாதங்களாக இந்தியாவிலிருந்து கடிதம் வரவில்லை.

''அப்பா இன்னிக்குத் தேதி பதனஞ்சாச்சி. தோட்டத் துல இன்னும் சீனி போடல'' என்று சொல்லிக்கொண்டே வெறும் சாயத்தண்ணியை மட்டும் கொண்டு வந்து கொடுக் கிருள் பூவாயி. வேலுச்சாமி லயத்துக் கோடியிலுள்ள காய்கறித் தோட்டத்துக்கு வேலை செய்யப் போகிருன்.

''பூவாயி'' பழக்கப்பட்ட குரல் கேட்கிறது. குசினிக் குள் இருந்து கொண்டே ஸ்தோப்பை எட்டிப் பார்க்கிருள் பூவாயி. கள்ளங் கபடமற்ற புன்சிரிப்புடன் பெருமாள் வெளியே நிற்கிருன்.

''மாமா எங்க போய்ட்டாரு? இந்தியாவுலருந்து கடு தாசி வந்திருக்கு ஸ்டோரு லயத்துப்பக்கப் போனேன். சாக்குக் கார சங்கிலி கொடுத்தான்''—சனிக்கிழமை தோட் டத்துக்கு வந்த கடிதம் ஞாயிறுதான் விலாசதாரருக்கு வந்து சேர்கிறது. தோட்டத்துத் தபாற் சேவையிது.

''உள்ளுக்கு வாங்களேன்''

''பறவாயில்லே பூவாயி. நா மாட்டுப்பட்டி லயத்துக் குப் போவணும்''

''ஆமா ஆமா தோட்டத்து தலவருல்ல. ரொம்ப வேலயிருக்கும்''

ஒன்றுமே பதில் சொல்லாது அவசரமாகப் பெருமாள் மறைந்து விட்டான்.

''அப்பா ஈந்தியாவுலருந்து கடுதாசி வந்திருக்கு'' பூவாயியின் குரல் கேட்டு வேலுச்சாமி காய்கறித் தோட் டத்திலிருந்து அவசரமாக காம்பராவுக்கு வந்து விடுகி ருன்.

''கடுதாசிய ஒடச்சுப்படி ஆயா'' —கடிதத்தின் செய்தி யறியும் ஆவல் ததும்ப மகளின் வாயைப் பார்த்துக்கொண் டிருக்கிருன் வேலுச்சாமி. பூவாயி கடிதத்தைப் படிக்கி ருள். அவள் தோட்டத்துப் பாடசாலையில் மூன்ரும்

வகுப்புவரை மட்டுமே படித்தவள். எழுத்துக்களைக் கூட்டி முற்றுப் புள்ளிகளில் இளைப்பாறி, தட்டுத் தடுமாறி வாசித்து விடுவாள். வழக்கம் போலக் கடிதத்தின் குசலம் விசாரிக்கும் படலம் முடிகிறது. ''மச்சான், மகன் எல்லோரையும் ஏமாற்றிவிட்டு, தன்னுடன் படிப்பிக்கும் எவளோ ஒரு தஞ்சாவூர்க்காரியை கல்யாணம் செய்து கொண்டான்......''

''ஐயோ ஆயா!'' வாய்விட்டலறி விட்டான் வேலுச்சாமி. நெற்றியிலும் தலையிலும் கைகள் விரிந்து கிடக்கின்றன. அப்படியே நிலத்தில் உட்கார்ந்து விடுகிருன். பூவாயி தொடர்கிருள்.. மச்சான் எழுதிய கடிதத்தில் தொடர்ந்திருந்த ஆறுதல் வார்த்தைகளெதுவும் வேலுச்சாமிக்கு ஆறுதல் தரவில்லை.

''ஆயா என் வாயில மண்ணைப் போட்டுட்டான் பாவி'' காய் கறித்தோட்டத்தில் வேலை செய்துவிட்டு வந்ததால் வேலுச்சாமியின் கைகளில் படிந்திருந்த மண் உதிர்ந்து விழுகிறது. பூவாயிக்கு அப்பாவின் நிலையைப் பார்க்கப் பரிதாபமாயிருக்கிறது.

''அப்பா, பில்லுமல மாரியாத்தா நம்மளுக்கு ஒரு வழி விடுவாத்தானே'' தோட்டத்துக் குலதெய்வத்தின் மேல் பாரத்தைப் போட்டுவிட்டுத் தனது வேலையிலீடுபடலானுள் பூவாயி. பைத்தியம் பிடித்தவன் போல் உட்காந்திருக்கிருன் வேலுச்சாமி. மகள் கூறிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் காதுக்குள் ஒலிக்கின்றன.

குசினிக்குள் அடுப்புப் பூசிக்கொண்டிருக்கும் மகளைப் பார்க்கிருன். அவள் முகத்தில் எவ்வித மாற்றமுமில்லை. ''இச்செய்தி என்ன பாதிப்பை யேற்படுத்தியிருக்கும். அவள் மனம் எப்படியெல்லாம் வேதனைப்படும்'' என எண்ணுகிருன். பூவாயிஇதனுல் வேதனைகொள்வதாகத் தெரியவில்லை. ''அப்பா, இப்பிடி அசந்து ஒக்காந்துட்டா...... இன்னிக்கு

ஞாயிற்றிக் கெழம பெரிய கௌாக்கரய்யா ஏதாச்சும் ஜோலியா எங்கிட்டும் போனாலும் போவாரு. ரொட்டி சுட்டு வச்சிருக்கேன் சாப்புட்டுட்டு சுருக்காய் போங்கப்பா'' எதிர் காலமே இருள் சூழ்ந்திருக்கும் தனது மகளுக்குப் புத்தி சொல்ல வேண்டிய தானே கலங்குவது தவறென்ற எண்ணம் அவனை அறிவுத் தெளிவுடன் சிந்திக்க வைக்கிறது. 'ம்' பெருமூச்சுவிட்டுக் கொண்டே செல்கிறான்.

''இனி எதுக்காய அவசரப்பட்டு இந்தியாவுக்குப் போறது...... எனக்கு ரொட்டி வேணாம். சாயத்தண்ணி கொஞ்சம் போல குடு குடிச்சிட்டுப் போறேன்.''

தினமும் தேயிலைக் காட்டிலுழைத்து ஓடாகி வரும் இத்தொழிலாளிக்கு உற்சாகமளிப்பது மட்டுமன்றி வேதனையேற்படும் போதெல்லாம் இயங்க வைப்பதும் தேயிலைச் சாயந்தான்.

'இம்புட்டு நாளும் ஈந்தியாவுக்கு அனுப்பின காசால ஒரு புரோசனமுமில்லை. இதுக்கப்புறம் நா எடுக்குற பெஞ்சின் காசுதான் ஒனக்கு ஒதவப் போவுது ஆயா. அய்யா கிட்ட போயி அத எடுகுற வழியப் பாப்போம்''

''அடிப்பெட்டிக்குள்ளிருந்தபுதிய கவர்க் கூடொன்றை எடுத்துப் பத்து ரூபா நோட்டொன்றைப் பெருமூச்சுடன் திணித்துக்கொண்டு பெரியகிளாக்கர் வீட்டை நோக்கி நடக்கிறான் வேலுச்சாமி.

இந்தியாவுக்குப் போவதற்கு அவன் செய்ய வேண்டிய ஏற்பாடாக ஓய்வூதியப் பணத்திற்குத் தொழிற்கந்தோருக்கு எழுத வேண்டும். நாளைக்கு ஆபிஸிற்குப் போய்த்தான் தொழிற் கந்தோருக்குக் கடிதம் எழுத வேண்டும். அதற்கு முதல் முயற்சியே அவனது பெரிய கிளாக்கர் வீட்டு விஜயம். ஐயாவை வீட்டுக்குப் போய் சந்திக்கா விட்டால் ஆபிஸிற்குப் போய்ப் பிரயோசனமில்லை, மாதத்தின் ஆரம்ப நாட்களில் போனால் ஐயா சொல்வார்

''போ, போ. இப்ப செக்ரேல் வேலையிருக்கு அப்புறமா வா'' என்று. மாத நடுவில் போனால், ''எக்கவுண்ட் முடியல. சும்மா சும்மா வந்து கரச்சல் குடுக்கிறது'' என்பார். மாத முடிவில் போனலோ, ''மாசம் முடியுது ரொம்ப வேலயிருக்குது. இப்ப ஒண்ணுஞ் செய்ய ஏலாது'' என்பார். சம்பந்தப்பட்டவர்கள் கூட்டில் வைத்து நீட்டும் தொகையைத் திரட்டிய பின்புதான் வேலையை முடித்துக் கொடுப்பார். வேலுச்சாமி இதுவரை ஒரு தொகையை ஐயாவுக்குக் கொடுத்துவிட்டான். வேலை பூராவும் முடிய இன்னும் எவ்வளவோ!

போன விடயத்தை முடித்துக் கொண்டு பெரிய கிளாக்கர் வீட்டிலிருந்து திரும்பும் போதுதான் வேலுச்சாமிக்கு அந்த யோசனை உதித்தது. கைக்குள்ள மாப்புளய வச்சிக்கிட்டு, கங்காணுத ஊரில உள்ள மாப்புளையநம்பி நாந்தான் ஏமாந்துட்டேன். பூவாயிக்கு பெருமாள் நல்ல பொருத்தமான மாப்புளதான். வேலுச்சாமியின் நொந்த மனம் சிறிது ஆறுகிறது. பெருமாளோட அப்பன் உசிரோட இருந்திருந்தா பூவாய தன் மவனுக்கு கட்டி வச்சிருப்பாரு. அவருதானே பூவாய்க்கு தாய் மாமஞ இருந்து காது குத்தி,பூவாயி குச்சிக்குள்ள இருந்தப்போ பதிமூன்ணும் நாளு வெளியே எடுத்து, சடங்கு சுத்தி ஒரு தாய்மாமன் செய்ய வேண்டிய தேவையெல்லாம் செறப்பா லயித்துல உள்ள ஆளுக எல்லாம் வாய் பொளக்கக் கூடிய மொறயில செஞ்சாரு. ஏம்மவள கூலிக்காரனுக்குக் குடுக்கக் கூடாதுன்னு யோசிச்சு நாந்தான் மடயனுயிட்டேன். பெருமாள்ல என்ன கொறயிருக்கு. தங்கமான பயல். வேளையிலய கெட்டி. இந்த சின்னவயசுலயே நல்ல மருவாதி. இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போவல. ஆனு ஒரு சங்கட்டம். நாங்க ஈந்தியாவுக்குப் போறம். அவுங்க சிலோன் சிட்டிசனுக்கு எழுதியிருக்காங்க!

வேலுச்சாமி லயத்துக் காம்பராவுக்கு வந்த பொழுது பூவாயி பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தாள். அவள்

கைபட்ட பாத்திரங்கள் கண்ணுடியாய்ப் பளபளத்தன, பூவாயி வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் துப்புரவாகவே செய்வாள். குசினிக்குள் எதுவும் ஒழுங்காகவேயிருக்கும். வேலுச்சாமி வந்ததும் வராததுமாக தனது தற்போதைய திட்டத்தை மகளுக்குச் சொல்ல விழைகிருன். அவர்கள் வீட்டில் எப்பொழுதும் எதுவும் பரகசியந்தான். அவனது சுடாவமோ அல்லது குடும்பத்தில் இருவர் மட்டும் இருப்பதாலோ என்னவோ எந்த விடயமும் — இரகசியமாக இருக்க வேண்டியதைக் கூட மகளுக்குச் சொல்லி விடுவான்.

''ஆயா நம்ம செல்லாயிகிட்ட பெருமாள ஒனக்குக் கேட்டுப்பாத்தா என்னுன்று யோசிக்கிறேன்.''

பூவாயியின் முகம் அன்றலர்ந்து பூவாக மாறுகிறது. இனம் புரியாத மகிழ்ச்சி கரை புரள்கிறது.

''அப்பா அவுங்க சிலோனுக்கு எழுதியிருக்காங்க எப்படியப்பா ஈந்தியாவுக்கு வருவாங்க'' —ஆவலுடன் கேட்கிருள் பூவாயி,

''இதென்ன ஆயா பெரியகாரியமா? அவுங்க மாமா பண்டாரவளையில கடைவச்சிருக்காரே — கறுப்பையா மொதலாளி அவருநெனச்சா ஒரு மாசத்துல விசயத்த முடிச்சு குடுப்பாரு. காசுதான் செலவழிக்கணும். மொதலாளிக்கு கொழும்புல பெரிய பெரிய ஆளுங்கெல்லாம் பழக்கமாம். மூணும் மாசம் நம்ம காசு விசயமாய் போனப்போ மொதலாளி ஏங்கிட்ட சொன்னுரு சிலோன் சிட்டிசனுயிருந்த ஒருத்தன 'கேன்சல்' பண்ணி ரெண்டு மாசத்துல பாஸ்போட்டெல்லாம் எடுத்துக் குடுத்து ஈந்தியாவுக்கு அனுப்பிஞராம்.''

பூவாயிக்கு புதுநம்பிக்கை பிறக்கிறது. வேலுச்சாமி சுரண்டியை தோளில் ஏந்திக்கொண்டு கொந்தரப்பு

மலையை நோக்கிப் போகிறான். ''எப்பிடியும் இன்னிக்கு கொந்தரப்பு முடிச்சுடனும். நாளைக்கு கணக்கப் பிள்ள கொந்தரப்பு மலைய பாப்பாரு. அப்புறம் ஒரு நாளைக்கு நின்று வெட்டச் சொல்லுவாரு அனியாயமா ஒரு நாலு பேரு போயிடும்.''

பெருமாளை மனக் கண்முன் நிறுத்த, பூவாயியின் கன்னி மனம் எதையெதையோ நினைத்துக் கற்பனை செய்கிறது. அவனது படர்ந்த முகம் அடர்ந்த கேசம், உரோமம் நிறைந்த நெஞ்சு, உரமேறிய கைகளும் கால்களும்...... இவ்வளவு காலமும் இந்தியாவில் எங்கோ ஓர் ஊரிலிருக்கும் உருவந் தெரியாத தன் மாமனின் மகனை மனத்திலிருத்தி கற்பனையில் மிதந்தாள். இன்று இந்தத் தோட்டத்தில்—அடுத்த லயத்தில்—இளமையிலிருந்தே கண்டு பழகிய தாய் மாமனின் மகனாகிய பெருமாளை மனதில் குடிபுகுத்திக் குதூகலிக்கின்றாள். இன்றைய கற்பனை முன்னைய நாட்களை விட இதமாகவும் இனிமையாகவும் இருக்கிறது. பூவாயியின் கைகள் புதுசு போன்று விளக்கிய அலுமினியப் பானையில், அன்று ஆக்கப் போகும் அரிசியின் அளவுக்கேற்ற நீரை யூற்றிக் காலையில் பூசிய அடுப்பில் பானையை ஏற்றுகின்றன.

## ( 6 )

அந்திச் சங்கடித்து எவ்வளவோ நேரமாகிவிட்டது. கொழுந்து நிறுத்து பேர் போட்டுவிட்டு பெண்கள் லயத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். தூரத்தில் நின்று பார்க்கும்பொழுது ஒற்றையடிப் பாதைவழியாக அவர்கள் நிரையில், கூடையில் இடப்பட்ட இலக்கங்கள் தெரியச் செல்வது, சிறைக் கைதிகள் அணிவகுத்துச் செல்வது போல் தெரிகிறது. அந்திச் சங்கு நாலுமணிக்கு அடித்தாலும் கொழுந்து நிறுத்து பேர் போட்டுவிட்டு வீடு திரும்ப ஐந்து மணிக்கு மேலாகிவிடும்.

ஸ்டோர் லயத்துக்கருகில் கிளைவிடும் பாதைகளில் தத்தம் லயன்களுக்குப் பிரிந்து செல்கின்றனர். வெற்றுக் கூடை தடதடவென முதுகிலடிக்க இரு கைகளும் கழுத் துக்கு மேல் தொங்கும் கூடைக் கயிற்றை இறுகப் பிடித் துக்கொண்டு சோமாவதி வழக்கம்போல் கீழ் ரோட்டில் போகாது மேல் ரோட்டில் போகிறாள். அவளது நடை யில் இளமைத் துடிப்புத் துள்ளுகிறது. அவளது வயதை யொத்த சுதுநோனு அவளைப் பின்தொடருகிறாள். இரு வரும் மேட்டு லயத்துக்கு வந்து பெருமாளின் காம்பரா வாசலை அடைந்துவிட்டார்கள்.

அப்பொழுதுதான் மலையிலிருந்து வீடுதிரும்பிய செல் லாயி அவசரமாக உடற்சோர்வுக்கு உடன் நிவாரண மாக சாயத்தண்ணி குடிப்பதற்குத் தண்ணீரைச் சுடவைத் துக்கொண்டிருக்கிறாள். ''சோமாவதியா, வா புள்ள வா ஏதின்னிக்கு இந்தப் பக்கம்?'' கூடையை வெளியில் வைத்து விட்டு எவ்வித தயக்கமுமின்றி குசினிக்குள் புகுந்துவிட் டாள் சோமாவதி. சுதுநோனு தயங்கியவண்ணம் காம் பராவுக்கு வெளியில் நிற்கிறாள். சோமாவதியின் வட்ட வடிவமான சிவந்த முகம் மேலும் சிவக்கக் கேட்கிறாள்.

''ஆயா எப்புடி 'சொகம்?'' அவள் செல்லாயியை 'ஆயா' என்றுதான் செல்லமாக அழைப்பாள். மேட்டு லயத்துக்கு வருமுன்பு செல்லாயி குடியிருந்த மாட்டுப் பட்டி லயத்தில் அடுத்த காம்பராவில் தான் சோமாவதி யும் அவளது தாயும் தம்பியும் குடியிருந்தனர். அவர்கள் தாய் பிள்ளைபோல் பழகுவார்கள்.

சோமாவதி உட்காம்பராவை நோட்டம் விட்டுக் கொண்டே கேட்கிறாள் ''ஆயா பெருமாள் இல்லீங் களா?''

''நம்ம சின்னப் பாப்பாவுக்கு ரொம்ப சொகமில் லேன்னு பணியகணக்கு பீக்கர் பிச்சை வேலக்காட்ல வச்சி

சொன்னுனும். அதான் ஒருக்கா பாத்துட்டு வாரேன்னு பணியகணக்குக்குப் பொயிட்டான்.''

''ஆயா பெருமாள இன்னிக்கொருக்கா அம்மே வரச் சொன்னிச்சி.''

''சரி சோமா அவன் வந்தவொடன சொல்றேன்.''

''அப்ப நா போயிட்டு வாரேன் ஆயா.''

''நில்லு சோமா தண்ணி கொதிச்சிருக்கு. தேத்தண்ணி போட்டுத்தாரேன், குடிச்சிட்டுப் போ.''

''பரவாயில்லீங்க ஆயா. சுதுநோனு வெளியவே நிக்குது. அது நாட்டுக்குப் போவணும். மறந்துராம பெருமாள் வந்ததும் சொல்லிருங்க'' சோமாவதியும் சுதுநோனுவும் மாட்டுப்பட்டி லயத்தை நோக்கிச் செல்லும் ஒற்றையடிப் பாதை வழியாகச் செல்கிறார்கள்.

வீட்டுக்கு வந்த சோமாவதி, அவசரமாக சுதுநோனுவுக்கு விடைகொடுத்து நாட்டுக்கு அனுப்பிவிட்டு தனது வேலைகளை விரைவாகச் செய்கிறாள்.

சோமாவதிக்கும் தாய் பொடிமெனிக்காவுக்கும் பெருமாள் கட்டாயம் வருவானென்பது தெரியும். பொடிமெனிக்கா பெருமாளை 'புத்தா' என குழைவாக—தன் மகனை அழைப்பதுபோல அழைப்பாள். பொடிமெனிக்கா பெருமாளைத் தூக்கி வளர்த்தவள். அவன் பிறந்த சில நாட்களுக்குள் செல்லாயிக்கு மார்புக்கட்டி ஏற்பட்டதால் பொடிமெனிக்கா அவனை அழவிடாது தனது பாலையூட்டி வளர்த்தாள்.

நாட்டிலிருந்து கொழுந்தெடுக்க வந்த பொடிமெனிக்கா மாட்டுப்பட்டி லயத்தில் வாழ்ந்த அப்புகாமியை தனது பெற்றோரின் விருப்பத்துக்கு மாறாக தன் விருப்பத்துடன் கல்யாணம் செய்த நாளிலிருந்து மாட்டுப்பட்டி

லயத்திலேயே குடியிருக்கிறாள். இங்குதான் குழந்தைகளைப் பெற்றாள். கணவன் அப்புகாமி இந்தத் தோட்டத்துத் தேயிலைச்செடிக்கே உரமானான், தோட்டத்து மக்களால் தப்பு அடித்து, 'கட்டமொய் பிடித்து', புதைகுழிக்கு கை மண் போட்டு தோட்ட முறைப்படி அடக்கஞ் செய்யப்பட்டான். அப்புகாமி இறக்கும்பொழுது அவளது கடைசி மகனுக்கு ஒரு வயதுகூட ஆகவில்லை. ஆண் துணையில்லாத அவர்களுக்கு பெருமாள் எல்லா உதவிகளையுஞ்செய்வான். பெருமாள் லயம் மாறிப் போனபொழுது வலது கையை இழந்ததுபோல பொடிமெனிக்கா மனம் வருந்தினாள். ஆனாலும் பெருமாள் அவ்வப்போது அவர்களின் தேவையறிந்து கேளாமலே உதவிசெய்து வருவான்.

பெருமாள் தாயிடம் செய்தியைக் கேட்டதும் ஆவலுடன் மாட்டுப்பட்டி லயத்தை நோக்கி விரைகிறான். தோட்ட நிருவாகம் லயன்களுக்கு நம்பரிட்டு அழைத்தாலும், தோட்டத்தில் லயன்களை ஏதாவதொரு காரணங்கொண்டு, தங்கள் வசதிபோல் பெயரிட்டு அழைப்பார்கள். மேட்டு லயத்திலிருந்து புறப்பட்ட பெருமாள் ஓட்டு லயம், பணியலயம், ஸ்டோர் லயம், பலாமரத்து லயம், மூங்கில் குத்துலயம்..... எல்லாவற்றையும் தாண்டி வந்து கொண்டிருக்கிறான். தோட்டத்துக் காம்பரா பிரச்சினை உச்சக்கட்டத்தில் இருந்த காலத்தில் யாரோ ஒரு வெள்ளைக்காரத்துரை, மாட்டுப்பட்டியாயிருந்ததை லயமாக மாற்றி காம்பராப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்ததன் விளைவே மாட்டுப்பட்டி லயம் உருவாகக் காரணமாயிருந்தது. பெருமாள் இன்று மேட்டு லயத்தில் வாழ்ந்தாலும் மாட்டுப்பட்டி லயமென்றால் அவனுக்கொரு தனி விருப்பம். அவன் பிறந்த காம்பரா, தவழ்ந்த ஸ்தோப்பு, ஓடி விளையாடிய படிக்கட்டுகள்...... எல்லாம் மாட்டுப்பட்டி லயத்துக்கே உரியன. பெருமாளுக்கு இளமைக்கால நினைவுகள் உயிர் பெறுகின்றன.

'அம்மே' என அழைத்து வந்த அடுத்த காம்பரா பொடிமெனிக்காவை அவனால் என்றுமே மறக்கமுடியாது. கொழுந்தெடுத்து, அரிசி பிடித்து, சம்பளம் போட்டு சாமி கும்பிட்டு மண்விளையாடிய அந்தக்காலத்தில் முக்கிய பாத்திரமேற்று நடித்த சோமாவதியை எப்படி மறப்பது! சோமாவதி லயத்துத் தமிழ் பேசுவாள் தாயுடன் மட்டுந்தான் தாய்மொழி பேசுவாள். பெருமாளின் சிந்தனை பலவாறு செல்கிறது. 'பொடிமெனிக்கா ஏன் வரும்படி அழைத்தாள். சோமாவதிக்கு நாட்டிலிருந்து வரும் சிறிசேனவைக் கல்யாணஞ்செய்துவைக்க ஏதாவது ஏற்பாடாகியிருக்குமோ.' ''குமாரிகாமி தன் மகன் சிறிசேனவுக்கு நம்ம சோமாவதியை கட்டி வய்க்க விரும்புகிறாள்'' என்று பொடிமெனிக்கா போனவாரம் சொன்னதை பெருமாள் நினைவுகூர்கிறான். 'அப்படியேதாவது இருந்தால் என்னாலியன்ற உதவிகளைச் செய்யவேண்டும். அவர்களுக்கு உதவிசெய்ய யார் இருக்கிறார்கள். பொடிமெனிக்காவுக்கு உதவி செய்யவேண்டிய அண்ணனை சில்வா, இன்று பெரிய சொத்துக்களின் அதிபதி. ஒரு காலத்தில் இந்தத் தோட்டத்தில் புல்லு வெட்டியவன். இன்று இந்தத் தோட்டத்துக்கு லொறி 'டிரான்ஸ்போர்ட் ஏஜன்ட்.' மலையாண்டி, முதலாளிமாரின் பண்பற்ற வாழ்க்கையைப் பற்றிச் சொல்லும்போதெல்லாம் அவர்களுக்குத் தெரிந்த சில்வா முதலாளியையே உதாரணத்துக்கு எடுப்பான். உடன்பிறப்புக்களின் பாசத்தைக்கூட இவர்களின் பணத்திமிர் உதாசீனம் செய்துவிடும் என்பான்.

தோட்டத்து லயத்தில் பொடிமெனிக்கா இருப்பதால் அவளைச் சொந்தச் சகோதரி என்று கூறவே முதலாளி வெட்கப்பட்டார். அவளது கணவன் இறந்தபோது கூட அவர் வரவில்லை. இதற்குப்பிறகு பொடிமெனிக்கா தமையன் உறவை அறவே துண்டித்துக்கொண்டாள்.

'மொதலாளிவூட்டு மூத்த மவன்தான் பெரிய படிப்புப் படிச்சிட்டு பெரிய தொழில் பாக்குறான். அவுங்க வூட்

டுத் தோட்டத்த பாத்துக்கிட்டிருக்கிற சின்ன மகன் ஆரிய பாலாவயாவது மொதலாளிக்கு நல்ல மனசுருந்தா சோமாவதிக்குக் கட்டிக்குடுக்கலாந்தான... ஏழைகளுக்குத் தொண ஏழைங்கதான்.'

நாட்டிலிருந்து தோட்டத்துக்கு வேலேக்கு வரும் குமாரிகாமிதான் பொடிமெனிக்காவின் துயரத்தில் பங்கு கொள்பவள். மகள் சுதுநோனு சோமாவதியின் அந்தரங்கக் கூட்டாளி.

'ஒருவேளை முக்கியமான அலுவல்கள் ஒன்றுமில்லாமலே என்னை வரச்சொல்லியிருப்பார்களோ? போன மாதந்தான் அது நடந்தது வேலையால் திரும்பும்பொழுது சோமாவதி பெருமாள் வீட்டுக்குச் சென்று, அவனை தாய் பொடிமெனிக்கா வரச்சொன்னதாகச் சொல்லிவிட்டுச் சென்ருள், ஏதாவது அவசர வேலையிருக்குமோவென எண்ணி பெருமாள் போனுன். ஆனுல் அவன் போனதும் பொடிமெனிக்கா விழித்தாள்; சோமாவதி சிரித்தாள். அன்று சமைத்த 'பலாமுஸ்' கறியை பெருமாளுக்குக் கொடுக்கவே சோமாவதி தாய்க்குத் தெரியாமல் செய்த ஏற்பாடு அது. முற்றி சுளேவிடாத பிஞ்சுப் பலாக்காயை இறைச்சிக் கறிபோல் சமைப்பார்கள். நல்ல பலாக்காய் கிடைத்துவிட்டால் அதைச் சமைத்துப் பெருமாளுக்குக் கொடுக்க விரும்புவார்கள் தாயும் மகளும். மாட்டுப் பட்டி லயத்திலிருந்து மேட்டு லயத்துக்குப் போனபிறகும் அவர்களது அன்பு தொடர்ந்தது. 'இன்றும் அப்படித் தான் அழைத்திருப்பார்களோ!'

கூட்டமாக இருக்கும் லயன்களின் ஒதுக்குப்புறமாகவே மாட்டுப்பட்டி லய மிருக்கிறது. குட்டித்தேரி மலேயொன்றைத் தாண்டிவரவேண்டும். தூரத்தில் வரும்போதே பெருமாளை கையிலிருந்த பந்தத்தின் வெளிச்சத்திலிருந்தே வெளியே வழிமேல் விழிவைத்துக் காத்திருந்த சோமாவதி கண்டுவிட்டாள். காம்பராவுக்குள் ஓடிச்சென்று சுவ

ரிலே தொங்கிக்கொண்டிருந்த வெடிப்பு விழுந்த கண்ணாடி யில் தன் முகத்தில் படிந்திருந்த கரியைத் துடைத்துவிட்டு ஸ்தோப்பிலிருந்து புட்டுவத்தில் படிந்திருந்த தூசியைப் பழைய துணியால் துடைத்துவிடுகிருள். புன்சிரிப்புடன் ஸ்தோப்பு வாசலில் நின்ற சோமாவதிக்கு சிரிப்பால் பதி லளித்துவிட்டு உட்சென்ற பெருமாளை, ''வாங்க புத்தா இந்தப் புட்டுவத்தில இருங்க'' என்று வரவேற்கிருள் தாய். குடும்ப சுகம் விசாரிப்பதில் ஆரம்பித்த உரையாடல் நீள, பெருமாள் தான் விரைவாகத் திரும்பவேண்டுமென்பதை நினைவுபடுத்துகிருன். சோமாவதி ஒரு கையைக் கதவு நிலையிலும், மறுகையை இடுப்பிலும் மடித்து காம்பரா வாசலில் நிற்கிருள். அவளது உடையினூடாக பிதுங்கி நிற்கும் இடை மடிப்பு குப்பி லாம்பின் மங்கிய ஒளியிலும் மினுமினுக்கிறது.

''புத்தா நா ஓங்கள வரச்சொன்னது ஏந் தெரியுமா? ஓங்களுக்குத் தோட்டத்துல சின்னத்தொரயும், கண்டக் கையாவும் ரொம்ப கரச்சல் கொடுக்குறதுக்கு திட்டம் போடுருங்க.''

''அம்மே அத ஒரு கை பாத்துக்குவமே.''

''அப்புடி சொல்லாதீங்க புத்தா. அவுங்க சங்கதி ஓங்களுக்குத் தெரியுந்தானே. நம்ம தோட்டத்துல நாயம் கேக்க போனவுங்கள எப்படியெல்லாம் அனியாயம் செஞ் சாங்கன்னு. அதுக்கேத்தாப்போல பந்தங்காரங்களும் தோட்டத்துல இருக்காங்க. நேத்து ராத்திரி மாரிமுத்துக் கங்காணியும் அய்யாசாமியும் 'போம்' ஒப்பம் வாங்கிக் கொண்டாந்தாங்க'' இடைமறித்து விளக்கம் கொடுக் கிருள் சோமாவதி.

''ஒங்க யூனியன்லருந்து விலகுறதுக்கு 'பீ போம்' கொண்டாந்தாங்க, ஒப்பம் வாங்க.''

செக்ரோலில் பிடிக்கும் சங்க சந்தாப் பணத்தைத் தொடர்ந்து பிடிக்கவேண்டுமென்று நிருவாகத்தைக் கேட்

கும் பத்திரம்தான் 'பீ போம்.' பெருமாள் முகம் சிந்தனைச் செறிவில் சிவக்கிறது, சோமாவதி தொடர்கிருள்:

''நாங்க மூஞ்சிக்கு நேரே சொல்லிப்புட்டோம். எங்க யூனியன விட்டு வெலகப்போறதில்லேன்னு'' பெருமாளின் முகத்தைப் பார்த்து புன்சிரிப்புடன் கூறுகிருள் சோமாவதி.

''ஒங்களப் பத்தியும் மாரிமுத்துக் கங்காணி ஏதேதோ சொன்னுங்'' என்று சொன்ன பொடிமெனிக்கா சொல்லக்கூடாத ஒன்றைத் தவறுதலாகச் சொல்லிவிட்டதற்கு நாக்கை வெளியில் நீட்டிக் கடித்துக்கொள்கிருள்.

''நீங்க அஞ்சல அக்காவோட கூட்டாயிருக்கீங்களாம்'' எதையெதை யார் யாருக்கு எப்படிச் சொல்ல வேண்டுமென்று தெரியாத வெள்ளையுள்ளம் படைத்த சோமாவதி சொல்லிவிடுகிருள்.

''பொத்தடி வாய உனக்கேன் இந்தப் பெரிய பேச்செல்லாம்'' பொடிமெனிக்காவிற்குக் கோபம் பொத்தென்று வருகிறது. மகளைப்பார்த்துத் தாய்மொழியில் சீறுகிருள். அப்பொழுது காம்பராவிற்குள் தூங்கிக்கொண்டிருந்த சின்ன மகன் தூக்கத்தில் வாய் புலம்புவது கேட்கிறது. ''டேய் காளிமுத்து நீதாண்டா கல்லடிச்சது. ஒம் மண்டய ஒடச்சிப்புடுவன்'' செம்மையாகப் பேசத் தெரியாத தன் தாய்மொழியிலல்லாது நாளும் பொழுதும் பேசும் லயத்துத் தமிழில்தான் பொடிமெனிக்காவின் சின்ன மகன் தூக்கத்தில் புலம்புகிருன். பொடிமெனிக்கே உள்ளே போகிருள்.

''ஆமா பெருமாள் நீங்க அஞ்சலை ஊட்டுக்கு காலங்காத்தால போயிட்டு வாரத தஞ்சம்சாரம் கண்ணுல கண்டதா கங்காணி சொன்னுன்.''

பெருமாள் விக்கித்துப்போகிருன். சோமாவதி வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்துக்கொண்டிருக்கிருள்.

திரும்பி வரும் பொடிமெனிக்கா மீண்டும் மகளைப் பார்த்துச் சொல்கிருள் ''மாரிமுத்துக் கங்காணி வேலே தெரியாதா? அதப் புடிச்சிக்கிட்டு ..... ஒனக்கிந்தக் கதயெல்லாம் எதுக்கு? பெருமாள் போவ நேரமாச்சு. பலாமூசு கறியோட சோறு சாப்புட்டுட்டுப் போவட்டும்.''

''அம்மே எனக்குப் பசிக்கல்ல.''

சோமாவதி ஒரு கணத்தில் சிறு கோப்பையில் பலாமூசுக் கறிச் சோற்றுடன் அவன் முன் நிற்கிருள்.

''அவுங்க போட்டியில ஓங்க பேரக் கெடுக்குறதுக்காக சொன்னதை நெஞ்சில வச்சிக்கிட்டு கவலப்படாதீங்க. இப்ப ஏன் ரொம்ப யோசிக்கிறீங்க'' பொடிமெனிக்கா சொல்கிருள்.

''எனக்கு யோசன ஒண்ணுமில்ல பணியக்கணக்குல அக்கா வூட்ல சாப்புட்டதல பசிக்கல.''

தாயன்புடன் பொடிமெனிக்கா கேட்கிருள்: ''கொஞ்சமாவது சாப்புட்டுட்டுப் போங்க புத்தா.'' சோமாவதியின் முகம் கெஞ்சுகிறது. பெருமாளுக்கு அவர்களது அன்புக் கட்டளையைத் தட்டிக்கழிக்க முடியவில்லே.

''சரிங்கம்மே பெலாக்கறி கொஞ்சம் தாங்க. வூட்ல கொண்டுபோயி சாப்புடறேன்.''

''இந்த சோத்த நா சாப்புடறேன். ஓங்களுக்குப் பலாமூசுக் கறி மட்டும் கொண்டாந்து தாரேன்'' என்று சொல்லிக்கொண்டே குசினிக்குள் புகுந்த சோமாவதி கறியுடன் திரும்பி வருகிருள். பொடிமெனிக்கா கரித்துண்டொன்றையும் பெருமாளின் கையில் கொடுக்கிருள்.

''எதுக்கும் கவனமாகப் போங்க புத்தா.''

சோமாவதி பெருமாளே வழியனுப்ப ஸ்தோப்பு வாசல்வரையும் வருகிருள்.

''பெருமாள் நீங்க அனியாயம் மேட்டு லயத்துக்குப் போனது, கங்காணி வேல வேணுன்ன மாதிரி காம்பரா வையும் வேணுன்னிருக்கலாம்'' என்கிறுள் சோமாவதி. பெருமாளின் பந்தம் மறையும் வரையும் நின்று பார்த்து விட்டு காம்பராவுக்குள் போகிறுள் சோமாவதி.

பெருமாளுக்கு மாரிமுத்துக் கங்காணி, அஞ்சலையை யும் தன்னையும் சேர்த்துக் கட்டிய கதையை நினைக்கக் கவலையாயிருக்கிறது. 'பாவம் அஞ்சல. புருசன் செத்ததுல ருந்து எவ்வளவு கஷ்டப்பட்டு புள்ளங்கள வளர்த்து வருது. ஏங்கூட அக்கா தங்கச்சி மாதிரி பழகிவருது.' அஞ்சலைக்கும் பெருமாளுக்கும் கிட்டத்தட்ட ஒரே வயதுதானிருக்கும். தோட்டத்துப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்புவரை ஒன் ருகப் படித்தனர். இருவரும் வகுப்பில் திறமையாகத் துலங்கியதால் வட்டார மாவட்ட நாடகப் போட்டிகளில் இருவரையும் முக்கிய பாத்திரமாகப் போட்டுப் பழகிய 'ராஜா ராணி' நாடகம் பண்டாரவளை மாவட்டத்தில் முதற் பரிசைத் தட்டியது. ''பெருமாள் ராஜா அஞ்சலை ராணி நல்ல ஜோடி. அப்பனிட்ட சொல்லி கலியாணத்த செய்துவைக்கப்போறன்'' என்று ஸ்கூல் மாஸ்டர் அஞ் சலையை கன்னத்தில் குழிவிழ நாணிக்கோண வைத்தது இன்றும் பெருமாளுக்குப் பசுமையாய் நினைவிருக்கிறது.

கவ்வாத்து மலையாகக் காய்ந்துகிடக்கும் அஞ்சலையின் இன்றைய நிலையை எண்ணும்போது...... பெருமாள் பெரு மூச்சு விடுகிறுன். கணவன் இறந்த பின்பு அடையாளந் தெரியாத அளவுக்கு அஞ்சலை மாறி வருகிறுள். முன்பெல் லாம் அவள் பேசும்பொழுது வாய் மட்டும் பேசாது; கண் களும் கதை பேசும். கன்னத்தில் குழிவிழச் சிரித்து, தோட்டத்தில் யாரிடமும் குழைவாகவே பேசுவாள். 'அண்ணே, தம்பி, மாமா' இப்படி ஏதாவது ஒரு உறவு சொல்லிக் கலகலப்பாகப் பேசும் அஞ்சலை இன்று எங்கே? சிறு வயதில் ஐந்து வருடங்கள் தோட்டத்துப் பள்ளிக் கூடத்தில் ஒன்ருகப் படித்ததாலோ என்னவோ, பெரு

மாளே அஞ்சலே பெயர் சொல்லித்தான் அழைப்பாள். ஒரு தடவை அஞ்சலேயுடன் பேசிவிட்டால் யாருக்குமே மீண்டும் அவளுடன் பேசவேண்டுமென்ற ஆவலேத் தூண்டும் காந்தசக்தி அவளது பேச்சிலிருந்தது. அவளது கணவன் உயிருடன் இருந்த காலத்தில் பெருமாள் மேட்டு லயத்துக்கு ஏதாவது தேவையாக வந்தால் அஞ்சலே வீட்டிற்குப் போகாமல் திரும்பமாட்டான். அஞ்சலே பேச்சில் கலந்து கொண்டால் பெருமாளுக்கு நேரம் போவதே தெரிவதில்லே.

அஞ்சலேக்குச் சொந்தக்காரர் என்று சொல்ல இந்தத் தோட்டத்தில் யாருமே இல்லே. அவளுக்கு நெருங்கிய சொந்தக்காரர் எல்லோரும் அப்புத்தளேக்கு அருகாமையில் பெரகலேத் தோட்டத்தில் நடந்த பயங்கர மண்சரிவில் உயிருடன் புதையுண்டுவிட்டார்கள்.

பெருமாளுக்கு கட்டை வெட்டிக் கிழவன் நேற்று பேர் போட்டுவிட்டு வரும்பொழுது தன்னேக் கேட்டது நினேவுக்கு வருகிறது. ''தம்பி, அஞ்சலய செங்கோடனுக்கு கட்டிக் குடுத்தா என்ன?''

நெடுநாட்களாக இந்தத் தோட்டத்தில் கொந்தரப்புக்கு விறகுக்காக மரங்கள் வெட்டிக்கொடுப்பதால் 'கட்டை வெட்டி' என்ற பெயர் எடுத்த அண்ணுமலே தோட்டத்தில் நல்லது கெட்டதுகளுக்கு முன் நிற்பவன். கட்டை வெட்டிக் கிழவன் இந்தத் தோட்டத்தில் நிறையக் கல்யாணங்களே முன்னின்று செய்துவைத்திருக்கிறுன். செங்கோடனின் மனேவி மாரியாயி வயிற்றுப் பிள்ளேயுடன் மலேயிலிருந்து தவறி விழுந்து, உதிரம் போய்ச் செத்துவிட்டாள். 'செங்கோடனுக்குப் புள்ளயா—குட்டியா? அவனும் நல்ல உழைப்பாளி. மத்தவங்களப் போல அந்தி பட்டா நாட்டுக்குப் போறதுமில்ல. அஞ்சலேயக் கட்டிக்குடுத்தா அவளயும் புள்ளங்களயும் கவனமாக்

காப்பாத்துவான். அப்புறம் இப்புடியான கதையெல்லாம் வராது. செங்கோடன் விரும்பித்தான் கட்டை வெட்டிக் கிழவன் கேட்டிருப்பான். ஆனா அஞ்சல......: விரும்புவாளோ என்னவோ!'

பெருமாளின் சிந்தனை திசை திரும்புகிறது, மாரிமுத்துக் கங்காணியும் சின்னத்துரையும் தோட்டத்தில் ஒற்றுமையாக பிரச்சினைகளுக்காகப் போராடி வரும் ஒரே கட்சியை உடைப்பதற்கு எடுக்கும் முயற்சிகளை எண்ணிப் பார்க்கிறான். 'நாளக்கி தோட்டக் கமிட்டியக் கூட்டி இது பத்திப் பேசணும். நாமளும் லயம் லயமாப்போயி ஒத்தும கொலயாமப் பாத்துக்கணும்.'

வீட்டுக்குள் புகுந்துவிட்டான் பெருமாள். அஞ்சலையின் குழந்தை அழுங்குரல் கேட்கிறது.

''தம்பி, அஞ்சல வூட்டுச் சின்னவன் ரொம்ப நேரமா ஒரே வரக்கத்தா கத்திக்கிட்டிருக்கான். வவுத்துல பூச்சியோ தெரியல்ல, பாவம்.'' -மற்றைய நாளென்றால் பெருமாள் ஓடிச் சென்று அஞ்சலையிடம் என்னவென்று கேட்டுக்கொண்டு வந்திருப்பான்.

சோமாவதி கொடுத்தனுப்பிய பலாமூசுக் கறியை அம்மாவுக்கும் கொடுத்துத் தானும் சாப்பிடுகிறான். அஞ்சலை மகன் சின்னவனின் அழுகுரல் அவனைத் துடிக்கவைக்கிறது. சோமாவதியின் பலாமூசுக்கறி ஏனோ இன்று சுவைக்கவில்லை.

படுக்கைக்குப் போன பெருமாளைத் தூக்கம் அணைக்க மறுக்கிறது, அஞ்சலையின் குழந்தையின் அழுகுரல் சற்றுக் குறைவதுபோல் தெரிகிறது. ஆனால் அதன் விசும்பல் ஒலி விட்டுவிட்டு ஒலித்துக்கொண்டேயிருக்கிறது.

## ( 7 )

மலையாண்டி நாளைக்குத் தோட்டத்துத் தொழிலாளி யாக வேலை செய்யப் போகிறான். பணியகணக்கில் பல ருக்கு கிண்டலுக்கு ஒரு சங்கதி கிடைத்துள்ளது. மேற் கணக்குத் தலைவர் பெருமாள் இது சம்பந்தமாய் பல கோணங்களில் சிந்திக்கலானான். மலையாண்டி வீட்டில் எல் லோருக்கும் இது பற்றிக் கவலை.

பணியகணக்கு ஆத்து லயத்தில் அடுத்தடுத்து இருக்கும் இரண்டு காம்பராக்களில் ஒன்றில் மலையாண்டி, தகப்பன், தங்கை ஆகியோரும், மற்றதில் மலையாண்டியின் தமைய னான காத்தமுத்துவின் குடும்பம் மலையாண்டியின் தகப்பனான வேலு மூலையில் இருளுடன் இருளாக முடங்கிக் கிடக்கிறான். அவன் கண்களிரண்டும் ஒளி யிழந்த வருசமே மலையாண்டி சீனியரில் சித்தியடைந் தான். ஒரு காலத்தில் அவன் மேசன்வேலு என்றழைக்கப் பட்டான். பணியக்கணக்கில் மட்டுமல்ல மற்றைய மூன்று கணக்கிலுமுள்ள பல படிக்கட்டுகள், கான்கள் அவன் கைகளால் கட்டப்பட்டவை. ஒரு நாள் கல்லுடைத்துக் கொண்டிருக்கும் பொழுது சிறுகற்துண்டொன்று, வலது கண்ணிலடித்து' ஒத்த கண்ணு வேலு' வானான். தொடர்ந் தும் அவன் தோட்டத்துக்கு உழைத்துக் கொடுத்தான். ஐந்தாறு வருடங்களின் முன்னர் தான் அது நடந்தது. சின்னம்மை வியாதி ஒளி கொடுத்துக் கொண்டிருந்த ஒற் றைக் கண்ணையும் ஈவிரக்கமின்றி விளையாடி 'குருட்டு வேலு' வாக்கி விட்டது. வேலுவின் கண்கள் பார்க்கும் தன் தொழிலை இழந்தாலும் கவலையால் கலங்கும் தொழிலை இழக்கவில்லை. மலையாண்டி தோட்டத்தில் பேர் பதிந்து வேலை செய்யப் போகிறான் என்று கேட்ட நாள் தொட்டு அவன் தனிமையிலிருந்து கண்ணீர் சிந்திக் கொண் டிருக்கிறான். இதனைக் கண்களால் பார்க்கவிடாது தன்

னிரண்டு கண்களையும் பறித்துக் கொண்ட கடவுள், காதால் கேட்டு மனந் துடிக்க வைக்காது உயிரையே எடுத்திருக்கலாமென அவன் ஏங்குகிறான்.

நாளைக்கு அவன் மகன் தோட்டத்தில் வேலைக்குப் போகப் போகிறான். வேலு எவ்வளவு கஷ்டப்பட்டு அவனை டவுனுக்கு அனுப்பிப் படிப்பித்தான். மலையாண்டி டவுன்ஸ்கூலில் சேர்த்துவிட்டு திரும்பிய அன்றுதான் பெரிய கங்காணி அவனைக் கிண்டல் செய்தது. பெரிய கங்காணிக்குத் தோட்டத்தில் யாருமே படித்து முன்னேறுவது பிடிக்காது. முன் முகப்பு கொண்ட தனது லயத்துக்கு நின்றபடி கங்காணி சொன்னார்:

"என்ன வேலு ஒம்மவன பெரிய படிப்பு படிக்க டவுனுக்கு அனுப்புறியாமே! தொரவேல — கண்டாக்கு வேல பாக்கப் போறானோ! பில்லு வெட்டப் போறவனுக்கு தோட்டஸ்கூல் படிப்பு பத்தாதா?"

"டவுனுக்குப் போன வேலு 'பாரு' க்கும் விஜயம் செய்துவிட்டுச் சூருடன் வந்தான் 'என்ன' பெரிய கங்காணி யாரே அப்படிச்சொல்லி புட்டிங்க.ஒங்க புள்ள மட்டுந்தான் படிச்சி கண்டாக்கு கௌாக்கரு வேலை பாக்குணுமோ. நம்ம புள்ள படிக்கக் கூடாதோ?"

பெரிய கங்காணி இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. கோபத்துடன் சொன்னார்: "ஒனக்கு அவ்வளவு ராங்கியா? இந்தப்பாரு வேலு, இன்னிக்கு சொல்கிறேன். ஒரு நாளக்கி பெரிய கங்காணி அப்படி சொன்னாருன்னு நெனச்சிப் பாப்பா. கடசியில ஒம்மவன் தோட்டத்தில் பில்லுத்தான் வெட்டுவான்"

வேலு பெருமூச்சு விடுகிறான். பெரிய கங்காணி அன்று சபித்தது நாளை நடக்கப் போகிறதா? மலையாண்டி தோட்டத்தில் வேலை செய்வானென்று வேலு ஒரு

நாளும் எதிர் பார்க்கவில்லை. அவன் சீனியர் பாஸ் பண்ணியதும் எப்படியும் நல்ல வேலையொன்று கிடைக்குமென்று எண்ணினுன்.

இது விடயமாக எவ்வளவோ பணத்தைச் செலவு செய்தான். கம்பனியொன்றில் வேலையெடுத்துத் தருவதாகச் சொன்ன யாரோ ஒருவனுக்குக் கொடுத்த— வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி உழைத்த அந்த ஐநூறு ரூபாய்......! வேலை கிடைக்கவுமில்லை. பணமும் திருப்பிக்கிடைக்க வில்லை.

கொழும்புக் கடையொன்றிக்கு வேலைக்குப் போன மலையாண்டி அந்த முதலாளியிடம் வேலை செய்ய முடியாதென்று ஒரு மாதத்திற்குள் திரும்பி வந்து விட்டான், தோட்டத்தில் 'சூப்பர் வைசர்' வேலை பழகுவதற்குக் பெரிய துரையைக் கேட்டுப் பார்த்தார்கள். காத்த முத்து பெரிய கிளாக்கரய்யா பங்களாவிற்கும் எத்தனை தடவைகள் ஏறி இறங்கி விட்டான். பலனெதுவுமில்லை.

'மலையாண்டி டவுன்ஸ்கூல்ல படிக்கப் போடாம, அப்பவே பேரு பதிஞ்சிருந்தா — இப்ப பத்து வருசத்துக்கு மேல் வேல செஞ்சிருப்பான். நா சின்ன மவளயும் கட்டிக் குடுத்துட்டு செவனேன்னு இருந்திருப்பேன்.'

அடுத்த காம்பராவில் மகன் காத்தமுத்துவும் மருமகள் பொட்டுவும் பேசிக்கொண்டிருப்பது வேலுவின் காதுகளில் வந்து விழுகிறது.

''பொழுது நல்லா இருட்டிருச்சி. இப்பதான் நாட்டுலருந்து வாரீங்களா? நம்ம சின்ன பாப்பாவுக்கு காச்சல் நெருப்பா கொதிக்குது. ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு மருந்து எடுத்துக்கிட்டு வரணும்.''

''என்ன சனியன்டா இது. மாசம் முப்பது நாளும் நோவுதான். செத்துப்போனுலும் எடுத்துப் பொதச்சிட்டு செவனேன்று இருந்திடலாம்.''

''ஒங்களுக்கு எத்தின மொற சொல்லுறது. இந்தக் கள்ளுக்குடிய விட்டா என்ன? போன பயணம் வயித்து வலி வந்தபோ நம்ம டாக்டரய்யா என்ன சொன்னரு தெரியுமா?''

''பொட்டு இதான் நம்மளுக்கு கஷ்டம் போக்குற மருந்து. பவல் பூராகவும் மலையில மாடா ஒழய்க்கிற நம்மளுக்கு இதான் அலுப்பு மருந்து. நம்மளுக்கிருக்கிற எல்லா கஷ்டத்தையும் மறக்கச் செய்யுறது பண்டாவூட்டுக் கள்ளுத் தண்ணி தானே. இதெல்லாம் டாக்டரய்யாவுக்கு வெளங்குமா? சரிசரி அதவுட்டுத்தள்ளு. இந்தாப் பொட்டு நா ஒரு சங்கதி சொல்ல மறந்துட்டேன். நம்ம டிவிசன் செக்ரோல் செய்யிற கண்ணுடி கௌாக்கரய்யா இருக்காரே அவரு மச்சினன் கொழும்புல பெரிய வேலயாம். நம்ம பெரிய தம்பியவேலக்கிக் கேக்குருங்க. சரீன்னு சொல்லிப்பிட்டன் அய்யா கேக்குறப்போ எப்புடி மாட்டேங்கிறது''

''நம்ம மலையாண்டி சொல்லிச்சே நம்ம பெரிய தம்பி ஸ்கூல் படிப்பில பெரிய கெட்டியாம். டவுன்ஸ்கூல்ல உட்டுப் படிப்பிக்கனுமாம்''

''ஆமாண்டி மலையாண்டி படிச்சி பெரிய தொர வேல எடுத்திட்டான். அவனே நாளக்கி தோட்டத்துல பில்லு வெட்டப் போருன். நம்ம மகன் மட்டும் படிச்சி என்ன கிழிக்கப் போருனு? ஏதோ நாலெழுத்துப் படிச்சி ஒப்பம் போடத் தெரிஞ்சா போதுண்டி''

மகன் காத்தமுத்து சொன்னவை வேலுவின் காதுகளில் நாராசமாக விழுகிறது.

யாரோ வெளியில் வரும் சத்தம் கேட்கிறது. கட்புலனை இழந்த பிறகு வேலுவுக்குக் காது கூர்மை. கடைலயத்து 'டைலர்' வீட்டில் பத்திரிகை வாசித்து விட்டு

மலையாண்டி இன்று நேரத்துடன் வீடு திரும்பி விட்டான். எல்லோர் முகத்திலும் கவலை கவிந்திருப்பதை மலையாண்டி கவனிக்கிருன். மகள் வீரம்மா வேலைகளை முடித்து விட்டு, தகப்பனுக்குச் சாப்பாட்டைக் கொண்டு வந்து கொடுக்கும்போது வேலு சொல்கிருன். ''இன்னிக்கு எனக்குப் பசிக்கல ஆயா'' வேலு அன்று சாப்பிடவில்லை. இரவு தூக்கமும் வரவில்லை. மலையாண்டிக்குத் தூக்கம் வர வெகு நேரமாகிவிட்டது. கடந்த காலத்தை அவன் அசைபோடுகிருன்.

எப்படியாவது ஒரு தொழிலை எடுத்துவிட வேண்டுமென்று மிகவும் பாடுபட்டான். எத்தனையோ பெரிய மனிதர்களையும் அரசியல் பிரமுகர்களையும் ஒரு முறைக்குப் பல முறை போய்ச் சந்தித்து மன்ருடினுள். பயன் ஒன்றும் கிடைக்காமல் விடவே அவனுக்குப் படிப்பித்த மாஸ்டர் ஒருவரின் சிபாரிசில் கொழும்பிலுள்ள 'யாழ்ப்பாண ஸ்ரோர்ஸ்' க்கு வேலைக்குப் போனுன். அவன் கடை முதலாளிக்கு நேர்மையாகவும் கீழ்ப்படிவாகவும் உழைத்தான். அவர் கொடுத்த குறைந்த சம்பளத்தைப் பெற்று, அரை வயிறு உணவுண்டு, சாமான் பெட்டிகளுக்கு நடுவில் கிடந்தெழும்பி உழைத்த அவனுக்கு கடைசியில் நடந்தது......! கடையில் காசு ஐம்பது ரூபா களவு போயிற்று. சிப்பந்திகளை முதலாளி சந்தேகித்தார் ''வடக்கத்தியான்ல தான் எனக்கு சந்தேகம்'' என்ருர் முதலாளி.

''தோட்டக் காட்டானை நம்ப ஏலாது'? என்ருன் முதலாளியின் மகன். மலையாண்டி எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. நிரபராதியான அவன் அழுதே விட்டான். அதற்குப் பிறகு முதலாளி மலையாண்டியின் ஒவ்வொரு செய்கையையும் சந்தேகக் கண் கொண்டே பார்த்தார். தொடர்ந்துவேலைசெய்ய முடியாது.தோட்டத்திற்கே திரும்பிவிட்டான்.'இதுஎமது தோட்டம்.எமக்குஎவ்வளவு சுதந்திரம், தோட்டத்தில் பேர் பதிந்து வேலை செய்யத் தொடங்கினுல் எவ்வளவு சலுகைகள், சட்டதிட்டங்கள் ஆனல்

எனது படிப்பிற்குத் தகுந்த தொழில் கிடைக்கவில்லையே...! அதுதான் கவலை. தோட்டத்தில் வேலை செய்வதில் எனக்கு ஒருவித வெட்கமுமில்லை. பெருமைப்பட வேண்டும். எமக்குச் சோறு போடும் தேயிலைத் தோட்ட வேலையல்லவா?'

பணியகணக்கில் மலையில் சூப்பர்வைசர் வேலை பழகுவதற்கு ஒரு வெற்றிடம் இருப்பதாக பத்திரிகையில் வந்து, மலையாண்டியும் மனுச் செய்தான். எவ்வித பதிலும் இல்லை. போன மாதத்திலிருந்து இப்பொழுது பணிய கணக்கில் கண்டக்டர் வேலை செய்யும் தென்னக்கோனின் சொந்தக்காரன் ஒருவன் தெரிவு செய்யப்பட்டு வேலை செய்கிறான்.

மலையாண்டி வேலை பெற எடுத்த முயற்சிகளும் தோல்வி காணவே, வேறு வழியின்றி இன்னும் மற்றவர்களுக்குப் பாரமாக இருக்க விரும்பாது தோட்டத்தில் தொழிலாளியாக வேலை செய்வதற்குப் பேர் பதிந்திருக்கிறான்.

நீண்ட இரவு முடிகிறது. இன்று முதல் தேதி. தோட்டத்தில் முதல் தேதியென்றால் சுகமில்லாதவன் கூட எப்படியாவது வேலைக்குப் போய்விடுவான். 'ஒண்ணுந்தேதி சீக்கிருக்கக் கூடா' தென்பது அவர்களது நம்பிக்கை.

மலையாண்டி அதிகாலையில் எழுந்து பிரட்டுக்குப் போனான். வீரம்மா ரொட்டி சுட்டு வைத்து விட்டு, பாதியை மட்டும் வேண்டா வெறுப்பாக வாய்க்குள் திணித்து விட்டு, எட்டுமணிக் கொழுந்தென்று அப்பாவிடம் சொல்லி விட்டு, அண்ணா வேலைக்குப் போவதைப் பார்க்கக் கூடாதென்றோ என்னவோ கூடையைப் போட்டுக் கொண்டு மலைக்கு முதல் ஆளாய்ப் போய் விட்டாள். வேலுவுக்குப் பைத்தியம் பிடித்து விடும் போல் மூளைக்குள் ஏதோவெல்லாமோ செய்கிறது. தனது விதி இப்படி வந்து

விட்டதேயென ஏக்கத்துடன் பெருமூச்சும் கண்ணீருமாக நேரத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறுன்.

வீரம்மா சுட்டு வைத்த ரொட்டியை, அவசரமாகச் சாப்பிட்டு விட்டு சுரண்டியைத் தோளில் வைத்துக் கொண்டு காம்பராவை விட்டு விலகும் போது ''அப்பா நா வேலய்க்குப் போயிட்டு வாறன்'' என்று சொல்கிறுன்.

''ஐயோ தம்பி, நீ இம்புட்டு படிச்சும் பில்லு வெட்டத்தான் ஒந்தலயில எழுதியிருக்கா. இதப் பாத்து கண் கலங்கத்தாஞ என்ன உசிரோட ஆண்டவன் வச்சிருக்கான்'' சத்தமாகவே அலறி விடுகிறுன் வேலு மலையாண்டிக்குக் கண்கள் கலங்குகின்றன. புறங்கையால் கண்களைத் துடைத்துக் கொண்டு கடமையுணர்வோடு போருக்குப் போகும் வீரனைப் போல நெஞ்சுறுதியை வரவழைத்துக் கொண்டு வேலைக் காட்டை நோக்கிப் போகிறுன்.

தோட்டத்தில் முதலில் கைக்காசுக்குத்தான் வேலைக்குப் பதிவார்கள். தோட்ட நிருவாகத்தின் தேவையைப் பொறுத்து பின்னர் நிரந்தரமாக்கப்படுவர். நிரந்தர வேலையாட்களைவிட இவர்கள் வேலைக்குப் புதிதென்ற காரணத்தால் நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டும். கொழுந்தெடுக்க வேண்டும். கங்காணிமாரின் அதட்டல் அதிகமாக இருக்கும். மலையாண்டிக்கு இன்று புல்லுவெட்டு. கைக்காசு வேலைக்குப் பேர்பதிந்த மற்றவர்கள் மலையில் கூடிவிட்டார்கள். சிலர் தோட்டப் பாடசாலையுடன் படிப்பை நிறுத்தி பெற்ருேருக்கு கொந்தரப்பு வெட்ட உதவி செய்து, வேறு வேலைவெட்டி இல்லாமல் இருந்தவர்கள். சிலர் வேற்றூரில் பங்களாக்களில் வேலை செய்து விட்டு, கசப்பான அனுபவங்களுடன் திரும்பியவர்கள்.

புல்லு வெட்டு வேலை ஆரம்பமாகி விட்டது. கங்காணியின் குரல் கம்பீரமாய் ஒலிக்கிறது. ''இந்தா மலை

யாண்டி சேரடி வாத ஒதுக்கி வெட்டு தூரடி வாது, சந்து வாது கவனமாக ஏத்தி வெட்டு. அந்தந்த நெரவாக்குல வெட்டிக்கிட்டு வாங்கடா. அடுத்த நெர ஆளு யாரு. பீக்கர் பிச்சவூட்டு மவனு மண்ண இழுத்து மூடிட்டுப் போறது. ஒண்ணு ரெண்டா அடிச்சிட்டுப் போவாத''

கங்காணிக்குப் பக்கத்தில் புதிதாக வந்த சூப்பர்வைசர் அவர்களது வேலைகளைக் கண்காணிககிருர். அவர் அங்கு வந்து ஒரு மாதமாகிறது. தேயிலைத் தோட்டம் புதிது; தொழிலாளரின் மொழி புதிது, ஒரு மாதமாகியும் கான்களைத் தாண்டி படிக்கட்டுகளின் வழியே நடந்து வருவதிலிருந்தே புதியவர் எனத் தெரிகிறது.

''வெரசா — என்னு நின்று பாக்குறது'' மனப்பாடம் செய்து வைத்ததை சொல்லமட்டுந்தான் சூப்பர்வைசருக்குத் தெரியும். தேயிலைத் தோட்ட வேலைகளின் நெளிவு சுளிவுகளின் அரிச்சுவடியையே இன்னும் அவர் கற்கவில்லை. ஆனல் மாதச் சம்பளமோ கிடைக்கிறது.

மலையாண்டிக்கு இடுப்பு ஒடிந்து விடுவது போல வலியெடுக்கிறது.

பள்ளிக் கூடத்தில் படித்த காலத்தில் தகப்பனுக்கு உதவியாக விடுதலை நாட்களில் கொந்தரப்பு வெட்டப் போவான். ஆனல் இது போல் தொடர்ச்சியாய் வேலை செய்வதில்லை. வேலு விடமாட்டான். ''தம்பி நீ போய் படிடா'' என்று மலையை விட்டு விரட்டி விடுவான்.

பன்னிரண்டு மணி சங் சுடிக்கிறது. கைக்காசு வேலை செய்பவர்கள் மற்றைய தொழிலாளர்களைப் போல வேலை முடித்து ஒரேயடியாக வீடு செல்ல முடியாது. ஒரு மணிக்கு மீண்டும் மலைக்கு வரவேண்டும். மலையாண்டி சுரண்டியுடன் லயத்தை நோக்கிப் போகிருன். தண்ணீர்த் தாகத்தால் நாக்கு வரட்சியெடுக்கிறது. கூடவரும் பீக்கர் பிச்

சையின் மகன் சொல்கிறான்: ''இன்னிக்கு 'சுவரா' அந்திக்கு நாட்டுக்குப் போகணும். அப்பதான் மேல்வலி கொறயும்''

மேட்டிலுள்ள கண்டக்டர் பங்களாவிற்குப் பகல் சாப்பாட்டிற்கு போகும் சூப்பவைசர் படிக்கட்டுகளில் ஏறிக் கொண்டிருப்பதை பள்ளத்திலுள்ள ஆத்து லயத்துக்குப் போகும் படிக்கட்டுக்களில் இறங்கிக் கொண்டே பெருமூச்சுடன் பார்க்கிறான் மலையாண்டி.

## ( 8 )

இரவு, பகலை எதிர்கொண்டு சந்திக்கும் அந்திப் பொழுது. தலைவர் பெருமாள் வீட்டில், உப தலைவர் சூசை, காரியதரிசி ஆப்தீன் ஆகிய மூவரும் ஸ்தோப்பிலுள்ள சின்ன மேசையைச் சுற்றியுள்ள நாற்காலிகளில் உட்கார்ந்திருக்கின்றனர்.

சின்னத்துரையுடன் காரசாரமாக சின்ன ஆபீஸில் தோட்டத்துப் பிரச்சினையை எடுத்துப் பேசிய அன்றைக்குப் பிறகு இன்னும் சின்னத்துரை ஆபிஸ் வைக்கவில்லை. பெரிய கங்காணி மார் ஆட்சி தோட்டத்தில் கொடிகட்டிப் பறந்த காலத்தில், பெரிய கங்காணியிடமே தொழிலாளர் தம் பிரச்சினைகளைச் சொல்வர். பெரிய கங்காணி துரையிடம் எடுத்துச் சொல்லி தீர்த்துவைப்பார். இப்பொழுது தொழிலாளர் துரையுடன் தலைவர் மூலமாகப் பிரச்சினைகளைச் சொல்வர்.

இதற்காக வாரத்தி ஒரு நாள் அந்திப்பொழுதைஒதுக்குவார் துரை. அதற்கு தொழிலாளர் நாளென்று நாமகர

ணஞ் சூட்டப்பட்டுள்ளது. மூன்று டிவிசன்களைக் கொண்ட இந்தத் தோட்டத்துக்கு தொழிலாளர் தொகை கூடிய மேற்கணக்குக்கும் நடுக்கணக்குக்கும் சின்னத்துரையே பொறுப்பாக இருக்கிறார். தோட்ட நிருவாகத்தின் முழுப் பொறுப்பும் பெரியதுரைக்குத்தானென்றாலும் சின்ன டிவி சனுன பணியக்கணக்கு மட்டுமே அவரது நேரடிப் பார்வை யிலிருக்கும்.

நெஞ்சின் பெரும்பரப்பு வெளியே தெரிய, பொத் தான்களைச் சரிவரப் பூட்டிக்கொள்ளாத சேட்டை அணிந் திருந்த உப தலைவர் சூசையின் பேச்சு வழக்கம்போல உணர்ச்சிவசமாயிருக்கிறது. ''சின்னத்துரைக்கு நாம ஒரு பாடம் படிப்பிக்கணும். நாமெல்லாம் இளிச்சவாயன்னு எண்ணிக்கிட்டிருக்கான். ஆபீசு வச்சி மாசம் ஒண்ணுச்சி. நாளைக்கும் ஆபிசு வைக்ராப்புல தெரியல.''

''சூச, தொர நெனச்சிக்கிட்டார் நம்ம யூனியன ஒடச்சி மத்த யூனியன்ல ஆட்கள் கூட்டிக்கிட்டு அப்புறம் ஆபிஸ் வைக்கலாம்னு. அது அவுங்களால ஏலாமப்போச்சி. சின்னத்தொரையும் கண்டக்கையாவும் எவ்வளவோ கஷ் டப்பட்டாங்க. எத்தன ஆள சேக்க முடிஞ்சிச்சி'' பெரு மாள் அமைதியுடன் பதில் சொல்கிறான்.

''அவுங்க யூனியன்ல முப்பதாளு சேர்ந்திருக்குமா?'' சூசை ஆவலுடன் கேட்கிறான்.

''இல்ல தம்பி அவுங்க யூனியன்ல இருவத்தியாறு ஆள், நம்ம யூனியனல எரநூத்தி எம்பத்திமூணு'' பெரு மாள் கூறுகிறான்.

ஆப்தீன் கையிலிருந்த புத்தகத்தை விரித்து பெருமாள் சொன்ன புள்ளிவிபரம் சரியா என்பதைப் பார்க்கிறான். ஆப்தீன் பலதடவைகளில் பார்த்திருக்கிறான். உண்மை யில் பெருமாளுக்கு அபூர்வ ஞாபகசக்தியிருக்கிறது. சரி யாகவே சொல்லிவிட்டான்.

''சின்னதொரவூட்டு ராங்கியப் பாருங்கண்ணே. நாம இத உட்டுட்டு இருக்கக்குடாது. நாளக்கி தோட்டக்கமிட்டியக் கூட்டி ஏதாச்சும் நடவடிக்க எடுக்கணும்'' சூசை அவசரங் காட்டுகிருன்.

''ஆமா தம்பி, நாம நாளக்கி கமிட்டியக் கூட்டுறதுன்னு தான் யோசிக்கிரேம். நம்ம முக்கிய பிரச்சினபத்தி அதுல பேசணும். அதபத்தி நாம மூணுபேரும் கலந்து பேசிக்கிட்டா, நாளக்கி வெளக்கமா கமிட்டி மெம்பருக்கு லேசா சொல்லிக்கலாம்.''

ஆப்தீன் ஒரு கடதாசித் துண்டையெடுத்து குறிப்பெழுதுவதற்கு ஆயத்தமாகப்பேனைவயெடுத்து மூடியைக் கழற்றுகிருன். பெருமாள் பிரச்சினையை ஆரம்பிக்கிருன்.

''அரிசிக் கிளாக்கரூட்டு அக்கிரமம் ரொம்ப மோசமாயிருக்கு. தோட்டத்துல எல்லா டிவிசன்லயும் இந்த அநியாயம் நடந்துக்கிட்டிருக்கு. தராசுல ஏதோ செஞ்சிவச்சிருக்காங்கபோலருக்குன்னு பணியகணக்குல உள்ள நம்ம மச்சான் மலையாண்டி நேத்து சொல்லிக்கிட்டிருந்தான். நம்ம யூனியனுக்கு இதுபத்தி சொல்லி மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்கும் எழுதியிருக்கு.''

''நாம எங்க எழுதுனலும் அதுக்குப் பதில் பெரியாபிசுக்குத்தான் வரும். அங்க அரிசிக்கிளாக்கரூட்டு கொழுந்தியா புருஷன் பெரிய கிளாக்கரா இருக்காரு. அவரு ஆகவேண்டியத செஞ்சிப்புடுவாரு'' சூசை அபிப்பிராயந் தெரிவிக்கிருன்.

''இல்ல தம்பி நேத்து மலையாண்டி சொன்னன் பதுல கச்சேரியில உணவுக் கட்டுப்பாட்டு ஆபிசிருக்காம். அங்கே நம்ம ரேசனுக்கு வார சாமானும் இருக்குதானே, அத அவுங்கவந்து எப்பவும் செக் பண்ண ஏலுமாம்'' பெருமாள் சொன்னதை சூசை தலையாட்டி கிரகித்துக்கொள்கிருன். பெருமாள் தொடர்கிருன்:

''அன்னிக்கு ஆபிசில நா கேட்ட தோட்ட பிரச்சின ஒண்ணுக்கும் சின்னதொர சரியான பதிலே சொல்லல்ல, ஏதோ குத்தம் செஞ்சவன்கூட பேசுனமாதிரி எங்கூட பேசினரு. மழ பேஞ்சா புள்ளக்காம்பரா ஒழுகுது. சாரல் அடிச்சி தெப்பக்கொளமாகுது. ஒடஞ்ச தவரங்கள மாத்தி சுத்தி படங்கடிக்கணும்,''

''மழ பேஞ்சா நம்ம லயம் பூராவும் ஒழுகிக்கிட்டிருக்கு'' ஆப்தீன் சொல்கிறான்.

''ஆமா ஆப்தீன், நேத்து ஸ்டோர்லயத்து அடைக்கலம் சொன்னிச்சி. அவுங்க எட்டுப்பேருமே இருக்கிறது ஒரே காம்பராவுல. முந்தாநா ராத்திரி பேஞ்ச மழக்கி காம்பரா ஒழுகி குந்தக்கூட எடமில்லாம சாமஞ்சாமமா முழிச்சிக்கிட்டிருந்தாங்களாம்.''

''அந்த லயந்தான நம்ம தோட்டத்துல மொத மொதல்ல கட்டுனது. அது கட்டி நூறு வருசத்துக்கு மேல இருக்குமே'' என்கிறான் ஆப்தீன்.

''அந்த லயத்த ஒடச்சித் தள்ளிட்டு புதுசாவே ஒரு லயம் கட்டுனு தேவல'' பெருமாள் சொல்கிறான்.

''ஆமா தவரத்த மாத்தாம பொண்டெக்ஸ போட்டடச்சி நம்மல ஏமாத்தி, காலத்த ஒப்பேத்திக்கிட்டுப் போறவுங்களா லயத்த ஒடச்சிக் கட்டப்போறுங்க!' சூசை காரசாரமாகக் கூறுகிறான்.

''அன்னிக்கு ஆபிசில தொர சொன்னார்தானே, புள்ளக்காம்பரா தவரத்த மாத்த நல்ல தவரமில்லேன்னு. நேத்து பாத்தேன். சின்னதொர பங்களாவுக்குப் புது மாட்டுப் பட்டி கட்ட ஸ்டோருல தவரம் ஏத்திக்கிட்டிருந்தாங்க'' பெருமாள் மனக்கொதிப்புடன் சொல்கிறான்.

''அரசாங்கம் வருசாவரும் லயன்களை புதுலய்மா மாத்துறதுக்கு பணம் ஒதுக்குறதா பேப்பருல போடுறுங்

களே நம்ம தோட்டத்துல ஒண்ணயும் காணுேமே'' ஆப்தீன் கேட்கிருன்.

''நம்ம தோட்டத்துலயும் எஸ்டிமெட் இருக்கும். அதுவும் பாஸ்பண்ணியிருப்பாங்க. நம்ம 'கொண்டை கட்டி' பாஸ் கான்கட்டகளுக்கு சிமெந்தி பூசி சேப்பண்ணி, வேல முடிஞ்சிதுன்னு காச எடுத்திருப்பான். சல்லிய பெரிய தொர சின்னதொர பெரிய கிளாக்கரு கோண்டக்கட்டிப் பாஸ் எல்லாருமா பங்கு போட்டுக்கிட்டிருப்பாங்க. நாம பவல்ல மாடா ஒழச்சிப்புட்டு ராவுலயாவது நிம்மதியா தூங்குறதுக்கு நல்ல காம்பரா கூட இல்லாம சாவவேண்டியதுதான்'' பெருமாள் பெரு மூச்சுடன் சொல்கிருன். அவன் மேலும் தொடர்கிருன்.

''ஸ்டோர் அடுப்புல வேல செய்யிற அடைக்கலத்தோட மகன்—அதான் ஏழுமலேக் கங்காணி பேரன்—ஆதிமூலத்துக்கு கலியாணம் சரி வந்திருக்காம்.அவன் இப்ப இருக்குற காம்பராவுல எட்டுப்பேர் இருக்காங்க. அந்தக் காம்பராவுல அவன் கல்யாணஞ் செஞ்சி எப்புடி குடித்தனம் நடத்துறது? ஸ்டோர் லயத்துல போன மாசம் இந்தியாவுக்குப் போனுரே வையாபுரி கங்காணி.அவுங்க வூட்டுக் காம்பரா பட்டம் வச்சடிச்சி சும்மாதானே இருக்கு அந்தக் காம்பராவ அடைக்கலம், கண்டக்கையாகிட்ட கேட்டிருக்காரு. அதுக்கு அய்யா சொன்ஞராம், நீ மாரிமுத்துக் கங்காணியோட கச்சியில சேந்தா நா சின்னத்தொர கிட்ட சொல்லி காம்பராவ எடுத்துத் தாரேன்னு..'

''அந்தக் காம்பரா ஐஸ் அய்யாச்சாமிக்குக் கொடுக்கப்போறதா 'ஒத்தக்கடயில' பேசிக்கிட்டாங்களே'' என்கிருன் ஆப்தீன். சூசை மற்றப் பிரச்சினேக்குத் தாவுகிருன்.

''நம்ம லயத்துக்கு பைப்புல தண்ணி வந்து வருசம் ஒண்ணுவுது. வேலவுட்டு ஆறுமணிக்கு வந்து அதுக்கப்புறம் பணிய லயத்துக்கு போயி தண்ணி புடிச்சாந்து எத்தன மணிக்கு சோருக்கித் திங்கிறது?''

''அன்னிக்கு ஆபிசில பைப்பு சங்கதிய சின்னதொர கிட்ட சொன்னப்போ என்ன சொன்னுருன்னு தெரியுந் தானே. நம்ம தோட்டத்து ஆளுங்க புது பைப்பு போட்டா ஒடனே கழட்டிக்கிட்டுப்போயி நாட்ல குடுத்து கள்ளுக் குடிக்கிறது. கக்குசு கதவ கழட்டி விக்குறது...... ஒன் ஆளுகள திருத்திக்கிட்டு வா. நா எல்லாஞ் செஞ்சி தாறது அப்புடின்னுரே'! ஆப்தீன் கூறுகிருன்.

''ஆமா ஆமா நொண்டிக் குதுரக்கி சறுக்குனது சாக் குன்னு'நம்ம மாஸ்டர் அடிக்கடி சொல்லுவாரு அதுமாதி ரித்தான் சின்னத்தொரவூட்டுப் பேச்சும். நம்ம தோட்டத்து ஆளுங்களும் சில நல்ல பழக்கங்கள பழகிக்கிடணும். அப்புறம் ஒரு முக்கியமான பிரச்சினய தொரகிட்ட கேக் கணும். சொகமில்லாதவுங்கள டவுண் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக லொறி வசதியில்லே நேரத்துக்கு லொறி கெடச்சிருந்தா கெர்ப்பாஸ்திரியாயிருந்த மாரியாயி போன வருசம் அனியாயமா செத்திருக்குமா? சொகமில்லாத வுங்கள டவுன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோறதுன்னு காலயிலயே டாக்டரய்யாகிட்ட துண்டு வாங்கிக்கிட்டு டீமேக்கரய்யாகிட்ட போனு ஒம்பது மணி கொழுந்தெடுத் துட்டுத்தான் லொறி தருவேங்குருரு. கொழுந்துக் கால முன்னு ரெண்டு மூணு மணியாவது. நோவாளிங்களப் பத்தி அக்கறகொள்ளமாட்டேங்குருங்க'' பெருமாள் புதுப் பிரச்சினையை முன்வைக்கிருன்.

''அண்ணே நாம செத்தாலும் தேயிலேக்குத்தானே ஓரமாகுறேரும்; பரவால்லத்தானே. கொழுந்து கெட்டுப் போனு தேயிலே வெல உழுந்துடுமோ'' சூசகமாக பல ரைச் சாடுகிருன் சூசை.

''அடுத்தத் தோட்டத்து ஆயம்மா நம்ம தோட்டத் தயும் பாக்குறதால நாம எவ்வளவு கஷ்டப்படுறேரும்'' பெருமாள் கூறுகிருன்.

''இந்தப் பெரிய தோட்டத்துக்கு துண்டா ஒரு ஆயம்மா போடலாந்தானே. மொதல்ல அப்புடித்தான இருந்திருச்சி'' ஆப்தீன் அபிப்பிராயந் தெரிவிக்கிருன்.

''பழய ஆயம்மா போனுப்போல ஏதோ ஒரு வாசிக் காக பெரிய கிளாக்கரய்யா செஞ்சவேலயிது. பெரிய கிளாக்கரய்யாவும் ஆயம்மாவும் ஒரே ஊருன்னு பேசிக் கிருங்க'' இது சூசை.

''ராத்திரியில கெர்ப்பாஸ்திரி யாருக்கும் வவுத்து வலி வந்துட்டா நாம டிரைவர்மார தேடி ஆயம்மாவ கொண் டாரதுக்குள்ள கொழந்தயும் பொறந்துரும். ஆயம்மா லயம்பாக்கன்னு வந்து பெரிய கிளாக்கரூட்டுல பேசிக்கிட் டிருந்துட்டு போயிருவாங்க. மாசாமாசம் சம்பளம் சொளயா கெடச்சிரும்.

''நம்ம தோட்டத்து மாரியாயியும், ராமாயியும் சாக வேண்டியதுதான்'' சூசை குமுறுகிருன்.

''தொரயோட மலேவேல பத்தி ரொம்ப பேசஇருக்கு. இந்தப் பயணம் கைக்காசு கொந்தரப்பு வேல பூராவும் மாரிமுத்து கங்காணிக்கும், வீரபுத்துரன் கங்காணிக்கும் குடுத்துருக்காங்க. ரொம்ப காலமா கொந்தரப்பு வேல செஞ்சிக்கிட்டு வந்த ஆப்தீன்ட சித்தப்பா மம்முது கங் காணிக்கும், இருதயன் கங்காணிக்கும் இந்தப் பயணம் கொடுக்கல்ல. எந்த மலே கைக்காசு கொந்தரப்புக்குக் குடுத் திருக்காங்கன்னு தெரியமாட்டேங்குது. ஆபீஸ் வச்சாத் தானே இதெல்லாம் தெரிஞ்சுக்கலாம். எனக்கு சந்தேக மாயிருக்கு. நாட்டுத் தொங்க நஞ்சி முருங்க வெட்டுற மலய கண்டக்கய்யா கொந்தரப்புக்குக் குடுத்துட்டு பெறட் டுல ஆள தள்ளி வேலய முடிக்குருப்புல தெரியது'' என்கி ருன் பெருமாள். இதனுல் தொழிலாளர் எப்படிப் பாதிக் கப்படுகின்றனர் என்பதை விளக்குகிருன் சூசை.

''நஞ்சி முருங்க வெட்ட போட்டவங்கள வேற ஒண் ணுக்கு சாஜ் பண்ணிட்டு அப்புறம் சாஜ் பண்ணுற வேலக்கி கெரக்கட்டா ஆளுங்கள முன்னுடியே பெறட்டுல கொறச் சிப்புட்டு மலயில நம்ம உசுர வாங்கவேண்டியதுதான்.''

ஆப்தீன் எதையோ குறித்துக்கொள்கிறான். பெரு மாள் எரியும் பிரச்சினையொன்றைக் கூறுகிறான்.

''கொழுந்துக் காட்டுல ஒரு பெரிய பிரச்சினே இருக்கு நம்ம சின்னக்கணப்புள்ளயபத்தி ரொம்ப பிராது வந் திருக்கு.''

''யாரு நம்ம மண்டவெட்டிக் கணப்புள்ளயா? மலே வாச்சர் முனியாண்டி சம்சாரத்துல கையவச்சி மண்டை வெட்டுப்பட்டு 'மண்டை வெட்டின்னு' பேரெடுத்த மனு சன் சும்மாவா இருப்பான்'' சூசை சிரித்துக்கொண்டே சொல்கிறான்.

பெருமாள் மேலும் விளக்குகிறான். ''கொழுந்துக் காட்டுல ஒரு வயசுப் புள்ளங்கள சாக்குப்புடிக்கிற வேலைக் குப் போட்டுத் தொலைக்குறனே மனுஷன், மலையில ரொம்ப ருத்த வெட்டு நடக்குதாம். தம் பக்கம் இழுக்கமுடியாத ஆளுங்கள கணக்கனூட்டுக் கையாளான வீரபுத்திரன் 'முத்தல்ல புடுங்குறது அப்படி இப்படின்னு கரச்சல் குடுக்குறனும்.''

''நம்ம தங்கச்சி சலிமா காலயில உம்மாகிட்ட சொல் லிக்கிட்டிருந்திச்சி. பாவம் கம்மனுட்டி அஞ்சலக்கி கணக் கன் கொஞ்சநாளா கரச்சல் குடுக்குறனும்'' ஆப்தீன் கூறு கிறான். பெருமாள் தன்னை மறந்து பெருமூச்சு விடுகிறான்.

''எங்க குடும்பத்துல கணக்கன் கை வைக்க நெனச்சா நா மண்ட வெட்டமாட்டேன். கழுத்தயே வெட்டிஆளயே குளோஸ் பண்ணிடுவேன்'' சூசை சூளுரைக்கிறான்.

''கணக்கப்புள்ள வெக்கங்கெட்ட மனுசஞ இருக்கானே. ஒரு வயசுப் புள்ளக்கி அப்பஞ இருந்துக்கிட்டு இந்த அனியாயத்த செய்யிருனே பாவி'' பெருமாள் கூறுகிருன்.

''பொழுது இருட்டிருச்சி நாளக்கி. விடிய கமிட்டிய கூட்டி எல்லாத்தயும் வெளக்கமாச் சொல்லி நடவடிக்க எடுப்போம்'' என்று கூறிக்கொண்டே ஆப்தீன் ஆசனத்தை விட்டெழும்புகிருன். சூசை எழுந்துகொண்டே சொல்கிருன்:

''நாம யூனியன் சங்கதியில கொஞ்சம் ரூட்டியா நிக்கணும். நம்ம தோட்டத்துப் பொடியங்க உடுருப்புல இல்ல. பழைய தலவரப்போல பாக்குறேன்—கேக்குறேன்னு காலத்த ஒப்பேத்திக்கிட்டு போவேலாதுங்குருங்க. இவுங்ககிட்ட லேசுல தப்பேலாது'' விடைபெற்று ஆப்தீனும் சூசையும் பிரிகின்றனர்.

பெருமாள் தனியாக இருந்து தோட்டப் பிரச்சினைகளைப் பற்றிப் பலவாறு சிந்தித்துக்கொண்டிருக்கிருன். ஆப்தீன் அஞ்சலையைப் பற்றிச் சொன்னதைச் சிந்திக்கும் பொழுது மனவேதனையாக இருக்கிறது. 'பாவம் ஓராள் ஒழச்சி நாலுபேருக்குத் திங்கக் குடுக்கவேண்டியிருக்கு.ஊடயில இப்புடியொரு அக்குருமம்.'

போன வாரம் ஒரு நாள் இரவு...... எங்கோ போய் விட்டு வந்த பெருமாள் வீட்டுக்குள் நுழையும் பொழுது அஞ்சலை அவளது தாய்க்கு ஏதோ சொல்லி அழுதுகொண்டிருந்ததையும், அவனைக் கண்டதும் பேச்சை நிறுத்தியதையும் நினைத்துப் பார்க்கிருன்.

''ஏண்டா பெருமாள் ஒ வேல முடிஞ்சுதா? ஏண்டா தோட்டத்துப் பெரச்சினகள தலயில சொமந்துகிட்டு தடுமாறிக்கிட்டு கெடக்குற. நம்ம வூட்டு சங்கதி பத்தி கொஞ்சமாவது யோசிக்கிறியா? பசுமல தோட்டத்துலயிருந்து ஓம்

மச்சான் காயிதம் போட்டு இன்னிக்கு எத்தினி நாளாச்சி. பதிலேதும் போட்டியா? ஒனக்கு நா பாயில படுத்தா தாண்டா கஷ்டம் தெரியும். என் வயசுல உள்ளவிங்கள பாதி பேரு போயி சேந்துட்டாங்க. நம்ம புல்லுமல மாரி யாத்தா புண்ணியத்துல பத்து வயசுல தலயில போட்ட கூடய இன்னும் கழட்டாம நா மலெக்கி நடந்துக்கிட்டிருக் கேன். ஒங் கண்ணாலக் காச்சியப் பாத்துட்டு கண்ண மூடிக் கலாமுன்னு......''

'என்னுயா எப்ப பாத்தாலும் கலியாணம் கலியாண முன்னு சொல்லிக்கிட்டிருக்க. கொஞ்சம் பொறு ஆயா நம்ம தோட்டத்து பிரச்சின யெல்லாம் கொறயட்டும்.''

''ஏண்டா நீ ஆரயும் நெஞ்சுல நெனச்சிக்கிட்டு இருக் கியா? இந்தக் காலத்து ஒரு வயசு புள்ளங்கள நம்பேலுமா? இன்னிக்கி மலெயில பொடிமெனிக்கா சொல்லிச்சி அவ மவ சோமாவதிய நாட்டுலருந்து வேலக்கி வார சிறிசேனு வுக்குக் கேக்குறுங்கயாம். இந்தக் குட்டி என்னுன்னு அவன கட்டிக்க மாட்டேன். எனக்கு கண்ணாலமே வேணும் அப் புடின்னு ஒரே புடியா இருக்காளாம்.''

பெருமாள் எதையோ யோசித்துக்கொண்டு தாயைக் கேட்டுகிறுன் ''நேத்து வேலுச்சாமி மாமா வந்தாரே, என்னுயா சொன்னுரு.''

''அவுரு எப்புடியும் நம்மள ஈந்தியாவுக்கு இழுத்துக் கிட்டுப் போவத்தான் பிரியப்படுறுரு. எப்பிடியும் ஒன்ன பூவாயிக்கு கட்டிவைக்கணும்ன்னு ஒத்தக்காலுல நிக்கு றுரு. அவுருக்கு ஈந்தியாவுல உள்ள சொந்தக்காரங்கள்ள மனசு உட்டுப்போச்சு. அப்பன் வூடு கொள்ளிமல போயிப் பாத்தா ஒண்ணுமில்ல. ஒங்கப்பா உசுரோட இருக்கப்போ தான் தங்கச்சி மவ பூவாய ஒனக்கு கட்டி வைக்க எம்புட்டு ஆச வைச்சாரு, ஓம் மாமா அவள ஈந்தியாவுக்குக் கொண்டுபோரேன்னு ஒரே பேச்சா சொல்லிவிட்டாரே.

இப்ப மாத்துக்கட்டு மாப்புளயா ஒன்ன எடுத்துக்கிட லாம்ன்னு யோசிக்கிருரு,''

''நீ மாமாவுக்கு என்னுயா சொன்ன?''

''நா எப்புடி அவரு மூஞ்சிக்கி நேரே முடியாதுன்னு சொல்றது. பாப்போம்ணு சொல்லிருக்கேன். நா ஒனக்கு பசுமலயிலயுள்ள ஒம் சின்னக்கா கொளுந்தியாவ முடிச் சிட்டா தன்னுல அவுங்களுக்கு விசயம் புரிஞ்சிடும்.''

''பாவம் வேலுச்சாமி மாமா,''

''ஏண்டா ஒனக்கு பூவாய கட்டிக்க இஷ்டமா?''

ஒன்றுமே சொல்லாமல் பெரிதாகச் சிரிக்கிருன் பெரு மாள் செல்லாயி தொடர்கிருள்:

' நீ பூவாய கட்டிக்கிட்டு நாம ரெண்டு பேரும் என சனத்த உட்டுட்டு எப்புடிடா ஈந்தியாவுக்குப் போறது. அது சரிவராது. நீ நாளக்கே ஓம்சின்னக்காவுக்கு காயிதம் போட்டுடு.''

''என்னத்த ஆயா எழுதுறது?''

''காயிதத்துல வெவரமா எழுதேலாது, ஓம் மச்சான இந்த மாசம் சம்பளம் போட்ட கையோட வரச்சொல்லி எழுது. வந்ததும் கொடுக்கல் வாங்கல் நறுக்குனு பேசிட்டு பாக்கு மாத்துரதுக்கு ஒரு நாளயும் நம்ம பூசாரி பூவலிங் கத்த கொண்டு பாத்திடுவோம். பரவால்ல நம்ம சொந் தத்துக்குல்ல ஒண்ணும் நெனக்கமாட்டாங்க. பருசம் போடப் போக்குள்ள ஓம் பெரியக்கா, மச்சான் எல்லா ரும் மொறப்படி போலாம்.''

அப்போது ஸ்டோர் லயத்துப் பக்கமாக ஏதோ சத் தம் கேட்கிறது. குடித்துக்கொண்டிருந்த தேநீரை அப் படியே விட்டுவிட்டு ஓடுகிருன் பெருமாள்.

ஸ்டோர் லயத்து ஏழுமலைக் கங்காணியின் காம்பரா வின் நடுவே அவன் பேத்தியான பத்து வயதுச் சிறுமியைக் கிடத்தியிருக்கிறார்கள். நெருப்புப் பிடித்தவள் புழுவாய்த் துடித்துக்கொண்டிருக்கிறாள். அவளது காந்தலைப் போக்க அருகிலுள்ளவர்கள் சுளகால் விசிறிக்கொண்டிருக்கிறார்கள். அச் சிறுமி குசினி அடுப்புக்கு மேலிருந்த தட்டில் வைத்து லாம்பெண்ணை கலனிலிருந்து குப்பி லாம்புக்கு எண்ணெய் ஊற்றும்போது கைநழுவி லாம்பெண்ணெய் கலன் அடுப் புக்குள் விழுந்திருக்கிறது. ஏக காலத்தில் அவளது உடலி லும் அடுப்பு நெருப்பிலும் எண்ணெய் தெறிக்க குபீ ரென நெருப்பு அவளைப் பற்றிக்கொண்டுவிட்டது. பெரு மாள் தோட்டத்து டாக்டரிடம் சூசையை அனுப்பிவிட்டு நோயாளியுடன் டவுன் ஆஸ்பத்திரிக்குக் கூடச் செல்வ தற்குத் தனது உடையை மாற்றிக்கொள்ள வீட்டுக்கு வரு கிறான்.

ஏழுமலைக் கங்காணியின் ஒரேயொரு காம்பராவில் இத்தனை ஜீவன்களும் வாழ்வதால் ஏற்பட்ட இடநெருக் கடிதானே இந்த விபத்துக்குக் காரணம் என்பதை வேதனை யுடன் எண்ணியவாறு வீட்டை வந்தடைகிறான் பெருமாள்.

செல்லாயி தன் ஒரேயொரு மகனுன பெருமாள் வாழப் போகும் குடும்பவாழ்வை மானசீகமாக மனதில் நிறுத்தி, குசினிக்கு மட்டும் ஒளி கொடுக்கும் குப்பி லாம்பை ஏற்று கிறாள்.

பெருமாள் தோட்டத்து ஆட்களின் பிரச்சினைகள்மனதை உறுத்த, கரி படர்ந்திருக்கும் கண்ணாடியைத் துடைத்து வீடு முழுவதும் வெளிச்சம் தரும் லாம்பினை ஏற்றுகிறான்.

# (9)

இன்று பத்தாந் திகதி. தோட்டத் தொழிலாளரின் முகத்தில் மகிழ்ச்சி எழுதி ஒட்டப்பட்டது போன்ற பூரிப்பு. அவர்கள் சிந்தனை, பேச்சு, செயலில் தனிவேகம். ஒரு மாத காலமாக பட்ட இம்சைக்கு பலன் கிடைக்கப் போகும் நாளல்லவா அது. வாழும் லயத்தில், உழைக்கும் மலையில் எல்லாம் பேச்சில் மகிழ்ச்சி எதிரொலிக்கிறது. கொழுந்துக் காட்டில் பெண்கள் கங்காணியின் அதட்டலையும் மீறி கூடைகள் குலுங்கப் பேசிச் சிரிக்கிறார்கள்.

''பாருங்கடி இன்னிக்கு அந்திக்கு மழவரும். நம்ம தோட்டத்துல சொல்லி வச்சமாரி சம்பளத் தன்னிக்கு மழ வராட்டி என்ன பூவாயின்னு கூப்புடவேணும்.''

அடுத்த நிரையில் கொழுந்தெடுத்துக் கொண்டிருக்கும் அஞ்சலையின் மனம் இளசுகளின் பேச்சில் எடுபடவில்லை. அவளுக்கு இன்று தனக்குக் கிடைக்கப் போகும் சம்பளத்தில் எப்படியெல்லாம் கடனைக் கட்டுவதென்ற யோசனையே. அஞ்சலைக்கு வயிற்றுக்குள் ஏதோ செய்கிறது. பசி தன் எல்லையைக் கடந்து விட்டால் இந்த வயிற்றுவலி வருமென்பது, அவள் அனுபவத்தில் கண்டதாகும். காலையில் அவள் ஒன்றுமே சாப்பிடவில்லை. சம்பளநாளென்றால் ஒரே நேரத்துக்கு வேலை விடுவார்கள். காலைக் கொழுந்தை தாமதித்து நிறுப்பார்கள். பகல் கொழுந்தை இரண்டு மணிக்கு நிறுப்பார்கள். பகற் சாப்பாட்டிற்கு இவர்கள் போக முடியாது. பள்ளிக் கூடம் போகாத பிள்ளைகள், பென்சன் எடுத்த கிழடுகள் மலைக்குத் தேநீர் கொண்டு போவார்கள். அஞ்சலைக்கு யாரிருக்கிறார்கள்? கொடுத்தனுப்புவதற்கும் வீட்டில்தான் என்ன இருக்கிறது? அடுத்த காம்பரா செல்லாயி அக்காவிடம் கடனாக வாங்கிய நாலு சுண்டுமாவில் நேற்று ரொட்டி சுட்டு பிள்ளைகளின் பசி

யைப் போக்கி அவள் அரைப்பட்டினி கிடந்தாள். இன்று பிள்ளைகளுக்கு மட்டும் ரொட்டி சுட்டுக் கொடுத்துவிட்டு அவள் முழுப் பட்டினி.

சாக்குக்கார சங்கிலி சத்தம் போட எல்லோரும் கொழுந்துக் காட்டைவிட்டு மடுவத்துக்குப் போகிறார்கள். சம்பள நாளில் மகிழ்ச்சி உந்தித்தள்ள, கொழுந்து நிறைந்த கூடைகளுடன் ஓட்டம் ஓட்டமாகப் பலர் மடுவத்தை அடைந்து விடுகின்றனர். பசிக்களையுடன் மனச் சோர்வும் பீடித்துள்ள அஞ்சலை வலிந்து உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு உச்சந்தலையை அமுக்கும் கூடையிலிருக்கும் கொழுந்தை தட்டுக்குள் கொட்டுகிறாள். அஞ்சலை மேல் கழுகுப் பார்வையைச் செலுத்திய வீரபுத்திரன் கங்காணி, கொழுந்தைப் பல தடவை புரட்டிப் பெரும் பிரயத்தனத்துடன் ஒரு முற்றல் இலையையும் கரட்டிலையையும் எடுத்து, தராசுக்கு முன் நிற்கும் சின்னக்கணக்குப்பிள்ளையிடம் காட்டிக் கொண்டே, "இதென்ன கொளுந்தா? காம்பெல, முத்தெல தொப்புலயா கெடக்கு என்ன புள்ள கொளுந்த பிச்சிகிட்டு வந்திருக்க. இப்பதான் புதுசா பேர் பதிஞ்சு வேல செய்யிறியா? இந்தா கொட்டிப் பொறுக்கு" என்கிறான். தட்டுப்பிடிக்கும் பிள்ளைகள் கொழுந்தை திருப்பி அவளது கூடையில் கொட்டுகிறார்கள். இடுப்பிலிருந்த படங்கை அவிழ்த்து விரித்து கொழுந்தைக் கொட்டி முற்றல் இலைகளைப் பொறுக்குகிறாள் அஞ்சலை. சாக்குப் பிடிக்கும் பஞ்சவர்ணம், அஞ்சலையைப் பரிதாபமாகப் பார்க்கிறாள். எல்லோருடைய கொழுந்தும் நிறுத்து முடிந்து விட்டது.

"என்ன அஞ்சல, ஒனக்கு வேல பாக்க ஒரு தனி கங்காணியும், கணக்கப் பிள்ளையும் வேணுமா? கொண்டு வந்து தட்டுல கொட்டு. இப்ப முத்தெல கரச்ச ஸ்டோர்ல ரொம்ப இருக்குன்னு தெரியுந்தானே. ஒனக்கு இன்னிக்கு மணிதான் பேரில்ல. "சின்னக்கணக்கப்பிள்ளை அவளைக் கீழ்க் கண்களால் பார்த்துக் கொண்டே சொல்கிறார்.

அஞ்சலை காலையில் கொடுத்த அந்த அரையங்குலத் துண்டை பயபக்தியுடன் இரு கைகளாலும் நீட்டுகிறாள். அவர் அதைக் கிழித்தெறிந்து விட்டு பேர் போடாது மணி போடுகிறார்.

அஞ்சலை தன்னந்தனியாக லயத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறாள். வீரபுத்திரன் கங்காணியும் கொழுந்துக் கணக்கப்பிள்ளையும் தொடர்ந்து கொஞ்ச நாளாகத் தனக்குக் கரைச்சல் கொடுத்து வருவதை எண்ணும் போது, அவளுக்கு மனவேதனையாக இருக்கிறது. 'அவரு உசுரோட இருந்தா இப்புடி நடக்குமா! கங்காணியும் கணக்கப்புள்ளயயும் துண்டு துண்டா வெட்டி கூறு போட்டிருப்பாரே? போனமாதம் நடந்த அந்த சங்கதியை நினைக்கும் பொழுது, அஞ்சலையின் நெஞ்சம் பகீரென்கிறது. கணக்கப்பிள்ளைக்குத் தோட்டக் கணக்கில் புலன்வெறி தீர்ப்பது ஒரு பொழுது போக்கு. மாரிமுத்துக் கங்காணி தலைவர் பெருமாளுக்கும் அஞ்சலைக்கும் தொடர்பிருப்பதாகப் தோட்டம் பூராவும் டும்டும் என்று கதை பரப்பியதும், கணக்கப்பிள்ளைக்கு அஞ்சலை மேல் ஓர் ஆசையை ஏற்படுத்தியது. வறுமையின் ஓர வஞ்சனையையும் மீறி இயற்கையாகவே அஞ்சலைக்கிருக்கும் அழகு, பேசும் பொழுது இயல்பாகவே அபிநயம் கொடுக்கும் முகம், மேலும் அவர் ஆசைக்குத் தூபமிட்டன. கணக்கப்பிள்ளை தனது கையாளான வீரபுத்திரன் கங்காணியை அவளிடம் தூதனுப்பியிருந்தார். கொழுந்து நிறுத்துவிட்டு உடற்சோவுடன் வீடு திரும்பிக்கொண்டிருந்த அஞ்சலையை, 'நெத்திக்கான்' முடக்கில் மறித்து கங்காணி கேட்ட அந்த அசிங்கமான கேள்வியை இப்பொழுதும் நினைத்துப்பார்க்கும் பொழுது, அவளுக்கு வயிற்றைக் குமட்டுகிறது. ''அஞ்சல, அய்யாவுக்கு ஒண்ண ரொம்பப் புடிச்சிருக்காம். நீ மட்டும் ஒத்துக்கிட்டா, முப்பது நாளும் தப்பாமே பேருஉழும்; கூடக் கொரய ராத்தலும் போடுவாரு.''

கொழுந்துக் கூடையால் கங்காணியை மொத்த வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது. கங்காணி அஞ்சலையை விட்டபாடில்லே. ஐயாவுக்கு தேனெடுக்கப்போகும் கங்காணி தன் கைகளையும் நக்கிப்பார்ப்பதுண்டு.

என்னு புள்ள ரொம்பத்தான் கிராக்கி பண்ணுர. மண்ணு திங்கிறது மனுசன் திங்கட்டுமே'' தன்னைத் தீண்ட வந்த கங்காணியை நோக்கி அஞ்சலே மட்டக்கத்தியை நீட்டுகிருள். கங்காணியின் கையில் இரத்தமும் முகத்தில் அசடும் வழிந்தன.

''என்னடி பெரிய பத்தினி வேசம் போடுற. பெருமாளு தலவரோட கூட்டாயிருக்கிற எனக்குத் தெரியாதுன்னு நெனச்சியா? தோட்டமே ஒன்னப்பத்தி துப்புதடி''

'தூ...... இவங்க எல்லாம் மனுசங்களா? அக்கா தங்கச்சி கூடப் பொறக்கிலியா? கம்மனுட்டி. ஒருத்தியப்பத்தி இப்புடி பேசிக்கிற இவுங்க நாக்கு அழுவிப் போவாதா? தனக்கு உதவி செய்வதால் இப்படியோர் அவதூறுன பேச்சு பெருமாளுக்குக் கிடைத்திருப்பதையெண்ணும் போது அஞ்சலேக்கு நெஞ்சுக்குள் ஏதோ செய்கிறது. ஆண் துணையற்ற அவளுக்கு பிரதியுபகாரம் எதிர்பார்க்காது பெருமாள் செய்து வரும் உதவி, தவறிப் போன அவள் கணவனின் சேமலாப நிதியை எவ்வளவு முயன்று பெருமாள் எடுத்துக் கொடுத்தான். அஞ்சலேயின் கணவனிருக்கும் பொழுது பஞ்சகாலத்தில் பசிதீர்க்க கறுப்பையா முதலாளியின் அடைவுகடையில் அடைக்கலமான அவளது அட்டியலே, முதலுக்கும் மேலாகக் குட்டி போட்ட வட்டியையும் முதலேயும் கட்டித் திருப்புவதற்குப் போதாமலிருந்த சேமலாப நிதிப் பணத்துடன் தானும் ஐம்பது ரூபா போட்டுத் திருப்பியெடுத்து அவள் கையிலேயே ஒப்படைத்தான். பெருமாள் வீட்டில் நல்ல தீனியென்றல் அதனை

அடுத்த வீட்டு அஞ்சலையின் பிள்ளைகளுக்குக் கொடுக்காமல் சாப்பிடமாட்டான். அவள் மூத்த மகன் காளிமுத்து எந் நேரமும் பெருமாளையே ஒட்டிக் கொண்டிருப்பான். அஞ் சலைக்குப் பெருமாள் அடிக்கடி சொல்வான்.

''காளிமுத்து ரொம்ப கெட்டிக்காரனு வருவான். அவன் பேசுகிற பேச்சும் கேக்குற கேள்வியும்......! வெள யும் பயிரு மொளயிலயே தெரியுது'' அவள் பூரித்துப் போவாள். அதுவும் பெருமாள் — பிரச்சினைகளை யெடுத்து அடித்துப் பேசி, தோட்டத்துல ஆட்களுக்கு நல்வழி காட் டும் புதுத்தலைவர் — பாராட்டுவதென்றால்......!

அந்த சங்கதிக்குப் பிறகு வீரபுத்திரன் கங்காணி அஞ் சலைக்கு மலையில் தினமும் கரைச்சல் கொடுப்பான். வேலை சரியில்லை யென முதல் தொங்கலுக்கு இழுத்தடிப்பான். ஐந்து நிமிடம் பிந்தி வந்தாலும் லயத்துக்கு துரத்தி விடு வான். கங்காணியின் ஆசானுன கணக்குப் பிள்ளையும் தனது பொழுது போக்கை விட்டபாடில்லை. பலரக சுவைகண்ட அவர், ஒன்றில் ஆசைப்பட்டால் அதனை அடைந்தே தீர் வார். 'அந்தக் கம்மனுட்டி பஞ்சவர்ணமும் மொதல்ல இப்படித்தான் பெரிய கிராக்கி பண்ணுனு அப்புறம் வழிக்கு வந்திட்டா அஞ்சலையும்......!'

இன்று சாக்குப் பிடிப்பவளாக வேலை செய்து, ஐயா வின் அவ்வப்போதைய தேவையைப் பூர்த்தி செய்து காலத்தை ஒட்டி வருகிறுள் பஞ்சவர்ணம்.

''என்ன அஞ்சல ஒரு மாதிரியா இருக்க, சொகமில் லையா? அஞ்சலை திரும்பிப் பார்க்கிருள். பஞ்சவர்ணம் அவ ளுக்கு அருகில் நிற்கிருள்.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை பஞ்சவர்ணம்''

''என்னு செய்யுறது அஞ்சல. நம்ம தலவிதி இப்புடி'' பஞ்சவர்ணம் தெளிவாகச் சொல்கிருள்.

"நா போயிட்டு வாறேன் புள்ளங்க ஆயாவக் காண வேன்னு துடிச்சுப் போவுங்க." பஞ்சவர்ணம் அஞ்சலையைத் தாண்டி வெகுதூரம் சென்றுவிட்டாள்.

வீட்டுக்கு வந்த அஞ்சலைக்கு துடிக்க வைத்த வயிற்று வலி திருதிரு வென்ற நெஞ்சக் காந்தலுடன் ரொம்பவும் மோசமாகிறது. 'கொஞ்சம் சாயத்தண்ணி குடிச்சாத் தேவலே? கேத்தலில் தண்ணீர் நிறைத்து அடுப்பிலேற்றி விட்டு தேயிலைத்தூளைத் தேடுகிருள். காலையில் தூள் கொத்து காலியானதை அவள் அறவே மறந்து விட்டாள். எடுத்ததற்கெல்லாம் அடுத்த காம்பிரா செல்லாயியை எப்படித்தான் கேட்பது! சுட்டு ஆறிய நீரை வாய்க்குள் ஊற்றிக் கொள்கிருள். வயிற்றுவலி கொஞ்சம் குறைவது போல் தெரிகிறது.

சம்பளத்துக்கு நேரமாகிவிட்டது. அவள் புருசன் எப்போதோ ஒரு தீபாவளிக்கு எடுத்துக் கொடுத்ததும், எத்தனையோ சம்பளங்களைக் கண்டதுமான அந்தச் சேலையைக் கட்டிக் கொண்டு, போனமாதச் சம்பளத்துக்குப் போட்டுக் கொண்டு போய்விட்டு அடிப்பெட்டியில் மடித்து வைத்து தலைவேட்டியை எடுத்து எட்டாக மடித்துக் கொங்காணியாகத் தலையில் மாட்டிக் கொண்டு சம்பளத்துக்குப் புறப்பட்டு விட்டாள்.

"ஆயா எனக்கு ஆட்டுக்கால் ரொட்டி வாங்கிட்டு வா. மறந்துராத ஆயா. நா பேரு பதிஞ்சு பில்லுவெட்டி எங் காயாவுக்கு சீல லவுக்க எல்லாம் வாங்கித் தருவேன்." மேட்டு லயத்தை விட்டுப்பிரியும் போது மகன் காளிமுத்து சொன்னது அவளைக்கண்கலங்கச் செய்கிறது. அஞ்சலை, போய்க்கொண்டே இம் மாதச் சம்பளத்தில் இருக்கும் செலவுகளை எண்ணிப் பார்க்கிருள். 'சம்பளம் எம்புட்டு இருக்குமோ தெரியல. ஒத்தக்கட மொதலாளிக்கு பழைய பாக்கிய பத்து ரூபா சரி குடுக்கணும். அரிசி மாவும் வாங்கணும், கொளம்பு தண்ணிக்கு காய்கறி ஏதாச்சும் வாங்கிக்

கணும். காளிமுத்துக்குக் கண்டிப்பா அவன் கேட்டத வாங்கிவிட்டு போவணும், பாவம் அப்பனுமில்லே. அவன் ஆசையத்தீக்க வேற ஆருதான் இருக்கார்காளிமுத்து தல யெடுத்தப்புறந்தான் நம்ப குடும்பகஷ்டம். கொஞ்சமாவது கொறயும்.

அஞ்சலே ஸ்டோருக்கு வந்துவிட்டாள். மேற் கணக்கிற்கு ஸ்டோரில்தான் சம்பளம் போடுவார்கள். இன்னும் துரை வரவில்லே.

ஸ்டோர்வாசல் சம்பள வாசலாகக் காட்சி தருகிறது. பல வித கடைகள் விரிக்கப்பட்டிருக்கின்றன. வெற்றிலே—பாக்குத் தொட்டு அரிசி காய்கறி வகைகள் அனைத்துடன் சட்டி பானே துணி மணி வரையும் காணப்படுகின்றன. வளையல் காரன், பொட்டணிக்காரன் ரொட்டிக்காரன் எல்லோரும் சுறுசுறுப்பாய் இயங்குகின்றனர். தோட்டத்துக்கு டவுன் முதலாளிமார் நோட்டுப்புத்தகம் சகிதம் விஜயம் செய்திருக்கின்றனர். இன்றும் நாளேயும் மடிப்புக் கலேயாத சட்டையணிந்த புதுமுகங்கள் சில நிலுவை பிரிக்க லயன்களே வலம் வரும். துரை இன்னும் வராததால் சம்பள வாசலில் அங்குமிங்குமாக ஆண்களும் பெண்களும் கூடிநின்று பலதும் பத்தும் பேசுகின்றனர். லயத்துப் புதினம் தொட்டு பெரிய பங்களா சங்கதி வரை அவர்களது உரையாடலில் உட் பொருளாக இருக்கின்றன. சிலர் சம்பளம் கைக்கு வந்ததும் செய்யப்போகும் காரிய கற்பனேயில் திளேக்கின்றனர்.

தனியே நின்ற விருந்தாடி வேலு சென்ற சம்பள நாளிலும் தன் வீட்டில் நடந்ததை நினேத்துத் தனக்குள் சிரித்துக் கொள்கிருன். நல்ல, 'சூரில்' வீட்டுக்கு வந்திருந்த வேலு,

''என்னடி முப்பது நாளும் கோசாக் கறிதானே. இன்னிக்காச்சும் வாய்க்கு ருசியா ஆக்கக் கூடாதா?'' என்ருன்.

''எல்லாம் நீங்க வாங்கிக் கொண்டாந்து கொட்டுற லச்சணந்தான்''

''ஒனக்கு வரவர வாயி நீளுதடி'' என்று சொல்லிக் கொண்டே பக்கத்திலிருந்த ஊதாந்தட்டையால் ஒரு விசுக்கு விசிக்கினான். காயம் பட்ட கையை உயத்திக் கொண்டே அவன் மனைவி,

''ஐயோ கொல்றானே'' என்று சத்தமிட்டாள். லூரி லிருந்த அடுத்த காம்பரா ஆள், ''என்னா புள்ள சத்தம்'' என்று கேட்டுக்கொண்டே அங்கு வந்தான். ''ஒண்ணுமில்ல அண்ணே அட்டால்ல வெறவு எடுக்கையில தவறி கைல உழுந்திரிச்சி'' என்றாள் வேலுவின் மனைவி. அப்புறம் வேலு அவளது வலிக்கு உள்ளும் புறமும் சாராயம் கொடுத்து, அன்றிரவு கருவாடு பொரித்து சாப்பிட்டு விட்டு மூலைக் கொன்றாக சுருண்டு கிடந்து பிள்ளைகள் 'எழுந்து விடுவார் களே' என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தாம் பத்திய உறவின் மயக்கத்தில் இருவரும் தம்மை மறந்தி ருந்தனர்......!

இன்னும் துரை சம்பளவாசலுக்கு வரவில்லை. மூன்று மணிக்குச் சம்பளம் என்றுதான் பேச்சு. நாலு மணிக்கும் மேலாகிவிட்டது. பலவித கருத்துக்கள் பரிமாறப்படுகின் றன.

''வெள்ளக்காரத் தொரமாருன்னா சரியா மூணு மணிக்கு சம்பள வாசல்ல இருப்பாங்க. நம்ம கருப்புத் தொரமாரூட்டு உருலோசு பிந்தித்தானே ஓடுகிறது''— ஒரு நகைச் சுவைஞர்.

''இனி எத்தினி மணிக்கு நாட்டுக்குப் போறது. கலு பண்டா ஊட்ல நல்ல சாமான்லாம் முடிஞ்சுடும். பச்சத் தண்ணிதான் நம்மளுக்குச் கெடைக்கும்''— குடிகாரன் பேச்சு இது.

"அந்தி அஞ்சர மணி பஸ்ஸ சந்தியில புடிச்சாத்தான் ஆறு மணிக்கு சோவுக்குப் போவ கெடைக்கும். இன்னிக்கு தோட்டத்துப் பொடியங்கல்லாம் பசுக்கோப்புலதான் இருப்பாங்க. படத்துல நல்ல பயிட்டெல்லாம் காம்பிக்கிருங்களாம்" ஒரு சினிமா இரசிகரின் அங்கலாய்ப்பு.

தலைவர் பெருமாளைச் சூழ்ந்து பலர் நிற்கின்றனர். சூசை கோபத்துடன் சொல்கிருன்.

"என்ன அனியாயம் இது. இனி எத்தினி மணிக்கு ஆளுங்க சம்பளம் வாங்கிக்கிட்டு ஊட்டுக்குப் போறது. நேரமும் நாலு இருவதாகுது. ராவுபகலுன்னு பாராம ஒழைக்கிற நாம் இருட்டுனப் புறந்தான் சம்பளம் வாங்கிட்டுப் போறது. அண்ணே நாங்க எல்லோருமா சம்பள வாசல உட்டு ஊட்டுக்குப் போவோம். அப்பதான் தொரமாருக்குப் புரியும்" பெருமாள் சிறிது நேரம் யோசிக்கிருன்.

"இன்னிக்கு சம்பளம் கெடைக்காட்டா நம்மளுக்குந்தான் ஏமாத்தமும் கஷ்டமும், தொரமாருக்கென்ன, சரி சூசை, நாலரை மட்டும் பாத்துட்டு ஏதாச்சும் நடவடிக்கை எடுப்போம். இந்த சங்கதியையும் நம்ம ஜில்லாவுக்கு சொல்லிவைக்கணும்"

சம்பளம் வாங்காது எல்லோரும் வெறுங்கையோடு போகப் போகும் காட்சியை நினைத்துப் பாக்கப் பெருமாளுக்குப் பரிதாபமாக இருக்கிறது.

கண்டக்கையாவைப் புடை சூழ்ந்து மாரிமுத்துக்கங்காணி, வீரபுத்திரன் கங்காணி, விருதாடி வேலு, ஐஸ் அய்யாச்சாமி முதலியோர் நிற்கின்றனர். கண்டக்டர் நம்பிக்கைக்குப் பாத்திரமான சிலருடன் கண்களால் பேசுகிருர். இன்றைக்கே தனது பங்கை அவர்களிடமிருந்து பெற்று விடவேண்டும். தப்பி விட்டால்...... அப்புறம், அப்புறந்தான் சம்பளம் வாங்கிய கையுடன் தனது பங்களா

வுக்குப் போய், அம்மாவிடம் நீட்ட வேண்டிய தொகையைப்பற்றி தனித்தனி எல்லோருக்கும் முன் கூட்டியே சொல்லி வைத்திருக்கிருர். இன்றைக்கு கண்டக்கையாவுக்கு எப்படியும் அவரது மாதச் சம்பளத் தொகையிலும் பார்க்க கூடுதல் தொகை கிடைக்கும்.

சின்னத்துரை வரும் ரோட்டை எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். வானத்தைக் கருமேகங்கள் சூழ்கின்றன.

''என்ன தலவரய்யா இனி எத்தினி மணிக்கு நாங்க சம்பளம் வாங்கிட்டு போறது. இந்தா மழையும் வரப் போவுது'' வெண்கலக் குரல் ஒலிக்கிறது. பெருமாள் திரும்பிப் பார்க்கிருன். கொங்காணி போட்டு நெற்றியில் பொட்டிட்டு, புதுச் சேலே கட்டி திருமணப் பெண் போல பூவாயி சிரித்த முகத்துடன் நிற்கிருள். அவளுக்குப் பக்கத்தில் கொங்காணி போட்டுக் கொண்டு வெட்கச் சிரிப்புடன் சோமாவதி நிற்கிருள். சோமாவதிக்குப் பக்கத்தில் நிற்கும் நாட்டிலிருந்து வரும் சுது நோனு கொங்காணி போடவில்லே. பெருமாளுக்குப் பக்கத்தில் நிற்கும் ஆப்தீன் தன்னே மறந்து சோமாவதியைப் பார்த்துச் சிரிக்கிருன். சோமாவதி பதிலுக்குச் சிரித்துவிட்டு, பெருமாளேக் கடைக் கண்களாற் பார்க்கிருள்.

மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்கிறது.எல்லோரும் ஆவலுடன் சின்னத்துரை வந்து கொண்டிருப்பதைப் பார்க்கின்றனர். சூசை பொக்கட்டுக்குள்ளிருந்த பொக்கட் கடிகாரத்தை எடுத்துப் பார்க்கிருன். நாலரை மணிக்கு இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கிறது.

தொழிலாளரின் உழைப்பு பணமாகி துரையின் குட்டிச் சாக்கில் இறுகக் கட்டப்பட்டிருக்கிறது. கட்டுக் கட்டாக பலரக நோட்டுக்களே மேசையில் துரை விரித்து வைக்கிருன்.

கண்ணாடிக் கிளாக்கரையா செக்ரோலை விரித்துவைத் துச் சம்பளத் தொகையை வாசிக்கிறார்.

''மாரிமுத்துக் கங்காணி வெள்ளையம்மா இருநூத்தி பதிமூணு''

சம்பளம் போட்டுக் கொண்டிருக்கும் ஸ்டோர் ஆபி ஸில் திறந்து வைக்கப்பட்டிருக்கும் ஜன்னலுக்கு இடது பக்கத்தில் நின்று, சம்பளம் போடுவதைத் தலைவர் பெரு மாள் பார்த்துக் கொண்டிருக்கிறான். புதிய கட்சிக் கார ருக்கு நல்ல சம்பளம் கிடைப்பதை அவன் கவனிக்கிறான்.

''நாலாவது தோட்டப்பிரட்டு பஞ்சவர்ணம் நூத்திப் பதினேழு.'' சின்னக்கணக்குப்பிள்ளை தன்னை மறந்து பஞ்ச வர்ணத்தைப் பார்த்துச்சிரிக்கிறான்.

''ஆறுவது தோட்டப்பிரட்டு அஞ்சலை இருபதுரூபா'' சின்னத்துரை இரண்டு பத்துரூபா நோட்டுகளையெடுந்து சில்லறைகளில்லாத தொகையாக மொத்தச் சம்பளம் வந்து பொருந்தியதை அருகிலுள்ள உத்தியோகத்தருக்கு சொல்லி ரசித்துக் கொண்டு, இரண்டு கைகளையும் பய பக்தியுடன் நீட்டிய அஞ்சலையிடம் வேண்டாவெறுப்பு டன் வீசுகிறார்.

அஞ்சலைக்கு ஒன்னுமே புரியவில்லை. 'எப்புடி எனக்கு இம்புட்டு கொறவா சம்பளம் வந்திச்சி. போனமாசம் ரெண்டு நாத்தானே வேலயில்ல, ஒரு நா நேரம் போயி ருக்கின்னு சின்னத்தொர வெரட்டிப்பிட்டாரு.அப்பொறம் ஒரு நா கைப்புள்ளைக்கி வவுத்துவலி வந்து ஆசுப்பத்திரிக்கு எடுத்துக்கிட்டு போனதில அன்னிக்கு வேலக்கிப் போவ கெடக்கில. போனமாசம் ஒண்ணுந்தேதி கூட எனக்கு மேலுக்கு ரொம்ப சங்கடமாயிருந்தும் ஒண்ணுந்தேதி சீக்கு ருக்கப்படாதுன்னு மலைக்குப் போயி ஒடம்பு வெவெவடுக்க கொழுந்தெடுத்து எப்படியோ அன்னிக்கிப் பேரும் போட்

டுட்டேன். இது கணக்கன், கங்காணி வீரபுத்திரன் இவுங்க வூட்டு திருக்குசாத்தான் இருக்கும். நாளேக்கி பெருமாளு கிட்ட சொல்லி பெரியாபிசில சம்பளக் கணக்கப் பாத்துக் கணும்'

அஞ்சலையைக் கண்டதும் ஒத்தக்கடை முதலாளி சைமன் நோட்டுப் புத்தகத்தை விரித்துக்கொண்டே

''எங்கிட்டி பாத்துக்கிட்டிப் போறது. அஞ்சலே ஓம் புருசங் தவறிப் போனதிலிருந்தி நம்மளுக்கும் பாக்கி மாசங் மாசங் கூடி அறுவதிக்கு ஏறிடாங் இந்த மாசங் இருவதா வது பாத்திக் குடுக்கிறது என்கிறுன்.

அஞ்சலே கையிலிருந்த இரண்டு பத்து ரூபா நோட்டுக் களேயும் காட்டி ''மொதலாளி எனக்கு சம்பளமே இவ் வளவு தானுங்க'' என்கிறுள். அவளுக்குச் சொல்லவே வெட்கமாக இருக்கிறது.

''குடுக்கிற வேலெக்கி ஒளுங்கா போறதிங் இல்ல. சும்மா லயித்தில இருந்திட்டி குட்டிச்சாக்கும் எடுத்திட்டி நம்மட கடக்கி வாரதி. அதில்ல இதில்ல சொல்லிட்டி கட ணிக்கி அள்ளிக்கிட்டிப் போறது. சீ... ஒனக்கி மானங் ரோசங் இல்லியா?'' என்று கூறிக்கொண்டே அஞ்சலே யின் கையிலிருந்த இருபது ரூபாவையும் பிடுங்கி எடுக்கி றுன் சைமன்.

முதலாளி சொல்லிய வார்த்தை யாரோ நெஞ்சில் முள்ளுக்குத்துவது போல வலியைக் கொடுக்க, ஒன்றுமே பேசாது வெறுங்கையுடன் சம்புளவாசலே விட்டு மேட்டு லயத்தை நோக்கி வருகிறுள் அஞ்சலே. அவளுக்கு வயிற்று வலி வாரிச்சுருட்டிக் கொண்டு வருகிறது. கீழுதட்டைப் பற்களால் கடித்துக்கொள்கிறுள். இருண்டு கிடந்த வான மும் மழைத்துளிகளாக அழுது வடிகிறது. புழுவாய்த் துடிக்க வைக்கும் பொறுக்க முடியாத வயிற்று வலியுடன்,

தலையும் சுற்றுகிறது. மலைகள் மேட்டு லயம் எல்லாமே ஸ்டோர் காற்றாடிகள் போலத் சுற்றுகின்றன.

''எனக்கு எங்காயா ஆட்டுக்கா ரொட்டி...''

பெருங்குரலில் மகன் காளிமுத்து போடும் சத்தம் அவள் காதுகளில் தேய்ந்தொலிக்கிறது. அஞ்சலைக்கு எல்லாமே மங்கலாகத் தெரிகின்றன. உடல் சோர்வடைந்து சரிகிறது. கைகள் மட்டும் இருமருங்கிலுள்ள தேயிலைச் செடிகளின் வாதுகளை கைத்தாங்கலாகப் பற்றிக் கொள்கின்றன.

## (10)

இன்றைக்காவது பெரிய துரையைச் சந்திக்க முடியுமா? சின்னத்துரை ஆபீஸ் வைக்காமல் ஒரு மாத மாகத் தட்டிக் கழித்து வருவதைப் பெரிய துரைக்கு அறிவித்து, தங்களது பிரச்சினைகளை அவருக்கே எடுத்துச் சொல்ல வேண்டுமென்ற தோட்டக் கமிட்டியின் முடிவின் பிரகாரம் பெரியதுரையைச் சந்திக்க பெரியாபிசை நோக்கி பெருமாளும் சூசையும் செல்கின்றனர். இது மூன்றாவது பயணம். பெரியதுரை தோட்டத்தில் இல்லாத நாள் இருக்கும் நாளிலும் அதிகமாகவேயிருக்கும். பெரியதுரை இன்றைக்கும் இருப்பாரோ என்னவோ!

அந்தத் தோட்டத்தின் உயரமான ஒரு குன்றில் பெரிய துரை பங்களாவும் அருகில் தோட்டத்துப் பெரியாபிசும் அமைந்திருக்கின்றன. தோட்டத்தில் உள்ள எல்லா டிவிசன்களுக்கும் வெகுதொலைவில், ஆபிஸில் வேலை செய்யும் ஊழியர்களின் வீட்டிற்குச் சிறிது தொலைவில் பெரியதுரையின் பங்களாவுடன் இணைந்து ஆபிஸிருக்கிறது.

பெருமாளும் சூசையும், பூத்துக் குலுங்கி—இதுபங் களா ரோட்டென்று பறைசாற்றிக் கொண்டிருக்கும் உயர்ந்து வளர்ந்து கிளை பரப்பியிருக்கும் மரங்கள் இருமருங் கிலுமுள்ள — ஏற்றமாகச் செல்லும் கறுத்த ரோட்டில் சென்று ஆபீஸ் வாசலையடைந்து விட்டார்கள். பங்களா விலிருந்து நூறடி தூரங் கூட இல்லாத ஆபிசுக்கு துரை, வானில்தான் வருவார். துரையின் வானைக் கண்டதும் பெருமாளுக்கும் சூசைக்கும் 'வந்த காரியம் நிறைவேறும்' என்ற திருப்தி ஏற்படுகிறது. துரை தனது ஆபிஸ் அறைக் குள்ளிருப்பதால் ஆபிஸ் துரிதமாக இயங்கிக் கொண்டி ருக்கிறது. பெருமாள் ஆபிசை நோட்டமிடுகிறான். பெரிய கிளாக்கர், 'இனி எப்போது துரை மீண்டும் ஆபிசுக்கு வருவாரோ' என்ற ஆதங்கத்தில் ஒப்பம் வாங்க வேண்டிய வற்றிற்கு ஒப்பம் வாங்கும் பணியில் துரிதமாக ஈடுபடுகி றார். இரண்டாங் கிளாக்கர், அவரது மேசையளவு நீள முள்ள ஒரு செக்ரோலைப் புரட்டிப் புரட்டி ஏதோ முக்கிய வேலையில் மூழ்கிக் கிடக்கிறார். மூன்றாவது கிளாக்கர், டைப்படிக்கும் ஒலி அந்த நிசப்தப் பகைப்புலத்திற்கு 'டக்டக்' என்று ஒலி கொடுக்கிறது. 'கண்ணுடிக் கிளாக்கர்' துரை அழைக்க, துடித்துக் கொண்டு ஓடிச்செல்வதும் பின்பு தன் நாற்காலியை நாடி வருவதும், வந்தும் வரா ததுமாக மீண்டும் துரையழைக்க நாயாக அலைந்து கொண் டிருக்கிறார். பெரிய துரையை ஆபிசில் சந்திக்க வேண்டு மாயின் யாராக இருந்தாலும் — சக ஊழியருங் கூட —பெரிய கிளாக்கரின் அனுமதியுடன் தான் சந்திக்க வேண் டும். பெரிய கிளாக்கரின் பார்வை படக்கூடிய இடத்தில் பெருமாள் நிற்கிறான். அவனைக் காணுதவர் போல பெரிய கிளாக்கர் தன் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்.

சூசை பெரிய துரையின் பங்களாவை பெருமூச்சுடன் பார்த்துக் கொண்டு நிற்கிறான். கோட்டையை அரண் செய்வது போல அப்பெரிய பங்களாவைச் சுற்றி சடைத்து வளர்ந்திருக்கும் சைபிரஸ் மரங்கள் அணிவகுத்து நிற்கின்

றன. நீச்சல் தடாகத்திற்குப் பூ வானம் போல் தண்ணீர் பைப்பிலிருந்து தெறித்துக் கொண்டிருக்கிறது. அருகிலுள்ள டென்னிஸ் மைதானத்தில் துரைச்சாணியும் வேறு யாரோ ஒரு பெண்ணும் பந்தடித்துக் கொண்டிருக்கிறார்கள். பங்களாவில் பன்னிரண்டு காம்பராக்கள் இருக்கின்றன என்பதை அங்கு வேலை செய்யும் இரண்டாவது அப்பையா மூலம் சூசை அறிந்திருக்கிறான். துரைக்கும் துரைச்சாணிக்கும் இரண்டு குழந்தைகளுக்கும் இத்தனை காம்பராக்கள். அந்தத் தோட்டத்தில் பன்னிரண்டு காம்பராக்கள் உள்ள லயம் ஒன்றிருப்பதை சூசை எண்ணிப் பார்க்கிறான். அந்த லயத்தில் பத்துக் குடும்பங்கள் வசிக்கின்றன. குழந்தைகள் உட்பட கிட்டத்தட்ட அறுபது ஜீவன்கள் அளவில் அந்த லயத்தில் இருக்கிறார்கள். ஸ்டோர் லயத்திலுள்ள அடைக்கலத்தின் மகள் லயத்தில் இடவசதியில்லாத காரணத்தினாலேயே சென்ற வாரம் தீப்பிடித்து பதுளைக்கு கொண்டுபோய் அங்கு செத்து இன்று தோட்டத்துக்குக் கொண்டுவந்து அடக்கம் பண்ணியதை சூசை பெருமூச்சுடன் எண்ணிப் பார்க்கிறான்.

பெரிய கிளாக்கர் தனது முக்கிய வேலைகளை முடித்துவிட்டு அன்றைய பத்திரிகையைப் புரட்டுகிறார். பெருமாள், ஐயாவின் பார்வைபட இன்னும் கொஞ்சம் முன்னுக்கு வருகிறான். தற்செயலாகப் பார்த்தது போல பெரிய கிளாக்கர் பெருமாளைப் பார்க்கிறார். பெருமாள் சலாம் வைக்கிறான். அவர் தலையை ஆட்டிவிட்டு மீண்டும் பத்திரிகையைப் பார்க்கிறார். பெரிய துரை ஆபிஸிற்குள் இருக்கும் பொழுது பெரிய கிளாக்கர் மட்டும் பத்திரிகை பார்க்கலாம். மற்றக் கிளாக்கர்மார் அவர்களுக்கு வரும் கடிதங்களைக் கூட வாசிக்க முடியாது. சிறிது நேரஞ் சென்ற பின் ஜன்னலைத் திறந்து பெரிய கிளாக்கர், ''என்ன வேண்டும்?'' எனக் கேட்கிறார்.

''பெரிய தொரய சந்திக்கணுங்க''

''என்ன சங்கதி?''

''சில பிரச்சினகள பேசணுங்கய்யா''

''என்ன பிரச்சின''

பெருமாள் ஒன்றுமே சொல்லவில்லே. அது பெரிய கிளாக்கருக்கு ஆத்திரத்தை ஊட்டுகிறது.

''சின்னதொரகிட்ட துண்டு வாங்கியாந்தியா?''

''இல்லீங்கய்யா, அவருதான் ஒரு மாசமா ஆபிசே வைக்கமாட்டேங்குருரே.'' பெரிய கிளாக்கர் சிறிது யோசிக்கிருர். 'வெள்ளேக்காரத் துரைமார் என்ருல் பெருமாளேத் தூரத்தியே இருப்பார். கறுப்புத்துரைமாரை நம்ப முடியாது. புரட்டிப் பேசுவார்கள். அப்புறம் இதில் ஏதும் சிக்கலென்ருல் 'என்னே சந்திக்கவந்த தலேவரை ஏன் அனுமதிக்கவில்லே? என்று என் தலேயில் பிழையைப் போட்டிடுவார். பெரிய கிளாக்கர் துரையிடம் போய், மேற்கணக்குத் தலேவர் சத்திக்க வந்திருப்பதாகச் சொல்லி விட்டு வந்து, கையால் சைகை காட்டுகிருர். பெருமாளும் சூசையும் துரையின் ஆபிஸீக்கு முன் நிற்கிருர்கள். பெரிய கிளாக்கர் துரையின் ஆபிஸ் ஜன்னலேத் திறந்து விடுகிருர். தோட்டத் தொழிலாளர் ஆபிசுக்கு வெளியே நின்றுதான் துரையுடன் பேச முடியும். பெரியதுரை அவர்களேக் காணுதவர் போல ஒப்பமிடும் வேலேயை முடித்துவிட்டு, சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்து புகையை ஊதிக் கொண்டே ஆபிசுக்கு வெளியே பார்வையை ஓட்டுகிருர். பெருமாள் சலாம் வைக்கிருன். துரை வேண்டா வெறுப்பாகத் தலேயை மட்டும் ஆட்டிவிட்டு அநாயாசமாக வேறு ஏதோ வேலேயில் சிறிது நேரம் கவனஞ் செலுத்துகிருர். சூசை துரைக்குச் சலாம் வைக்கவில்லே. சிகரெட் ஊதும் துரையை ஒரு பார்வை பார்த்துவிட்டு பனிமூட்டத்தை லாகவமாகப் புகையாக ஊதிக்கொண்டிருக்கிருர். மீண்டும் துரை பெருமாளே முறைத்துப் பார்த்தவாறு, ''என்ன வந்தது?'' என்று அடித் தொண்டையில் உரத்துக் கேட்கிருர். பெரியதுரையின் குரு ஒரு வெள்ளேக் காரத் துரை. பற்களே நெருடி, மேசையிற் குத்தி, பிரச்சினே பேச வந்த

வர்களைப் பார்வையால் வெருட்டி அனுப்பிய வெள்ளைக் காரக் குருவிடம் கற்ற தந்திரத்தைப் பெரிய துரையும் கையாளுவதுண்டு. இன்று காலம் எவ்வளவோ மாறி விட்டாலும் சுபாவம் முற்றாக மாறிவிடவில்லை. பெரு மாள் சற்றும் பயப்படாமல் நிதானமாகப் பதில் சொல்லு கிறான்.

''தொர நம்ம சின்னதொர ஒரு மாசமா ஆபிஸ் வைக்கல்ல எங்களுக்கு ரொம்ப பிரச்சினைகள் இருக்குதுங்க.'' பெரிய கிளாக்கர் துரைக்கு ஆங்கிலத்தில் ஏதோ சொல் கிறார்.

''சரி நீ தானே ஆபிசில சின்ன தொரய எதுத்து ரொம்ப றுங்கி பேசினது. சின்னதொர ஒம்மேல றிப் போர்ட் பண்ணியிருக்கு''

''இல்லீங்க தொர. நா றுங்கி பேசல்லியே. எங்க பிரச்சினைகளதானே பேசினது''

''ஏ மனுசன் நீ பிழ செஞ்சிட்டு ஒத்துக்குவியா? நீ ஒன் யூனியனுக்குப் போய் தேவயில்லாத சங்கதியெல்லாம் றிப் போட் பண்ணுறது. அவுங்க நம்மளுக்கு காயிதம் அடிச்ச னுப்புறது''

''தொர எங்க பிரச்சினய நீங்க தீத்து வைச்சா நாங்க ஏன் யூனியனுக்குப் போறோம்''

''ஒன் யூனியனுக்கு நாங்க பயமுன்னு நெனச்சியா? இதயும் போய் ஒன் யூனியனுக்கு சொல்லி எழுது''

''என்னங்க தொர நீங்க பேசுறது நாங்க எங்க கொறைகள யார்கிட்ட போய் சொல்லுறது. எங்க டிவி சன்ல ரொம்ப அனியாயம் நடக்குதுங்க தொர''

''சின்னதொர ஒரு கரச்சலுமில்லாம நடத்துறது தானே. நல்ல கொளுந்து வாறது, கோஸ்ட்டெல்லாம்

கொறஞ்சிக்கிட்டுப் போறது. நீ தான் தோட்டத்தை கொழப்புறது. பழய தலைவர் இருக்கப்போ தோட்டத்துல ஒரு சின்னக் கரைச்சல் இல்ல. நீ... போ... போ! சின்ன தொர எல்லாம் செஞ்சு குடுப்பார்''

பெரியதுரை, மேசையில், கொழுந்தெடுக்கும் பெண்ணின் உருவத்திலிருக்கும் 'ஆஸ்றே'யில் புகைந்து முடிந்த 'கோல்ட்லீவ்' சிகரெட்டை அமுக்கி நெரிக்கிறார்.

''சின்னதொர ஆபிஸ் வைச்சாத் தானுங்களே பிரச்சினைகளை பேசலாம்''

இவ்வளவு நேரமும் மௌனமாக நின்ற சூசை பேசுகிறான்.

''நீ யாரு? உன்னோட நம்மளுக்கு சுதயில்ல. நா தலவரோட பேசுகிறது''

பெரியதுரை முகத்தைச் சுளித்து கோபத்தை வரவழைத்துக் கொண்டு, சூசையை ஒரு பார்வை பார்க்கிறார். சூசை துரையை முறைத்துப் பார்க்கிறான் பெருமாள் துரையைப் பார்த்துக்கொண்டே.

''தொர எங்க பிரச்சினையை நாங்க ஆரோட தான் பேசித் தீர்க்கிறது'' என்கிறான்.

''போ, போ, சின்னதொரைக்கி ரொம்ப வேல தானே அவர் பிரியம் போல ஆபிஸ் வச்சி ஓங்க பிரச்சின எல்லாம் செஞ்சு குடுப்பார். நீ தொரயோடே ருங்கி பேசாத. நயந்து போவனும். வெளங்கிச்சா... போ... போ.'' பெரியதுரை ஆசனத்தை விட்டெழுகிறார்.

பெரிய கிளாக்கர், குழந்தை பிறந்த ஒருவனுக்கு பிரசவக்காசு கொடுக்காமல் இரு கிழமைகள் ஆகிவிட்டன என்றும் பல தடவைகள் அவன் ஆபிசுக்கு வந்து போய் விட்டதாகவும் நினைவூட்டுகிறார். துரை காசு எடுப்பதற்கு 'சேவை' நோக்கிப் போகிறார்.

பெரிய கிளாக்கர் யன்னலுக்கு கிட்டவந்து, பெருமாளை நோக்கி, ''என்ன பாத்துகிட்டு நிக்கிறது. தொர தான் சொல்லிட்டாரே'' என்று சொல்லிக்கொண்டே திறந்திருந்த ஜன்னலை அடைக்கிறார். பெருமாளும் சூசையும் திரும்புகிறார்கள்.

''அண்ணே பாத்திங்களா கழுதப்பய, இந்த தொரயோட பிரச்சின பேசி பிரயோசனமில்ல. நம்ம ஜில்லாவுல சொல்லி ஒரு ஸ்ட்ரைக் போட வேண்டியதுதான்,'' சூசை கோபத்தொனியுடன் சொல்லிக்கொண்டு வர, பெருமாள் துரைமாரின் போக்குகள் பற்றி எண்ணிப் பார்த்தவாறு பங்களா றேட்டிலிருந்து இறங்கிக் கொண்டிருக்கிறான்.

தூரத்தே மலையாண்டி அவசரமாக ஓடிவருவது தெரிகிறது. பெருமாள் பலவாறு யோசிக்கிறான். ''சின்னப் பாப்பாவுக்கு ஏதாச்சும் நடந்திருக்குமோ. அல்லது சின்ன மச்சானுக்கு வழக்கமாவாற வயித்துவலி வந்திருக்குமோ!'' மலையாண்டி அருகில் வந்து விடுகிறான். மூச்சிழைக்கக் கூறுகிறான்.

''மச்சான் அத்தைக்கு ரொம்ப வருத்தம், பல்லு வாயெல்லாம் கட்டிப் போச்சி. பேச்சு மூச்சில்லாம கெடக்குது. கொச்சிக்காப்பொகபுடிச்சும் சரிவரல்ல. நம்ம டாக்டரய்யாவை கூட்டியாந்து காமிச்ச ஒடனே ஆசுப்பத்திரிக்கு கொண்டு போவச் சொல்லி துண்டு குடுத்திட்டாரு. லொறிக்கும் துண்டு குடுத்திருக்காரு''

பெருமாள் ஒரு கணம் தாய்ப்பாசத்தால் தாக்குப்படுகிறான். மறுகணம் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, சூசையிடம் லொறிக்குத் துண்டைக் கொடுத்து ஸ்டோருக்கு அனுப்பிவிட்டு, லயத்தை நோக்கி ஓட்டமும் நடையுமாகப் போகிறான்.

பெருமாளின் தாய் செல்லாயிக்கு நேற்றிலிருந்து ஒரே காச்சல், நேற்று முன் தினம் அவள் மலேக்கு ரெட்டு கொண்டுபோக வில்லே. யாருக்குத் தெரியும் இப்படி திடு திடுப்பென்று மழை வருமென்று. மழையில் தெப்பமாக அவள் நனேத்து விட்டாள். நேற்று முழுவதும் தலேவலி, இடுப்புவலி, மேல் வெடவெடக்கக் காச்சல். இவற்றை யெல்லாம் பொருட்படுத்தாது மலேயில் பொழுதுக்கும் உழைத்து, பேரும் போட்டு விட்டாள். பெருமாளிடம் அவள் தனது வருத்தத்தைப் பற்றி ஒன்றுமே சொல்ல வில்லே. நேற்றிரவு அவளுக்கு உடம்பு நெருப்பாகக் கொதித்தது; வெடவெடன நடுங்கியது. நெஞ்சு வலித்தது; மூச்சு விட முடியாமல் இளேப்பெடுத்தது. இரவு சாப்பிட வுமில்லே. பெருமாள் தாயின் நிலேயை அவதானித்து நடுச் சாமத்தில் தோட்டத்து ஆசுப்பத்திரிக்குப் போய், மருந்து கொண்டு வந்து கொடுத்தான். மருந்து குடித்ததும் தேவலே போலிருந்தது. சிறிது நேரத்தின் பின் நோய் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கியது. இன்று காலே யில் பெருமாள், தீப்பிடித்து பதுளே ஆஸ்பத்திரியில் செத் துப்போன அடைக்கலத்தின் மகளேத் தோட்டத்துக்குக் கொண்டு வரப்போகும் பொழுது ''மருந்து பூரா குடுச்சி முடிய வியாதி சொகமாயிடும்'' என மகனுக்குச் செல் லாயி நம்பிக்கை தெரிவித்தாள். பெருமாள் மையத்துடன் தோட்டத்துக்கு வந்து அடக்கம் பண்ணிவிட்டு, வீட்டுக்குப் போக மூன்று மணிக்கு மேலாகி விட்டது. அப்பொழுது தாயின் நிலே இரவில் இருந்தது போல்தான் இருந்தது. அஞ்சலே தாயினருகில் இருந்தாள். சூசை பெருமாளேத் தேடி பெரியாபிசுக்கு போவதற்கு வந்ததும் எப்படியும் இன்றைக்குப் பெரிய துரையைச் சந்தித்து ஜில்லாவிற்கு ஒரு முடிவு சொல்ல வேண்டுமென்ற அவசரத்தில் ஆபி சுக்குப் புறப்பட்டு விட்டான். ஆபிசிலிருந்து வந்து ஏதா வது செய்யவேண்டும் என்றுதான் எண்ணியிருந்தான். அதற்குள்.....!

பெருமாள் லயத்தை அடைந்ததும் அவனது காம்பராவில் தோட்டத்து லயமே கூடிவிட்டது. எங்கு யாருக்கு சிறு கஷ்டமென்றாலும் ஓடிச்சென்று தன்னால் இயன்ற உதவியைச் செய்யும் பெருமாளின் தாய்க்கு இப்படியோர் ஆபத்து என்றதுமே யார்தான் போய்ப்பார்க்காமல் விடுவார்கள் கூடி நின்ற அனைவரையும் விலக்கிக் கொண்டு தாயின் படுக்கைக்கு முன்னால் போகிறான் பெருமாள். அப்போதுதான் செல்லாயிக்கு விபூதி பிடித்துவிட்டு பூசாரி பூவலிங்கம் வெளியே வந்து பெருமாளுக்கு வழி விடுகிறான். பெற்று வளர்த்தவள் பிணம் போற் கிடப்பதை பார்த்து பெருமாளின் கண்கள் கலங்குகின்றன. கையில் சின்னப் பாப்பாவுடன் தாயின் படுக்கைக்குப் பக்கத்தில் நின்ற பொட்டு, பெருமாளைக் கண்டதும் ''ஐயோ ஆயா'' என்று ஒப்பாரி வைக்கிறாள். அவளுக்குப் பக்கத்தில் அஞ்சலை கண்களில் கண்ணீர் தாரைதாரையாக வழிய நிற்கிறாள். படுக்கையின் மறுபக்கத்தில் பூவாயியும் சோமாவதியும் நிற்கிறார்கள். பூவாயி பெருமாளைப் பார்த்து, ''நீங்க தலைவர் வேல பாத்திட்டிருங்க. இங்க அத்தை பேச்சி மூச்சில்லாமல் எவ்வளவு நேரமாக் கெடக்குது'' என்கிறாள். சோமாவதி ஒன்றுமே பேசவில்லை. பெருமாளைப் பார்த்து சிவப்பேறி கண்ணீர் முட்டி நிற்கும் கண்களைப் புறங்கைகளால் துடைத்துக் கொள்கிறாள்.

ஒவ்வொரு நிமிடமும் யுகமாகக் கழிகின்றது. வெகு நேரமாகியும் லொறிக்குப் போன சூசையை இன்னுங் காணவில்லை. பெருமாள் ஸ்டோரை நோக்கிப் போகின்றான். ஸ்டோர் ஆபிஸில் சின்னத்துரையுடன் சூசை வாதிட்டுக் கொண்டிருக்கிறான்.

''லொறி கெட்டுப் போச்சி பஸ்சில கொண்டு போறது'' சின்னத்துரை சத்தமாக சொல்கிறார்.

"பேச்சிமூச்சில்லாத ஆளே எப்புடி தொர பஸ்ஸுல கொண்டு போறது. எங்க யூனியன சேந்தவுங்க ஆராச்சும் ஆசுப்பத்திரிக்கு கொண்டு போவ லொறி கேட்டா எத யாச்சும் கழட்டிப் போட்டு லொறி கெட்டுப் போச்சுங்குறது. அன்னிக்கு நெருப்பு பிடிச்ச அடைக்கலம் ஊட்டுப் புள்ளய ஆசுப்பத்திரிக்குக் கொண்டு போவ லொறி கேட்டா, 'லொறி கெட்டுப் போச்சி தூக்கிட்டுப் போங்கடா இல்லாட்டி சாவச் சொல்லுங்கடா' அப்புடீன்று சொன்னீங்க தொர. நாங்களும் மனுஷன் தானுங்களே. இந்த அனியாயம் எல்லாம் ரொம்ப நாளைக்கு நெலைக்காது தொர. லொறி கெட்டுப் போனு தொரவூட்டு வேனக் கொடுக்கலாந்தானே" சூசை ஆவேசமாகச் சொல்கிறான்.

"இந்தா தேவயில்லாத பேச்சி பேச வாணும். தொர வூட்டு வேன் சொகமில்லாத ஆள கொண்டு போகவா இருக்கு"

"தோட்டக் கணக்குல உள்ள வேனுல தொரவூட்டு நாயக் கொண்டு போகலாம். சொகமில்லாத ஆளக் கொண்டு போவேலாதோ?"

அப்பொழுது பெருமாள் வேகமாக ஸ்டோரை நோக்கி வருவதைக் கண்ட சின்னத்துரை, "சரி சரி டவுனுக்குப் போய் ஒரு கார் எடுத்திட்டுக் கொண்டு போறது. அப்புறம் பெரியாபிசில சல்லி வாங்குறது" என்று சொல்லிக் கொண்டு மோட்டார் சைக்கிளில் ஏறி பங்களாவை நோக்கிப் போகிறார்.

பெருமாள் என்ன செய்வதென யோசிக்கிறான். சூசையை பஸ்ஸில் டவுனுக்கு அனுப்பி அங்கிருந்து கார் கொண்டு வந்து தாயை ஆசுப்பத்திரிக்கு எடுத்துச் செல்ல இன்னும் எவ்வளவு நேரமாகுமோ! அதற்குள் ஏதாவது நடந்து விட்டால்......?

அப்பொழுது டவுன் காரொன்று நாட்டிற்கு 'ஹயர்' போய்த்திரும்பி வந்து கொண்டிருக்கிறது. சூசை அக் காரை மறித்து 'ரேட்' பேசி லயத்து ரோட்டுக்குக் கூட்டிச் செல்கிறான்.

மலையாண்டி, ஆசுப்பத்திரிக்குச் செல்லாயியை எடுத்துச் செல்வதற்கான ஆயத்தங்களைச்க செய்து கொண்டிருக்கிறான். செல்லாயி மயக்க நிலையில் இருப்பதால் யாருமொரு பெண், துணைக்குப் போக வேண்டுமல்லவா! யார் போவது? பொட்டுவுக்குப் போக விருப்பம் தான். ஆனால் சின்னப்பாப்பாவின் உடல்நிலை தடையாக இருக்கிறது. மலையாண்டி யாரை அழைத்துச் செல்வதென பெருமாளை கேட்டுக்கொண்டிருக்கும் பொழுதே, சோமாவதியுடன் ஏதோ பேசிக்கொண்டிருந்த அவளின் தாயாரான பொடி மெனிக்கா அவர்களுக்கு முன்னே வந்து தான் போவதாகச் சொல்கிறாள். செல்லாயியை அஞ்சலை, பூவாயி, சோமாவதி மூவரும் சுமந்து சென்று காரில் கிடத்துகிறார்கள். கார் பண்டாரவளை ஆசுப்பத்திரியை நோக்கி புறப்படுகிறது. அஞ்சலை ஒப்பாரி வைக்கிறாள்.

''என் ஆயா எங்கள உட்டுப் போறியா? ஓம் பேரன் அம்மாயி அம்மாயின்னு ஒம்மேல உசுரயே வைச்சிருப்பானே. நேத்துத்தான அவனயும் சின்ன கௌாக்கரோட மச்சான் ஊட்டுக்கு கொழும்புக்கு பாவி நா அனுப்பி வச்சனே ஒனக்கு ஒண்ணு நடந்துட்டா நாங்கெல்லாம் என்ன செய்றது ஆயா.''

'நம்ம தோட்டத்துல ஒருசாவூடு வந்தா அடுத்து ஒண்ணு வந்துதான் தொலையும்' கட்டை வெட்டிக் கிழவன் மெல்லிய குரலில் தன்னருகில் இருப்பவனுக்குச் சொல்கிறான்.

''நம்ம தோட்டத்து மகாமுனி இப்ப ரொம்ப ஆளுகளோட சேட்டை பண்ணிட்டு வருது'' பூசாரி பூவலிங்கம் தன் அபிப்பிராயத்தைக் கூறுகிறான்.

கார் ஆசுப்பத்திரி வாசலை வந்தடைகிறது. செல்லா யியை பொடிமெனிக்கா, பெருமாள் மலையாண்டி மூவரும் ஆசுப்பத்திரி வெளி நோயாளர் பகுதிக்கு எடுத்துச் செல் கின்றனர். ஆசுப்பத்திரிக்குள் அனுமதி செய்யும் டாக்டர் துள்ளிக் குதிக்கிறார்.

"இந்த தோட்டத்து சனங்கள் எப்பவும் இப்படித் தான் கை வைத்தியம் பார்த்து, சாமி பார்த்து கடைசி யிலே பிணத்தைத்தானே இங்கே கொண்டு வாறது"

மலையாண்டியும் பெருமாளும் எல்லாவற்றையும் கவ னிக்கிறார்கள். அரசாங்க ஆஸ்பத்திரியில் தோட்டத்துச் சனங்களை, டாக்டர் தொட்டு 'வார்டு அட்டென்டன்' வரை மனிதாபிமானத்துடன் நோக்குவதில்லை. ஏதோ வேண்டா வெறுப்பாகவே நடத்துவர். பெண்கள் வாட் டிற்கு செல்லாயியை எடுத்துச் செல்கின்றனர். பொடிமெ னிக்கா பின் தொடர்கிறாள்.

பெருமாளும் மலையாண்டியும் வாசல் கேற்றுக்கருகில் நிற்கின்றனர். 'வொட்சர்' இவர்களுடன் தானாகவே பேசுகிறான், 'சம்திங்' பெறலாம் என்ற நப்பாசையுடன். பெருமாளிடமிருந்து விசயத்தை அறிந்தும், பெரிய டாக் டரை பங்களாவில் சந்தித்தால் நல்லதெனவும் அவரை நேரில் சந்திப்பதாயின், 'டவுனில்' தெரிந்த முதலாளி மார்களில் யாரையும் கூட்டிக் கொண்டு போகவேண்டு மெனவும் சொல்கிறான். கறுப்பையா முதலாளி பெருமா ளின் தாய்மாமன் என அறிந்ததும் 'வொட்சர்' வியப்ப டைந்து முதலாளியுடன் போய் பெரிய டாக்டரை சந்திக் கும்படி சொல்கிறான்.

பெருமாளும் மலையாண்டியும் 'டவுனை' நோக்கிப் போகிறார்கள். செல்லாயியுடன் கூடப்பிறந்த கறுப்பையா இன்றுபண்டாரவளை 'டவுனில்' கணபதி ஸ்டோர்ஸ்'என்ற விலாசமிடப்பட்ட கட்டிட மொன்றில், ஒரு கூரையின் கீழ்

அடைவு கடையும் பலசரக்குக்கடையும் வைத்திருக்கும் ஒரு முதலாளி முயற்சியால் முன்னேறி இரண்டாவது உலக மகாயுத்த வேளையிலும், தோட்டங்களின் 73—74 ல் தலை விரித்தாடிய பஞ்சம் போன்ற காலங்களிலும் சந்தர்ப் பத்தை செவ்வனே பயன் படுத்தி சம்பாதித்து பெரிய முத லாளியாகிவிட்டார். பணமேற ஏற செல்லாயியின் குடும்பத் தொடர்பு குறைந்து வருகிறது. என்றாலும் பெருமா ளுக்கு, தாயை ஆஸ்பத்திரியில் அனுமதித்தவுடன் மாமா வுக்கு சொல்ல வேண்டுமென்ற விருப்பம் முதலில் இருந் தது. இப்பொழுது 'வொட்சர்' விருப்பத்திற்குத் தூபம் போட்டுவிட்டான்.

கணபதி ஸ்டோர்ஸ் மூடியிருக்கிறது. அனால் உள்ளே வியாபாரம் நடக்கிறது. பெருமாள் மாமனிடம் விபரத் தைச் சொல்கிறான். முதலாளி சொல்கிறார் ''தம்பி ஒரு முக்கிய விசயமா ஒரு எடத்துக்குப் புறப்பட்டுக்கிட்டிருக் கேன். வெளியே காரும் காத்திட்டிருக்கு. சாமான் இன் னிக்கு எப்படியும் எடுத்துப்புடனும். நீ இப்ப தோட்டத் துக்குப் போவல தானே. நா எப்புடியும் எத்தினி மணி யானாலும் டாக்டரய்யாவ பங்களாவுல சந்திச்சி சொல் றேன். சரிதானே நாவாறேன் தம்பி'' முதலாளி புறப் பட்டுவிட்டார். பெருமாளும் மலையாண்டியும் ஆசுப்பத்தி ரிக்குத் திரும்புகிறார்கள். அவர்களுக்கு செல்லாயியிக்கு என்ன நடந்திருக்குமோ என்ற மனஏக்கம்.

ஆசுப்பத்திரி வாசலில் கடுங்குளிரில் இரவுச் சாப்பாடு மின்றி இருவரும் தவமிருக்கிறார்கள். பெண்கள் 'வாட்டி லிருந்து வருபவர்கள் தங்களுக்குத்தான் ஏதாவது செய்தி கொண்டு வருகிறார்களோ என்ற மனப்பிரமை. ஆசுப்பத் திரி ரோட்டில் போகும் கார்களிலொன்று கறுப்பையா முத லாளி வரும் காராக இருக்காதா என்ற நப்பாசை. இரவு நடுச்சாமம் கழிந்து இரண்டு மணிக்கு மேலதிகமாக தெரி யவே பெருமாளின் மனம் தவிக்கிறது. அவனது மனதை தோற்ற பல கதைகள் கூறுகிறான் மலையாண்டி.

''பாத்தியா மச்சான் ஒம் மாமா செஞ்சதை. பணம் சொந்தத்தைப் பாக்காது. இவரு மட்டுமல்ல பணம் நெறைய உள்ளவுங்க, எல்லாருமே இப்புடித்தான். நம்ம ஆப்தீனுேட அண்ணு வெலிமடையில பெரிய மொதலாலி. இவன்தோட்டத்துல பில்லுவெட்டுருன்.ஆப்தீன்சின்னவய சுல அவன்கூடஇருந்து ஒழைச்சிக் குடுத்தான்.இப்ப அவனுல இவனுக்கு ஒரு உதவியுமில்ல. சில்வா மொதலாளிவூட கூடப் புறந்த தங்கச்சிதானே பொடிமெனிக்கா'' மலே யாண்டி பேச்சில் பொதிந்துள்ள உண்மைகள் பெருமா ளுக்கு புரிந்தாலும் தாயைப்பற்றிய நினைவு அதைப்பற்றிச் சிந்திக்க இடங்கொடுக்கவில்லே. செல்லாயியின் மயக்கநிலே தெளிந்திருக்குமோ?

ஆஸ்பத்திரி வாசலில் உள்ள தேநீர்ககடையில் சுவர் மணிக்கூடு மூன்றடித்து ஓய்கிறது. அப்பொழுதுதான் பொடிமெனிக்கா கேற்றுக்கருகில் வந்து செல்லாயியிக்கு மயக்கம் தெளிந்து விட்டதெனவும் இனிப்பயப்படுவ தற்கு ஒன்றுமில்லே எனவும் 'நேஸ்' சொன்னதாக சொல் கிருள். பெருமாள் பொடிமெனிக்காவை நன்றியுணர்வு டன் பார்த்துவிட்டு தோட்டத்திற்குப் போய் மீண்டும் வரு வதாகச் சொல்லி விட்டு விடை பெறுகிருன்.

பெருமாளும் மலேயாண்டியும் வெலிமடைக்குப் போகும் மரக்கறி லொறியொன்றில் ஏறி விடியுமுன்பு தோட்டத்தை வந்தடைந்து விட்டார்கள். பெருமாள் தனது காம்பராவையடைந்தபோது அங்கே பொட்டுடன் பூவாயி, சோமாவதி, அஞ்சலே எல்லாரும் இருக்கிருர்கள் பெருமாளிடமிருந்து செல்லாயியின் உயிருக்கு ஆபத்து இல்லேயென அறிந்ததும் எல்லோரும் நிம்மதியாக நெடு மூச்சு விடுகிருர்கள். இரவு மனம்பட்ட கஷ்டத்தை ஒவ் வொருவரும் சொல்கிருர்கள். பொட்டுவுடன் அஞ்சலே தங்கிவிட்டாள். பூவாயி இரண்டு தடவை இரவு வேலுச் சாமியுடன் வந்து செல்லாயியின் சுகத்தை அறிவதற்காக

பெருமாள் ஆசுப்பத்திரியால் வந்துவிட்டானே என்று பார்த்துவிட்டுப் போய், மூன்றாவது தடவை வந்தவள் அங்கேயே தங்கி விட்டாள். மாட்டுப்பட்டி லயத்தில் அடுத்த காம்பரா ஆப்தீனும் தங்கையும் தம்பியும் சோமாவதிக்குத் துணையாக இரவு இருந்தார்கள். சோமாவதிக்கு இரவு, பூராகவும் தூக்கம் வரவில்லை. எப்பொழுது விடியும் என்று எதிர்பார்த்தவள், பத்துப் பன்னிரண்டு வயதுடைய ஆப்தீனின் தம்பியை அழைத்துக்கொண்டு மேட்டு லயத்துக்கு செல்லாயியின் சுகமறிய வந்து விட்டாள்.

விடியப் போகிறது. அஞ்சலையின் காம்பராவின் பழைய கொழுந்துக் கூடையால் மூடப்பட்டிருந்த சேவல் மெல்லக் கூவுகிறது. அந்தச் சேவலின் கூவலை அமுக்கி போட்டி போட்டுக்கொண்டு எங்கோ இரண்டு சேவல்கள் கூவிக் கொண்டிருக்கின்றன.

## (11)

சின்னத்துரையின் மோட்டார் சைக்கிள் வேலைக் காட்டை நோக்கி விரைந்து வருகிறது. நேற்றுமுதல் சூடு பட்ட புலி போல அலைகிறார் அவர். தொழிற் சங்கத்தினர் பல கோரிக்கைகளை உதவித் தொழில் ஆணையாளருக்கு அனுப்பியதோடு பிரதிகளைத் தோட்டத் துரைக்கும் அனுப்பியிருக்கிறார்கள். பெரிய துரை சின்னத் துரைக்கு அவற்றை அனுப்பி அபிப்பிராயம் கேட்டிருக்கிறார் தனது திட்டம்ஒன்றுமேநிறைவேறவில்லை என்பதை எண்ண சின்னத் துரைக்கு கவலையாக இருக்கிறது.

சின்னத் துரை பெருமாளுக்கு எத்தனையோ விதமான கரைச்சல்களைக் கொடுத்துப்பார்த்தார். ஆனால் அவனோ

மேலும் மேலும் உற்சாகங் கொண்டவனுகக் காணப்படு கிருன். அவனுக்கு முன்னெருபொழுதும் இல்லாத வகை யில் தொழிலாளர்களிடம் நன்மதிப்பும் வளர்கிறது. பெரு மாளும் சூசையும் சேர்ந்து தோட்ட நிருவாகத்தால் மறைக்கப்பட்டு வரும் விஷயங்களையெல்லாம் வெளிச்சத் துக்குக் கொண்டுவந்திருக்கிருர்கள். போயா, ஞாயிறு தினங்களில் கொழுந்தெடுக்கும் வேலை செய்தால் 'அவ ரேஜ்' கூடக் காட்டவேண்டும் எனத் தொழிலாளர்களை நிர்ப்பந்திப்பது தவறெனச் சுட்டிக்காட்டி தொழிற் சங் கத்திலிருந்து கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது, ஒரு சின்ன விடயமென்ருலும் அவர்களது சங்கத்திலிருந்து கடிதம் வருகிறது. பெருமாளின் தாய்க்கு லொறி கொடுக்க மறுத் ததை பெரிய குற்றமாகக் காட்டி சங்கத்திலிருந்து கடி தம் வந்திருக்கிறது.

தொழிலாளர்களுக்கு எந்தெந்த விதத்தில் கஷ்டம் கொடுக்கமுடியுமோ, அந்தந்த விதத்தில் கஷ்டம் கொடுத் தால், தாங்கமுடியாத பளுவால் தாமாகவே அச் சங்கத் திலிருந்து விலகிவிடுவார்கள்; பெருமாளையும் சூசையையும் வெறுத்துவிடுவார்கள் என்று இதற்கான சந்தர்ப்பத்தை தேடிக்கொண்டிருக்கிருர் சின்னத் துரை. கண்டக்டர் தொட்டு டீ மேக்கர் வரை மேற்கணக்குத் தொழிலாளர் விடயத்தில் கண்டிப்பாயிருக்கும்படி கட்டளை வேறு இட் டிருக்கிருர். ஐயாமாரைக் கேட்கவும் வேண்டுமா? தொழி லாளரை வதைத்து தாங்கள் லாபம் சம்பாதிப்பதற்கு இது ஒரு வாய்ப்பு, அரிசிக் கிளாக்கருக்கு இதுவே ஓர் அரிய சந்தர்ப்பம்.

கொழுந்துக் காட்டைச் சின்னத் துரை வந்தடைகிருர், அஞ்சலை வயிற்று வலியால் துடித்த குழந்தையின் அழு கையை ஒருவாறு குறைத்து பிள்ளைக் காம்பராக் கிழவி யிடம் குழந்தையை திணித்துவிட்டு ஓட்டமும் நடையு மாக மலைக்கு வர பத்து நிமிடமளவில் பிந்திவிட்டது. அவள் சிறிது தூரத்தில் வரும்பொழுதுதான் அவசரமாக

மாரிமுத்து கங்காணியின் மனைவி வெள்ளையம்மாவும் பஞ்சவர்ணமும் நிரை பிடிப்பதைக் கண்டாள். கங்காணி அவர்களை ஏசவில்லை. 'தானும் தப்பிவிடலாம்' என்றெண்ணி மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க நிரை பிடிக்கத் தொடங்குகிறாள்.

''என்னு புள்ள இப்பதான் கூதல்காஞ்சிட்டு வாரியா? இது ஒன் அப்பனூட்டுத் தோட்டமா? இந்தா லயித்துக்குப் போயிரு. அந்தா பாரு சின்ன தொரை வாராரு. அப்புறம் தொர நம்முழுக்குத் தெண்டம் போட்டுடுவாரு'' வீரபுத்திரன் கங்காணி சத்தமாகச் சொல்கிறான்.

''கங்காணி நா ஒராளுழச்சித்தான் எம் மூணு புள்ளைங்களுக்கும் சோறு போடணும்''—அஞ்சலை நயந்து கேட்கிறாள்.

''அந்தக்கத நம்மளுக்கு வேணும்''—வீரபுத்திரன் கங்காணி தனது கையில் அஞ்சலை ஏற்படுத்திய உள் புண் ஆறாத தழும்பைத் தடவிக்கொண்டே சொல்கிறான். பஞ்சவர்ணம் பரிதாபமாக அஞ்சலையைப் பார்க்கிறாள்.

சின்னத் துரை மலைக்கு வந்துவிட்டார். கங்காணி நடந்ததைச் சொல்கிறான். சின்னத் துரை அந்தப் பெண்ணைப் பார்க்கிறார். அவள் அஞ்சலை.

''ம்... நீயா? ஓடு லயத்துக்கு'' துரை வெருட்டுகிறார்.

''தொர ஒங்க புள்ள குட்டிகளுக்கு புண்ணியங்க. எம் புள்ளைக்கு சொகமில்லீங்க. அதான் சொணங்கிப்போச்சுங்க. இன்னிக்கு மட்டும் மன்னிப்புக் குடுங்க. இனிமே சொணங்காம மலைக்கி வந்துடுறேங்க'' அஞ்சலை மன்றாடுகிறாள்.

''இதயெல்லாம் ஒங்க தலைவர் கிட்ட போய்ச் சொல்லுறது. யூனியனுக்கு சொல்லி லேபர் ஆபீசுக்கு எழுதச்

சொல்றது'' கிண்டல் ததும்ப அஞ்சலையைப் பார்த்துச் சொல்லிவிட்டு, கங்காணியைப் பார்த்துச் சொல்கிறார் சின்னத் துரை:

''முத்தெல ஒண்ணுமே இருக்கப்படாது. கொட்டிப் பொறுக்க சொல்லு. கொழுந்து சரில்லேன்னு கிலோ வெட்டு, அரைப் பேரு போடு, வெளங்கிச்சா.''

''சரிங்க தொர'' கங்காணி பவ்யமாகப் பதில் சொல்கிறான்.

அஞ்சலை இன்னும் போகவில்லை. சின்னத் துரை சப் பாத்துக்காலை நிலத்திற் பலமாக உதைத்து, ''ஓடிப்போ'' என்று அவளை நாய் போல விரட்டுகிறார். அஞ்சலை கண்கள் கலங்க வெற்றுக் கூடையுடன் லயத்தை நோக்கிப் போகிறாள்.

சின்னத் துரை பைத்தியம் பிடித்த நாயைப்போல வேலைக்காட்டிற்கெல்லாம் அலைகிறார். சிலரை ''வேலை சரியில்லை'' என்று லயத்திற்கு விரட்டிவிடுகிறார். சிலருக்கு தெண்டம் போடுகிறார். கடைசியாக உரம்போடும் மலையை நோக்கி வருகிறார்.

உரம் போடும் மலையில் கண்டக்டருக்கும், தொழிலாளருக்கும் ஏதோ வாக்குவாதம் நடைபெறுகிறது. பல காரணங்களை முன்னிட்டு கண்டக்டரால் ரேட்டு வேலைக்குத் தள்ளிய ஆரியதாசவிடமிருந்து சின்னத் துரை வாக்கு வாதத்திற்குரிய காரணத்தை அறிந்துகொண்டு மலைக்கு வருகிறார். ஒரு மணிச் சங்கு அடிக்கிறது.

''ஐயா, நாங்க ஒரம் போட்ட மலைக்கணக்குச் சரி தானே. பதினைஞ்சி ஆளு, பதினைஞ்சி ஏக்கர் போட்டிருக் கோம். மத்த நாலேக்கருக்கும் இன்னிக்கி எங்களால போடமுடியாது'' பெருமாள் ஆறுதலாகச் சொல்கிறான். நிரையில் நடந்துகொண்டிருக்கும் அவனது ஒரு பக்கத்

தோளில் உரமுள்ள சாக்குத் தொங்குகிறது. அதற்குள்ளிருந்த கடைசிப் பிடி உரத்தையும் கவனமாகக் கையில் அள்ளி தேயிலைத் தூரினடியில் பரவலாக வீசுகிருன்.

''இப்ப மலைக்கணக்குகள் ஏக்கரில இல்ல 'எக்ட'ரிலை தானே... இன்னும் நாலேக்கர் துண்டு போட்டாத்தான் கணக்குச் சரியாவரும்'' கண்டக்டர் சத்தமாகச் சொல்கிருர்.

''ஆமா இப்ப புதுசா வந்திருக்கிற 'எக்டர்-கிலோ' இதச் சொல்லி நம்மள நல்லா ஏய்க்கிருங்க'' —சூசை எல்லோருக்கும் கேட்கக் கூடியதாகச் சொல்கிருன்.

''இந்தா மலையில தேவையில்லாத கதையொண்ணும் வேணும். டக்டருக்கு டயர் மாத்தி உரம் மலக்கி வரச் சொணங்கினதாலதான ஒங்களுக்கு உரம்போட ஒரு மணியாச்சி. இல்லாட்டி பதினெரு மணிக்கெல்லாம் வீசிப் புட்டுப் போயிருப்பீங்களே'' கண்டக்டர் சொல்கிருர்.

''மெசினுக்குக்கூட ஒரு காலக்கெடு இருக்கு. டயர் தேஞ்சால் புதுசா மாத்தணும். நாம மனுசன்தானே. மாடா ஒழச்சி ஓடாத் தேயணுமே'' பெருமாள் ஆணித்தரமாகக் கூறுகிருன்,

''ஒம்பது பத்து மணிக்கு வந்ததுக்கு நாம பொறுப்பில்லயே. அப்படியிருந்தும் நாம சாப்பிடாம ஒரு மணிக்கி மட்டும் வேல செஞ்சி ஏக்கர முடிச்சித் தந்திருக்கோம். மேற்கொண்டு நம்மளால போடேலாது'' சிறிசேன கை களையாட்டி சத்தமாகச் சொல்கிருன்.

சின்னத்துரை மலைக்கு வந்துவிட்டார். சிரிசேன மற்றத் தொழிலாளருடன் சேர்ந்து பேசிக்கொண்டிருப்பது சின்னத் துரைக்கு கோபத்தை ஊட்டுகிறது. ரோட்டு வேலை செய்துகொண்டிருக்கும் ஆரியதாசாவுடன் சிறிசேனவை ஒப்பிட்

டுப் பார்க்கிருர். 'ஏன்தான் இவன் தோட்டத்துக் கூலி யாட்களுடன் சேர்ந்து கெட்டுத் தொலைகிருனே?'

கண்டக்டர் சின்னத் துரைக்கு ஏதோ சொல்கிருர்.

''ஒரு மணிவரை மலை முடிக்காம மசுரா புடுங்கினது?'' சின்னத் துரை தொழிலாளர்களைப் பார்த்து சத்தமாகக் கேட்கிருர்,

''தொர பேசுறது கொஞ்சம் ஒழுங்காப் பேசுங்க'' கோபத்தை அடக்கிக்கொண்டு சொல்கிருன் பெருமாள்.

''மசுர புடுங்கிக் காட்டவா?'' பசிக்களையில் சூசை தன்னைமறந்து கூறிக்கொண்டு, தேயிலை வாதுகளை ஒதுக்கிக்கொண்டு முன்னுக்கு வருகிருன். அருகில் நின்ற ஆப்தீன் அவனது கைகளைப் பிடித்து நிறுத்துகிருன். சின்னத் துரை அவற்றைக் காணுதவர்போல கண்டக்டரைப் பார்த்து, மற்ற நாலேக்கருக்கும் உரம் போடாவிட்டால் அரைப் பேர்தான் போடவேண்டுமென்று கட்டளை இடுகிருர்.

''தொர சொல்ருரு மிச்சம் நாலேக்கருக்கும் போட்டாதான் பேராம்'' என்கிருர் கண்டக்டர் தொழிலாளர்களைப் பார்த்து.

தொழிலாளர்கள் பெருமாளைப் பார்க்கிருர்கள்.

''தொர நீங்க பேர் போடாட்டி நாங்க பேசுற எடத்துல பேசி வாங்கிக்கிறம்'' பெருமாள் துரையைப் பார்த்துச் சொல்லிவிட்டு, சக தொழிலாளரைப் பார்த்துச் சொல்கிருன், ''வாங்க நாங்க ஊட்டுக்குப் போவோம்.''

முதலாளாக சிறிசேஞ மலையை விட்டு இறங்குகிருன். எல்லோரும் தங்கள் ஒற்றைத் தோளில் தொங்கிக் கொண்டிருக்கும் சாக்குகளை மாரிமுத்துக் கங்காணியிடம் ஒப்படைக்கிருர்கள். சின்னத் துரை மேலும் மலையில் நின்

ருல் ஏதாவது விபரீதம் வருமோ என்ற பயத்தில் மலேயை விட்டுப் போகிருர்.

காலே முதல் கஷ்டப்பட்டுழைத்தும் இன்றைக்கு அரைப் பேர்தான் கிடைக்கப்போகிறதென்று தொழிலாளர் பலர் குமுறுகின்றனர்.

''சின்ன தொரய கண்டதுண்டமா வெட்டினுலும் எனக்கு வந்த கோவம் அடங்கியிருக்காது, பசி வேற வவுத்தப் புடுங்குது. 'வவுரு கொதிச்சா ரெத்தமும் கொதிக்கு முன்னு' மலேயாண்டி சொல்றது சரியாத்தான் இருக்கு'' சூசை சொல்கிருன். ரேட்டு வேலே செய்துகொண்டிருந்த ஆரியதாசா, காதுகளேக் கூர்மையாக்கிக்கொண்டு சூசை சொல்வதைக் கவனமாகக் கேட்கிருன். பெருமாள் எல்லோரையும் சமாதானப்படுத்தி லயத்துக்கு அழைத்துச் செல்கிருன்.

எல்லோரும் மலேயை விட்டுப் போனதும் கண்டக்டர், மாரிமுத்துக் கங்காணி, ஆரியதாச மூவரும் கூடுகின்ருர்கள்.

''பாத்தீங்களா ஐயா, நம்ம தோட்டத்து ஆளுகளும் ஐயாமார் மாதிரி உருலோசு பாத்து வேல செய்ய ஆரம்பிச்சுட்டாங்க. நல்லபாம்பு ஆடுதுன்னு நாக்கிலிப் புளுவும் ஆடுன கதையாத்தான் இருக்கு'' மாரிமுத்துக் கங்காணி ஐயாவைப் பார்த்துக் கூறுகிருன்.

ஐயா அவசரமாக இரண்டு சாக்கு உரத்தை நாட்டுக்குக் கடத்துகிருர். குமுறிச் செல்லும் தொழிலாளர்களின் குரல் தூரத்தே தேய்ந்தொலிக்கிறது.

# (12)

வேலைக்காட்டிலிருந்து லயத்தை நோக்கி வந்து கொண்டிருந்த பெருமாளுக்கு, சிறுகுடல் பெருங்குடலை விழுங்கும் பசி. தாயின் அருமையையும், வீட்டில் ஒரு பெண் இருக்கவேண்டிய அவசியத்தையும் இப்பொழுது பெருமாள் அனுபவபூர்வமாக உணர்கிறான், இன்னும் இரண்டு மூன்று நாட்களில் சுகமடைந்து செல்லாயி வீட்டிற்கு வந்துவிடுவாள். காலையில் பெருமாள் ரொட்டி சுட்டுச் சாப்பிட்டு விட்டு வேலைக்குப் போனான். பகலுக்கு இனிப் போய் சோறாக்கிச் சாப்பிடவேண்டும். அவன் பலாமரத்து லயத்தைத் தாண்டும்பொழுது காம்பரா வாசலில் நின்று கொண்டிருந்த வேலுச்சாமி, "இங்க ஒருக்கா வந்துட்டுப் போ தம்பி" என அழைக்கிறான். வேலுச்சாமியும் பூவாயியும் இன்று வேலைக்குப் போகவில்லை. பண்டாரவளை ஆஸ்பத்திரிக்குப் போய் செல்லாயியைப் பார்த்துவிட்டு அப்பொழுதுதான் திரும்பிவந்திருக்கிறார்கள்.

"தம்பி இப்பத்தான் ஒரம் போட்டு முடிஞ்சுதா? இனி எத்தினி மணிக்குச் சோறாக்கி சாப்புடபோற. இங்க சோறு கறியெல்லாம் இருக்கு. எடுத்துப்போய் சாப்புடு" வேலுச்சாமி ஆதரவாகச் சொல்கிறான்.

"என்னத்துக்கு மாமா ஒங்களுக்குச் செரமம்."

"இதுலென்ன செரமம் எங்களுக்கு. ஒங்களுக்குன்னு வேறயா ஒண்ணும் ஆக்கித்தரப் போறதில்ல. நாங்க சாப்புடறத்தான் தரப்போறம்" என்று பூவாயி கூறிக் கொண்டே, குசினிக்குள் புகுந்து சாப்பாட்டைக் கோப்பைக்குள் போட்டுக்கொண்டு வந்து பெருமாளிடம் கொடுக்கிறாள்.

''அப்பா இவருக்கு ஏதோ சொல்லணும்னீங்களே'' எதையோ பூவாயி நினைவூட்டுகிறாள்.

''தம்பி, ஒன் மாமா கறுப்பையா மொதலாளி வந்து சந்திக்கச் சொன்னாரு'' என்கிறான் வேலுச்சாமி.

''பெருமாள், பூவாயி பொங்கிக்கொடுத்த சோற்றைச் சாப்பிட்டுவிட்டுத் தாயைப் பார்ப்பதற்காக ஆஸ்பத்திரிக் குப் போகிறான். 'கறுப்பையா முதலாளி ஏன் வரச் சொன் னார்' என்ற தவிப்பு பெருமாளைப் பலவாறு சிந்திக்க வைக் கிறது.

டவுனில் கணபதி ஸ்டோர்ஸுக்கு பெருமாள் போய்ச் சேருவதற்குச் சிறிது முன்பு அரிசிக் கிளாக்கர் கடைக்குள் போகிறார். முதலாளி அரிசிக் கிளாக்கரை மகிழ்வுடன் வரவேற்கிறார்.

''ஐயா வாங்க, இருங்க. ஐயாவுக்கு டீயா கோப்பியா, கூல்டிரிங்ஸா? பையா ஓடிப்போய் சைவக் கடையில நல்ல கப் டீயா ஒண்ணு வாங்கியா...''

''முதலாளி டவுனில டீமேக்கர் வீட்டுக் கார் இருக்கு. நா அவசரமாக போவணும்''

''போன கிழமை சாமான் அவ்வளவு சரியில்லீங்க. இந்த கிழமை எப்புடி வருதோ. இந்தாங்க இதுல நூறு ரூபா இருக்கு. அப்புறமா மீதிய எடுத்துக்கலாம்.''

''சரி மொதலாளி. நா வாறேன்.'' அரிசிக் கிளாக்கர் அவசரமாகத் திரும்புகிறார்.

பெருமாள் வந்ததை கடையில் நின்ற ஆட்கூட்டத்தில் முதலாளியோ அரிசிக் கிளாக்கரோ கவனிக்கவில்லை.

முதலாளியின் பார்வை பட பெருமாள் முன்னுக்கு வருகிறான்.

''இப்பதானு பெருமாள் வந்தது? ஆயாவுக்கு எப்புடி யிருக்கு? நா ஒரு நாத்தான் போய் பாத்தேன், அப்புறம் போவ கெடைக்கலே.''

''இப்ப தேவல மாமா...மாமா என்னே வரச்சொன்னீங் களாமே—''

''ஓ... அதுவா'' முதலாளி கடையின் பின்புறத்துக்கு அவனே அழைத்துச் செல்கிறுர்.

''இந்தா பெருமாள், வேலுச்சாமி நல்ல மனுசன். இந்தியாவுலயும் நல்ல சொத்து சொகமிருக்கு. அவருக்கு ஒன்ன மாப்பிள்ளேயா எடுத்துக்க நல்ல விருப்பம். அந்தப் புள்ளயும் பேசுறத பாத்தா, ஒன்னேயே கட்டிக்கத்தான் ஒத்தக் காலுல நிக்குரு. நீ என்னடான்னு தலேவர் வேல பாத்துக்கிட்டு ஐயாமாரோடயெல்லாம் பகையாளியா கிட்டு வாற. ஏன் ஒனக்கு இந்த வம்புதும்பெல்லாம். நாம பொழைக்கிற வழியைப் பாக்காம. நாமளும் இந்தியாவுக் குப் போறதுதான் நல்லது. சிலோன் இனியா சரிவரப் போவுது? நானும் ஒரு மாதிரியா இந்தியாவுல பிஸினஸ்ஸ தொடங்கிட்டேன். பொண்டாட்டி பிள்ளேக்குட்டியெல் லாத்தையும் கொண்டுபோய் விட்டுட்டு வந்திட்டேன். நிலுவ கொஞ்சம் இருக்கு. அதையும் பிரிச்சிக்கிட்டா நானும் போய்ச் சேந்திடுவேன். நீ இங்க இருக்கத்தானே மனுப்போட்டிருக்க. அத மாத்திக்கலாம். ஒரு போம் வேலுச்சாமிக்கிட்ட குடுத்திருக்கேன், உன்கிட்ட குடுக்க சொல்லி. அத நெரப்பிக் குடுத்தனுப்பு மிச்சத்த நா பாத் துக்கிறேன்.''

பெருமாள் ஒன்றுமே பேசவில்லே.

''என்ன விருப்பந்தானே'' முதலாளி மீண்டும் பேசு கிறுர்.

''மாமா நா யோசிச்சி அப்புறமா சொல்றேன்'' என் கிறுன் பெருமாள்.

''இதுல என்ன யோசிக்க இருக்கு. உன்நன்மைக்குத்தான் சொல்றேன். அப்பெறம் ஒன் விருப்பம்'' முதலாளி கடையின் முன் பகுதிக்கு வருகிறார். பெருமாள் பின்தொடர்ந்து வந்து ''போயிட்டு வாறேன் மாமா'' என்று சொல்லி விட்டு வெளியே வருகிறான்.

ஆஸ்பத்திரிக்குச் சென்று தாயைப் பார்த்துவிட்டு வந்து யூனியன் ஆபிசுக்குப்போய் அன்று உரம் போட்ட மலையில் நடந்த விடயங்கள் யாவற்றையும் பிரதிநிதிக்குச் சொல்லிவிட்டு தோட்டத்திற்குத் திரும்புகிறான்.

பண்டாரவளையிலிருந்து தோட்டத்திற்குத் திரும்பிய பெருமாள், யூனியனில் கூறிய ஆலோசனைகளை ஆப்தீனுக்குக் கூறுவதற்காக மாட்டுப்பட்டி லயத்தை வந்தடைகிறான். ஆப்தீன் வீட்டிலில்லையென்றும், வெலிமடைக்குப் போய்விட்டதாகவும் அவனது தங்கை சலீமா மூலமறிந்ததும் அடுத்துள்ள பொடிமெனிக்காவின் காம்பராவுக்கு வருகிறான்.

பொடிமெனிக்காவின் காம்பராவுக்குள்ளிருந்து சோமாவதியின் அழுகுரல் மட்டும் கேட்கிறது. பெருமாளின் மனம் தவிக்கிறது.

''அம்மே'' என்று அழைத்துக்கொண்டு உள்ளே நுழைகிறான் பெருமாள். சோமாவதி திடுக்கிட்டு முகத்தைத் துடைத்து தன்னைச் சுதாரித்துக்கொள்கிறாள். தன் நெஞ்சில் யாருக்குமே சொல்லாது புதைத்துவைத்திருந்ததை தன் மகன் போலப் பழகும் பெருமாளுக்குச் சொல்லத் துடிக்கிறாள் பொடிமெனிக்கா. பிரச்சினை பிரஸ்தாபிக்கப்படுகிறது. சிறிசேனவுக்கு அவன் சொந்தக்கார யாரோ கல்யாணம் பேசி வருவதாயும், சிறிசேனவின் தாயான குமாரிகாமி, சோமாவதியைத் தன் மகனுக்கு கல்யாணம் செய்துவைக்க விரும்புவதாயும், தனக்கு அதில் பூரண விருப்பம் இருப்பதாகவும், சோமாவதி தனக்கு இப்

பொழுது கல்யாணம் வேண்டாமென்று குழப்புவதாகவும் பொடிமெனிக்கா சொல்லிமுடிக்கிறுள். சோமாவதி பெருமாளின் முகத்தைப் பார்த்துக்கொண்டே இருக்கிறுள். பெருமாள் சிறிசேனுவையும் சோமாவதியையும் மணமக்களாக மனக்கண்முன் நிறுத்தி, சிறிசேனுவின் உழைப்புத் திறனையும், தங்கள் தோட்டத்தில் நடத்திவரும் போராட்டத்தில் முன்னின்று உழைக்கும் உற்சாகத்தையும், அவனது நல்ல குணவியல்புகளையும் எண்ணி மகிழ்கிறுன்.

பொடிமெனிக்கா பெருமாளுக்குத் தேநீர் போட்டுக் கொடுப்பதற்குத் தண்ணீர் எடுக்க வாளியைப் பார்க்கிறுள். அன்று சோமாவதி மலையால் வந்து வீட்டு வேலை ஒன்றும் செய்யாததால் வாளியில் தண்ணீர் இல்லை. அவளே வாளியை எடுத்துக்கொண்டு பீலிக்குப் போகிறுள். தனிமையில் விடப்பட்ட பெருமாள், சோமாவதியின் மனோநிலையை அறிய விரும்புகிறுன்.

''ஏன் சோமா, சிறிசேனு நல்ல ஒழைப்பாளிதானே நல்ல குணம் வேற. ஒன்ன நல்லா வச்சிக் காப்பாத்துவானே.''

''எனக்கு இப்ப கலியாணஞ் செஞ்சிக்க விருப்பமில்லே'' சோமாவதி சொல்கிறுள்.

''ஒனக்கு கலியாணமே வேண்டாமா?'' பெருமாள் கேட்கிறுன்.

''...............''

' என்ன சோமாவதி பேசாம இருக்குற. நீ யாரையும் மனசில நெனச்சு வச்சிருக்கியா? அப்படியேதும்னு எங்கிட்ட சொல்லு. நா அம்மேகிட்ட சொல்லி அதையே ஒழுங்குபண்ணுறேன்.''

சிறிது நேரம் யோசித்துவிட்டு சோமாவதி சொல்கிறுள்:

''அது சரிவருமோன்னுதான் எனக்கு யோசனையா யிருக்கு. அவுங்க வேற சாதி, நாங்க வேற சாதி. அம்மே ஒத்துக்குவாங்களோ என்னமோ.''

''யாரு சோமாவதி அது'' ஆச்சரியத்துடன் கேட்கிறுன் பெருமாள்.

சோமாவதி பெருமாளை மேலிருந்து கீழிறங்கப் பார்த்துவிட்டுச் சொல்கிறுள்:

''அத நா இப்ப சொல்லமாட்டேன். கலியாணங் கட்டுறதா இருந்தா அவுங்களத்தான் கட்டுவேன். இல்லாட்டி ஒடம்புல உசுரு இருக்குற மட்டும் ஒழைச்சி சாப்புடுவேன்'' சோமாவதியின் குரலில் உறுதி தொனிக்கிறது.

பெருமாள் பலவாறு யோசிக்கிறுன். 'சோமாவதி யாரை விரும்புகிறுள்? அடுத்த காம்பராவிலுள்ள ஆப்தீனுக இருக்குமோ! ஆப்தீன் அடிக்கடி சோமாவதியின் அழகைப் பற்றியும் குணத்தைப் பற்றியும் சொல்லியிருக்கிறுனே, இருவருக்கும் காதல் தொடர்பு இருக்குமோ? எவ்வளவு நாளாக இது? ஆப்தீன் இதைப்பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே!' அதற்குள் பொடி மெனிக்கா தண்ணீருடன் வந்துவிடுகிறுள். அன்று தங்களுடன்தான் பெருமாள் சாப்பிடவேண்டுமென்று பொடி மெனிக்கா பிடிவாதமாக நின்றுள். இவ்வளவு நேரமும் சமையலில் ஒத்துழையாமை இயக்கம் நடத்திய சோமாவதி, பெருமாளுக்குச் சமைப்பதற்காகப் பம்பரமாக வேலை செய்கிறுள். காலையில் சிறிசேனு நாட்டிலிருந்து கொண்டுவந்த பலாக்காயை இறைச்சிபோல ஆக்கி சாப்பாடு கொடுக்கிறுர்கள்.

பெருமாள் சாப்பிட்டுவிட்டு கைகழுவிக்கொண்டிருக்கும்போது ஆப்தீன் உள்ளே வருகிறுன். ''பெருமாள்

அந்திக்கி நீ டவுனுக்குப் போனதுக்கப்புறம் ஒரு சங்கதி நடந்து போச்சு. சூசையை பெரியாபிசுக்கு வரச்சொல்லி ஆளனுப்பி, விசாரண வச்சி காலேயில ஒரம் போடுற மலேயில வச்சி சின்னத் தொரைய அடிக்கப் போயிட்டான்னு குத்தம் சாட்டி பெரிய தொர சூசைக்கி ஒரு மாசம் வேலே நிப்பாட்டிட்டார். கண்டக்கையா, மாரி முத்துக் கங்காணி, ஆரியதாச எல்லோரும் சாக்கி சொல்லி ருக்காங்க. வேலேயுட்டுப்போற நேரம் சூசை சின்னத் தொரய கண்டதுண்டமா வெட்டுறேன்னு சொன்னுனு.''

பெருமாள் கவலேயுடன் ஆச்சரியமும் அடைகிருன்.

''இப்ப சூசை வீட்டுக்குப் போயி அவனுக்குப் புத்தியும் தெம்பும் சொல்லணும். நாளேக்கு நம்ம ஜில்லாவுக்குப் போய் இதுக்கொரு முடிவெடுக்கணும். பெருமாளும் ஆப்தீனும் பொடிமெனிக்காவின் வீட்டைவிட்டு வெளியே வருகிருர்கள். ஒரே இருள் கவிந்திருக்கிறது. எப்படிப் போவதென்று பெருமாள் யோசித்துக்கொண்டிருக்கும் பொழுது சோமாவதி பந்தம் ஒன்றை பெருமாளின் கையில் வெளிச்சமாகக்கொண்டுவந்து கொடுக்கிருள். ஆப்தீன் அந்தஒளியில் தனது காம்பராவிற்குள் செல்ல, பெருமாள் சூசையின் வீட்டை நோக்கிப் போகிருன்.

பெருமூச்சுடன் சோமாவதி வெளியே நின்று பார்த்துக்கொண்டிருக்கிருள். அவள் உருவாக்கிய பந்தத்தின் வெளிச்சம், பெருமாளின் பயணத்தைக் காட்டிக்கொண்டேயிருக்கிறது.

## ( 13 )

செல்லாயி ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்து ஒரு வாரம் ஆகிவிட்டது. நாளேக்கு வேலேக்குப் போவதாக அவள் தீர்மானித்திருக்கிருள். மலேக்குப் போகாமல் லயத்தி

லிருப்பது அவளுக்குப் பைத்தியம் போலிருக்கிறது. உழைத்த கையும் காலும் சும்மாயிருப்பதை விரும்பவில்லை. கொழுந்தெடுக்கும் மலைக்குப் போகும் பெண்களைக் காணும் போது அவளுக்கும் வேலைக்குப் போக ஆசையாக இருக்கிறது. லயத்து முகப்புக் கூரைக் கம்பியிலே தொங்கிக் காற்றிலே அசையும் கூடை அவளை, வா! வா! மலைக்குப் போவோம் என அழைப்பது போலிருக்கிறது.

அந்திப் பொழுது, ஸ்தோப்பிலிருந்து வாய் நிறைய வெற்றிலை போட்டு, சாறு கடைவாயில் வழியத்தான் சுகயீனமாயிருந்த நாட்களில் தனக்குப் பல வகையிலும் உதவி செய்தவர்களை நன்றிக் கடனுடன் நினைவு கூர்ந்து கொண்டிருக்கிறுள் செல்லாயி. தினமும் காலையில் பூவாயி வேலைக்குப் போகும் முன்பு தன்னை வந்து பார்த்துவிட்டுப் போவதையும் இன்று காலை எத்தனை தடவை வேண்டாமென்று சொல்லியும் ''அந்த நாளைக்கி நீங்க வேலைக்குப் போறிங்க தானே. இன்னிக்கு கட்டாயம் குளிக்கணும்'' என்று சொல்லி, பணிய லயத்திலிருந்து தண்ணீர் கொண்டுவந்து 'டிரம்மை' நிரப்பி, தண்ணீர் காய வைக்க ஏற்பாடு செய்ததை எண்ணிப் பார்க்கிறுள். ''இந்தப் பயணம் ரொம்ப நம்மளுக்கு ஒதவி செய்யிறுங்க அப்பனும் மவளும். போன வருசம் ரெண்டு நாள் காச்சலாக் கெடந்தப்போ ஒரு நா கூட எட்டிப்பாக்கல. பொடி மெனிக்காவும் சோமாவதியும், தான் ராவுபகலா பாத்தாங்க. இப்பவும் தூரத்து லயித்துல இருந்தாலும் தாய் சரி மவள் சரி தெனமும் வந்து பாத்துட்டுதான் போறுங்க. மேட்டு லயித்துக்கு வந்தப்புறம் அஞ்சலை நம்மளுக்கு செய்யிற ஒதவி தெனமும் நான் சாப்புட்டுட்டனுன்னு பாத்துட்டுத்தான் அது சாப்புடும்...... வேலுச்சாமி அண்ணு எப்புடியாச்சும் எங்களயும் ஈந்தியாவுக்குக் கூட்டிக்கிட்டுப் போவலான்னுதான் திட்டம் போடுறுரு. மத்தப் புள்ளங்கள உட்டுட்டு நாமமட்டும் எப்புடி ஈந்தியாவுக்குப் போறது.''

இன்று பகல் வேலுச்சாமி இந்தியாவுக்கு மனுச்செய்யும் பத்திரமொன்றைக் கொண்டுவந்து கொடுத்து யாருக்கும் தெரியாமல் கறுப்பையா முதலாளிக்குக் கொடுக்கும்படி செல்லாயிக்குச் சொல்லியிருக்கிறுன். 'பாவம் பூவாயி நெஞ்சில என்ன நெனச்சி வச்சிருக்காளோ.'

வெளியே வானத்தில் காதைப் பிளக்கும் இடி முழக்கம் கேட்கிறது. வானம் இருண்டு வருகிறது. அண்மையில் எங்கோ மழை பெய்வது போலிருக்கிறது

''ஆயா சொகமா''— செல்லாயி திரும்பிப் பார்க்கிருள். சோமாவதி தலையில் கூடை தொங்க சிரித்த முகத்துடன் வாசலில் நிற்கிருள்.

''ஆமா சோமா நாளைக்கி வேலைக்கிப் போவலாமுன்னு யோசிச்சிக்கிட்டிருக்கேன். உள்ள வா புள்ள.''

சும்மா ஒருக்கா பாத்துட்டுப் போவலாம்னுதான் வந்தேன். மழையும் வரப்போவுது. சுதுநோனுவும் பணிய நிக்குது. அது நாட்டுக்குப் போவணுமே, நா வரட்டுமா?'' மீண்டும் அந்தப் பூங்கொத்துச் சிரிப்பை உதிர்த்துவிட்டு சோமாவதி போகிருள்.

திரும்பிப் போகும் சோமாவதியைப் பார்த்துக் கொண்டு செல்லாயி மனதுக்குள் நினைக்கிருள். 'ஏன் இவ தங்கமான பொடியன் சிறிசேனுவ வேணுங்குரு. சிறிசேனுவுக்கும் வேறெங்கையோ பேசுருங்க. அதுவுங்க அம்மா சொன்னிச்சே!.'

அன்று வழக்கம் போல கொச்சிக்காய் அரைத்துக் கொடுக்க வருகிருள் அஞ்சலை. அவளது முகத்தில் கவலை கவிந்திருக்கிறது. வாயில் வடியும் வெற்றிலைச் சாற்றைத் துடைத்துக் கொண்டே செல்லாயி கேட்கிருள் ''என்ன புள்ள இன்னிக்கி ஒரு மாதிரியா இருக்க.''

அஞ்சலேக்குத் தன் கவலேயை யாருக்காவது சொன்னுல் தேவலே போலிருக்கிறது. தனது நெஞ்சில் வைத்திருந்த எல்லாவற்றையும் ஒன்றும் விடாமல் கொட்டித் தீர்க்கிருள். வீரபுத்திரன் கங்காணி தினமும் மலேயில் கரைச்சல் கொடுப்பதையும், சின்னக்கணக்கப்பிள்ளே தூதனுப்பியதையும் கூறிவிட்டு, ''அக்கா இன்னிக்கு பேர் போட்டுட்டு வர்ரப்போ கங்காணி சொன்னுன்: ''நாளேக்கி கொழுந்து ஐயாவூட்டுக்குப் பக்கத்து மலேதாஞம். ஒம்பது மணிக்கு கொழுந்து நிறுத்ததும் லீவு தாராஞம். ஐயாவூட்டுக்குப் போவணுமாம். நா ஒண்ணுமே பேசாம வந்துட்டேன்'' என்று கூறிக்கொண்டே அஞ்சலே கோவென அழுகிருள். செல்லாயி பலவித ஆறுதல் மொழிகளேச் சொல்கிருள். ''இந்த அக்குருமம் ரொம்ப நாளேக்கி நெலேக்காது. இந்த கணக்கன் புள்ளங்களுக்குப் படிக்க வசதின்னு டவுனில வூடெடுத்து சம்சாரத்தையும் அங்கவுட்டுப்புட்டு இங்கே இந்தமாதிரி அக்குரமத்த செய்கிருன்''

செல்லாயி தனது நெஞ்சில் நீண்ட நாட்களாக அஞ்சலேக்கு சொல்லவேண்டுமென்று எண்ணியதைச் சொல்வதற்கு இன்று ஒரு வாய்ப்புக்கிடைத்திருக்கிறதென நிஜனத்து அங்கு நிலவிய அமைதியைக் குலேத்துக் கொண்டு சொல்கிருள் ''அஞ்சலே பலாமரத்து லயித்து செங்கோடனே ஒனக்குக் கட்டி வைக்கலாம்னு கட்ட வெட்டிக் கெழவனுக்கு நல்ல விருப்பம். அப்படி ஒருத்தன நீ கட்டிக் கிட்டா கணக்கனல வாலாட்ட முடியுமா?''

''அக்கா நா அப்புடி செஞ்சிக்கிட்டா ஏம் புள்ளேங்ளுக்கு ஒரு நாதியும் இல்லாம போயிருமே. அதோட எல்லா ஆம்புளேங்களும் ஒங்க மகன் மாதிரி இருப்பாங்களா?''

''செங்கோடன் தங்கமான ஆம்புள. ஒன்ன ராசாத்தியாட்டம் வச்சிக் காப்பாத்துவான்.''

அப்பொழுது அங்கு நடைபெற்ற உரையாடலின் கடைசிப் பகுதியைக் கேட்டுக்கொண்டே பெருமாள் காம்

பராவிற்குள் நுழைகிறுன். 'எல்லா ஆம்பளேங்களும் ஒங்க மகன் மாதிரி இருபாங்களா?' என்று அஞ்சலே கூறியது பெருமாளுக்குக் கருத்துத் தெளிவற்று காதுகளில் ஒலித்துக்கொண்டே யிருக்கிறது.

அஞ்சலே சேலேத்தலேப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டே அரைப்பதற்கு வேண்டியவற்றை எடுத்துக் கொண்டு தனது காம்பராவுக்குப் போகிறுள்.

பெருமாள் தாயைப் பார்த்துக் கேட்கிறுன்.

''என்னுயா நாளேக்கி வேலேக்கிப் போறியா? மொதத் தேதியிலருந்து போவலாந்தானே.''

''நடந்தா நாடெல்லாம் ஒறவு; படுத்தா பாயும் பகையாம்'' இந்தப் பதிலே எத்தனே தடவை செல்லாயி சொல்லி விட்டாள். அவள் தொடர்கிறுள். ''நா ஆசுப்பத்திரியில இருக்கப்போ ஒஞ் சின்னக்கா, இந்த மாசத்துக்குள்ள ஒம் பெரியமச்சான பசுமலேக்கு வரச் சொல்லிப்புட்டுப் போயிருக்கு. அதுக்கப்புறம் நம்ம ஊட்டுக்கு அவங்க ஒரு நாளேக்கி வந்து பருசம் போடுறதுக்கு ஒரு நாள குறிச்சிட்டுப் போவாங்களாம். நாளேக்கி ஒம் பெரிய மச்சான் போவுதுன்னு மலேயாண்டி வந்து சொல்லிட்டுப் போருன்.''

'ஆயா சின்னதொர போற போக்கை பாத்தா சுருக்கா ஒரு ஸ்ட்ரைக் வரும் போலதெரியுது. அதுக்குள்ள நீ வேறு கலியாணம் கலியாணமுன்னு என்னுசுர வாங்குற.''

''ஒந் தலவரு வேலக்கும் கலியாணத்துக்கும் என்னடா? ஒம் மச்சான் பொயிட்டு வந்ததும் சொணங்காம பாக்குமாத்திட்டு அடுத்த மாசமே கலியாணத்தை முடிச்சிடணும்.''

வானத்தில் இடிமுழக்கம் பயங்கர ஒலியாகக் கேட்டுக் கொண்டே யிருக்கிறது.

# (14)

காலையில் ஆரம்பித்த மழை அந்தியாகியும் ஓய்ந்த பாடில்லை.

''பெருமாள்'' பலத்த சத்தத்துடன் கூப்பிட்டுக் கொண்டே ஆப்தீன் பெருமாளின் காம்பிராவுக்குள் நுழைகிறான்.

''வா ஆப்தீன் வா'' என்று மலர்ந்த முகத்துடன் வரவேற்று நாற்காலியில் உட்காரவைக்கிறான் பெருமாள்.

''சூசையிண்ட சங்கதியா ஜில்லாவுல என்ன சொன்னுங்க?'' ஆப்தீன் உட்கார்ந்து கொண்டே கேட்கிறான்.

''நம்ம பெரிய தொரைக்கி சூசைய வேலை நிற்பாட்டுனது தவறுன்னு மொதல்ல கடிதம் போடுருக்காங்க — அப்புறம் தொரைக்கி நம்ம தோட்டத்துப் பிரச்சினையெல்லாம் காட்டி ஒரு ''கொன்வரன்ஸ்'' வச்சி கலந்து பேசணும்னு கேட்டிருக்காங்க. இது பத்தி லேபர் ஆபிசுக்கும் அறிவிச்சிருக்காங்க.''

ஆப்தீன் எதையோ யோசிக்கிறான். அவனது முகம் சிறு பிரச்சினையென்றாலும் காட்டிக் கொடுத்துவிடும்.

''என்ன ஆப்தீன் இன்னிக்கு ஒரு மாதிரியா இருக்க'' பெருமாள் கேட்கிறான்.

''நம்ம நாணு இருக்காரே வெலிமடயில பெரிய முதலாளி......''

''ஆமா அவருக்கென்ன நடந்திருச்சி'' பெருமாள் ஆவலுடன் கேட்கிறான்.

''அவருக்கொண்ணும் நடக்கல. என்னைத்தான் ஏச்சிப் புட்டாரு. நா தோட்டத்துல பேரு பதிஞ்சு வேலை செய் யுறதுக்கு மொதல்ல அவரு கடையிலதான் வேல செஞ் சேன்தானே, அப்ப எனக்கு சாப்பாடு மட்டுந்தானே கொடுத்தாரு. சம்பளம் கொடுக்கல. மொத்தமா அப் பொறந் தாரேன்னுதானே சொல்லியிருந்தாரு, இப்ப கேட்டா, 'ஒனக்கு எல்லாம் செலவு செஞ்சாச்சி. பெரு நாள் எல்லாத்துக்கும் சல்லி குடுத்து' அப்புடீன்னு சொல்லிப்புட்டாரு.''

''பெரிய முதலாளிமாரே அப்புடித்தான். கறுப் பையா முதலாளியால எங்க குடும்பத்துக்கு ஒரு பிரயோச னமுமில்ல. சில்வா முதலாளியப்பாரு. அவரு கூட பொறந்த தங்கச்சி நம்மோட லயத்துல கெடந்து கஷ் டப்படுறுங்க. அவங்கள்ளாம் பணத்துல புரளுறுங்க'' என் கிறுன் பெருமாள்.

''ஒனக்கொரு சங்கதி தெரியுமா? நீ சில்வா முதலா ளின்னு சொன்ன வொடனதான் எனக்கு ஞாபகம் வருது. இன்னிக்கி அந்தியில சோமாவதிய பொண்ணு கேட்டு ஆரியபாலா பொடிமெனிக்கா ஊட்டுக்கு வந்தான்'' என் கிறுன் ஆப்தீன்.

''யாரு மாப்பிள்ள'' வியப்புடன் கேட்கிறுன் பெரு மாள்.

''சில்வா மொதலாளியோட கடசி மகேன் வீரக் கோன்.''

''ஐயோ அவன் இப்ப ரொம்ப கெட்டுப் போயிட் டானே. ஒலகத்துல உள்ள கெட்ட குணமெல்லா அவன் கிட்ட இருக்கு. அவன் அப்பனே அவன ஒதுக்கி வச்சிட் டான். அவுங்க தோட்டத்த அரசாங்கம் எடுத்தப்போ அம்பதேக்கர் இவனுக்கு கெடச்சிருச்சி. அத வச்சிக்கிட்டு காலத்த ஓட்டுறுன்.''

''பொடிமெனிக்காவுக்குப் பிரியம் போல தெரியுது. நம்ம உம்மா கிட்ட சொல்லிக்கிட்டிருந்திச்சி. எப்புடியும் ரத்தபாசம் இருக்கத்தானே செய்யும்'' ஆப்தீன் குரல் கர கரப்பது தெரிகிறது.

''சிறிசேனவுக்குப் பெண்கேட்டு வரும்போது, சோமா வதி தனக்கு அப்பொழுது கல்யாணம் வேண்டாம் என்ப தற்கு பெருமாளிடம் கூறிய காரணத்தை அவன் அசை போடுகிறான். அவள் தான் விரும்புவது வேறு ஜாதிக்கா ரன் என்று சொன்னாளே. அவன் யார் என்பதை தாய்க் குச் சொல்வதற்கு ஏன் தயங்குகிறாள். உண்மையைச் சொன்னால் ஏதாவது ஒழுங்கு செய்ய முயலலாமே.''

''சோமாவதி சிறிசேனவ கலியாணம் செய்துக்கலாமே. அவள ராசாத்தி போல பாத்துக்குவானே'' பெருமாள் சொல்லிக்கொண்டே ஆப்தீனைக் கூர்மையாகப் பார்க்கி றான். ஆப்தீன் முகம் இன்று வாடியிருப்பதற்கு இதுதான் காரணமோ என பெருமாள் நினைக்கிறான்.

''சோமாவதிக்கு இந்தக் கலியாணத்தில விருப்பமா?'' பெருமாள் தொடர்ந்து கேட்கிறான்.

''எப்புடின்னு தெரியல பெருமாள். ஆனா அவ மூஞ்சி சரியில்ல. பாவம் கஷ்டப்படுகிற குடும்பம் நல்லாருக்க ஆண்டவன் துணை செய்யணும்'' ஆப்தீன் பெருமூச்சுடன் கூறுகிறான்.

''சரி, சரி ஏங்கிட்ட சோமாவதி ஒளிக்கமாட்டா. நா வெவரமா கேட்டுக்கறேன்'' பெருமாள் கூறுகிறான்.

வானமிடிந்து கூரையில் விழுவது போல இடி முழங்க மழையும் சோவெனப் பொழிகிறது

''பெருமாள் தம்பி மழையிரைச்சலை மீறிக்கொண்டு பலத்த குரலொன்று வெளியே கேட்கிறது. பெருமாள் வெளிக்கதவை திறந்து பார்க்கிறான்.

''ஆரு பணியக்கணக்கு பிச்சையண்ணனு என்னண்ணே இந்த நேரத்துல.''

ஒரு கையில பந்தமும் மறுகையில் மருந்துப்போத்தலுமாகப் பிச்சை உள்ளே வருகிறான்.

''ஒங்க மச்சானுக்கு மருந்தெடுக்கத்தான் வந்தேன். வேலவுட்டு வந்த நேரத்துல இருந்து மனுசன் ஒரு வவுத்து வலின்னு பொரண்டுக்கிட்டு இருக்கான். நா அடுத்த காம்புராவுல இருந்துக்கிட்டு இப்புடி கஷ்டத்துல ஒதவாட்டி என்ன புரோசனம்'' தலைக்குப் போட்டிருந்த ரெட்டைக் கழற்றி, சுவரிலே தொங்கவிட்டு பந்தத்தை அணைத்துக் கொண்டு, பக்கத்திலிருக்கும் பெருமாளுக்கு வெகு தூரத்திலிருப்பவனுக்குச் சொல்வது போல பெருங் குரலில் சொல்கிறான், பீக்கர் என்றபெயரெடுத்த பிச்சை. அவன் மேலுந் தொடர்கிறான்.

''தம்பி, ஒங்கமச்சான் உந்தக் கள்ளுக்குடிய வுடுறுப்புல இல்ல. 'அவனவுட்டு இந்த வயித்துவலியும் போறுப்புல இல்ல. 'வவுத்துவலி காத்தமுத்து'ன்னு நம்ம தோட்டத்துப் பசங்க சரியாத்தான் வச்சிருக்காங்க'' என்று கூறிக் கொண்டே குசினிப் பக்கம் போகிறான்.

பிச்சை கூறிய செய்தி கேட்டு, 'நாளைக்குப் பசுமலைக் குப் போகும் பயணம் கெட்டு விட்டதே' யென்று செல்லாயி இடி விழுந்தவள் போல கவலைப்படுகிறாள்.

''அத்தையென்ன குசினிக்குள்ள கூத காயிறீங்களா? தேத்தண்ணி கொஞ்சம் ஊத்துங்க, ஒரே கூதலாயிருக்கு. ஒங்க மருமகனூட்டு வேலையால நா அலஞ்சிக்கிட்டு இருக் கேன்'' பீக்கர் பிச்சை செல்லாயி கொடுத்த சாயத்தண் ணியைக் குடித்துக் கொண்டே பெருமாளும் ஆப்தீனும் பேசிக்கொண்டிருக்கும் முன்காம்பராவுக்கு வருகிறான். பணியக்கணக்குப் பிச்சை, 'பீக்கர்' மட்டுமல்ல செய்தி களைச் சேகரிப்பதிலும் பரப்புவதிலும் வல்லவன்.

''தம்பி ஒங்களுக்கு ஒரு சங்கதி தெரியுமா? 'நம்ம பெரியாதொர' மாசக் கடைசில மாறிப் போருரு, நம்ம சின்னதொரகிட்ட தோட்டத்தைப் பாரம் குடுத்திட்டு போவாரு போலருக்கு. அப்புறம் கொஞ்சநாளைக்கு புறகு தங்கமலைத் தோட்டத்துப் பெரியதொர நம்ம தோட்டத்துக்கு வருவாரு போலருக்கு. இப்புடியொரு 'கம்பளிநியூஸ்' போவுது.''

''ஆமாண்ணே, நம்ம தோட்டத்துல 'கம்பளிநியூஸ்' சரியாத்தான் வரும்'' ஆப்தீன் கூறுகிருன்.

தோட்டத்தொழிலாளரிடம் பரவிவரும் செய்திகளையே 'கம்பளிநியூஸ்' என்பார்கள். நதிமூலம் ரிஷிமூலம் போல இதன் ஆரம்பமும் சுவராஸியமானதாக இருக்கும்.

''பெரிய பங்களா தோட்டக்காரன் போனமாசம் எனக்குச் சொல்லிவிட்டான். தொரசாணி மரக்கறி போடுறதிலருந்து தெரியுது தொர வெரசா மாறப் ''போருருன்னு'' என்கிருன் பிச்சை.

பிச்சை சொல்வதில் உண்மையிருக்கு மென்பதை பெருமாள் நம்புகிருன். பிச்சை காலையில் பணியக்கணக்குப் பிரட்டுத் துண்டையும் டயறியையும் பெரியாபீசுக்குக் கொண்டு போவான். பின்பு பணியக்கணக்கு பிள்ளைகளை மேற்கணக்கிலுள்ள பள்ளிக்கூடத்திற்குக் கூட்டிக்கொண்டு வந்து விட்டுவிட்டு பணியக்கணக்கு ஆட்களுக்கு மருந்தெடுத்து கொண்டுபோய்க் கொடுப்பான். இதனுல் தோட்டத்துச் செய்திகளைச் சேகரிக்கும் வாய்ப்புகள் அதிகந்தான்.

''தொரமாரு மாறுறதால நம்ம பிரச்சினையை இழுத்தடிக்கப் போகிருங்க'' ஆப்தீன் கவலையுடன் கூறுகிருன்.

''நாம ஒத்துமையா இருந்து போராட்டத்தை விடக் கூடாது'' பெருமாள் உறுதியுடன் கூறுகிருன்.

''தம்பி தங்கமலையிலிருந்து வார தொர ரொம்ப தங்க மானவராம். நம்ம சித்தப்பா மகன் ஒருத்தன் அந்தத் தோட்டத்துல இருக்கான். அவரு சாமி தொரயாம். கூலி யாக்களுக்கு ரொம்ப ஒதவி செய்வாராம்'' என்கிருன் பிச்சை.

''சாமியோ ஆசாமியோ நாம உடுக்கடிச்சாத்தான் சாமி வரும்'' பெருமாள் சிரித்துக்கொண்டே சொல்கிருன்.

ஆப்தீனும் பிச்சையும் பெருமாளின் காம்பராவை விட்டுப் போகிருர்கள். 'நாளைக்கு காத்தமுத்து தலவாக் கொல்லை பசுமலைக்குப் போகமாட்டானே. பெருமாளின் கல்யாணம் ஏன்தான் இப்படி தடங்கலாகிதோ என எண்ணி குசினிக்குள்ளிருந்து மனம் வருந்திக் கொண்டிருந்த செல்லாயி, ஆப்தீன் சோமாவதியின் கல்யாணப் பேச்சைப் பற்றிக் கூறியவற்றைத் தெளிவு படுத்திக் கொள்ள மகனி ருக்கும் காம்பராவுக்கு வந்து அவனுடன் பேச்சுக் கொடுக் கிருன்.

ஏன்டா பெருமாளு சோமாவதி அந்த மொதலாளி மவன கட்டிக்கிட்டா என்ன? ஆத்தாடி அவங்ககிட்ட எம் புட்டு சொத்திருக்கு.''

'துரைமார் மாறுவதால் எப்படியெல்லாம் தமது போராட்டம் பாதிக்கப்படும்; தோட்டத்தைப் பற்றியும், அவர்களது பிரச்சினை பற்றியும் புதுத்துரை அறிந்து கொள்ள எவ்வளவு நாட்கள் செல்லப் போகிறதோ' என ஏக்க சிந்தனையுடனிருந்த பெருமாளுக்கு செல்லாயியின் பேச்சு எரிச்சலைக் கொடுக்கிறது.

''ஒனக்கு மத்தவங்கவூட்டு கதை என்னத்துக்கு வெறும் வாய்க்கி அவல் கெடைச்சமாதிரி ஒரு கதைய கேட்டா போதும்.''

''ஏன்டா சோமாவதி ஊராவூட்டு புள்ளமாதிரியா? நாம தாய்புள்ள மாதிரித்தான் இருக்கோம்.''

வானத்தில் மின்னலும் முழக்கமும் போட்டி போடுகின்றன. மாட்டுப்பட்டி லயத்துப் பக்கமாக பலமான இடி முழக்கத்திற்கு அறிகுறிபோல் கண்களைப் பறிக்கும் மின்னலொன்று தெரிகிறது.

## (15)

விடிந்தும் விடியாத காலைப் பொழுது. பெருமாள் பணியக்கணக்கை நோக்கி விரைந்து செல்கிறான்.

அவனுக்கு பணியக்கணக்கிலிருக்கும் பொட்டுவின் குடும்பத்தைப் பற்றி என்றுமே கவலைதான். ஒன்றன் பின் ஒன்றாக எத்தனை கஷ்டங்கள்? உடலைவருத்தி உழைப்பதைக் குடியில் செலவு செய்து உடம்பையும் கெடுத்துப் பொறுப்பற்ற விதத்தில் வாழ்க்கை நடத்துகிறான் அவளைக் கைப்பிடித்த காத்தமுத்து. காத்தமுத்துவைப் போன்று தோட்டத்தில் எத்தனையோ ஆட்களிருக்கிறார்கள். கடின உழைப்பால் ஏற்படும் உடல் வலியைப் போக்க குடிக்கத் தொடங்கி, கடைசியில் உடலையும் கெடுத்து, குடும்பத்தையும் குட்டிச்சுவராக்கி, பெற்ற பிள்ளைகளுக்கு வேண்டிய உணவு, உடை கல்வி வசதிகளைச் சீராகச் செய்து கொடுக்காது, அவர்களது எதிர்காலத்தை பாழடிக்கும் எத்தனையோ காத்தமுத்துக்களுக்காக கவலைப் படுகிறான் பெருமாள்.

பொட்டுவின் குடும்பத்தின் தற்போதைய நிலையை எண்ணிப்பார்க்க, பெருமாளுக்குப் பெருமூச்சு வருகிறது. மூன்று வருடத்துக்கு இரண்டு குழந்தைகள் வீதம் பெற்றெடுத்த பொட்டு, இப்பெழுதும் வயிற்றுப் பிள்ளைக்காறி. மலையாண்டி உழைக்கத் தொடங்கிய பின்பு வைத்திய

ஆலோசனைப்படி சத்துள்ள உணவுகளை வாங்கிக் கொடுப்பதால் பஞ்சக் காலத்தில் பிறந்த சின்னப்பாப்பா உயிர் பிழைத்து வருகிறது.

இன்று காத்தமுத்துவை பதுளைக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. விடியுமுன் மலையாண்டி பெருமாளைத் தேடிவந்து, காத்தமுத்துவுக்கு இம்முறை வயிற்றுவலி மிகவும் மோசமாக இருப்பதாகவும், பதுளை பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போகச் சொல்லி டாக்டர் துண்டு கொடுத்து விட்டதாகவும் சொல்லிவிட்டு சென்றான்.

பணியக்கணக்கு ஆத்துலயத்தை பெருமாள் வந்தடைகிறான் காத்தமுத்து தாங்கமுடியாத வயிற்றுவலியால் துடித்துக் கொண்டிருக்கிறான். பொட்டு தலையில் கையை வைத்துக் கொண்டு அவனருகில் உட்கார்ந்து கொண்டிருக்கிருள். குழந்தைகள் காம்பராவில் சாக்கிலும் நிலத்திலும் ஒன்றன் மேல் ஒன்று கால்களைப் போட்டுக்கொண்டு பிறந்து கண்விழிக்கு முன்கிடக்கும் நாய்க்குட்டிகள் போல சுருண்டு கிடக்கின்றன. காத்தமுத்துவின் தகப்பன் கவலையே உருவாக அந்த ஸ்தோப்பு மூலையிலே அடங்கிக் கிடக்கிறான். முன்பெல்லாம் பெருமாளின் குரலைக்கேட்டதும் அவன் கலகலப்பாக பேசுவான். பெரட்டுத்தப்பு அடிப்பது பெரிய கங்காணி லயம் லயமாகச் சென்று வேலைக்குத் துரத்துவது, போன்ற பழைய காலத்துச் சங்கதிகளை சுவாரஸியமாகச் சொல்லுவான். வெள்ளைக்காரத் துரைமார்களின் வீரப்பிரதாபங்கள் தொட்டு மாரியம்மன் கோயில் கட்டியது, கரத்தை ரோட்டு வெட்டியது போன்ற தன் உழைப்பால் உருவாகியவைகளைப் பெருமையுடன் சொல்வான். இப்பொழுது மலையாண்டி தோட்டத்தில் பேர் பதிந்து வேலை செய்யத் தொடங்கியதும் ஏதாவது வலிந்து கேட்டால் பதில் மட்டும் சொல்கிறான்.

மலையாண்டி லொறியுடன் வருகிறான். அவனும் பெருமாளும் காத்தமுத்துவை பதுளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்கிறார்கள்.

பதுளை ஆஸ்பத்திரியில் காத்தமுத்துவைச் சேர்த்து விட்டு திரும்பிய பெருமாள், பண்டாரவளையில் இறங்கி யூனியன் ஆபிசுக்குப் போகிறுன். பிரதிநிதி பெருமாளை முகமலர வரவேற்கிறுர். பெருமாளுக்கு எப்போதும் அங்கு தனிமதிப்பு. அவன் யூனியன் விடயங்களில் காட்டும் அக் கறையும், எல்லாவற்றையும் காலம் தாழ்த்தாது கவனித்து வருவதையும், பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதிலிருக்குந் திறனும் பிரதிநிதிக்குப் பெருமாளிடம் ஒருவித விருப் பத்தை ஏற்படுத்தியுள்ளது.

''வாங்க பெருமாள், ஒக்காருங்க. ஒங்கத் தோட்டத் துரை இன்னிக்குத் தான் காயிதம் போட்டிருக்கிறுர். தீர விசாரணை செஞ்சிதான் சூசைக்கு வேலை நிறுத்தி இருக் காம் மற்றப் பிரச்சினைகளைப் பேச துரைக்கு நேரமில்லை யாம், மாறிப் போறுராம்.''

''அப்ப அடுத்த நடவடிக்க என்னங்க?''

''பெருமாள் ஸ்டிரைக்தான் போடவேண்டி வரும். பிரச்சினைகளை விவரமாக மத்திய கமிட்டிக்கு எழுதியிருக் கேன். நாளை கழிச்சி வாங்க. வெவரமா சொல்றேன்.''

பெருமாள் யூனியன் ஆபிஸைவிட்டு வீடு திரும்பிவரும் போது வழியெல்லாம் வேலை நிறுத்தம் பற்றியே சிந்தித் துக்கொண்டு வந்தான். தோட்டத்தில் வேலை நிறுத்த மொன்றை யேற்படுத்தி வெற்றிகரமாய் முடிப்பதென் பது சுலபமான வேலையல்ல. சங்கத்தின் ஒற்றுமைக்குச் சவாலாக இது அமையலாம். வேலை நிறுத்தம் முடிய எத் தனை நாட்கள் செல்லுமோ! தொழிலாளர் பலவிதங்களி லும் பாதிக்கப்படலாம், ஆனுல் வேறு வழியில்லையே! சம ரசப் பேச்சிற்கும் துரை இணங்குகிறுர் இல்லையே! 'சிவ பூசையில் கரடி பூந்த மாதிரி ஆயா இதுக்குள்ள கலியாண ஏற்பாட்ட வேற செஞ்சுக்கிட்டிருக்கு. பெரியமச்சான் ஆசு பத்திரிக்குப் போனதால காரியம் தடைப்பட்டுப்போனது ரொம்ப நல்லதாப் போச்சி.

பெருமாள் தனது லயத்துக் காம்பரா வாசலுக்கருகில் வரும் பொழுது உள்ளே புதிய குரல்கள் கேட்கின்றன.

பசுமலையிலிருந்து சம்பந்தி வீட்டுக்காரர் வந்திருக்கிறார்கள். ''வாங்க மாப்புள்ள'' என்று பசுமலைப் பெண் மரகதத்தின் தாய் மாமன் பெருமாளை வரவேற்கிறார். மரகதத்தின் பெரியண்ணனும் கூட வந்திருக்கிறான் குசலம் விசாரித்த பின் விடயத்துக்கு வருகிறார்கள்.

''எப்புடி இந்த மாசம் சம்பளம் போட்டு பன்னெண்டாந் தேதி வாக்குல பருசம் போடணும். நம்ம தோட்டத்துல இந்த மாசம் எட்டாந்தேதியே சம்பளம். ஒம்பதாந் தேதி காமங் கூத்து வருது. அது முடிஞ்சொடன பாக்கு மாத்துறத வச்சிக்கலாம். அடுத்த மாசம் எப்புடியும் கலியாணத்த முடிச்சுடனும்'' பெண்ணின் தாய்மாமன் பெருமாளுக்குச் சொல்கிறார். பெருமாளுக்கு அவர் சொல்வது பேரிடியாய் இருக்கிறது. தோட்டத்துப் பிரச்சினைகளுக்கு ஒரு முடிவு காணும்வரை சங்க நடவடிக்கைகளில் தனது நேரத்தையும் முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டும். இது பெரிய தலைவலியாக இருக்கிறது. பெருமாள் குசினியை எட்டிப் பார்க்கிறான். அஞ்சலையும் செல்லாயியும் விருந்தினர்க்குச் சமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பசுமலையிலிருந்து வந்த விருந்தினர் 'தண்ணித்தாகத்தால்' தவிக்கின்றனர். பெருமாள் குடிவகைகளைத் தொட்டுமே பார்ப்பதில்லை என்பதைக் கேட்டதும் அவர்கள் வியப்படைந்து விட்டார்கள். ஸ்டோர் லயத்துக்கு அழைத்துச் சென்று அவர்களுக்குத் 'தாகசாந்தி' செய்து வைக்கிறான் பெருமாள்.

புதிய உற்சாகமடைந்த சம்பந்திமார் பலதும் பேசினர். பசுமலைத் தோட்டத்துச் சங்கதிகளைப் பெண்ணின் அண்ணன் அழகாகக் கூறுகிறான்.

''நேத்து கவ்வாத்துக் காட்டுல பெரிய 'பைபோஸ்' எங்கிட்ட வேலே படிச்ச 'சுப்பர்வைசர்' ஏன் வேலயில குத்தம் கண்டு புடிக்கிருன். இவுங்க எல்லாத்தையும் ஒரு தொங்கலருந்து தொலேச்சி கட்டணும். அரசாங்கம் தோட்டத்தயெல்லாம் எடுத்தப்புறம் தொரமாரும் வேலக் காட்டுக்கு சரியா வாரதில்லே. அவுங்கவுங்க சம்பாரிக்கத் தான் பாக்குருங்க'' என்று ஆரம்பித்து அந்தத் தோட் டத்தில் நடைபெற்று வரும் ஊழல்களேயும் தங்களது லயத் துக் காம்பராவுக்கு அடுத்த காம்பராவிலுள்ள ஓர் இளே ஞன் சமீபத்தில் தலேவராகத் தெரிவு செய்யப்பட்டிருப் பதையும், இப்பொழுது எல்லோரும் விழிப்பாயிருப்பதா யும் சாங்கோ பாங்கமாய் சொல்லி முடிக்கிருன்.

பெண்ணின் தாய் மாமன் சொல்கிருர்: ''சிலோன் இனி சரிவராது. வெள்ளக்காரஞேட எல்லாம் போயிரிச்சி. நாம ஈந்தியாவுக்குப் போறதுதான் நல்லது. நா ஈந்தியா வுக்குப் போவ எழுதியிருக்கேன். இவுங்க மடையனுப் போனுங்க. நம்ம ஜாதிக்காரங்க எல்லாம் போய்ச் சேர்த் துட்டாங்க பாரு தம்பி...... எங்க தோட்டத்து தலேவரா வந்திருக்க பயலோட அப்பன் வாசல்கூட்டி வேல செஞ் சான். காலமும் மாறிப் போச்சு. நாம ஒதுங்குறதுதான் நல்லது''

''ஜாதி பாத்துப் பாத்துத்தான் நாம இந்த நிலேயில இருக்கம். மனுசனுக்குள்ள மனுசத்தன்மை உள்ளவன் தான் நல்லசாதி. மத்தவுங்கள்ளாம். கீழ் ஜாதி'' பெரு மாள் அழுத்தமாகக் கூறுகிருன்.

''ஜாதி இல்லேங்குறத நா ஒத்துக்க மாட்டேன் தம்பி. கீழ் ஜாதிக்காரன் ஒறவும் போயிலேக்காம்பு ஒரமும் செவத் தில ஒட்டின சுண்ணும்பும் சரிங்குறது சரியான பேச்சு''

சமையலே முடித்துவிட்டு செல்லாயி வெளியேவந்து சொல்கிருள்.

''ஏன் சும்மா இருக்கீங்க. பூசாரி பூவுலிங்கத்தூட்டுக் குப் போயி, பருசம் போட நீங்க எடுத்த நாளு நல்ல தான்னு பாத்துட்டு வாங்க''

பெருமாள் விருப்பமின்றி விருந்தினரின் முன் தாய் சொல்லைத் தட்ட முடியாமல், அவர்களை பூசாரி பூவலிங்கத் தின் லயத்திற்கு அழைத்துச் செல்கிறுன்.

எங்கோ ஒரு லயத்தில் உடுக்கடிக்கும் சத்தம் காற் றிலே தவழ்ந்து வருகிறது.

பூசாரி பூவலிங்கத்தைத் தேடிவந்த பெருமாளும் பசு மலைத் தோட்டத்து விருந்தினரும் பலா மரத்து லயத்தை நோக்கி வருகிறுர்கள். வேலுச்சாமி வீட்டில்தான் சாமி பார்க்கிறுர்கள் என்பதை அறிந்ததும் பெருமாளுக்குப் பெருவியப்பாக இருக்கிறது. வேலுச்சாமியின் அடுத்த காம் பராவில் உள்ள செங்கோடனைச் சந்தித்த பெருமாள் பூவாயிக்கு இரண்டு நாட்களாகச் சுகமில்லை எனவும் அவ ளுக்குத் திடீரெனப் பேச்சுமூச்சு இல்லாம போவதாக வும், அடிக்கடி பல்லுக்கடித்து கொட்டாவி எடுப்பதாகவும் கேள்விப்பட்டதும் மனக்கவலையடைகிறுன்.

பூசாரி பூவலிங்கம் தான் சாமிபார்க்கிறுன். விபூதி பிடித்தல், புனிக்கயிறு கட்டுதல், சாமிபார்த்தல், பேயோட் டுதல், பில்லி சூனியம் எடுத்தல், நூல் கட்டுதல், மை பார்த்தல் இவற்ருல் பூசாரி பூவலிங்கத்தின் புகழ் இந்தத் தோட்டத்தில் மட்டுமன்றி அடுத்த தோட்டங்களிலும் பரவியிருக்கிறது.

பெருமாள் வேலுச்சாமியின் காம்பராவின் ஸ்தோப்பு வாசலில் நின்று உள்ளே பார்க்கிறுன். நெற்றியிலே பள பளக்கும் திருநீற்றுப் பூச்சு, சேட் அணியாத வெறும் மேனி, கையிலே உடுக்கு, கழுத்திலே உருத்திராட்ச மாலை ஆகிய தோற்றங்களுடன் பூசாரி பூவலிங்கம் சாக்கு விரித்து உட் காந்திருக்கிறுன். அவன் முன் விபூதிப்பொட்டலம், சூடம்,

வெற்றிலே, பாக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. சாம்பிராணி புகைகிறது. பிரம்பு குறுக்கே கிடக்கிறது. பேயோட்டும் சாட்டை, முத்துராசன் மாலே, முத்துக்கொட்டை இவைகள் பரப்பிக்கிடக்கின்றன. பூசாரி எங்கு போனுலும் பக்க உதவிக்கு அழைத்துச் செல்லும் ஐஸ் அய்யாச்சாமி பூசாரிக்கருகில் உட்கார்ந்திருக்கின்ருன்.

பூசாரிக்கு மாடன் அருள் வந்து கேள்வி சொல்கிருன்:-

''இது புதினம் பஞ்சாயம் விளங்கிச்சா நேச மக்காள்
முச்சந்தி ரோட்டு — முனிமரத்து அடிவாரம்.
தங்காள் தனித்து வருகையிலே தாங்கி வந்தாள் ஒரு அசூசை.
எதிர்ப்பட்ட உதிரக்காளி தொட்டாளே.
மங்கைக் கன்னிக்கு மயக்கம் வந்ததடா
அப்பா......! அப்பா......!!
தங்காளுக்கு திங்கிற தீனி ஒடலுல ஒட்டாது.
நேரத்துக்கு ஒரு பேச்சு
தூக்கத்தில் கன்னி துடித்தெழுவாள்
ஒரு நேரம் இருக்கும் சொகம் ஒரு நேரம் இருக்காது''

உடுக்கொலி நிற்கிறது. பூசாரி ஓய்வெடுப்பதற்காக, மாடன் பின்பு வருவதாகப் போய்விட்டான். உள்ளே உரையாடல் கேட்கிறது. ஐஸ் அய்யாச்சாமியின் குரல் கம்பீரமாக ஒலிக்கிறது.

''வேலுச்சாமியண்ணே, எப்புடிங்க மாடன் சரியாத் தானே சொன்னிச்சி''

''ஆமா அய்யாசாமி உண்மைதானுங்க. நானும் பூவாயியும் போன ஞாயித்துக் கெழமை டவுனுக்குப் போயிட்டு வந்தோம். பகல் பன்னெண்டு மணி போல மூனுரோட்டுச்

சந்தியில பஸ்ஸ்ல வந்து எறங்கினோம். ஒரு ருத்த ஆட்டெறைச்சியும் வாங்கியந்தோம். அதையும் பூவாயிதான் கொண்டாந்திச்சி."

"பாத்தீங்களா எச்சிப்பேய் அண்டியிருக்கு. மூணு ரோட்டுச் சந்தியிலே ஒரு காளிப்பாச்சல் இருக்குங்க. அந்தச் சோடை பட்டால் போதும் லேசுப்பட்ட காளியில் லீங்க. அது உதுரக்காளி. அந்த மலேயில தானுங்க செங்கோடன் சம்சாரம் மாரியாயிய வவுத்துப் புள்ளயா இருந்தப்போ அண்டி உசுரையே குடிச்சிரிச்சி"

சிறிது நேரம் உரையாடலை வெளியில் நின்று கேட்டு விட்டு உள்ளே போகிறான் பெருமாள். அவனைக் கண்டதும் ஐஸ் அய்யாச்சாமி திடுக்கிடுகிறான். பூசாரி ஒரு மாதிரி விழிக்கிறான். வேலுச்சாமி வீட்டில் இன்று யாருமே பெருமாளை வரவேற்கவில்லை. பூவாயி மூலேயிலே ஒரு சாக்கில் தலைவிரிகோலமாய் உட்கார்ந்திருக்கிறாள். அவளைப் பார்த்ததும் பெருமாளுக்கு நெஞ்சம் பகீரென்றது. துடிப்புடன் துள்ளிக் குதிப்பவள் சோர்ந்திருக்கிறாள். வெண்கலக்குரலில் சதா கிண்டல் செய்பவள் பேசா மடந்தையாக இருக்கிறாள். பெருமாளுக்கு ஒன்றுமே பேச நா வரவில்லை. "போயிட்டு வாரேன்" என்று எல்லோருக்கும் பொதுவில் சொல்லி விட்டு பெருமூச்சுடன் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வெளியே வருகிறான்.

தோட்டங்களில் வியாதி ஏற்பட்டு விட்டால் சாமி பார்ப்பது ஒரு சாதாரண வழக்கமாக இருப்பதையும், இதனால் எத்தனேயோ உயிர்கள் அநியாயமாய்ப் பிரிந்ததையும் எண்ணி அவன் மனவேதனை அடைகிறான். அஞ்சலையின் கணவனுக்கு இரண்டு மூன்று நாட்களாக உடுக்கடித்து சாமி பார்க்காது, உடனே ஆஸ்பத்திரியில் சேர்த்திருந்தால் உயிர் பிழைத்திருக்கலாம். "நரம்புத்தளர்ச்சியால் ஏற்படும் நோய்களைப் பொறுத்தளவில் சில சாதக

விளைவுகளை ஏற்படுத்தினலும் மற்ற நோய்களைப் பொறுத்தளவில் கோடங்கி, பார்ப்பது கொலைக் குற்றத்தைப் போன்றது'' என்ற கருத்துப்பட என்றே ஒருநாள் மலையாண்டி சொன்னதைப் பெருமாள் நினைத்துப் பார்க்கிறான். பூசாரி பூவலிங்கம் மாடசாமி அருளில் சொன்னவற்றை எண்ணிப் பார்க்கும் போது பெருமாளுக்கு வேதனையிலும் சிரிப்பு வருகிறது. போன ஞாயிற்றுக்கிழமை வேலுச்சாமியும் பூவாயியும் பண்டாரவளை போய்த்திரும்பிய பஸ்ஸில் பெருமாளும் யூனியனுக்குப் போய் வந்தான். பூசாரி பூவலிங்கமும் எங்கோ போய் அதே பஸ்ஸில் வந்திறங்கினன். பூவாயி பஸ்ஸுக்குள்ளும், பஸ்ஸிலிருந்து இறங்கி சந்தியிலும் வாந்தி எடுத்ததையும், கையில் பார்சலுடன் வந்ததையும் கவனித்திருக்கிறான்.

பூவாயியின் வாடிய முகமே மீண்டும் பெருமாளின் மணக்கண் முன் வருகிறது. அவளுக்கு எப்படி நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டிருக்கும்? இந்தியாவில் சொந்த ஊரில் மாஸ்டர் வேலை செய்து கொண்டிருந்த மாமன் மகளை மாப்பிள்ளையாய் வரிந்து மனக்கோட்டை கட்டியிருந்த நாளில், அவன் வேறு யாரையோ மணந்து விட்டான் என்று கேள்விப்பட்ட பொழுதுங்கூட அவள் மனமுடையவில்லை. இன்று என்னதான் நடந்தது? பெருமாளுக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது.

நிம்மதியற்ற நிலையுடன் செங்கோடனது காம்பராவிற்குள் நுழைகிறன் பெருமாள். உடுக்கின் ஒலி நாரசமாக அவன் காதுகளில் கேட்டுக் கொண்டேயிருக்கிறது.

## (16)

பூவாயி தலைவிரி கோலமாக இருக்கிறள். சாம்பிராணிப் புகை மூட்டம் எங்கும் படர்கிறது. அந்த மூட்டத்தினுள்ளே கல்யாணக் காட்சி தெரிகிறது.

காலம் எவ்வளவோ விரைவாகச் சென்றுவிட்டது. தலவாக்கொல்லை பசுமலைத் தோட்டத்திலே பரிசம்போட்டு விட்டு வந்து, ஒரு வாரம் போய்விட்டது. இன்று பெருமாளுக்குக் கல்யாணம் தலைவர் வீட்டுக் கல்யாணம் அல்லவா! தடல்புடலாக நடக்கிறது.

மணப்பந்தலில் பெருமாள் பூணூல் போட்டு கங்கணம் கட்டி மாப்பிள்ளையாக உட்கார்ந்திருக்கிறான். பசுமலையி லிருந்து வந்து மணப்பெண் மரகதத்தை அழகா உடுத்தி அழைத்து வருகிறார்கள். பெருமாள் அருகில் அவள் நாணிக் கோணியவளாய் உட்காருகிறாள். ஓம சாந்தி உமிழும் புகை மூட்டத்துள் மரகதத்தின் முகம் தெளிவாகத் தெரியவில்லை.

கொட்டுமேளம் ஒலிக்கிறது 'டும் டும் டும் டும்'' பெரு மாள் மரகதத்துக்குத் தாலி கட்டுகிறான்.

'டுக்கு டுக்கு டுக்கு' மூட்டம் விலகுகிறது. உடுக்கின் ஒலி மிகத் தெளிவாகக் ஒலிக்கிறது. பூவாயி, பெருமாளை மணக்கோலத்திற் காணும் மாயத் தோற்றம் மறைகிறது, இந்த உலகுக்கு மீண்டும் அவள் வந்துவிடுகிறாள். பூசாரி மாடனை அழைக்கிறான்.

நேற்று முன்தினம் சாமி பார்த்தபின் பூசாரி பூவாயி யிக்கு நூல் கட்டினான். அதற்கு வேண்டிய பொருள்கள் யாவற்றையும் 'சாராயம் முதல் சேவல்வரை' வேலுச் சாமி தேடிக்கொடுத்தான். நேற்றிரவு பூவாயிக்கு தாயத் துக் கட்டிமுடிய நடுச்சாமத்துக்கு மேலாகிவிட்டது. உடற் சோர்வடைந்த பூவாயி, விடியும்வரை தூங்கிவிட்டாள். வேலுச்சாமி பூவாயியை விட்டு உதிரக்காளி நீங்கிவிட்டா ளென மகிழ்ச்சியடைந்தான். இன்று விடிய மீண்டும் அவள் பல்லுக்கடித்து கொட்டாவி விட்டாள். இரவு கட்டிய தாயத்தை அறுத்து வீசினாள். பூசாரி அவளுக்குப் பேய் பிடித்துவிட்டதென்று இன்றிரவு பேயோட்டுவதற்கு வந் திருக்கிறான். தேசிக்காய், நவதானியம், முட்டை, நவ

ஜாதிப் பூக்கள் இவற்றுடன் காவு கொடுக்க சேவலுடன் ஒரு போத்தல் சாராயமும் வேலுச்சாமி ஆயத்தமாகவைத்திருக்கிறான். பூசாரியின் உச்சாடணம் உச்சக்கட்டத்தை அடைகிறது.

பூவாயி தன்னை மறந்து தலைவிரிகோலத்தில் ஆடுகிறாள். அவள் கண்முன் கல்யாணக் காட்சி தொடர்கிறது.

பெருமாளும் மரகதமும் ஊர்வலமாக மாரியம்மன் கோவிலை வந்தடைகின்றனர். தோட்டத்துச் சனமே ஜே ஜே யென்று ஊர்வலத்தில் சூழ்கின்றனர். உடுக்கின் ஒலி ஓசை குன்றாது ஒலிக்கிறது. பூவாயி பற்களைக் கடித்து உறுமுகிறாள். மாடன் பேசுகிறான்: ''நீ யாரப்பா?''

பூவாயிக்கு போன வாரம் இதே லயத்தின் தொங்கற் காம்பராவில் முருகாயிக்குப் பேயோட்டியதை நேரில் பார்த்த அந்தக் காட்சி இப்பொழுது தெளிவற்ற மன நிலையில் உயிர் பெறுகின்றது.

பூவாயி ஆடிக்கொண்டே சொல்கிறாள். ''நா புள்ளக்காரியா செத்த மாரியாயி'' அவளது மயிர்க் கற்றையில் ஒரு முடிச்சுப் போடுகிறான் பூசாரி. பூவாயி தொடர்கிறாள்: ''நா.... நெருப்புப்புடிச்சி செத்த ஏழுமலைக் கங்காணியோட பேத்தியடா.'' பூசாரி இன்னுமொரு முடிச்சுப் போடுகிறான். பூசாரிக்கு ஒரே மகிழ்ச்சி, பூவாயியைப் பிடித்த பேய் தான் யாரென்பதைச் சொல்லிவிட்டதே! உடுக்கின் ஒலி உயர உயர மாடன் பல கதைகளைச் சொல்கிறான். பூவாயிக்கு மனதிலே மாயத் தோற்றம் நீழ்கிறது. கல்யாண வீட்டில் மொய் பிடிக்கிறார்கள். ''கட்டை வெட்டி அண்ணாமலை அஞ்சி ரூபா, ஏழுமலைக்கங்காணி அடைக்கலம் ரெண்டு ரூபா, வேலுச்சாமி......'' ''ஐயோ என்னை ஆதரிக்க ஒருத்தரும் இல்லையே'' பூவாயி பெருஞ் சத்தமாகக் கத்துகிறாள்; பூசாரி மாடனாகப் பேசுகிறான்; ''ஆதரிக்க ஒருத்தரும் இல்லேன்னுதானே இந்தக் கன்னியை

நீ தொட்டுருக்க. நான் உனக்குத் தரவேண்டியதைத் தாறே நீ போறியா?'' பூசாரி உடுக்கொலியினிடையே அவளுக்கு ஏதோ சொல்கிறன். அவள் பூசாரி சொன்னதை அப்படியே திருப்பிச் சத்தமாகச் சொல்கிறள்.

''காட்டுப் பீலித் தொங்க கொக்கட்டி மரத்துக்கு, அங்க என்னைக் கொண்டுபோடா.''

பூசாரி எழுந்து வெளியே வருகிறன், பூவாயி பின் தொடர்கிறள்.

அவள் நெஞ்சில் அந்தக் காட்சி மீண்டும் வளர்கிறது. கழுத்தில் மாலை தொங்க கம்பீரமான தோற்றத்துடன் பெருமாள், கழுத்திலே தாலி தொங்கும் மரகதத்தைக் கைபிடித்துக்கொண்டு மேட்டு லயத்துக்கு ஓடி வருகிறன்,

பூவாயியும் பூசாரி குழுவினரும் காட்டுப் பீலித் தொங்கலிலுள்ள கொக்கட்டி மரத்தடிக்கு வந்துவிட்டார்கள். பூவாயியின் தலையை அந்த மரத்தில் சாய வைத்து, மந்திர உச்சாடனஞ் செய்து, முடிச்சுப்போட்ட மயிர்க்கற்றையை மரத்தில் வைத்து ஆணி அறைந்துவிட்டு மயிரை வெட்டுகிறன்.

பூவாயியின் மனப்பிரமை நீள்கிறது. பெருமாள் நடுவழியில் மரகதத்துடன் விடும் சேட்டைகள், லயத்துக் காம்பராவுக்குள் வந்ததும் அதற்குள் மாப்பிள்ளையையும் பெண்ணையும் விட்டு கதவைப் பூட்டிவிடுகிறர்கள்.

பூவாயி மயக்கமுற்று விழுகிறள். பூசாரி அந்த இடத்தில் மூன்று கோடுகளைப் போட்டுவிட்டு, ''மாடனுக்கு ஒரு பட்சி வேணும். சீயா வேணும்'' என ஆடிக்கொண்டே சொல்கிறன்- சேவலும் சாராயப் போத்தலும் காவு கொடுப்பதற்காகக் கொடுக்கப்படுகிறது. அவன் சேவலைக் கடித்து இரத்தத்தை வடியவிட்டு அதனை ஐஸ் அய்யாச்

சாமியின் கையில் கொடுத்துவிட்டு, சாராயத்தை வாங்கி அரைப்போத்தலுக்குமேல் குடித்துவிடுகிறுன்.

பின்பு பூவாயியை வீட்டுக்கு அழைத்துவந்து குளிப் பாட்டி மாரியம்மனே அழைத்துவிட நடுச்சாமத்துக்கு மேலாகிவிடுகிறது.

* * *

விடியு முன்னே வேலுச்சாமி விழித்துவிட்டான். நேற் றிரவு ஏற்பட்ட உடற் சோர்வால் பூவாயி தூங்கிக்கொண் டிருக்கிறுள். 'மூனு நாளா வேலேக்கிப் போவலேயே. இன் னிக்காவது போவணும்' என்ற அவசரத்துடன் பிரட்டை நோக்கிப் போகிறுன். அவன் போகும் வழியில் பெரு மாள் வேலுச்சாமியைத் தேடி பலாமரத்துலயத்தை நோக்கி வருகிறுன்.

"மாமா பூவாயிக்கு எப்படியிருக்குது. நேத்துத்தான் எங்க மச்சானுக்கு பதுள ஆசுப்பத்திரியில ஆப்பரேசன். அதுக்குப் போயிட்டு வந்தேன்"

"ஏதோ நம்ம புல்லுமலே மாரியாத்தா புண்ணியத் துல இப்ப தேவலாம். நேத்து ராத்திரி பூசாரி பேயோட்டி ஞரு. செத்துப்போன மாரியாயும் ஏழுமலேயோட பேத் தியும் பிடிச்சிருந்திச்சி."

"பூவாயிக்குத் தேவலாம்" என்றதைக் கேட்டதும் பெருமாளின் மனம் அமைதியடைகிறது. இருவரும் பிரட் டுக் களத்தை நோக்கிப் போகிறுர்கள். மாரியாயும் ஏழு மலேயின் பேத்தியும் பேயுருவில் இருப்பதாக பலாமரத்து லயத்தில் போன வாரம் முருகாயிக்குப் பேயோட்டிய சங் கதியைப் பற்றி மலேயாண்டி கூறியதைப் பெருமாள் எண் ணிப் பார்க்கிறுன்.

'வவுத்துப் புள்ளேயோட செத்துப்போன மாரியாயும் ஏழுமலேயோட பேத்தியும் தோட்டத்து ஆளுகளே வதைக்

கக் கூடாது. தோட்ட நிருவாகத்தயில்ல வதைக்கணும்' நம்மதோட்டத்துக்குன்னு ஒரு ஆயம்மா இருந்திருந்தா மாரியாயி தப்பியிருக்கலாம். வீடுவசதியிருந்திருந்தா அந்த புள்ளைக்கும் நெருப்பு புடிச்சிருக்காது' பெருமாள் தோட்டத்து மக்களின் மூடநம்பிக்கைகளை எண்ணிப் பெருமூச்சு விட்டபடி பிரட்டுக் களத்தை அடைகிறுன்.

* * *

பிரட்டால் வீட்டுக்கு வந்து, அவசரமாக ரொட்டியைச் சாப்பிட்டுவிட்டு, பெருமாள் மலையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறுன்.

வேலுச்சாமியின் காம்பரா வாசலில் கொழுந்தெடுக்கும் ஆட்கள் குழுமியிருப்பதைப் பார்த்துவிட்டு பெருமாள் அங்கு போகிறுன். அவனைக் கண்டதும் வேலுச்சாமி அழாக்குறையாகச் சொல்கிறுன்:

''தம்பி பெரட்டுல வந்த நா பூவாயிய உசுப்பாம நானே ரொட்டிசுட்டுக்கிட்டிருந்தேன்.கொஞ்சத்துல அதுதானுவே எழுந்திரிச்சி அடுப்புக்கிட்ட வந்திச்சி. பலவக் கட்டையில கொஞ்ச நேரம் இருந்து ஏதோ யோசிச்சிட்டு திடுதிப்பின்னு பல்லக் கடிச்சிக்கிட்டு எழும்பி வந்திரிச்சி. அதுக்குப் பழையபடி வந்திரிச்சி தம்பி. நா யாருக்கு என்ன அநியாயம் செஞ்சேன். ஆண்டவன் என்ன ஏன்தான் இப்புடி சோதிக்கிருனோ!''

பெருமாள் மனவேதனையுடன் உட்காம்பராவுக்குள் இருந்த பூவாயியைப் போய்ப் பார்க்கிறுன். பெருமாளைக் கண்டதும் அவள் முகத்தை மறுபக்கம் திருப்புகிறுள். அவனின் வேதனை இரட்டிப்பாகிறது.

''பெருமாள் அஞ்சிநிமிசம் சொணங்கினலும் வேலை கொடுக்கமாட்டாங்க... வாபோவோம்'' ஆப்தீன் அவசர

மாக அழைக்க, பெருமாள் பெருமூச்சுடன் வேலுச்சாமியின் காம்பரானவை விட்டுச் செல்கிறான்.

பூவாயியின் விக்கலும் விசும்பலும் வேதனை ஒலியாகப் பிரதிபலித்து பெருமாளைத் தொடர்கிறது.

## (17)

அன்று அந்திக்கு கொழுந்து நிறுத்துப் பேர் போட்டுவிட்டு மடுவத்தைவிட்டு வெளியே வரும் செல்லாயியிடம் தபாற்காரத் தங்கையா ஒரு கடிதத்தைக் கொடுக்கிறான். கடிதத்தை வாங்கிக்கொண்டு லயத்தை நோக்கி அவசரமாக வந்துகொண்டிருக்கிறாள் செல்லாயி. இருட்டுவதற்கு முன்பு எப்படியும் பூவாயியைப் பார்க்கவேண்டும் என்ற அவசரம். முன்னரே பேர் போட்டுவிட்டு வந்த அஞ்சலையை மேட்டு லயத்துத் தொங்கலிலேயே செல்லாயி சந்தித்து கையிலுள்ள கடிதத்தை நீட்டி கேட்கிறாள் "புள்ளஇந்தக் கடுதாசி எங்கிருந்து வந்துருக்குன்னு பாரு." "தலவாக்கொல்லையிலிருந்து வந்திருக்கு அக்கா" என்கிறாள் அஞ்சலை. செல்லாயி ஆவலுடன் அஞ்சலையைக் கடிதத்தைப் பிரித்துப் படிக்கும்படி கேட்கிறாள்.

பெருமாளின் கல்யாணத்தை விரைவில் முடிக்கவேண்டுமென்று அவசரப்படுத்தி சம்பந்திகள் ஏதாவது எழுதியிருப்பார்களென செல்லாயியும் அஞ்சலையும் நினைக்கிறார்கள். அஞ்சலையின் கைகள் ஏனோ நடுங்குகின்றன. கடிதத்தைப் படிக்கிறாள்.

"அன்பும் பன்பும் நிரைந்த ஆயாவும் தம்பியும் அரிவது" எனக் கடிதம் ஆரம்பித்திருந்தது. பலதரப்பட்ட இலக்கணப் பிழைகள் மலிந்திருந்தாலும் தனது கருத்தை

தெளிவாகவும் ஆணித்தரமாகவும் எழுதியிருந்தாள் செல் லாயியின் சின்ன மகள்.

''இங்க ஒரு சங்கதி நடந்திரிச்சி. பெருமாளுக்குக் கட்டி வைக்க ஆசையாயிருந்த ஏங் கொழுந்தியா காமங் கூத் தன்னிக்கி எங்க தோட்டத் தலவரோட ஓடிப்போயிட்டா. அவுங்க ஜாதி ஒங்களுக்குத் தெரியுந்தானே. ஏவூட்டுகாரரு ரொம்பக் கவலயா ஆத்திரமாயிருக்காரு. அவுங்க ரெண்டு பேரு கண்ணுலயும் முழிக்கப்படாதுன்னு இருக்காரு. சின் னக் கொழுந்தனும் அத்தையும் அவுங்கள சேத்துக்கிட்டா என்னுங்குறுங்க. இந்தத் தேவடியா இப்புடிச் செய்வான்னு நாங்க நெனேக்கவேயில்ல. நம்ம பெருமாளுக்கு நல்லா லெக்காப்பாத்து சொணங்காம கலியாணத்த செஞ்சி வச்சிடணும்.''

அஞ்சலேயின் குரல் கரகரத்து ஒலிக்கிறது. செல்லாயி இடிவிழுந்தவள்போல் உட்கார்ந்திருக்கிருள். காற்று நிறைந்த பலூனென்று திடீரென்று வெடித்தால் ஏற்படும் வெற்றிடம்போன்ற உணர்வு அஞ்சலேக்கு ஒரு கணம் ஏற் படுகிறது. மறுகணம் பெருமாள் இன்னும் ஒரு பெண்ணுக்கு உரியவனுகவில்லே என்பதால் ஏதோ ஒரு மனச்சாந்தி ஏற் படுவதுபோன்ற உணர்வு தோன்றுகிறது. செல்லாயி தனது வேதனேயைச் சொல்லில் வடிக்கிருள். ''அஞ்சலே இந்தக் கட்டை போய்ச் சேரமுந்தி ஏ மகனூட்டுக் கண்ணுலத்த கண்டுகளிக்கக்கூட மாரியாத்தா மனமெரங்குறு இல்லியே.''

அஞ்சலே எதையோ யோசித்துக்கொண்டு தனது காம் பராவை நோக்கிப் போகிருள். செல்லாயி அவசரமாக தண்ணீர் சுடவைக்கிருள். சாயத்தண்ணியைக் குடித்து விட்டு, பூவாயியைப் போய்ப் பார்க்கவேண்டுமென்பதால் சுறுசுறுப்பாக இயங்குகிருள்.

'பூவாயி நல்ல தங்கமான பொண்ணு. நம்ம பெரு மாளுக்குக் கட்டி வைச்சிருக்கலாம். வேலுச்சாமி அண்ண னுக்கு பெருமாளே மாப்பிள்ளேயா எடுத்திட ரொம்ப விருப்

பந்தான். பாவம் பூவாயி...... இப்ப இவளுக்கு என்ன புடிச்சிருக்கு? பூசாரி சாமி பாத்து, நூல் கட்டி பேயோட்டி ஒண்ணுக்கும் சரிவரலியாம். யாரோ சூனியம் வச்சிருக்கு றுங்களாம். இன்னிக்குத்தான் அதயும் எடுக்கப் போறுங்க.'

''செல்லாயி என்ன ரொம்ப யோசிச்சிக்கிட்டிருக்கே'' என்று கேட்டுக்கொண்டே காம்பராவுக்குள் புகுந்த பொடி மெனிக்கா குசினிக்குள் வருகிறுள். செல்லாயி பலகைக் கட்டை எடுத்துக் கொடுக்க உட்காருகிறுள்.

''எங்க மெனிக்கா பொறப்பட்ட இந்த நேரம்?''செல் லாயி கேட்கிறுள்.

''நம்ம தோட்டத்துப் பவுண்டரத்துக்கிட்ட இருக் காளே எஸ்லின் அவலூட்டு மவ கொமரி புள்ள கோசா மருந்து குடிச்சி செத்துப்போச்சாம். அதான் அங்க போறேன்.''

''ஆமாமா மலேயிலயும் சொல்லிக்கிட்டாங்க. அந்தப் புள்ள ஏன் மருந்து குடிச்சிச்சாம்?'' செல்லாயி கேட்கிறுள்.

''இந்தக் காலத்துப் புள்ளங்கள எப்புடி நம்புறது. நம்ம சோமாவதியும் என் அண்ணன் மவன கட்டிக்க மாட்டாளாம். அவன கட்டிவச்சா நஞ்சி குடிச்சி சாகு றேன் அப்புடிங்கிறு'' பொடி மெனிக்கா குரலில் கவலே தொனிக்கச் சொல்கிறுள்.

''காலங் கெட்டுப்போச்சி மெனிக்கா. பெருமாளுக் குப் பேசுனமே பசுமலே தோட்டத்துல ஒரு பொண்ணு. அவ யாரோ ஒருத்தேைட ஓடிப் போயிட்டாளாம்''என்று சொல்லிக்கொண்டே வெற்றிலே எடுப்பதற்காக காம்ப ராவிற்குள் போகிறுள் செல்லாயி.

அடுப்பினுள்ள நீர் கொதித்துச் சத்தமிட, வெற்றிலே எடுக்கப்போன செல்லாயி திரும்புமுன் தேநீர் போட ஆயத்தமாகிறுள் பொடி மெனிக்கா.

# ( 18 )

ஒரு வாரமாகப் பெருமாளைச் சந்திக்காத மலையாண்டிக்கு ஏதோ போலிருக்கிறது. காத்தமுத்து ஆஸ்பத்திரியால் வீட்டுக்கு வந்து இன்றோடு ஐந்து நாட்களாகிவிட்டன. மலையாண்டியின் சிந்தனை பலவாறு செல்கிறது. 'பெருமாளுக்கு தோட்டத்தில் ஏதாவது கரைச்சலோ? செல்லாயிக்கு ஏதாவது சுகவீனமோ! பசுமலைக் கல்யாணம் சரிவராததால் பெருமாளின் மனம் சஞ்சலமடைந்துவிட்டதோ! பூவாயியின் உடல்நிலை பற்றி அன்று பெருமாள் சொல்லி மனவருத்தப்பட்டானே, இப்பொழுது அவள் உடல்நிலை எப்படியோ!'

இன்று வேலையால் வந்தவுடன் பொட்டுவும் மேற்கணக்குக்குப் போய்வரும்படி மலையாண்டிக்குச் சொன்னாள்.

அவன் மேற்கணக்கை நோக்கி வருகிறான். இந்த ஒரு வாரத்திற்குள் தோட்டத்தில் எத்தனையோ மாற்றங்கள் நடந்துவிட்டன. பெரிய துரை இத் தோட்டத்தைவிட்டு வேறொரு பெரிய 'குரூப்' மனேஜராகப் போய்விட்டார். சின்னத் துரையே இப்பொழுது மூன்று கணக்குக்கும் முழுப் பொறுப்பாளியாகிவிட்டார். சின்னத் துரையின் நிர்வாகச் சீர்கேட்டினாலும் அதிகாரத் துஷ்பிரயோகத்தாலும் தோட்டத்தில் கொடுமைகள் மலிந்துவிட்டன. பணியக் கணக்குத் தலைவரைக் கைக்குள் போட்டுக்கொண்டார், ஆனால் நேற்று நடந்த சங்கத் தேர்தலில் பழைய தலைவர் தோற்கடிக்கப்பட்டு, துடிப்பும் தீவிரமும் உள்ள ஒருவன் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறான். மலையாண்டி காரியதரிசியாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறான்.

''என்ன மச்சான், பணியக்கணக்குப் பக்கம் வந்து ஏழெட்டு நாளாச்சே' கலியாணஞ் சரிவரல்லன்னு தம்பிக்கு

நெஞ்சுக்கு வருத்தமோ என்னமோ'ன்னு ஒன் அக்கா அங்க பொலம்பிக்கிட்டிருக்காங்க'' என்று சொல்லிக்கொண்டே பெருமாளின் லயத்துக் காம்பராவிற்குள்ளே நுழைகிறான் மலையாண்டி. அங்கே சூசையும் இருக்கிறான்.

''ஓய் இந்தக் கலியாணம் சரிவராமப் போனதுல எனக்கு எம்புட்டு சந்தோசம் தெரியுமா? பருசம்போட மொதல்ல வச்சமே ஒரு தேதி அன்னிக்கி தான் நம்ம மேல் கணக்குல ஸ்ட்ரைக் அடிக்கப்போறோம்''என்கிறான் பெருமாள்.

அவனுக்கு அருகிலிருந்த சூசை சொல்கிறான்: ''இன்னிக்கு தேதி ஒம்பது. நாளைக்குச் சம்பளம். அப்புறம் ஒரு நாள்தான் இருக்கு நம்ம ஸ்ட்ரைக்குக்கு. அண்ணே! எல்லா ஆளுங்களையும் லயம் லயமாப் போயி சந்திச்சிட்டு வாரேனிங்களே! எல்லா லயமும் சுத்திட்டீங்களா?''

''இன்னும் ரெண்டு லயந்தான் பாக்கியிருக்கு. பெலா மரத்து லயமும், மாட்டுப்பட்டி லயமும். எங்கணக்குப்படி இருவத்திரெண்டு ஆளுங்கதான் வேலக்கி போவாங்க. விருந்தாடி வேலு என்ன செஞ்சிருக்கான் தெரியுமா? ரெண்டு பக்கமும் நல்ல பேரு எடுக்குறதுக்கா ஆள் தோட்டத்துல இல்லாம அவ மச்சானூட்டுக்கு குடும்பத்தோட விருந்தாடி போயிட்டான்'' பெருமாள் சொல்ல எல்லோரும் சிரிக்கிறார்கள்.

''ஒரு கெழமைக்குள்ள தொர நடவடிக்கை எடுக்காட்டா மத்த டிவிஷன் ஆளுங்களும் ஸ்ட்ரைக் இருக்க வேண்டி வருந்தானே'' சூசை கேட்கிறான்.

''பணியக்கணக்குல இப்பவும் சரிதான். அங்க ஸ்ட்ரைக்குன்னு ஒருத்தரும் வேலைக்குப் போகமாட்டான். சின்னத் தொர வூட்டு 'பாச்சா' வொண்ணும் நம்ம டிவி

சன்ல பலிக்காது. நடுக்கணக்குத்தான் எப்புடியோ தெரியல'' என்கிறுன் மலையாண்டி.

''அந்த டிவிசனில நம்ம கட்சிக்குப் பாக்க மத்த கட்சியிலதான் ஆளுங்க கூட: நேத்து நம்ம கட்சித் தலவர சந்திச்சேன். மத்தக் கட்சித் தலவர நேத்து பங்களாவுக்கு கூப்பிட்டு சின்ன தொரையும் நம்ம கண்டக்கையாவும் ரொம்ப நேரம் பேசிக்கிட்டிருந்தாங்களாம். என்ன திட்டம் போட்டாங்களோ தெரியல'' என்கிறுன் பெருமாள்.

''ஆமா இதைப்பத்தி மொதல்லேயே ஒங்கிட்ட சொல்ல நெனேச்சேன். ஸ்ட்ரைக்க கொழப்புறதுக்கு தொர ஒரு வேல செஞ்சாலும் செய்வாரு. நடுக்கணக்குல மத்தக் கட்சிக்காறங்கல வரச்சொல்லி இங்க வேலே கொடுப்பாங்க. இதனுல நாம தொழிலாளிங்க ஒருத்தரோட ஒருத்தர் மோதிக்கிடவேண்டியதுதான்'' என்கிறுன் மலையாண்டி.

''நம்ம ஸ்ட்ரைக்க கொழப்புறதுக்கு அங்கிருந்து இங்க யாராச்சும் வேலக்கு வந்தா நாம சும்மா இருப்பமா? அடிச்சி நொறிக்குப்புட்டுத்தான் மறுவேல பாப்போம்'' சூசை கோபத்தோடு சொல்கிறுன்.

''அப்புடி ஒரு திட்டம் போடுறுங்க போலதான் தெரியுது. எதுக்கும் நாம ரொம்ப ஜாக்கிரதயா இருக்கணும்'' பெருமாள் சொல்கிறுன்.

''ரெண்டு டிவிசன் ஆளுங்களேயும் மோதிக்கவுட்டு தொரமாரு அவுங்கவூட்டுக் குத்தங்கள மறைச்சிட்டு நம்ம மேல குத்தங்கள சுமத்தி போராட்டத்த முறியடிச்சி, பொலிசக் கூப்பிட்டு அவுங்களுக்குப் பிடிக்காத ஆளுங்களுக்கு அடியும் ஒதையும் குடுப்பாங்க'' என்று சொல்கிறுன் மலேயாண்டி.

இதனேக் கேட்டதும் பெருமாளின் சிந்தனே விரிவடைகிறது. ''எதுக்கும் நாம ஒத்துமையாவும் ஜாக்கிரதையா

கவும் இருந்தாத்தான் வெத்தி எடுக்கலாம். மத்த டிவிசன் தலைவர் மாரோடேயும் இது பத்தி இன்னிக்குப் பேசணும். ஜில்லாப் பிரதிநிதிகிட்டேயும் ஆலோசனை கேட்டுக்குவோம்.''

''வேல நிறுத்தத்துக்கான கோரிக்கைகள் என்னென்னெண்ணு தொரைக்கு எழுதியிருக்கீங்க?'' ஆவலுடன் கேட்கிறுன் மலையாண்டி.

பெருமாள் 'சேட்' பையிலிருந்த கோரிக்கைகள் அடங்கிய துண்டை எடுத்து வாசிக்கிறுன்.

''சூசைக்கு மீண்டும் வேலை கொடுத்து நிறுத்திய நாட்களுக்குச் சம்பளமும் கொடுக்கவேண்டும்;

தொழிற்சங்க நடவடிக்கைகளை ஒழிக்க நிருவாகம் முறையற்ற வழிகளைக் கையாள்வது நிறுத்தப்படவேண்டும்;

பங்கீட்டுப் பொருட்களை மாலை ஐந்து மணிக்குமுன் கொடுத்து முடிப்பதுடன், பொருட்களின் நிறை குறைவாக இருப்பதாக தொழிலாளர் இட்டுள்ள முறைப்பாட்டை நிருவாகம் பரிசிலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஒவ்வொரு தொழிலாளியும் வேலை செய்த நாட்களைக் குறிக்கும் 'போர்டு' தொழிலாளர் பார்வைக்குத் தொங்க விடப்படல் வேண்டும்;

பிள்ளை மடுவம், பழுதடைந்த லயன்கள் திருத்திக் கொடுப்பதுடன் தண்ணீர் வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

மருத்துவ வசதிகள் நோயாளிகட்கு போக்குவரத்து வசதிகள் இவை காலதாமதமின்றிக் கவனிக்கப்படல் வேண்டும்.

தோட்டத்திற்கென தனியே ஒரு மருத்துவ மாது அவசியம் வேண்டும்;

தற்காலிகத் தொழிலாளரை நிரந்தரத் தொழிலாளர் ஆக்கவேண்டும்;

தாயகம் திரும்புவோருக்குச் சட்டப்படியான பாக்கிகளைக் கொடுத்து, அவர்கள் இந்தியா செல்வதற்கான ஏற்பாட்டில் தோட்டத்தின் பங்கிலுள்ள ஊழல்களை ஒழிக்க வேண்டும்.''

''நாம தெனமும் ஜாக்கிரதையாத்தான் இருக்க வேண்டியிருக்கு. நம்ம ஜனங்க இப்பவும் கம்பனிக்காலமென்னுதான் நெனச்சிட்டிருக்காங்க. அந்தக் காலத்துல தொரமார் வச்சதுதான் சட்டம். இப்ப காலம் எவ்வளவோ மாறிடிச்சின்னு ரொம்பப் பேருக்குப் புரியுதில்ல. நம்ம வேலைய நாம கரெக்டா செஞ்சிட்டா ஆருக்கும் ஏன் பயப்படணும்'' சூசை சொல்கிறான்.

''ஒலகம் எப்புடியெல்லாம் மாறியிருக்கு. நாம மட்டுந்தான் இன்னும் அடிமைகளா இருக்கோம். தென்னாபிரிக்காவிலுள்ள வைரச் சுரங்கத் தொழிலாளரைவிட நாம மோசமா எல்லாத்துலயும் புறக்கணிக்கப்பட்டு வாறம். இன்னிய பேப்பரில இருந்திச்சு தோட்டத்துல பிரசவித்த பெண்களின் இறப்பு வீதமும், ஒரு வயசுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு வீதமும் கூடலாம்'' மலையாண்டி கவலையுடன் சொல்கிறான்.

''நம்ம தோட்டத்துல இது இன்னும் கூடவாத்தான் இருக்கும்'' சூசை உடன் பதில் சொல்லிவிட்டுத் தொடர்கிறான். ''அண்ணே; நா ஒண்ணு சொல்ல மறந்துட்டேன். சிறிசேன அந்திக்கு என்னைச் சந்திச்சான். அவன் காலயில பெரட்டுல கண்டாக்கு ஸ்டோரு வேலைக்குத் தள்ளினானும். சின்னதொர டீமேக்கருக்கு ஏதோ சொல்லியிருக்கார் போலருக்கு. அப்புறம் சிறிசேனவ ஸ்டோர் அடுப்புக்கு

வெறகு வெட்டப் போட்டாங்களாம். ரொம்பக் கஷ்ட மாயிருந்திச்சாம்."

"நம்ம தோட்டத்துல ரொம்ப நாளைக்கு இந்தமாதிரி அக்கிரமங்கள் நெலைக்காது" என்று பெருமாள் சொல் கிறான்.

கோரிக்கைகள் பற்றி உரையாடல் நீள்கிறது. சூசை விடைபெற்றுச் செல்கிறான்.

பெருமாள் தொழிலாளரை நேரில் சந்தித்து வேலை நிறுத்தத்திற்கு ஒத்துழைப்பையும், அனுதாபத்தையும் பெறும் பணியைத் தொடரப் புறப்படுகிறான்.

முதலில் வேலுச்சாமி வீட்டுக்குப் போகிறார்கள். மலை யாண்டி வெளியே நிற்க, பெருமாள் மட்டும் வேலுச்சாமி யின் காம்பராவிற்குள் போகிறான். பூவாயி மலர்ந்த முகத் துடன் அவனை வரவேற்கிறாள்.

"வாங்க தலைவரையா."

"மாமா இல்லியா?" பெருமாள் கேட்கிறான்.

"அப்பா பேமிட் போடுற விஷயமா பெரிய கௌாக் கரையாவ சந்திக்கப் போயிருக்கா......"

"ஒக்காருங்க என்ன சங்கதி" பூவாயியின் வெண் கலக் குரல் ஒலிக்கிறது.

"ஸ்ட்ரைக் சம்மந்தமா பேசவந்தேன்" பெருமாள் சொல்கிறான்.

"ஆமா இன்னும் ரெண்டு நாள்தானே இருக்கு. ஸ்ட்ரைக் இருக்க நாங்கள்ளாம் தலவர் பக்கந்தான்" பூவாயி சொல்கிறாள்.

''நா போயிட்டு வாரேன்'' பெருமாள் காம்பராவை விட்டு வெளியெறுகிருன். பூவாயி அவனை ஏறிட்டுப் பார்த்துக்கொண்டே கதவைச் சாத்துகிருள்.

பெருமாள் வெளியே வந்ததும் மலையாண்டி இரகசியமாய்க் கேட்கிருன்;

''பூவாயிக்கு ரொம்ப சொகமில்லேன்னு சொன்னியே, எப்பயிலயிருந்து சொகம் வந்திச்சி.''

சாமி பார்த்து நூல் கட்டியும்,பேயோட்டியும், பூவாயியின் உடல் நிலை சரிவரவில்லையென்றும், யாரோ சூனியம் வைத்திருப்பதாகவும் பூசாரி சொல்லி ஏழுநாள்கெடு போட்டதாகவும் முன்பு பெருமாள் மலையாண்டிக்கு கூறியிருக்கிருன். அதன்பின் அவளுக்கு என்ன நடந்ததென்று மலையாண்டிக்குத் தெரியாது.பெருமாள் இப்பொழுது விபரமாகச் சொல்கிருன். பசுமலையில் பெருமாளுக்குப் பேசிய பெண் யாருடனே ஓடிவிட்டாள் என்று கடிதம் வந்த நாள் இரவு செல்லாயி, பூவாயி வீட்டிற்குப் போய் வந்ததையும் மறுநாட் காலையில் தூக்கம்விட்டெழுந்ததிலிருந்து பூவாயி எவ்வித வித்தியாசமுமின்றி இருக்கிருள் என்பதையும் பெருமாளின் பேச்சிலிருந்து கிரகித்துக்கொண்டான் மலையாண்டி.

''ஆமா நா நெனைச்சது சரிதான். பூவாயிக்கு உதிரக் காளி அண்டவுமில்ல, பேய் பிடிக்கவுமில்ல, இது வேற சங்கதி விளங்கிச்சா. ஒங்க கலியாணம் குழம்பிரிச்சின்னவுடனே அதுக்குச் சுகம் வந்திரிச்சி'' மலையாண்டி சிரித்துக்கொண்டே சொல்கிருன்.

''ஓய் சும்மா இல்லாத கதையெல்லாம் சொல்லாத. அதுக்கு சொகம் வந்ததே போதும். இதப்பத்தியெல்லாம் இப்ப பேசிக்கிட்டிருக்க எனக்கு நேரமில்ல. மாட்டுப்பட்டிலயத்து ஆளுங்கள இன்னும் சந்திக்கல்ல'' என்கிருன் பெருமாள் அவசரமாக.

"சரி சரி பொழுது இருட்டிரிச்சி. நானும் பணியக் கணக்குக்கு போகணும்" மலையாண்டி சொல்லிக்கொண்டே பெருமாளைப் பிரிந்து செல்கிறுன். பெருமாள் மாட்டுப் பட்டி லயத்தை நோக்கிச் செல்கிறுன்.

பனிமூட்டம் எங்கும் திரைபோட்டிருப்பதால் சிறிது தூரம் மட்டுந்தான் கண்பார்வைக்குத் தெரிகிறது. மாட்டுப்பட்டி லயத்துக்கு வந்த பெருமாள் பொடிமெனிக்காவின் காம்பராவை நோக்கி வருகிறுன். காம்பராவின் வெளிக் கதவின் மேற் பாதியைத் திறந்து,மூட்டம்நிறைந்த வெளியை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த சோமாவதி, பெருமாளைக் கண்டதும் காணுதவள் போல் குசினிக்குள் செல்கிறுள். மற்றைய நாட்களில் பெருமாளைக் கண்டதும் உட்சென்று தன்னை அலங்கரித்துக்கொண்டு அவன் முன்னிற்கும் சோமாவதி இன்று அலட்சியமாக குசினிக்குள் சென்றுவிடுகிறுள். அவள் முகத்தில் கரி படிந்திருக்கிறது. பாதி திறந்த கதவினூடாக "அம்மே" எனப் பெருமாள் அழைக்க சோமாவதி எழுந்துவந்து பதில் சொல்லாது,குசினிக்குள்ளிருந்துகொண்டே சொல்கிறுள்:

"அம்மா ஒத்த கடக்கி சாமான் வாங்க போயிட்டாங்க."

பெருமாள் உள்ளே வந்து குசினிக்குள் எட்டிப் பார்க்கிறுன். சோமாவதியின் முகம் வாடியிருக்கிறது.

"என்ன சோமா ஒரு மாதிரி இருக்க" பெருமாள் கேட்கிறுன்.

"ஒங்களுக்கும் எனக்கும் என்ன பேச்சு வேண்டியிருக்கு. நீங்கதான் பசுமலைத் தோட்டத்து மாப்பிள்ளையாச்சே" சோமாவதி முகத்தைத் திருப்பிக்கொண்டே சொல்கிறுள்.

பெருமாளுக்கு வியப்பாகவும் வேதனையாகவும் இருக்கிறது. என்றும் தன்னுடன் கனிவாகவும் குழைவாகவும் பேசுவாள் இன்று ஏன் இப்படி...?

''ஒனக்குத் தெரியாதா சோமா, அந்த புள்ளதான் அந்தத் தோட்டத்து தலவரோட ஓடிப்போச்சே.''

''நெசமாவா... ஒருத்தரும் எனக்குச் சொல்லலியே...'' என்று சொல்லிக்கொண்டே சோமாவதி குசினியிலிருந்து ஸ்தோப்புக்கு வந்து அங்கு நின்றுகொண்டிருந்த பெருமாளைப் பார்த்து புட்டுவத்துல ஒக்காருங்க பெருமாள்'' என்று பரிவுடன் சொல்கிறாள். ஒரு கணத்தில் உள்ளே சென்று கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்து துடைத்து விட்டு மீண்டும் ஸ்தோப்புக்கு வருகிறாள்.

''சோமா எனக்கு ஒக்காந்து பேச நேரமில்ல. ஸ்ட்ரைக் சங்கதியா ரொம்ப ஜோலியிருக்கு. நீங்க ஒருத்தரும் பன்னெண்டாந் தேதி வேலைக்குப் போகமாட்டீங்கதானே, ஒங்களுக்கெல்லாம் சொல்லணுமா? என்ன... நா வரட்டுமா?'' பெருமாள் சொல்லிக்கொண்டே சோமாவதியைப் பார்க்கின்றான்.

''என்ன பெருமாள் ரொம்ப அவசரப்படுறீங்க...? முக்கியமான சங்கதி ஒண்ணு இருக்கு. இருந்து பேசிட்டுப்போவலாமே...'' சோமாவதி பணிவுடன் கேட்கிறாள்.

''என்ன சங்கதி ஒனக்குப் பெரிய இடத்துல கலியாணம் அது தானே?''

சோமாவதியின் மலர்ந்த முகம் மீண்டும் வாடுவதைப் பெருமாள் கவனிக்கிறான்.

''நா அவர கலியாணஞ் செஞ்சிக்க போறதில்ல?''

''ஏன் ஒனக்கு சின்ன முதலாளி வீரக்கோனைப் பிடிக்கலியா?''

''ரெண்டு காரணத்துக்காக இந்தக்கலியாணம் எனக்கு வேணும். ஒண்ணு எனக்கு அவரைப் பிடிக்கல. அவரால

தான் அசிலின் மகள் மருந்து குடிச்சி செத்ததா பேசிக்கிறுங்க. மத்தது எனக்குப் பிரியமான ஆளைத்தான் நா கலியாணம் செய்வேன்'' சோமாவதி உறுதியுடன் சொல்கிருள்.

''அந்த ஆளைத்தான் யாருன்னு சொல்லமாட்டேங்குறியே சோமா'' பெருமாள் சொல்கிருன்.

''அன்னிக்கி சொன்னது ஒங்களுக்கு ஒண்ணும் புரியலியா?'' சோமாவதி புன்சிரிப்புடன் கேட்கிருள்.

அப்பொழுது யாரோ வெளியில் கூப்பிடும் குரல் கேட்கிறது. ''பெருமாள்'' ஆப்தீன் தான் காம்பரா வாசலில் நின்று பெருமாளை அழைக்கிருன்.

''சரி சோமா நா போயிட்டு வாரேன்'' என்று சொல்லிக்கொண்டே பெருமாள் வெளியே வருகிருன். சோமாவதி பெருமூச்சுவிட்டுக்கொண்டே அவனை உச்சிமுதல் உள்ளங்கால் வரை பார்க்கிருள்.

பெருமாளும், ஆப்தீனும் இன்னும் சில தொழிலாளர்களை நேரில் சந்திக்கப்போகிருர்கள். சோமாவதி அவர்கள் போவதை திறந்திருக்கும் கதவினூடாகப் பார்க்கிருள். சிறிது நேரத்துக்கு முன் மூடு திரையாக இருந்த மூட்டம் சிறிது கலைந்திருக்கிறது.

## (19)

நாளைக்கு வேலைநிறுத்தம். இது பற்றியே எங்கும் பேச்சு அடிபடுகிறது. வேலைக்காட்டில், லயத்துப் பீலிகளில் எங்கெல்லாம் ஆட்கள் கூடுகிருர்களோ அங்கெல்லாம் இதுபற்றியே பேச்சு.

இன்று, ஸ்டோர் லயத்திலிருக்கும் ஸ்டோர் அடுப்பில் இருபத்தைந்து வருடங்களுக்கு மேல் வேலைசெய்து நுரையீரல் நிரந்தரமாகவே பாதிக்கப்பட்ட எழுமலைக்கங்காணியில் கேதத்திற்காக இரண்டு மணிக்கு வேலை விட்டு விட்டார்கள். பணிய லயத்துப் பீலியிலே ஒரே கூட்டம். மேட்டு லயம், ஓட்டு லயம், பலாமரத்து லயம் ஆகிய லயம்களிலுள்ள பெண்கள் குடங்கள், வாளிகள் சகிதம் கூடி நிற்கின்றனர். மாரிமுத்துக் கங்காணி மனைவி வெள்ளையம்மா குடத்தைப் பீலியில் வைத்து விட்டு, வீரபுத்திரன் கங்காணியின் மனைவி வேலாயியுடன் பேசிக்கொண்டிருக்கிறாள்.

"ஸ்ட்ரைக்குன்னு வேலைக்கு போவாம இருந்தா ஆருக்கு குண்டிகாயும் — நமக்குத்தானே. தொரமார் ஐயாமாருக்கு பணிஞ்சி போறதவுட்டுட்டு ஏட்டிக்குப் போட்டியா நின்னு தோட்டக் காட்டுல சரிவருமா?" — வெள்ளையம்மா சொல்கிறாள்.

"பெருமாளு அகராதிக்கு தோட்டத்துல கொழப்பம் பண்ணி சனங்கள கெடுக்கிறான். நம்ம சனங்களும் மண்டையில மூளையில்லாம அவன் பேச்சக் கேட்டுக்குட்டு தடுமாறுறாங்க" — வேலாயியின் அபிப்பிராயம் இது.

"ஆமா ஆமா நம்மவூட்டுக்காரங்க சொன்ன மாதிரி 'கேப்பையில நெய் வடியுதுன்னு கேப்பாருக்கு மதி எங்க போச்சு.' இவுங்க ஸ்ட்ரைக் சரிவரும்னு நெனைக்கிறயா வேலாயி. சின்னதொர பெரிய திட்டமெல்லாம் போட்டிருக்காரு, நம்மவூட்டுக்காரரு எல்லாம் சொல்லியிருக்கிறாரு. தொர இவுங்க ஸ்ட்ரைக் இருக்கிறப்போ நடுக்கணக்கு ஆளுகளப் போட்டு போலிசு காவலோட இங்க வேலை செய்விப்பாரு."

வெள்ளையம்மாவின் குடம் நிரம்பி வழிகிறது. அடுத்திருந்த அஞ்சலை நிரம்பி வழிந்த வெள்ளையம்மாவின்

குடத்தைத் தூக்கி வைத்துவிட்டுத் தனது குடத்தை வைக்கிருள். இதனைக் கண்ட வெள்ளையம்மா அஞ்சலையின் குடத்தை அப்புறப்படுத்திவிட்டு, சிறிது நேரத்துக்கு முன்பு தான் தண்ணீர் பிடிக்க வந்த மகளின் வாளியை வைத்துக் கொண்டே, "ஒனக்கு இப்ப ரொம்ப ராங்கி. நா இன்னும் தண்ணி புடிச்சிமுடிக்கல அதுக்குள்ள நீ ஊடையில புடிக்கிறியே" — என கைகளால் அசிங்கமாகசைகை செய்தவாறே முகத்தை ஒரு வெட்டு வெட்டிக்கொண்டு சொல்கிருள்.

"சின்னப்பயலுக்கு சொகமில்ல கத்திக்கிட்டு இருக்கான். சுருக்கா தண்ணி புடிச்சிட்டு போவலாமுன்னுதான் எடுத்து வச்சேன்" — பணிவாகச் சொல்கிருள் அஞ்சலை.

வெள்ளையம்மா அஞ்சலையின் குடத்தை எடுத்து வீசியதையும் அசிங்கமாக பேசியதையும் தண்ணீர் பிடிக்க வந்த செல்லாயிக்குப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை "இது என்ன அநியாயம் ஒம் மவ இப்பதான வாளி கொணந்திச்சி. அவ கைப்பிள்ளைக்கு சொகமில்லேன்னு தானே கேக்கிரு. கொஞ்சம் விட்டா என்ன ஒங்க வூட்டுப் பீலியா?"

"இல்ல ஒங்கவீட்டுப் பீலியா? ஓம் மவன் தலவருன்ன எனக்கென்ன. இவ அவளுக்கு வக்காலத்து வாங்குருளாம்" "ஆமா ஆமா மருமவள பேசுன மாமியாருக்கு கோவம் தன்னுல வருந்தானே!" வெள்ளையம்மா முழு உடலுமே, அபிநயம் செய்யச் சொல்லுகிருள்.

அஞ்சலைக்கு நெஞ்சு பகீரென்கிறது. செல்லாயிக்கு வெள்ளையம்மா ஏதோ கில்லாடி பண்ணுகிருள் என்பது தெரிகிறது. ஆனல் தெளிவாய்ப் புரியவில்லை. "என்னடி சொன்ன?" சத்தமிட்டுக் கேட்கிருள்.

"என்னடி ஒனக்குப் பெருசா கோவம் வருது. நா ஒன்னும் தப்பா சொல்லல்லியே. ஓம் மவன் இவளோட

கூட்டா இருக்குறதால தான பேசிவாற கலியாணமெல் லாத்தையும் வேணுனுட்டு இருக்கான்'' — என்கிறுள் வெள்ளையம்மா.

அஞ்சலை ஒவென்று அழுதுகொண்டே, ''பில்லுமல மாரியாத்தா நீ தான் இதைக் கேளு'' என்று கோவிலிருக் கும் பக்கத்தைப் பார்த்துக்கொண்டே சொல்கிறுள்.

செல்லாயிக்கு கோபம் பொத்தென்று வருகிறது. பத் திரகாளியாக மாறுகிறுள். இருகைகளையும் நீட்டி, ''நாச மாப் போனவளே, ஒ வாயில புத்து வர, கொள்ளை அள் ளிக்கிட்டுப் போவ. ஒன்னப் போல மானத்தை வித்து கணக்கன்மாருக்கு கள்ளப் பொம்புள புடிச்சிக் குடுத்து வவுறு வளக்குற ஈனச்சாதி இல்லடி நாங்க'' என செல்லாயி சொல்லி முடிப்பதற்குள்,

''அக்கா ஒங்க மகன் சேவுகனை ஸ்டோரில டீமேக்க ரையா அடிச்சி பல்ல ஒடைச்சுப்புட்டாரு'' மூச்சு இழைக்க ஓடி வந்த சாக்குக்கார சங்கிலி, வெள்ளையம்மாவை பார்த் துச் சொல்கிறுன்.

''ஐயோ என் ராசா!'' — என்று ஒப்பாரிக்குரலில் சத் தமிட்டுக் கொண்டே வெள்ளையம்மா ஸ்டோரை நோக்கி ஓடுகிறுள்.

ஸ்டோரை அவள் அடைந்ததும் முன்வாசலில் ஒரே சனக்கூட்டமாக இருக்கிறது. கூட்டத்தை விலக்கிக்கொண்டு வெள்ளையம்மா மகன் சேவுகனைப் பார்க்கிறுள். பெருமா ளின் மடியில் அவனது அரைவாசி உடலிருக்கிறது. சேவு கனின் உதட்டில் வடியும் இரத்தத்தை பெருமாள் தனது தலையில் கட்டியிருந்த முண்டாசை அவிழ்த்துத் துடைத்துக் கொண்டிருக்கிறுன்.

வெள்ளையம்மா மகன் மீது விழுந்து கதறுகிறுள் ''என் ராசா ஒனக்கி என்னடா நடந்திச்சி''

அப்பொழுது மாரிமுத்துக்கங்காணி கண்டக்டர் வீட்டில் இருந்து செய்தி கிடைத்து வருகிறான். சிறிசேன நடந்தவற்றைச் சொல்கிறான்.

மாரிமுத்துவின் மகன் சேவுகன் ஸ்டோர் சல்லடைக் காம்பராவில் வேலை செய்து கொண்டிருந்தான். டீமேக்கரின் கையாளாக இருந்து வந்த சேவுகன் ஐயாவின் உறவை சில நாட்களாகக் குறைத்துக் கொண்டான். அதற்கு டீமேக்கர் அம்மாதான் காரணம். சேவுகனும், வீரபுத்திரன் கங்காணி மகன் சோலைமுத்துவும் ஐயாவின் நம்பிக்கைக்குப் பத்திரமானவர்கள். ஐயா தனது பங்களா வேலைக்கு இவர்களைத்தான் அனுப்புவார். சோலைமுத்து மரக்கறித் தோட்டத்தில் காய்கறி திருடியதாக யாரோ அம்மாவிற்குப் பந்தம் பிடித்துவிட்டார்கள். போதிய சான்றுகள் இல்லாததாலும், பேச்சுச் சாதுரியத்தாலும் சோலைமுத்து தப்பித்துக் கொண்டான். இவனுக்குத் தன்னைக் காட்டிக் கொடுத்தது சேவுகனாகத்தான் இருக்க வேண்டும் என்ற சந்தேகம். சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்தான். போனவாரம் ஐயாவீட்டிற்கு கொழும்பிலிருந்து விருந்தினர் வந்திருந்தனர். அம்மா அங்கு வேலை செய்து கொண்டிருந்த சேவுகனிடம் ஏதோ வேலை சொல்ல அவன் மறுத்துவிட்டான். அவனுக்கு அன்று டவுனில் ஓடிக்கொண்டிருக்கும் சண்டைப் படம் பார்க்க வேண்டுமென்ற அவசரம். விருந்தினர் முன் தன்னை அவமதித்து விட்டான் என்ற ஆத்திரம் அம்மாவுக்கு. 'அவன் பெரிய முங்கி பேசிவிட்டான்,' என்று அம்மா ஐயாவிடம் கொஞ்சம் கூடுதலாகவே சொல்லிவிட்டாள். ஐயாவும் சேவுகனில் குற்றம் கண்டு தண்டிக்கச் சந்தர்ப்பம் தேடிக் கொண்டிருந்தார்.

அன்று சல்லடைக் காம்பராவில் வேலை செய்து கொண்டிருந்த சேவுகன், வீட்டில் தேயிலைத்தூள் இல்லாத காரணத்தால் ஒரு பிடி நல்ல ரகத் தேயிலையை அள்ளி சாரத்துக்குள் மறைத்துக் கொண்டதை சோலைமுத்து கண்டு, ஐயாவைத் தேடி வந்து சொல்லிவிடுகிறான். ஐயா அங்கு

வந்துசேவுகனைக் கூப்பிட்டுச் சொன்னார் ''டேய் நீரொம்ப நாளா இந்த திருக்கீஸ் பண்ணிக்கிட்டு வாறது. எங்க சாரத்தைக் காட்டு பாப்போம்.''

சேவுகன் சாரத்தை அவிழ்த்துக் காட்டாது ஐயாவை ஒரு மாதிரிப் பார்த்திருக்கிறான். ஐயா அவனது சாரத்தைப் பிடித்து இழுக்க அது நிலத்தில் விழ தேயிலைத்தூள் சிதறிற்று. சல்லடைக் காம்பராவில் பெண்களும் வேலை செய்கிறார்கள். சேவுகனுக்குத் தான் 'துகிலுரியப்பட்டது' கேவலமாகத் தோன்றவே, தன்னை மறந்து கோபத்துடன்,

''நீங்க மூட்டை மூட்டையாய் கடத்தலாம். நாங்க இல்லாததுக்கு ஒரு புடி எடுத்தா குத்தமா?'' எனக் கேட்டான்.

ஆட்கள் முன்தான் அவமானப்படுத்த பட்டு விட்டதாக ஐயாவுக்கு கெட்ட கோபம் வந்து, ''என்னடா சொன்னாய்?'' என்று சொல்லிக் கொண்டே கையை உயர்த்தி சேவுகனின் முகத்தை நோக்கி நீட்ட, சேவுகன் முகத்தைத் திருப்ப அது அருகிலுள்ள கம்பித்தூணுடன் மோதிற்று. அதே நேரம் ஐயாவின் கை அவன் முகத்தைப் பதம் பார்த்தது. சேவுகனின் பல்லுடைந்து உதடு வெடித்தது. ஸ்டோர் அடுப்புக்கு விறகுடைத்து முடித்து பேர் போடுவதற்கு ஐயாவைத் தேடிவந்த சிறிசேனவிற்கு நடப்பதைப் பார்த்துக் கொண்டு சும்மா நிற்கமுடியவில்லை. ஐயாவிற்கு சிங்களத்தில் சொன்னார் ''மாத்தயா கூலிக்காரன் குத்தஞ் செய்தா அதுக்கு இப்புடிச் செய்யுறதா? அதுக்கு வேற வழி இருக்கு தானே''

''அவன் உனது கட்சியில்லைத்தானே உனக்கேன் இந்தக் கதை'' —ஐயா கேட்டார்.

''அவன் எந்தக் கட்சியா இருந்தாலும் தொழிலாளி தானே''— சிறிசேன பதில் சொன்னான்.

ஐயாவிற்குக் கோபம் இன்னுந் தணியவில்லை.

''நீயும் தேவையில்லாமல் பேசுனு உன் பல்லேயும் உடைப்பேன்''—சிறிசேனுவிற்குப் கோபம் கொப்பளித்தது. ''ஆளேப்பார்த்துப் பேசுங்க. எங்கே என்மேலே கை வையுங்க பாப்பம்''

அதற்குள் இரண்டாவது, மூன்ருவது டீமேக்கர்மார் வந்து பெரிய டீமேக்கரை ஆபிஸிற்கு அழைத்துச் செல்ல, சிறிசேனுவும் கூட நின்றவர்களும் சேவுகனே வெளியே அழைத்துச் சென்றனர்.

சிறிசேனுவிடமிருந்து நடந்த விடயத்தை அறிந்த மாரி முத்து அடுத்து என்ன செய்வதென யோசித்துக் கொண்டிருக்கிருன். பெருமாள், மாரிமுத்துக் கங்காணியைப் பார்த்துச் சொல்கிருன்.

''அண்ணே, இதை இப்படியே விடக்கூடாது. ஏதாச்சும் நடவடிக்க எடுக்கணும் சேவுகனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகணும். போலிசுக்கு றிப்போட் குடுக்கணும்''

வெள்ளேயம்மா சொல்கிருள் ''பெருமாள் தம்பி சொல்றது தாங்க சரி' டீமேக்கர் ஐயாவ லொறி கேளுங்க. ஆசுபத்திரிக்கு கொண்டு போவங்க.''

மாரிமுத்துக் கங்காணி டீ மேக்கர் ஐயாவை லொறி கேட்கிருன். டீமேக்கர் சொல்கிருர் ''களவாணிக்கு லொறி குடுக்க ஏலாது.''

டீமேக்கரின் பதிலேக்கேட்டதும் மாரிமுத்து முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு சின்னத்துரையிடம் போகிருன்.

சின்னத்துரை கிளப்புக்குப் போய்விட்டாரென அறிந்ததும் கண்டக்கையாவிடம் ஓடுகிருன் அவன்.

''கங்காணி! சின்னவரும் டீமேக்கரும் ரொம்ப ஒட்டுறவு. இந்த விஷயத்தில நா குறுக்குடுகிறது சரியில்ல''

இப்படி கண்டக்டர் சொல்வாரென கங்காணி எதிர் பார்க்கவில்லை. என்ன செய்வதென்றே அவனுக்குத் தெரிய வில்லை. 'ஆபத்தான நேரங்களில் ஐயாமார் ஒதுங்கி விடு வார்கள். கூலியாட்கள்தான் கூடவருவார்கள்' என்ற உண்மை கங்காணிக்குப் புலனாகிறது.

ஸ்டோருக்குத் திரும்பி வந்து பெருமாளைப் பார்த்துச் சொல்கிறான்: "தம்பி ஐயாமாரை நம்பி நா ஏமாந்துட் டேன். இந்த சங்கதி இனிமே ஒங்க பொறுப்புத்தான் 'இம் புட்டு நாளும் எம்புத்தியைக் கடன் கொடுத்திட்டேன்"

பெருமாள் டீமேக்கரிடம் போய் லொறி கேட்கிறான். டீமேக்கர் அதற்குச் சொல்கிறார்:-

"நீ கேட்டாப்புல நா லொறி குடுக்கப் போறதில்ல. நீ செய்யிறதச் செய்" டீமேக்கர், சின்னத்துரை தானே இப் பொழுது தோட்டத்திற்கு முழுப் பொறுப்பும், அவர் எப் பொழுதும் தன்பக்கந்தானே நிற்பார் என்ற துணிவில் மனத் தைரியத்துடன் நிற்கிறார்.

"சரி நா செய்யிறதைச் செய்யிறன்" பெருமாள் உறு தியுடன் டீமேக்கருக்குச் சொல்கிறான்.

ஆப்தீனும் சூசையும் அங்கு வந்து சேருகிறார்கள். எல் லோரும் கூடிப்பேசிவிட்டு பெருமாள், ஸ்டோர் ஆட்களை யெல்லாம் வீட்டுக்குப்போகச் சொல்கிறான். பெருமாளின் சொல்லைத் தாரக மந்திரமாக ஏற்றுத் தொழிலாளர்கள் எல்லோரும் வேலைகளை விட்டு வெளியேறுகின்றனர்.

வாட்டம் போடவந்த அந்திக் கொழுந்து பாதிக்கு மேல் தட்டில் விரிக்காமல் கிடக்கிறது. ரோதைக்குப் போட்ட கொழுந்து அரைத்தும் அரைக்காமலும் இருக்கிறது. சல்ல டையில் போட்டதூள் பாதி சலித்தும் சலிக்காமலும் கிடக்கிறது. நாளை தொடங்குவதாக இருந்த வேலை நிறுத் தம் இன்றே ஆரம்பமாயிற்று.

சூசை கார் கொண்டுவர, சேவுகனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லுகிறார்கள்.

சின்னத்துரை கிளப்பிலிருந்து வந்து விட்டார். நடந்த வற்றை அறிந்து திடுக்கிடுகிறார். அவரது திட்டமெல்லாம் தவிடு பொடியாகிவிட்டது. இப்பொழுது புதிய பிரச்சினை யொன்று தோன்றியுள்ளது. ஸ்டோரை இயங்க வைத்து இன்றைய கொழுந்தை அரைத்தெடுக்க வேண்டுமல்லவா! டீமேக்கர் சின்னத்துரைக்கு ஏதோ சொல்கிறார். துரை தலையை ஆட்டுகிறார். டீமேக்கர் லொறியை எடுத்துக் கொண்டு நாட்டுப்பக்கமாகச் செல்கிறார். லொறி ஒரு சின்னத்தோட்டத்துச் சின்னபங்களாவில் நிற்கிறது. அந்தப் பங்களாவுக்குள்ளே கூத்தும் கும்மாளமும் நடக்கிறது. 'பயிலாப்' பாட்டு ஓசை ஒலித்துக் கொண்டிருக்கிறது.

சில்வா முதலாளியின் நானூறு ஏக்கர் தேயிலைத் தோட்டத்தை அரசு எடுத்தபொழுது அவர் மகனை வீரக்கோனுக்குரிய பங்காகக் கிடைத்த தோட்டந்தான் அது. தீராத விளையாட்டுப் பிள்ளையாக இருந்து, பணத்தையும் செலவு செய்தது மட்டுமல்லாமல் குடும்பத்திற்கு அபகீர்த்தியை உண்டாக்கிய வீரக்கோனை வீட்டிலிருந்து சில்வா முதலாளி துரத்தி விட்டார். எங்கெல்லாமோ சுற்றிவிட்டு ஊருக்கு வந்த பொழுதுதான் அரசு, தனியார் தோட்டங்களையெல்லாம் சுவீகரித்தது. தனக்கு சட்டப்படி ஐம்பது ஏக்கர் தரும்படி யாரையோ தூதனுப்பி அதனைப் பெற்றுக் கொண்டான். இப்பொழுது இங்கே தான் வாசஞ் செய்கிறான். தீராத விளையாட்டு மீண்டும் தொடர்கிறது.

டீமேக்கரை கண்டதும் மது வெறியில் நின்ற வீரக்கோன் ஓடிவருகிறான். அவனுக்கு மெய்க்காப்பாளர் போன்ற ஆரியதாசாவும், ஐ. ஆர். சி. பொடிசிங்கோவும் ஓடிவருகிறார்கள். டீமேக்கர் நடந்தவற்றைச் சொல்கிறார். தற்பொழுது ஸ்டோரில் முடிக்காமலிருக்கும் வேலைகளைச் செய்து முடிக்க பத்து பன்னிரண்டு தொழிலாளர்கள் எப்படியும் வேண்டுமென்று டீமேக்கர் கேட்கிறார்.

ஆரியதாசாவை நாட்டிலிருந்து ஸ்டோருக்கு வேலைக்கு வரும் தொழிலாளரை உடனே வேலைக்குக் கூட்டி வரும் படி நாட்டிற்கு அனுப்புகிறார்கள். அந்தத் தொழிலாளர் தோட்டத்திலுள்ள தொழிலாளர்க் கெதிராக வரமுடியா தென மறுத்து விடுகிறார்கள். கடைசியாக தேயிலைத் தோட் டத்து வேலையே தெரியாத சிலருடன், வீரக்கோன், ஆரிய தாச, பொடிசிங்கோ ஆகியோர் டீமேக்கருடன் லொறியில் வருகிறார்கள்.

கோபத்துடன் பங்களாவுக்குப்போன சின்னதுத்ரை பங்களாக் காவற்காரன் வீரச்சாமியை அழைக்கிறார். நீண்டு தடித்த மீசை, காவல்காரனுக்குரிய கம்பீரத் தோற்றம், துணிவுடன் எதற்கும் முன் செல்லும் தைரியம். இந்த அம் சங்களால்தான் பத்து வருடங்களாக பங்களா 'வொச்ச' ராக இருக்கிறான். ''ஸ்டோர் வேலைக்கு ஆள் வேணும் ஓடிப்போய் அந்த வேலைய முடிச்சிக் குடுத்துட்டு வாறது''

வீரச்சாமி சிறிது யோசிக்கிறான். 'பெருமாளுக்கு எதி ராகப் போவதா'? தினமும் அவன் காவல் வேலைக்கு வரும்போதுதான் மனைவி வேலைமுடிந்து வீட்டிற்குப் போவாள். அவள் வேலைவிட்டு வீட்டிற்குப் போகும் போதுதான் அவள் மலைக்குப் போவாள். அவன் மனைவி மக்களுடன் கூடிக் குலவும் நேரம் மிகக் குறைவு. இவனது குழந்தைக்கு காய்ச்சல் வந்தாலே கூடவே ஒருவித வலிப் பும் வரும். நேற்றிரவு கூட வலிப்பு வந்து, அவனிருக்கும் லூட்டு லயத்திற்கு அடுத்த லயத்திலிருக்கும் தலைவர் பெரு மாள் தான் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று மருந்து வாங் கிக் கொடுத்தான். இப்படி யெல்லாம் உதவிசெய்யும்பெரு மாளுக்கெதிராக எப்படிப் போவது.

''தொரா! அது நம்ம வேலையில்லீங்க. நா இன்னிக்கு ராவுமட்டுந்தானுங்க காவல். நாளையிலருந்து நானும் ஸ்ட்ரைக்''

துரைக்கு கோபம் ஏறுகிறது ''என்னடா சொன்ன? தொர நா சொல்லுறன். நீ எதுத்துப் பேசியாச்சி. இப்ப ஸ்டோருக்குப் போய் வேலை செஞ்சால் தான் இன்னிக்குப் பேர். வெளங்கிச்சா?

''நான் ஸ்டோருக்குப் போகமாட்டேன். வூட்டுக்குப் போறேன்'' என்று கூறிக்கொண்டே பங்களாவை விட்டு வெளியேறும் வீரச்சாமி, துரையின் காதுகளில் விழும்படியாகத் தொடர்ந்து சொல்கிறுன் ''துரையின்னு என்னு கொம்பா மொளேச்சிருக்கு. நம்ம வேலையா நாம 'கரெக்டா' செஞ்சா ஆருக்கும் ஏன் பயப்படணும். எனக்கென்னு வேலையா தெரியாது. நாய் மாதிரி வொச்சரா இருக்கிற வேலைய எப்படா உட்டுத் தொலேப்பேன்னு பாத்துக்கிட்டிருக்கேன். தொரையின்னு காலோட கழிஞ்சகாலம் மலேயேறிப்போச்சி''

நாட்டிலிருந்து வந்தவர்களே வைத்துக் கொண்டு டீ மேக்கர் ஸ்டோரில் அந்தியில் நிறுத்தப்பட்டிருந்த வேலேகளே ஆரம்பிக்கிறுர். தோட்டத்தில் ஏதாவது குழப்பம் ஏற்பட்டால் சமாளிப்பதற்கு ஏற்பாடு போல வீரக்கோனும், ஐ ஆர். சி. பொடிசிங்கோவும் ஸ்டோர் வாசலில் நிற்கிறுர்கள். ஆரியதாசவைத்தவிர நாட்டிலிருந்து வந்த மற்ற ஒருவருக்கும் ஸ்டோர் வேலேயென்றுல் என்னவென்றே தெரியாது ஐயா மாரே முன்னின்று எல்லாவற்றையும் செய்து முடிக்கிறுர்கள்.

பெருமாளுக்கு நாட்டிலிருந்து ஆட்கள் வந்து ஸ்டோரில் வேலே செய்வது பெருங் கவலேயைத் தருகிறது. பெருமாள், சூசை, ஆப்தீன், சிறீசேனு நால்வரும் நிருவாகத்தின் இந்த எதேச்சதிகாரத்தைக் கண்டிக்கத் தோட்டம் முழுவதும் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற விருப்பத்துடன் மற்ற டிவிசன் தலேவர்களேச் சந்திக்கப் போகிறுர்கள்,

மாரிமுத்துக் கங்காணியின் மருமகனே நடுக்கணக்கில் பெரும்பான்மையான தொழிலாளர்களேக் கொண்ட கட்சி

யின் தலைவர். அவன் தோட்டம் முழுவதும் நாளை வேலை நிறுத்தத்தில் பங்கு பற்ற வேண்டுமென்பதை மனதார விரும்பினுன்.

பின்பு அவர்கள் பணியக் கணக்குக்குப் போய் மலை யாண்டியைக் கூட்டிக் கொண்டு அந்தத் தோட்டத்துத் தலைவரையும் சந்திக்கிருர்கள். எல்லோரும் நாளையிலிருந்து நல்லதொரு முடிவு வரும் வரையும் வேலை நிறுத்தம் செய் வதென ஏகமனதாகத் தீர்மானிக்கிருர்கள்.

இப்பொழுது அவர்களது கோரிக்கைகளில் ஒன்று கூடி விட்டது. அது 'சேவுகனை டீமேக்கர் தாக்கியதையும் அத ஞல் ஏற்பட்ட விளைவுகள் பற்றியும் நிர்வாகம் பாரபட்ச மற்ற விசாரணை செய்யவேண்டும்'

மறுநாள் விடிகிறது. சின்னத்துரை, கண்டக்டர் மூலம் மாரிமுத்துக் கங்காணிக்கும் நடுக்கணக்குத் தலைவரான கங் காணியின் மருமகனுக்கும் தன்னை வந்து சந்திக்கும்படி மூன்று தடவைகள் ஆள் அனுப்பினுர். அவர்கள் வரவில்லை.

அன்று காலையில் யாருமே பிரட்டுக்குப் போகவில்லை. தோட்டம் முழுவதும் அன்று கொய்ய வேண்டிய கொழுந் துகள் இரவும் பனியில் நனைந்து பகல் வெயிலில் விறைத்து நிற்கின்றன.

## ( 20 )

அந்தத் தோட்டம் பூராவும் வேலைநிறுத்தம் செய்யத் தொடங்கி இன்று ஏழாவது நாள். கொழுந்து மலையில் அரும்புகள் முற்றி காம்புகள் நார்க்குச்சுகளாகி, வாதுகள் ஒடிக்காமல் உயர்ந்து நிற்கின்றன. எல்லா மலை களும் ஒதுக்கிப் போட்ட மலைகள் போலிருக்கின்றன. பெற்ற குழந்தையை அழும்பொழுது அணைக்க முடியாத, நோய்

வாய்ப்பட்டிருக்கும் ஒரு தாயின் பரிதாபகரமான நிலையில் கொழுந்துகளைப் பார்த்துத் தொழிலாளர்கள் பெருமூச்சு விடுகின்றனர்.

சின்னத்துரைக்கு பாதிக்கப்பட்டிருக்கும் கொழுந்து களைப் பற்றி கவலையே இல்லை. ஆனால் தனது திட்டம் ஒன் றுமே நிறைவேறாமல் போனதையிட்டுத்தான் பெருங்கவலை. 'மேற்கணக்குத் தொழிலாளர் மட்டுந்தான் வேலை நிறுத் தம் செய்வார்கள்; அதுவும் பெருமாளின் கட்சியினர் மட் டுந்தான் பங்கு பற்றுவார்கள்; மாரிமுத்துவின் கட்சியிலுள் ளவர்கள் வேலைக்குப் போவார்கள்; நடுக்கணக்கில் வேலைக்கு ஆட்களை எடுக்கலாம்; இதனால் வேலைநிறுத்தம் பிசுபிசுத்து விடும்; பெருமாளின் கட்சியினர் அடுத்த டிவிசனில் உள்ள வர்கள் வேலைக்கு வருவதால் குழப்பம் செய்வார்கள்; பொலிசை வரவழைத்து இவர்களுக்கு நல்ல அடியும் உதையும் வாங்கிக்கொடுப்பதுடன், மேலிடத்திற்கு 'இவர் களால் தான் குழப்பம்' என்று தான் அறிவித்திருப்பதை உறுதிப்படுத்தி விடலாம், பெருமாளுக்கு இந்த முறை நல்ல பாடம் படிப்பிக்க வேண்டும், இப்படியெல்லாம் எண்ணியி ருந்த சின்னத்துரைக்கு, நடந்து முடிந்ததை எண்ணும் பொழுது இதற்கெல்லாம். காரணமான டீ மேக்கர் மேல் கோபங்கோபமாக வருகிறது. ஆனால் அவரை எப்படி எதிர்ப்பது. இருவருக்குமிடையிலுள்ள 'அந்த' உறவு பாதிக் கப்பட்டுவிடுமே!

இந்த அளவுக்குத் தொழிலாளர்கள் போய்விட்டபின் வேலை நிறுத்தத்தை கைவிடாது பேச்சுவார்த்தைக்கு இணங்குவது தனக்கு அவமானம் என எண்ணினார் சின்னத் துரை. தொழிலாளி ஒருவன் தேயிலைத் தூள் களவாடி யதை டீமேக்கர் கண்டு பிடித்த பொழுது அவன் அவரைத் தாக்க வந்ததாகவும் தற்பாதுகாப்புக்கு அவர் அவனைத் தள்ள அவன் ஸ்டோரிலுள்ள தூண் ஒன்றுடன் மோதுப் பட்டதாகவும், இதுபற்றி பொலிசுக்கு முறைப்பாடு செய் யப்பட்டு இருப்பதாகவும் குறிப்பிட்டு, தொழிலாளர்

இதனை பெரிது படுத்தி நியாயமற்ற கோரிக்கைகளை முன் வைத்து வேலை நிறுத்தம் செய்வதாக மேலிடத்திற்கு அவர் எழுதியிருந்தார். சின்னத்துரை அடிக்கடி சட்ட ஆலோசகரிடமும் பொலிஸ் நண்பர்களிடமும் போய் வந்து கொண்டிருந்தார்.

பெருமாள் தினமும் தொழிற்சங்க ஆபிசுக்குப் போவான் தோட்டத்தில் எந்தவிதமான அசம்பாவிதங்களும் நடைபெறுது கவனித்து வந்தான். தொழிற் சங்கப் பிரதிநிதியிடம் தினமும் ஆலோசனை பெற்று வந்து சங்கத்து மற்ற உறுப்பினர்களுக்கும் கூறுவான்.

அதிகாலைதொழிற்சங்க ஆபிசை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறுன் பெருமாள். அவன் நடையில் இன்று ஒரு வேகம். பிரதிநிதி அவனை இன்று காலை எட்டுமணிக்கு முன்பு வரும்படி நேற்றுப் பிற்பகல் சொல்லி அனுப்பியிருந்தார். என்ன காரணமாக இருக்குமோ? நேற்று அவன் சங்கத்திற்குப் போயிருந்தபோது அங்கு பிரதிநிதி சொன்னதையும், நேற்று பீக்கர் பிச்சை சொன்னதையும் ஒன்று சேர்த்து பார்க்கும் போது பெருமாளுக்கு நல்ல முடிவு ஏற்படலாம் என்ற நம்பிக்கை ஒளிவிடுகிறது. புதுத் துரை நேற்றுத் தோட்டத்திற்கு வந்து விட்டதாகவும், சின்னத் துரை, கண்டக்டர், டீமேக்கர் எல்லோரையும் கூப்பிட்டு விசாரித்ததாகவும், வந்த நேரந்தொட்டு புதுத் துரை வேலை நிறுத்தத்திற்குரிய காரணங்களையே ஆராய்ந்து கொண்டிருப்பதாகவும், சின்னத் துரை, டீமேக்கர் ஆகியோரின் முகங்கள் வாடியிருப்பதாகவும் பீக்கர் பிச்சை எங்கிருந்தோ செய்திகளைச் சேகரித்து வந்து பெருமாளுக்குச் சொல்லியிருந்தான். பிரதிநிதியும் புதுத் துரை மேல் நல்ல அபிப்பிராயம் கொண்டிருந்தார். துரை விவசாயத்தைச் சிறப்புப் பாடமாகக் கொண்ட ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. தோட்ட நிர்வாகத்திலும் சரி, பெருந் தோட்ட வேலைகளிலும் சரி, நிறைய ஆற்றலுள்ளவர். தனக்குச்சரியென்று பட்டதையே செய்வார். நேர்மைக்காக மேலிடங்களுடன் போராடிப்பல காரி

யங்களைச் செய்திருக்கிறார். கும்பனிக் காலத்தில் வெள்ளைக் கார டிரக்டருடன் வாதிட்ட காரணத்தாற்தான் இன்னும் இந்த நிலையிலிருக்கிறார். இவரது ஆற்றலிலும் அனுபவத்திலும் குறைந்த பல துரைமார்கள் பெரிய குரூப் மனேஜர்களாகவும் மேலதிகாரிகளாகவும் இருக்கிறார்கள்.

பெருமாள் தொழிற் சங்க ஆபிஸை அடைந்ததும் பிரதிநிதி பதுளையில் உதவித் தொழில் ஆணையாளர் முன்னிலையில் நடைபெறும் மாநாட்டிற்குப் போகத்தயாராக நின்றார். இந்தத் தோட்டத்திலுள்ள பிரச்சினைகளை ஆராய்வதற்காக, புதுத்துரை உதவித் தொழில் ஆணையாளருடன் தொடர்பு கொண்டு இன்று ஒன்பது மணிக்கு ஒரு மாநாட்டை ஒழுங்கு பண்ணியிருக்கிறார்.

துரை நேரத்திற்கு வந்துவிட்டார். சின்னத்துரையும் வந்திருக்கிறார். ஒன்பது மணிக்கெல்லாம் மாநாடு ஆரம்பமாகிறது. உதவித் தொழில் ஆணையாளர் இருபக்கத்து தொழில் உறவு அதிகாரிகள், சங்க மாவட்ட பிரதிநிதி, பெரியதுரை, சின்னத்துரை ஆகியோர் சூழ்ந்திருக்க மாநாடு ஆரம்பமாகிறது. மாவட்டப் பிரதிநிதியும், தொழிற் சங்கத்து தொழில் உறவு அதிகாரியும் கேட்ட பல கேள்விகளுக்கு சின்னத்துரையால் தகுந்த பதில் சொல்ல முடியவில்லை.

பெரியதுரை தொழிற்சங்கம் கேட்ட அதிமுக்கியமான கோரிக்கைகளுக்கு ஒப்புக் கொள்கிறார். சேவுகனை டீமேக்கர் தாக்கியதற்கு பாரபட்சமற்ற ஒரு விசாரணை வைப்பதாகவும் சூசைக்கு வேலை கொடுத்து வேலை நிற்பாட்டிய நாட்களுக்குரிய சம்பளத்தைக் கொடுப்பதாகவும், அன்று அரைப் பெயர் போட்ட தொழிலாளர்களுக்கு முழுப் பெயர் போடுவதாகவும் ஏனைய பிரச்சினைகளை ஒரு மாதத்திற்குள் தீர்த்து வைப்பதாகவும் துரை வாக்களித்தமையால் உதவித்தொழில் ஆணையாளர் நாளைக்கு வேலை நிறுத்தத்தைக் கைவிடும்படி தொழிலாளர் சங்கத்தை ஒப்புக்

கொள்ள வைத்து மாநாட்டை சமரசமாக முடிக்கிறார். பிரதிநிதியிடமிருந்து போதிய விளக்கங்களைப் பெற்றுக் கொண்டு, பெருமாள் போரில் வெற்றி கண்ட தலைவனாக தோட்டத்தை நோக்கிப் போகிறான்.

## (21)

வேலை நிறுத்தத்தால் ஒரு வார காலமாக வெறிச் சோடிக் கிடந்த தோட்டம் இன்று விறுவிறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. வீட்டில் முடங்கிக் கிடப்பது விடிவில் லாதது போல இருந்த தொழிலாளர்களுக்கு மலைக்கு நடப் பதில் புது உற்சாகம் பிறக்கிறது. இன்று காலையிலிருந்து பேர் போட்டு விட்டு வரும் வரை இதனையே எல்லோரிட மும் காண முடிகிறது. ஆனால் பேர் போட்டு விட்டு வீட் டிற்கு வரும் சோமாவதியிடம் மட்டும் சுறுசுறுப்பில்லை. அவள் இன்று தனியாகவே வந்து கொண்டிருக்கிறாள். வழக்கமாக அவளுடன் கூடவரும் சுதுநோனா இன்றைக்கு ஏனோ வேலைக்கு வரவில்லை. சோமாவதியின் முகத்திலே சோக மூட்டம், நடையிலே ஒரு தளர்ச்சி. அவளது மனம் தற்போதுள்ள பிரச்சினையை யோசிக்கக் கால்கள் மேட்டு லயத்துப் பக்கமாகச் செல்கின்றன.

இன்றைக்கு எப்படியாவது பெருமாளிடம் என் நெஞ்சி லுள்ளதைச் சொல்ல வேண்டும். கட்டாயம் பெருமாள் உத வுவார். எத்தனை நாட்களுக்கு நெஞ்சில் மறைத்து வைத்து ஒரு முடிவுக்கு வராமல் சஞ்சலப்படுவது? அவர் இதுவரை எனது மனக்கிடக்கையை அறியாமலா இருப்பார்.

இன்றைக்குப் பெருமாள் எப்படியும் லயத்தில்தான் இருப்பார். வேலை நிறுத்தம் முடிந்துவிட்டது தானே! இப் போது ஓய்விருக்குமென எண்ணிக்கொண்டு பெருமாள் இருக்கும் லயத்துக் காம்பராவிற்குள் நுழைகிறாள்.

''வா ஆயா வா'' காம்பராவிற்குள் சென்ற சோமா வதியை செல்லாயி வரவேற்கிருள்.

''ஆயா பெருமாள் இல்லிங்களா?''— சோமாவதி கேட்கிருள்.

''நம்மளுக்கு ஒண்ணு இல்லாட்டி ஒண்ணு வந்துகிட்டு இருக்கு. பசுமல தோட்டத்துல இருந்து சின்னமவ காயி தம் போட்டிருக்கிது. அவுங்க இருக்கிற தொங்க தோட் டத்த கொலனிக்கு குடுக்கப் போருங்களாம். தோட்டத் தாளுங்க போவ மாட்டேன்னு தொரைக்கும் கவுன்மேந் துக்கும் ஜில்லா மூலம் தெரியப்படுத்தியிருக்காங்களாம். பசு மலேயில இருந்து வந்த காயிதத்த எடுத்துக்கிட்டு பெருமாளு பணியக் கணக்குக்கு போயிட்டான்'' என்கிருள் செல்லாயி.

பெருமாள் அங்கே இல்லே என்பதை அறிந்ததும் சோமாவதிக்கு ஏமாற்றமாக இருந்தது. செல்லாயியிடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டை நோக்கிப் போகிருள். அவளுக்கு தனது மனதில் முட்டி மோதி வரும் எண்ணங் களே யெல்லாம் யாருக்காவது சொன்னுல்தான் மன அமைதி ஏற்படும் போல் தெரிகிறது. அவள் மனம் விட்டுப் பேசும் சுதுநோனு இப்போது அவளிடம் அதிகம் பேசுவ தில்லே முன்புபோல் வேலேக்கு போக முன்னரோ வேலே யால் திரும்பி வந்த பின்னரோ சோமாவதியிடம் லயத் துக்கு வந்து பேசிக்கொண்டிருக்கமாட்டாள். தனது அண் ணனுன சிறிசேனுவைக் கல்யாணஞ் செய்ய தான் மறுத் ததைக் கோபமாக எடுத்துக்கொண்டாளோ என்று சோமா வதி எண்ணுகிருள்.

இப்பொழுது பேசிவரும் வீரக்கோனே விட சிறிசேனு எவ்வளவோ நல்லவன். ஆனுல் நான் வேறென்றை நினேத் துக் கலியாணஞ் செய்ய மாட்டேனென்று சொல்லிவிட் டேன். ஆனுல் அது!

நாட்டிலிருந்து வருபவர்கள் வீரக்கோனேப்பற்றி எவ் வளவோ சொல்லியிருக்கிருர்கள். அஸ்லின் மகளேக் கலியா

ணஞ் செய்வதாக வாக்களித்து கருத்தரிக்குமளவிற்கு உறவு வைத்து விட்டு ஏமாற்றியதையும் அந்தப் பெண் வேறு வழியின்றி நஞ்சு குடித்து இறந்ததையும் ஏக்கத்துடன் ஞாபகப்படுத்திக் கொள்கிருள் சோமாவதி. 'கலியாணம் செய்தவுடன் வீரக்கோன் திருந்தி விடுவான், அண்ணுவும் சின்ன வயதில் ரொம்ப சுட்டிதானே' என்று தாய் பொடி மெனிக்கா சோமாவதிக்குத் தினமும் புத்தி சொல்கிருள்.

'அம்மா சொல்வது போல் வீரக்கோன் திருந்துவாரா அல்லது எனது வாழ்க்கைதான் பாழாகிப் போகுமா? இதைவிட நான் நெஞ்சில் நினைப்பது நிறைவேறினல் பாக்கிய சாலிதான். அவர் என்னை வேறு இனத்தவள் என்று ஒதுக்குவாரோ!'

சோமாவதி மாட்டுப்பட்டி லயத்திலுள்ள தனது காம்பராவுக்குக்கிட்ட வரும் பொழுதே யாரோ உள்ளே பேசுவது தெளிவாகக் கேட்கிறது. தடித்த குரலிலிருந்து அது ஆரியதாச என இனங் கண்டு கொண்டு கூடையைக் கழற்ருமல் உள்ளே தாய்மொழியில் நடைபெறும் உரையாடலை உன்னிப்பாகக் கேட்கிருள்.

''அம்மே, இந்தத் தோட்டத்துப் பணியக்கணக்கில் நூறு ஏக்கர் எடுத்து நாட்டாள்களுக்கு கொடுக்கப் போருங்களாம். கிராம சேவகரிடம் பேர் கொடுக்கச் சொல்லி நேற்று நாட்டில் நடந்த கூட்டத்தில் மந்திரி சொன்னுர். உங்கள் பேரையும் நான் கொடுத்திட்டேன். கூலியாட்களோட நீங்கள் லயத்திலிருப்பது வெட்கம் தானே''—ஆரியதாச கூறுகிருன்.

''நான் இந்த லயத்துக்கு வந்து இருபத்தைந்து வருஷத்துக்கு மேலாகிவிட்டது. லயத்திலுள்ள ஆட்களோட தாய் பிள்ளை மாதிரிப் பழகி வருகின்ருேம். எங்களுக்கு ஒரு கஷ்டம் துன்பம் என்ருல் முதலில் ஓடி வருவதும் லயத்து ஆட்கள்தானே. ஆனுலும் நமக்கென்று ஒரு நிலம் இருந்தால் நல்லதுதான்'' —பொடிமெனிக்காவின் பதிலிது.

''சரி அம்மா நான் வந்து ரொம்ப நேரமாகிறது. நான் சொன்னபடி அடுத்த மாதம் ஆறுந் திகதி பதுளைக் கச்சேரிக்கு போய் உடனே கலியாணம் எழுதி அன்றைக்கே கலியாணத்தை முடிச்சு விடுவோம். சரி நான் போயிற்று வாறன்.''

வெளியே வந்த ஆரியதாச கூடையை லயத்துக் கூரைக் கம்பியில் தொங்க வைத்துக் கொண்டிருந்த சோமாவதியை விழுங்குவது போல் பார்க்கிறான். அவள் ஆரியதாசாவின் முகத்தைப் பார்க்காது. நிலத்தைப் பார்த்துக் கொண்டு லயத்துக் காம்பராவிற்குள் நுழைகிறாள்.

பொழுது இன்னும் இருளவில்லை. சோமாவதிக்கு வெளியே வெளிச்சத்தில் இருந்து விட்டு உள்ளே திடீரென்று வந்ததால், இயல்பாக மாட்டுப்பட்டி லயத்துக்காம்பராவிற்குள் குடிகொண்டிருக்கும் இருளில் ஒன்றுமே தெரியவில்லை.

## (22)

காலை இளம் கதிர்கள் தேயிலை மலைகளில் பொன்னொளி பரப்பிக்கொண்டிருக்கின்றன. நல்ல கொழுந்து வரச் சாத்தியமான, காலையில் வெயிலும் மாலையில் மழையும் உள்ள சுவாத்தியம்.

வேலை நிறுத்தம் முடிந்து ஒரு வாரமாகிவிட்டது. 'புதுத் துரைக்கு கொழுந்து ராசி' என மலையில் பெண்கள் பேசிக்கொண்டார்கள். பெரிய துரையின் வேலை எதிலும் ஒழுங்கிருக்கும். காலையில் எட்டு மணிக்கு முன்னரே ஆபிஸிற்குப் போய், பிரட்டுத் துண்டையும் டயறிகளையும்

பார்த்துவிட்டு, மலேக்குப் புறப்பட்டுவிடுவார். ஒருமணிச் சங்கு அடித்தபின்னர்தான் மலேயிலிருந்து பங்களாவிற்குத் திரும்புவார். பின் மூன்று மணிக்கு ஸ்டோர் ஆபிஸிற்கு வந்து அன்று உற்பத்தி செய்யப்பட்ட தேயிலேயின் சாயத்தை அதற்குரிய கோப்பையில் இட்டுத் தரத்தைக் கணிப்பார்.

''புதுத் தும்புக்கட்டை நன்ருகக் கூட்டும்'' என்றே அவரை எல்லோரும் கணித்தார்கள்.

சரியாக காலே எட்டு மணி. துரை ஆபிஸை விட்டு மலேக்குப் புறப்படுகிருர். அவர் கைவசம் மூன்று டிவிஷன் பிரட்டுத் துண்டுகளும் வானுக்குள் தூரதிருஷ்டிக் கண்ணுடியும் இருக்கின்றன.

வான் மேற்கணக்கை நோக்கிப் போய் எட்டாம் நம்பர் மலேயில் நிற்கிறது. அந்த மலேயில் இரண்டு தொழிலாளர்கள் 'நீர் வாது' வெட்டிக்கொண்டிருக்கிருர்கள்.கவ்வாத்து வெட்டும் போது மரம் காய்ந்துபோகாது பச்சையாக இருப்பதற்கு ஓரிரு வாதுகளே விடுவார்கள். அதுவே நீர்வாது. வெட்டப்பட்ட வாதுகள் துளிர்த்தவுடன் நீர்வாது வெட்டப்படும். அந்த மலேயை நீர்வாது வெட்ட கொந்தரப்புக்கு கொடுத்ததாக துரைக்கு ஞாபகம் இருக்கிறது. மலேயில் வீரபுத்திரன் கங்காணியின் தம்பி அம்மாசியும் மருமகன் பச்சைமுத்துவும் துரையைக் கண்டதும் பதட்டமடைகிருர்கள். துரை 'வேனே' விட்டு இறங்கிவந்து ''எத்தனே ஏக்கர்? எத்தனே ஆள்?'' என்று கேட்கிருர்.

சலாம் வைத்துவிட்டு அம்மாசி சொல்கிருன்; ''ரெண்டு ஆளுதானுங்க தொரை. ரெண்டு ஏக்கர் இன்னிக்கு எப்படியும் வெட்டி முடிச்சிடுவம் தொரை.'' ''சரி மிச்சம் நல்லது'' என்று சொல்லிவிட்டு துரை வேனில் ஏறி பதினும் நம்பர் மலேக்குப் போகிருர்.

எந்த மலேயிலிருந்து பார்த்தாலும் இந்த மலேக்குப் போகும் பாதை யாருக்கும் தெரியாது. இரு பக்கங்களிலும்

மலை அரண் செய்திருக்கிறது. துரை வேனை நிறுத்திவிட்டு பாதையில் ஒரு பக்கத்திலுள்ள மலையின் உச்சிக்கு ஏறி ஒரு வரும் காணுத வகையில் ஒரு சரிவில் நின்று கொண்டு தூர திருஷ்டிக் கண்ணுடியில் தூரத்தே தெரியும் மலைகளைப் பார்க்கிருர். எங்கும் பச்சைப் பசேலெனத் தெரிகிறது. பாதைகளில் உயர வளர்ந்து குடைவிரித்து, குருதிச் சிவப்பு நிறத்தில் பூத்திருக்கும் பூக்களும், பச்சை உரத்திற்காகப் பொட்டல்களிலும் கான்களிலும் நாட்டப்பட்டிருக்கும் காட்டுச் சூரியகாந்தியின் பூக்களும் கண்ணுடியில் அழகாகத் தெரிகின்றன. துரை காட்சி அழகில் மனதைப் பறிகொடுக்காது, 'எந்த மலையில் தேயிலைக்கு மேல் புல் இருக்கிறதெனப் பார்க்கிருர். தூரதிருஷ்டிக் கண்ணுடி கொழுந்தெடுக்கும் பத்தாம் நம்பர் மலையை நோக்குகிறது.

கணக்கப்பிள்ளை, இன்று தனது திட்டத்தை எப்படியும் நிறைவேற்றவேண்டுமெனத் திடசங்கற்பம் கொண்டிருக்கிருர். வசதியாக கணக்கப்பிள்ளையின் பங்களாவிற்கு அருகில்தான் கொழுந்தெடுக்கும் மலை. போட்டுள்ள திட்டத்தின்படி ஒன்பது மணிக்கு கொழுந்து நிறுத்துவிட்டு ஐயா வீட்டிற்குப் போவார். சாக்குக்கார சங்கிலி அஞ்சலையிடம்வந்து அவளது குழந்தைக்குச் சுகமில்லை என்று சொல்வான். வீரமுத்துக் கங்காணி அவளுக்கு வீட்டிற்குப்போக லீவு கொடுப்பான். அஞ்சலை ஐயாவின் பங்களாவைத் தாண்டித்தான் லயத்துக்குப் போகவேண்டும். மீதியை ஐயா பார்த்துக்கொள்வார். ஐயா போட்ட திட்டத்தின் படியே எல்லாம் நிறைவேறுகிறது.

''ஓம் புள்ளைக்கு ரொம்ப வவுத்து வலியும் வாந்தியும். கண்ணுமுளியெல்லாம் வெளிய வந்திரிச்சு. வெட்டி வெட்டி இழுக்குது'' என்ற செய்தியை சாக்குக்காரனிடம் இருந்து கேட்ட அஞ்சலை துடிதுடித்துப் பதைபதைத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக வருகிருள். அவளது படங்கில் அட்டை ஒன்று தொற்றி நிற்பது அவளுக்குத் தெரியவில்லை.

ஐயா ஆவலுடன் தனது பங்களா வாசலில் கழுகுப் பார்வையுடன் காத்துக்கொண்டு நிற்கிறார். இவ்வளவு நாளும் அஞ்சலையின் இயற்கையான அழகை கண்களால் சுவைத்த ஐயாவுக்கு இன்று உடலையே சுவைக்கப்போகும் ஆவல் கரைபுரள்கிறது.

அவள் அவரது பங்களாவிற்கு அருகில் வர, ஐயா கேட்கிறார்: "அஞ்சலை எங்க போறது; அரிசி செக்ரோல் ஒன்று இருக்கு: கொண்டுபோய் அரிசிக் கிளாக்கருகிட்ட குடுத்துடு."

"ஐயா ஏம் புள்ளைக்கு ரொம்ப வருத்தமுன்னு மலைக்கு ஆள் வந்திரிச்சி. கங்காணிகிட்ட லீவு வாங்கிக்கிட்டு லயத்துக்குப் போறேனுங்க."

"ஐயாவின் அடுத்த திட்டம் செயற்படவேண்டுமே! அவள் உள்ளுக்கு வந்ததும் கதவைப் பூட்டவேண்டியது தானே! அப்புறம் அவள் அவரது பிடியிலிருந்து தப்ப முடியாது. ஒதுக்குப்புறத்திலிருக்கும் கணக்கப்பிள்ளையின் பங்களாவில் நடப்பது ஒன்றுமே யாருக்கும் தெரியாது. அஞ்சலை உள்ளே வந்துவிட்டாள். தனது நீண்ட நாளைய ஆசை நிறைவேறப்போகிறதென்ற அவசரத்தில் கதவைப் பூட்டாமலே ஐயா உண்மையைக் கக்கிவிடுகிறார்.

"அஞ்சல ஒம் புள்ளைக்கு சொகமில்லேன்னு சொன்னது எல்லாம் பொய். நீ உள்ளுக்கு வா. நான் ஒரு சங்கதி சொல்றன் பயப்படாதே. இங்கிட்டு ஒருத்தரும் வர மாட்டாங்க" ஐயா முகம் யாசிக்க பணிவாகக் கேட்கிறார்.

அஞ்சலைக்கு எல்லாம் புரிகிறது.

"ஐயா சாமி என்ன வுட்டுடுங்க" அஞ்சலை கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓடுகிறாள்.

இப்படி அவள் செய்வாளென்று ஐயா எதிர்பார்க்கவேயில்லை. கோபத்தை வரவழைத்துக்கொண்டு கதவுக்கு

வெளியே வந்து சொல்கிறார்: ''அஞ்சல இந்த சங்கதிய வெளியில வுட்டியோ அப்புறம் என்ன செய்வேன்னு தெரியுந்தானே? எங்க சுத்தியும் நம்மகிட்டதானே வரணும். எங் கையிலதான் கொழுந்து செக்ரோல் இருக்கு வெளங்கிச்சா?''

அஞ்சலையின் படங்கில் இருந்து— அவளது இரத்தத்தைக் குடிக்கத் துடித்த அட்டையை அவள் கைகளால் நசித்து வீசிவிட்டு பெருமூச்சுடன் மலையை நோக்கிப் போகிறாள்.

'ஸ்பெஷல்' பானம் அருந்தவேண்டுமென்ற தாகம் கொண்டிருந்த ஐயாவிற்கு உடன் நிவாரணமாக வழக்கமாக அருந்தும் பானம் அருந்த ஆசையாக வருகிறது.

அங்கு வந்த சங்கிலியை வீரபுத்திரன் கங்காணியிடம் சொல்லும்படி சொல்லி அனுப்புகிறார். ''மத்த மலைக்குச் சாக்குப் பத்தாது கொஞ்சம் சாக்கு அனுப்பச் சொல்லி கங்காணிக்கிட்ட சொல்றது.''

கங்காணிக்கு ஐயாவின் பரிபாஷை விளங்கும். பஞ்சவர்ணத்த அனுப்புகிறான். அவள் ஐயாவின் பங்களாவிற்குள் பின்கதவு வழியாக நுழைகிறாள்.

கணக்கப்பிள்ளை தாகம் தீர்த்துக்கொண்டிருக்கும்போது வெளியே பெரியதுரையின் வானின் சத்தம் கேட்கிறது. உடல் பதற காற்சட்டையை அணிந்துகொண்டு வெளியே ஓடுகிறார் கணக்கப்பிள்ளை.

''என்ன கணக்கப்புள்ள வூட்டல செய்யிறது'' துரை சத்தமாக வானிலிருந்து கேட்கிறார். ''இப்பத்தான் சேர் ஒம்பது மணிக் கொழுந்து நிறுத்திட்டு தேத்தண்ணி குடிக்க வந்ததுங்க.''

''ஆமா கணக்குப்பிள்ளைக்கு ரொம்ப தாகம்தானே'' துரை சொல்கிறார். ''தொர சொல்றது எனக்கொன்றும் வெளங்கலையே.''

''என்ன கணக்கப்பிள்ளை கணக்கு வுடுறதா'' துரை சொன்னதைக் கேட்டதும் கணக்கப்பிள்ளைக்கு ஒரே வியப்பாக இருக்கிறது. 'ஒரு சிங்களத் துரை இப்படி கருத்தோடு பேசுகிறாரே.' அப்போது கணக்கப்பிள்ளையின் வீட்டிற்குப் பின்புறமாகவுள்ள தேயிலைக்குள் ஏதோ சரசரத்துக்கொண்டு ஓடுகிறது. ''என்ன கணக்கப்புள்ள அது'' துரை கேட்கிறார்.

''அது சேர் லயத்து நாய்கள் மலைக்கு தண்ணிகொண்டு வார ஆள்களோட வாறது'' கணக்கப்பிள்ளை சொல்கிறார்.

''ஆமா கணக்குப் புள்ள ரெண்டு கால் நாய் தான் ஓடுறது'' என்று துரை சொன்னதும் கணக்கப்பிள்ளை முழிக்கிறார்.

'கணக்குப் புள்ளே ஒனக்கு எத்தின வயசு?''

''நாற்பத்தெட்டுங்க சேர்.''

''எத்தன புள்ளங்க இருக்கு, பெரிய புள்ளக்கு வயது எத்தின, சம்சாரம் வூட்ல இல்ல?''

''ஐந்து புள்ளைங்க. மூத்தது பொம்புளப் புள்ளைங்க. அதுக்குப் பதினெட்டு வயசுங்க. பிள்ளைங்க ஸ்கூலுக்குப் போறதுக்காக சம்சாரமும் பிள்ளைங்களும் டவுணில வீடெடுத்துக்கிட்டு இருக்காங்க,''

''ஒரு வயசுக் கொமரி இருக்க ஒனக்கு வெக்கமில்லே ......! ஒரு மாசத்துக்குள்ள குடும்பத்த தோட்டத்துக்கு கூட்டியரணும். அடுத்த மாசத்திலிருந்து ஒன்ன பணியக் கணக்குக்கு மாத்திப்போடறது. வெளங்கிச்சா.''

''ஏங்க சேர் நான் ஒரு குத்தமும் செய்யலீங்களே!'' கணக்கப்பிள்ளை மிகப் பணிவான குரலில் கேட்கிறார்.

துரை பதில் எதுவும் சொல்லவில்லை. வான் புறப்படுகிறது கணக்கப்பிள்ளை 'சலாம்' வைக்கிறார்.

துரையின் வேன் உரம்போடும் மலையை அடைகிறது. துரையைக் கண்டதும் மலையில் நின்ற கண்டக்டர் விரைந்து வந்து ''குட்மோணிங் சேர்'' என்கிறார்.

''குட்மோணிங் மிஸ்டர் மூக்கையா'' என்று துரை சொல்லிவிட்டு ஆங்கிலத்தில் கேட்கிறார்: ''எத்தனை ஆட்கள் உரம் போடுகிறார்கள்?'' ''இருபத்தினாலு ஆட்கள். இப்போ இருபத்திரண்டு ஆட்கள் மலையில் நிற்கிறார்கள். ஒருவனை ஆட்களுக்கு தேநீர் கொண்டுவர அனுப்பிவிட்டேன். மற்றவன் உரச்சாக்கு பாரம் கொடுக்கப் போய் விட்டான்'' கண்டக்டர் பதில் சொல்கிறார்.

'நேற்றும் உரம்போட இருபத்தினாலு ஆட்கள் தானே'' துரை கேட்கிறார், ''ஆமாங்க துரை அதே ஆட்களைத் தான் போட்டிருக்கிறேன்'' கண்டக்டர் சொல்கிறார். ''வெறி குட்'' என்று துரை சொல்லிவிட்டு அங்கு வேலை செய்துகொண்டு நின்ற சுப்பைவைசரைக் கூப்பிட்டு உரம் போடும் தொழிலாளர்களது பெயர்களை எழுதித் தரும்படி உத்தரவிடுகிறார். துரையும் கண்டக்டரும் ஆட்கள் உரம் போடுவதைப் பார்வையிடுகின்றனர். யாரோ ஒருவன் துரையைக் கடைக்கண்ணால் பார்ப்பதும் உடலைக் குனியாது உரத்தை அநாயாசமாக வீசுவதுமாக இருக்கிறான். ''இந்தா ஒன் பெயரென்ன மனுஷன் ஐஸ் அடிக்கிறியா?'' துரை அவனைப் பார்த்துச் சத்தமிடுகிறார். மலையில் வேலை செய்துகொண்டிருக்கும் பலருக்கு துரை, 'ஐஸ் அய்யாச்சாமியை இனங் கண்டுகொண்டுவிட்டாரே' என நினைக்கச் சிரிப்பு வருகிறது. கண்டக்டர் சமயோசிதமாக சொல்கிறார்:''இந்தா அய்யாச்சாமி துரை சொல்லுறதைக் கேட்டியா? முதலில் நா சொன்னதுதானே ஒன் வேலை சரியில்லை என்னு.'' துரை அடுத்த நிரையில் உரம் போட்டுக் கொண்டிருப்பவனைப் பார்த்துவிட்டு மீண்டும் அய்யாச் சாமியைப் பார்த்துச் சொல்கிறார். ''இந்தா பார் மனுஷன் அடுத்த நிரையில் உள்ள ஆள் எப்படி உரம் போடுறது அப்படி போடணும்'' அடுத்த நிரையில் பெருமாளே உரத்தை கவனமாக அள்ளி உடலைக் குனிந்து மரங்களுக்கு நடுவே பரப்பிப் போடுகிறான்.

சுப்பவைசர் உரம்போடும் ஆட்களது பெயர்களை எழுதிக் கொண்டு வந்து துரையிடம் கொடுக்கிறுன். துரை அத்துண்டைச் சரி பார்த்து ஒப்பமிடும்படி கண்டக்டரிடம் நீட்டுகிறுர். கண்டக்டர் தனது சொந்த வேலைக்கு எடுத்த இருவரது பேரும் அதில் இருக்கிறதா என்பதைக் கவனமாகப் பார்த்துவிட்டு ஒப்பம் வைத்து துரையிடம் திருப்பிக் கொடுக்கிறுர்.

பெரிய துரையின் 'வான்' சின்னத்துரை வேலை பார்த்துக் கொண்டிருக்கும் நடுக்கணக்கு உரம்போடும் மலையை நோக்கிப் போகிறது. சின்னத்துரைக்கு ஏதோ சொல்லிக் கூட்டிக் கொண்டு பெரியதுரை வானில் மேற்கணக்குக்கு வந்து கண்டக்டரின் பங்களாவுக்கு எதிரேயுள்ள புல்லுக் கானுக்கு அருகில் நிறுத்துகிறுர்.

புற்றரையில் இரு தொழிலாளர்கள் புல்லறுத்துக் கொண்டிருக்கிறுர்கள். சின்னத்துரை இருவரையும் அழைக்கிறுர்.

"ஓங்க பெயரென்ன?" பெரியதுரை கேட்கிறுர்.

"நான் பழனீங்க தொர"

"தொர நான் மருதங்க" என முறையே பழனியும் மருதையும் சொல்கிறுர்கள்.

பெரியதுரை சுப்பவைசர் உரம்போடும் மலையில் கொடுத்த துண்டில் இருவரது பெயரும் இருப்பதைக் கவனித்துவிட்டுக் கேட்கிறுர்: "கண்டக்டர் ஐயா வூட்டில் தானே தினமும் வேலை செய்யிறது" "ஆமாங்க தொர" என இருவரும் பதில் சொல்கிறுர்கள். இருவரையும் ஆபிசுக்கு போகச் சொல்லிவிட்டு பெரிய துரையும் சின்னத்துரையும் 'நீர்வாது' வெட்டும் மலையை நோக்கிப் போகிறுர்கள்.

பெரிய துரை 'கொந்தரப்புக் கொடுத்த மலையை கண்டக்டர் ஆட்கள் போட்டு நீர்வாது வெட்டுகிறார்' என்பதை சின்னத் துரைக்கு நிரூபித்துவிட்டு அங்கு வேலை செய்து கொண்டிருந்த இருவரையும் ஆபிசுக்குப் போகச் சொல்லிச் சொல்கிறார். அடுத்து உரம்போடும் மலையை நோக்கி பெரிய துரையும் சின்னத் துரையும் போகிறார்கள். சிறிது தூரத்துக்கு முன் வேனை நிறுத்திவிட்டு இருவரும் நடந்து செல்கிறார்கள். சிறிது நேரத்திற்கு முன்புதான் உரம் போட்டுவிட்டுத் தொழிலாளர்கள் வீடு திரும்பியிருக்கிறார்கள். கண்டக்டரும் கங்காணியும் இன்னும் மலையைவிட்டுத் திரும்பவில்லை. முடக்கொன்றில் திரும்பும்போது பெரிய துரையும் சின்னத் துரையும் கண்ட காட்சி! ஆரிய தாசாவும் அய்யாச்சாமியும் இரு சாக்கில் உரத்தைக் கொண்டு நாட்டை நோக்கித் தங்கள் பிரயாணத்தை ஆரம்பிக்கிறார்கள். பெரிய துரை அவர்களை நிறுத்தி நடந்தவற்றைக் கேட்க, ஆரியதாசா தான் தப்பிக் கொள்வதற்காக கண்டக்டர் நாட்டிற்கு உரம் விற்கும் இரகசியத்தை ஒன்றும் விடாது எல்லாவற்றையும் சொல்லிவிடுகிறான். பெரிய துரையும் சின்னத் துரையும், கண்டக்டர், ஆரிய தாச, அய்யாச்சாமி, கங்காணி ஆகியோருடன் ஆபீசை நோக்கிப் போகிறார்கள்.

அன்றைய அந்திப்பொழுது, தொழிலாளர்கள் பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி நிவாரணம் பெறும் ஆபீஸ் நாள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆபீஸ் ஆரம்பிப்பதற்கு முன்பு பெரிய துரை மேற்கணக்குக் கண்டக்டர் செய்துள்ள குற்றங்களுடன் சம்பந்தமான தொழிலாளர்களைத் தீர விசாரணை செய்து கொந்தரப்புக் கொடுத்த மலைக்கு ஆள்போட்டது, உரம்போடும் மலைக்குப்போட்ட ஆட்களைத் தனது வீட்டு வேலைக்கு வைத்திருந்தது, உரத்தைக் களவாட முனைந்தது ஆகிய குற்றங்களைக் காட்டி 'இதற்காக ஏன் வேலை நீக்கம் செய்ய முடியா'தென விளக்கங் கேட்டு ஒரு கடிதத்தைக் கொடுத்துள்ளார்.

பெரியதுரைக்கு முன் பெட்டிப் பாம்பாக அடங்கி விட்டு சின்னத்துரை உட்கார்ந்திருக்கிறார். மேற்கணக்கு கண்டக்டரைத் தவிர்ந்த, ஏனைய கணக்குக் கண்டக்டர் களும், மூன்று கணக்குத் தலைவர்களும், பேசப்படும் பிரச் சினையுடன் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களும் கூடி நிற் கின்றார்கள்.

பெருமாள், துரை சொல்வதை மிகக் கவன மாகக் கேட்கிறான். கடந்த ஒருவார காலமாகப் பெரியதுரையின் போக்குகளை மிக நுண்ணியமாகக் கவ னித்து வந்திருக்கிறான். அழகாகப் பேசி ஏமாற்றும் துரை மார்கள் பலரைக் கண்டிருக்கிறான். மலையாண்டியும் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டபோது பெருமாளுக்கு இது பற்றிச் சொல்லியிருக்கிறான். தமது கோரிக்கைகளை நிறை வேற்றாது பெரியதுரை தட்டிக் கழித்து விடுவாராயின் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் தோட்டத்தில் நடைபெறும் ஒவ்வொரு செயலையும் உன்னிப்பாகக் கவனித்து வருகிறான். பெரு மாளுக்கு இதுவரை பெரியதுரையின் நடத்தை நம்பிக்கை யூட்டுவதாகவே இருக்கிறது.

ஆபிசில் தலைவர்கள் எடுத்துச் சொல்லும் அன்றாடப் பிரச்சினைகளைத் துரை கவனமாகக் கேட்டு, சம்பந்தப் பட்ட தொழிலாளர்கள் திருப்தியடையும் முறையில் உரிய பரிகாரத்தை உடனே சொல்கிறார். தலைவர் என்ற முறை யில் பெருமாளுக்கு உரிய மதிப்புக் கொடுத்துத் துரை பேசுகிறார். உதவி தொழில் ஆணையாளர்கள் முன்னிலை யில் நடைபெற்ற மாநாட்டில் தான் அளித்த வாக்குறுதி யின்படி கோரிக்கை நிறைவேற்ற எடுக்கப்பட்டுள்ள ஆரம்ப நடவடிக்கைகளை விளக்குகிறார்.

இப்பொழுதெல்லாம் பொழுது இருள்வதற்கு எவ்வ ளவோ நேரத்திற்கு முன்னமே பங்கீட்டுப் பொருள் விநி யோகிக்கப்பட்டு விடுகிறது. ஒவ்வொரு தொழிலாளியும்

வேலை செய்யும் நாட்களைக் குறிக்கும் 'போட் செக்ரூல்' தொழிலாளர்களின் பார்வைக்குத் தொங்கவிடப்பட்டிருக்கும். நோயாளர்கள் போக்கு வரத்துக்கு உடனடி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதத்தில் இருந்து தற்காலிகத் தொழிலாளர்கள் எல்லோரும் நிரந்தர தொழிலாளர்களாக்கப்படுவர். தாயகம் திரும்புவோருக்குத் தோட்டம் செய்து கொடுக்க வேண்டிய வசதிகளைக் கவனிக்க இரண்டாவது கிளாக்கரை பெரியதுரை பணித்திருக்கிறார்.

குழந்தை மடுவத்தை உடைத்து, பல வசதிகளைக் கொண்ட புதிய மடுவம் கட்டி, குழந்தைகளைப் பராமரிக்க ஒரு பயிற்றப்பட்ட பெண்ணை நியமிப்பதாகவும், ஸ்டோர் லயத்தை உடைத்து புதுலயம் கட்டுவதற்கு எஸ்டிமேட் போட்டு மேலிடத்திற்கு அனுமதிபெற அனுப்பி இருப்பதாகவும், தோட்டத்து ஆசுப்பத்திரிக்கு வேண்டிய மருந்துகளை எடுத்துக் கொடுத்திருப்பதாகவும் நேற்றே தோட்டத்திற்கு ஒரு மருத்துவமாது வேண்டுமென்று தினசரிப் பத்திரிகையில்விளம்பரம் போட்டிருப்பதாகவும் சொல்லி விட்டுத் துரை தொடங்குகிறார்:- ''தொரமாருமட்டும் தோட்டத்த நடத்துற காலம் போயிருச்சு. இப்ப கூலி ஆட்கள், ஸ்ராவ்மார் எல்லோரும் தொரமாரோட சேர்ந்து தோட்டத்தை நடத்தணும். நாம் எல்லோரும் தோட்டத்துப் பங்காளிகள் மாதிரி உழைக்கணும். அடுத்த மாசத்திலிருந்து தலைவர்மார் பெரிய ஐயாமார் எல்லோரும் சேர்ந்து மாசத்தில ஒருதரம் நம்ம ஆபிஸ்ல கூடி தோட்ட வேலைகளைப் பற்றிப் பேசிறது. இதைத்தான் 'வேக்கஸ் கவுண்சில்' என்கிறது; சரி... இன்னிக்கு வேறொரு பிரச்சினையும் பேசுறதுக்கு இல்லத்தானே..? ஒரு சங்கதி... தோட்டத்துல படிச்ச பொடியன்கள் இருந்தா அடுத்தமுறை ஆபிசுக்கு கூட்டிக்கிட்டு வாங்க. மலயில சரி ஸ்டோரில சரி வேலை படிக்க ஒரு சான்ஸ் தாரேன். அப்புறம் நம்ம தோட்டத்துல ஸ்கூல் மாஸ்டர் வேலை ஒண்ணு இருக்கு.

படிச்சு பாஸ் பண்ணுன ஆரும் இருந்திச்சின்னு அப்ளிகேசன் போடச் சொல்லுறது'' ஆபிசை மூடிவிட்டு பெரிய துரை வேனில் ஸ்டோரை நோக்கிப் போகிறார்.

துரை கடைசியாகச் சொன்ன அந்த 'மாஸ்டர்' வேலையை மனத்திலிருத்தி, பல நாட்களுக்கு முன்பு கவ்வாத்து வெட்டப்பட்டு, பின் அறுகு எடுத்து, முள்ளுக் குத்தி உரம்போட்டு, சில நாட்களுக்கு முன் வெடிக் கொழுந்து துளிர்த்த மலையினூடாக மலையாண்டியைச் சந்திக்க வேகமாகச் செல்கிறான் பெருமாள்.

## ( 23 )

ஊளியாகத்துளைக்கும் கடுங்குளிர் காற்றை நுழைய விடாது சால்வையால் காதுகளைச் சுற்றிக் கட்டிக் கையில் ஒரு குடை, ரோச்லைட் சகிதம் மாஸ்டர் பெரிய கிளாக்கர் வீட்டை நோக்கிப் போகிறார். ஸ்டோரை வந்தடையும் ஏற்றத்தை ஏறியதும் மாஸ்டருக்கு மூச்சிளைக்கிறது. சிறிது ஓய்வெடுத்துக் கொள்கிறார். மலை ஏற்றங்களை ஏறிப் பழக்கமற்ற ஐம்பது வருடங்களுக்கு மேலாகத் துடித்துக் கொண்டிருக்கும் அவரது இதயம் மிகவும் வேகமாகத் துடிக்கிறது. 'பெரிய கிளாக்கர்' ஐயா வீட்டில் இருப்பாரா? போகும் சங்கதி சரிவருமா? என்ற சிந்தனை மேலும் அவரது இதயத்துடிப்பினை வேகமாக்குகிறது.

இந்தவிடயம் கட்டாயம் நிறைவேறும் என்ற நம்பிக்கை அவருக்கு உண்டு. மாஸ்டரைப் பொறுத்தளவில் இந்தத் தோட்டம் அதிர்ஷ்டமானது. முப்பது வருஷங்களின் முன் யாழ்ப்பாணத்தில் இருந்து வேலைதேடி வந்தவருக்கு இந்தத் தோட்டம் தஞ்சம் கொடுத்தது. ஒரு மாஸ்டர் மட்டும் இருந்த இந்தத் தோட்டத்தில் தன் முயற்சியால் ஒரு வெற்றிடம் ஏற்படுத்தி, ஊரிலிருந்த மாமன் மகளைக் கலியாணம் செய்து கொண்டு வந்து அந்த வெற்

றிடத்தை நிரப்பி, வருமானத்தை இரட்டிப்பாக அதி கரித்துக் கொண்டார்கள். இந்தத் தோட்டத்தில்தான் அவரது நான்கு குழந்தைகளும் பிறந்தன. 'பிள்ளைகள் நல்ல கல்விபெற வேண்டுமாயின் யாழ்ப்பாணத்துக்குத் தான் அனுப்பவேணும் என்ற முடிவுடன் பிள்ளைகளை யாழ்ப்பாணத்தில் விட்டுப் படிப்பிக்கிருர் மாஸ்டர். 'மூத்த மகளுக்கு இந்தத் தோட்டத்தில் ஆசிரியர் வேலை எடுத்துக் கொடுக்க வேண்டும்' என்பதே அவருடைய இன் றைய திட்டம். இதற்காகக் கடந்த சில ஆண்டுகளாகப் பாடுபடுகிருர். ஆரம்ப முயற்சியாகப் பிள்ளைகளின் வரவை இடாப்பில் கூட்டிக் காட்டத் தொடங்கினுர். நூற்றைம்பது மாணவர்கள் இருந்தால்தான் மூன்று ஆசிரி யர்களுக்கு இடமுண்டு. முன்பு போலல்லாது தோட்டத் தில் ஆசிரியர் பதவி எடுப்பதாயின் நல்ல கல்வித்தகைமை கள் வேண்டும். மகள் மூன்றுதடவை க. பொ. த. (சாதா ரண) பரீட்சையில் தோற்றித்தோல்வி கண்டு, இம்முறை நான்காவது தடவையாகத் தோற்றியுள்ளார். இந்தத் தடவை கட்டாயம் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை யுடன் முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது தான் இந்தத்தடை வந்தது. முதற்கட்டமாக நல்ல நிலை யிலுள்ள தோட்டப்பாடசாலைகளைக் கல்வித் திணைக்களம் பொறுப்பேற்பதாக அறிவிக்கப்பட்டது. மாஸ்டர் எங் கெல்லாமோ ஒடி, பின்கதவால் நுழைந்து, முதற்கட்ட மாக அரசு கையேற்பதாக இருந்த பாடசாலைகளின் பெயர்ப்பட்டியலில் இருந்து இந்தத் தோட்டப்பாட சாலையை அப்புறப்படுத்தினுர். மகளும் நான்காவது தடவை தேவையான தகைமைகளுடன் சோதனை சித்தி யடைந்துவிட்டாள். இப்பொழுது மகளை ஆசிரியையாக இந்தத் தோட்டத்தில் புகுத்திவிட்டால் அடுத்த கட்டமாக அரசு பொறுப்பேற்கும்போது அவளும் ஒரு அரசாங்க ஆசிரியையாகி விடுவாள்.

மாஸ்டர் ஸ்டோருக்கு வந்துவிட்டார். ஸ்டோர் வாசலில் துரையின் கார் நிற்கிறது. பெரிய துரையும் டீமேக்கரும் ஸ்டோர் ஆபிஸில் ஏதோ பேசிக் கொண்டிருப்பது ஸ்டோர் கண்ணுடியினூடாகத் தெரிகிறது. இன்றுதான் அவர் துரையை முதற்தடவையாகப் பார்க்கிருர். இரண்டாவது டீமேக்கர் ஸ்டோரிலிருந்து வெளியே வருகிருர். மாஸ்டர் அவரைக் கேட்கிருர்; ''ஐயா, துரை இந்த நேரத்துல ஸ்டோரில் நிற்கிருரே ஏதாவது கரைச்சலே?'' ''பெரிய துரை தூள் செக் பண்ணிஞரு ஸ்டாக் கூடுதலாக இருக்கு. ஒரு கரைச்சலுமில்ல'' என்று சொல்லிக் கொண்டு அவர் அவசரமாய்ப் போய் விடுகிருர்.

மாஸ்டர் தனது நடையின் வேகத்தைக் கூட்டிச் சென்று பெரிய கிளாக்கர் வீட்டுக்குச் செல்லும் பாதைக்கு வந்துவிட்டார். மாஸ்டரின் சிந்தனை விரிகிறது. புதுத் துரையைப் பற்றிப் பல சங்கதிகளைக் கேள்விப்பட்டிருக்கிருர். 'பெரியவர் ஒருமாதிரிப் பேர்வழி' என்று தான் கதைக்கிருர்கள். எண்டாலும் இந்தவிடயத்தில் இவன் என்னதான் செய்யிறது. பெரிய கிளாக்கர், ஆள் பெரிய கொம்பன்... அவன் மனுஷன் மனம் வைச்சால் செய்து முடிச்சிடுவான்' 'பெரிய துரை அரசன் என்ருல் பெரிய கிளாக்கர் மந்திரி; என்பது மாஸ்டரின் தோட்ட வாழ்வின் அனுபவம். பெரியதுரை மாஸ்டரின் வேலையை அளவிடுவது வருடத்தில் ஒருமுறை நடைபெறும் சோதனையில். சி. ஈ. ஓ. 'லொக் புக்கில்' எழுதும் வாக்கியத்தைக் கொண்டே என்பதை மாஸ்டர் அறிவார். இன்று காலையில்தான், தோட்டத்தில் பாடசாலை இருக்கிறதா ஆசிரியர்கள் இருக்கிருர்களா என்பதைப் பார்ப்பதுபோல வருடத்திற்கு ஒரு தடவை சோதனை வைத்துப் பிள்ளைகளுக்கு வகுப்பேற்றும் வைபவத்தை நடத்தி, நேரசூசி இடாப்புக்களுக்கு ஒப்பம் வைத்துவிட்டுப் போகும் இன்ஸ்பெக்டர் வந்தார். மாஸ்டர் பெருமுயற்சி எடுத்து இவ்வளவு

நாளும் வராத பிள்ளைகள், இராப்பாடசாலைக்குப் படிக்கப்போகும் பிள்ளைகள், டவுன் ஸ்கூலுக்குப் போகும் பிள்ளைகள் முதலியோரைச் சேர்த்து, பிள்ளைகளின் வரவை நாற்றறுபதாகக் காட்டி, லொக் புக்கில், 'காலம் தாழ்த்தாது ஓர் ஆசிரியர் வேண்டும்' என்பதை இன்ஸ்பெக்டரைக் கொண்டு எழுதுவித்துவிட்டார்.

பெரிய கிளாக்கரின் பங்களா வாசலுக்கு மாஸ்டர் வந்துவிட்டார், வாசலில் பொருத்தப்பட்டிருக்கும் அழைக்கும் மணியை மெதுவாக அமுக்கினுர். 'யாரது' பெரிய கிளாக்கர் அதிகாரக்குரலுடன் கதவைத் திறக்கிருர்.

''குட் ஈவினிங் சேர்'' என்று பவ்வியமாக வந்தனம் கூறுகிருர் மாஸ்டர். 'கொலோனி'யல் ஆட்சியின் எச்ச சொச்சமாக உள்ள மேலதிகாரிகளுக்கு வாயால் வந்தனம் கூறும் போலிச் சம்பிரதாயம் இன்று தோட்டங்களில் உண்டென்பதை நன்கறிந்த மாஸ்டர் இரண்டாம் தடவையாக வந்தனம் கூற ''குட் ஈவினிங் உட்காருங்க மாஸ்டர்'' என்று நாற்காலியைக் காட்டுகிருர் பெரிய கிளாக்கர், மாஸ்டர் குடையைச் சுவரில் சாத்தி வைத்துவிட்டு, டோர்ச்லைட்டைப் பக்குவமாக நிலத்தில் வைத்துவிட்டு, நாற்காலியில் உட்காருகிருர். ''இண்ணைக்குத்தானே இன்ஸ்பெக்ஸன் எத்தனைபேர் பாஸ்'' பெரிய கிளாக்கர் ஆரம்பிக்கிருர். ஐயாவின் தாய்மொழி சிங்களம் என்ருலும் நீண்டகாலமாகத் தோட்டத்திலிருந்ததால் தமிழ் நன்ருகப் பேசுவார்.

மாஸ்டர் பதில் சொல்கிருர். ''தொண்ணூற்றிஏழு பேசண்டேச் பாஸ் சேர்.''

''ஆமா உங்க ஊர் ஆள்தானே... கூட்டிப் போட்டிருப்பார்.''

இதற்கு மாஸ்டர் ஒன்றுமே பேசவில்லை. ஐயாவைத் தொடர்கிருர்,

''எங்க பாத்தாலும் உங்க ஆள்தானே— நல்லாப்பாடு பட்டு முன்னேறிடுவாங்க. ஏன் மாஸ்டர் நீங்க பாடு பட்டா கீரிமலையில் தேயிலை போடலாமே'' பெரிய கிளாக்கர் பெரிய சத்தமிட்டுச் சிரிக்கிருர்.

மாஸ்டருக்குப் புரிந்துவிட்டது ஐயாவின் கிண்டல் மிகுந்த பேச்சிலும், சிவப்பேறிய கண்களிலிருந்தும் கணித்துக் கொள்கிருர். 'ஐயா ஏதோ குடிவகை உட்கொண்டிருக்கிருர்' மாஸ்டர் பெரிய கிளாக்கரின் நோக்கத்தையும் போக்கையும் நன்ருகப் புரிந்து வைத்திருக்கிருர்; மாஸ்டர் தோட்டத்திற்கு வந்த பின்புதானே இந்தத் தோட்டத்துக்கு, மூன்ருவது கிளாக்கராக வந்தார். அவர் இங்கு வந்து குறுகிய காலத்தில் பெரிய கிளாக்கரானது, கலியாணம் செய்தது, குழந்தை பார்ப்பதற்கு வந்திருந்த மனைவியின் தங்கையுடன் தவருகப் பழகியதால் ஏற்பட்ட களங்கத்தைத் துடைப்பதற்கு, ஊரிலிருந்து ஒரு மாப்பிள்ளையைக் கொண்டு வந்து 'ஸ்டோர் கீப்பர்' வேலை கொடுத்தும், மருமகன் முறையிலான ஒருத்தனை ஸ்டோரில் வேலை பழக்கி இப்பொழுது பெரிய டீ மேக்கராகப் பதவி உயர்த்தியதும் மாஸ்டருக்குத் தெரியும்.

பெரிய கிளாக்கரின் பேச்சு எங்கெல்லாமோ சென்று மீண்டும் தோட்டத்திற்கு வருகிறது. ''வெள்ளைக்காரத் தொரைமாருக்குக் கீழ வேல செய்யறதுன்னு ஒரு சந்தோஷம் மாஸ்டர். இப்ப இருக்கிற கறுப்புத் துரைமார் தோட்டத்தைக் கெடுத்துப் போட்டாங்க. வெள்ளைக் காரத் தொரைமார் போடுறபோடுல கூலியாட்கள் நடுங்கிக் கொண்டிருப்பாங்க. இப்ப உள்ள தொரமார் மச்சான் மாமன் மாதிரி அவுங்கள வச்சு பேசிக்கிட்டிருக்காங்க. எஸ்டேட் காஸ் கோண் டு டோக்ஸ். (ESTATE HAS

GONE TO DOGS) மாஸ்டர் தோட்டக்காட்டில வேலே செய்ய எனக்கு விருப்பமில்ல. நம்ம சொந்த ஊரில ஒரு பிஸ்னஸ் தொடங்கலாம்னு யோசிக்கிறன்''

மாஸ்டர் விக்கித்துப் போகிருர். வந்தவிடயம் சரி வராமல் போகுமோ என்ற ஏக்கம் ஆட்கொள்கிறது.

''என்ன மாஸ்டர் யோசிக்கிறது'' பெரிய கிளாக்கர் கேட்கிருர்.

''சேர் முந்தி ஒரு சங்கதி சொல்லி வைச்சனுன், என்ர மகளின்ர விஷயமா இண்டைக்கு இன்ஸ்பெக்டரைக் கொண்டு லொக்புக்கல எழுதிவிச்சுப் போட்டன். உங்கட கையிலதான் எல்லாம் இருக்கு'' மாஸ்டர் குழைவுடன் கூறுகிருர்.

''மாஸ்டர் நீங்க ஒண்டுக்கும் பயப்படவேணும். ஐ வில் பிக்ஸ் கேர் (I WILL FIX HER)'' பெரிய கிளாக்கர் உறுதியுடன் கூறுகிருர்.

மாஸ்டர் எழுந்து ஐநூறு ரூபாய் கொண்ட உறையொன்றை டீப்போவின் மேல் வைத்துக் கொண்டே சொல்கிருர். ''சேருக்கு ஒரு சின்ன பிரசன்ட். பிறகு எல்லாம் சரி வந்தாப்போலே ஒருக்கா வாரன்.''

''மாஸ்டர் நீங்க நாளேக்கு ஒரு அப்பிளிகேசன் அனுப்புங்க.''

' அப்ப நான் போட்டுவாறன் சேர். குட் நயிட் சேர்'' குடையையும் டோர்ச்சையும் எடுத்துக் கொண்டு மாஸ்டர் வெளியேறுகிருர்.

மாஸ்டர் ஸ்டோரைத் தாண்டும்போது, ஸ்டோர் ஆபிசுக்குள் பெரியதுரை, சின்னத்துரை, டீமேக்கர் எல்லோரும் இருப்பது கண்ணுடிக் கூடாகத் தெரிகிறது. அப்

போதுதான் வேலே முடிந்துவரும் அடைக்கலத்தை மாஸ்டர் சந்திக்கிறார்.

''என்ன அடைக்கலம் ரொம்ப மெலிஞ்சு போனய்:''— மாஸ்டர் கேட்கிறார்.

''ஆமாங்க சேர் தெனமும் ஸ்டோர்ல அடுப்பு வேலே செய்யுறன் தானே அதான் ஒடைஞ்சு போயிட்டேன்.''

''என்ன அடைக்கலம் ஸ்டோர்ல பெரியவர் சின்னவர் எல்லாரும் நிற்கிறுங்களே''— மாஸ்டர் கேட்கிறார்.

''ஒரு சங்கதி நடந்து போச்சு சேர். பெரியதொர மொதல்ல வந்து தூள் செக் பண்ணிட்டு போயிருக்கார். தூள் கூட இருந்திருக்கு. அப்புறம் பெரியய்யா ஒரு வெளேயாட்டு செஞ்சிபுட்டாரு. அவருக்கு டவுணிலேருந்து கோழித் தீனி ஸ்டோருக்கு வந்திருக்கு. அதோட சேர்த்து ஒரு மூட்டை தூளக் கட்டி வைச்சுட்டு வூட்டுக்குப்போய், சோலமுத்த அனுப்பியிருக்காரு. கோழித் தீனியும் புண்ணுக்கும் வந்திருக்கு, எடுத்திட்டு வரச்சொல்லி. வார்ச்சருக்கும் பெரியய்யாவுக்கும் ஏதோ பெரச்சனே போலிருக்கு. அவன் மூட்டைய சோலமுத்து எடுக்க வாருப்போ கௌப்புக்குபோன பெரிய தொரய நிப்பாட்டி ஏதோ சொல்லி இருக்கான். தொர மூட்டையை அவுத்து பாத்தா அது புண்ணுக்கு இல்ல தூளு. ஒடனே பெரியதொர உள்ளுக்குப் போயி தூள செக் பண்ணியிருக்காரு, தூள் கொறஞ்சிருக்காம்''— அடைக்கலம் சொல்லி முடித்தான்.

''டீ மேக்கர் கையும் மெய்யுமாக அகப்பட்டுட்டாரோ?''

''ஆமாங்க சேர்''— என்று கூறிக் கொண்டே அடைக்கலம் பிரிகிறுன். மாஸ்டர் குறுக்குப் பாதை வழியாக வீட்டை வந்தடைகிறார்.

பாடசாலையுடன் இணைந்து அமைந்துள்ள மாஸ்டரின் வீட்டுக்குள்ளிருந்து வந்த கொழுத்த எலியை, தேயிலைக் காட்டுக்குள்ளிருந்து வந்த ஒரு பூனை, ஓரே பாய்ச்சலில் கௌவிப்பிடித்து விழுங்குவதை மாஸ்டர் வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

## ( 24 )

சோமாவதி இன்று பகல் மலைக்குப் போகவில்லை. காலையிலிருந்து அவளுக்கு உடல் நிலை சரியில்லை காலையில் வாடிய முகத்துடன், ஒருதுண்டு ரொட்டியை எவ்வளவோ தாய்கஷ்டப்பட்டு உண்டுவிட்டு வேலைக்கு புறப்படும்போதே, பொடிமெனிக்காவிற்குப் புரிந்து விட்டது சோமாவதியை வேலைக்குப் போகவேண்டாமென்று தாய் பொடிமெனிக்கா எவ்வளவோ சொல்லியும் அவள் கேட்காது காலையில் மலைக் குப் போய் வந்தாள். பகல் எவ்வளவோ முயன்றும் போக முடியவில்லை அவளுக்கு வேலைக்கு போகாதநாள் விடியாத நாளே!

சோமாவதி உடலை பழைய கம்பளி ஒன்றால் மூடிக் கொண்டு மூலையில் கிடக்கிறாள். உடலை மட்டும் மூடலாம், உள்ளத்தை எப்படி மூடுவது? அவளது சிந்தனை எங்கெல் லாமோ போய் வருகிறது.

கல்யாணம் என்பது வாழ்க்கையில் ஒரு தடவைதான் நடைபெறுகிறது. ஜீவியப் பரியந்தம் ஒருவருடன் தானே வாழவேண்டும்.

சிறிசேனாவைக் கலியாணம் பேசி வரும்போது சோமாவதி, தனக்கு இது விருப்பமில்லையெனவும் பலாத் காரமாகச் செய்ய முனைந்தால் நஞ்சருந்திச் செத்து விடுவேன் எனவும் வெருட்டித் தப்பித்து விட்டாள். அவள்

தனது நெஞ்சில் இடம் பிடித்திருப்பவனை இதுவரை யாருக்குமே சொல்லவில்லை. வேறு இனத்தவரைக் கல்யாணஞ் செய்ய அம்மா விரும்புவாளோ என்ற மனப்பயம். ஆனுல் அவர் துணிந்து நின்ருல் இதை வென்றெடுத்து விடலாம்! என்ற நம்பிக்கையுடனேயே அவள் போராட்டத்தை ஆரம்பித்திருக்கிருள். ஆனுல் அவர்.? 'உண்மையில் என்னைப் புரிந்து கொள்ளவில்லையா? அல்லது புரிந்து கொள்ள விரும்புகிருர் இல்லையா' புரிந்துகொள்ள நேரமில்லாது தொழிற் சங்க வேலை யென்று அலைகிருரா?' அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

யாரோ கதவு தட்டும் சத்தங்கேட்க போர்வையை விலக்கிவிட்டு எழுந்து வந்து கதவை மெல்லத் திறந்து பார்க்கிருள். அது ஆப்தீன்.

சோமாவதியின் முகத்தை உற்றுப் பார்த்து விட்டு ஆப்தீன் கேட்கிருன் ''ஏன் வேலைக்கி போவல சொகமில்லயா?''

''ஆமா'' என்று சொல்லிக்கொண்டு ஆப்தீனின் காம்பராச்சாவியைத் தேடுகிருள் சோமாவதி. இன்று வெலிமடையில் ஒரு கல்யாணத்திற்கு ஆப்தீனின் குடும்பத்தவர்கள் ல்லோரும் போய் விட்டனர். காம்பராவைப் பூட்டி, சாவியை சோமாவதியிடம் கொடுத்துவிட்டு, ஆப்தீன் வந்து கேட்கும் போது கொடுக்கும்படி சொல்லியிருந்தார்கள்.

சாவியைத் தேடிக்கொண்டு வந்த சோமாவதியிடமிருந்து அதனைப் பெறுவதற்கு ஆப்தீன் கையை நீட்டுகிருன். அவன் கையில் சாவியைக் கொடுக்காது அவள் சுவரில் வைக்கிருள். ஆப்தீன் அதனை எடுத்துக்கொண்டு போனதும் சோமாவதி கதவைப் பூட்டுகின்ருள்.

சிறிது நேரத்தின்பின் அடுத்த காம்பராவில் பழக்கப் பட்ட குரல் ஒன்று ஆப்தீனுடன் பேசுவது சோமாவதிக்குத்

தெளிவாகக் கேட்கிறது. அவள் மனம் விழித்து, பெருமாள் என்பதை இனங்கண்டு உற்சாகத்துடன் படுக்கையை விட்டெழுந்து உரையாடலை உற்றுக் கேட்கிறாள்.

''ஆப்தீன் எங்கிட்டு புறப்பட்டிட்டிருக்க'' — பெருமாளின் குரலிது,

''நம்ம உம்மாட தங்கச்சிட மவனுக்கு வெலிமடையில இரவைக்கு கல்யாணம் அதுக்கும் போறேன்''.

''ஒனக்கு எப்ப கல்யாணம்......? இன்னிக்கு நீ தனியா தானே இருக்க. ஒன்ன ஒரு சங்கதி கேக்கணும். ரொம்ப நாளா இதைப்பத்தி கேக்கணும் எண்டிருந்தே. நீ நம்ம தோட்டத்தில ஒரு பொண்ண காதலிக்கிற தானே''

''நாம மட்டும் விரும்பினா அது காதலல்ல ஒரு ஆண் மட்டுமோ அல்லது பெண் மட்டுமோ விரும்பினா அது காதலில்லயே இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பணுமே?''

''ஏ அவ ஒன்ன விரும்பலையா?''

''எனக்கு அதுக்கு கொடுத்து வைக்கல அவள் நல்ல எடத்தில கல்யாணஞ் செஞ்சி நல்லாயிருக்கணும்னு தெனமும் அல்லாவ நான் வேண்டிக்கிட்டிருக்கேன். அது சரி ஒங் கல்யாணம் எப்படி பசுமலச்சங்கதிக்கு பொறவு ஒனக்கு வேற ஒண்ணும் பேசலயா?''

''ஆப்தீன் நான் இப்போ கல்யாணஞ் செய்யிற யோசனை இல்ல. கல்யாணத்தப்பத்தி பேசிட்டிருந்தா நம்ம பெரச்சனைக்கு வழிகண்ட பாடில்ல. நம்மளுக்கு பெரச்சனை ஒண்ணு மாறி ஒண்ணு வந்திட்டிருக்கு நாளைக்கு மாரியம்மன் கோயிலுல ஒரு கூட்டம் போடவேண்டியிருக்கு, இப்ப நா ஜில்லாவில இருந்துதான் வாறேன். ஒனக்குத் தெரியுந் தானே. மஸ்கேலியா—நுவரெலியா தொகுதியில அரசாங்கம் ஏழாயிரம் ஏக்கர் தோட்டத்த பங்கிட்டுக் கொடுக்கிறத

எதித்து எலங்கப் பூராகவும் ஸ்ரைக் அடிக்கிறது. நாமளும் சேந்துக்கணும்னு பிரதிநிதி சொல்லுருரு. இதப்பத்தி கூட்டம் போட்டு வெவரமா ஆளுகளுக்குச் சொல்லணும்''

''நம்ம தோட்டத்துப் பணியகணக்கையும் நாட்டாளுகளுக்கு பிரிச்சுக் கொடுக்கிறதுன்னு ஆரியதாசா சொல்லிட்டிருக்கிருன்''

''ஆமா நானுங்கூட கேள்விப்பட்டேன். ஆபிசுக்கு கடுதாசி வந்திருக்காம். தொர அதுக்கு பதில் ஒண்ணுமே எழுதாம வெச்சுகிட்டு இருக்காராம். நம்ம தோட்டத்துல கைவெச்சா பசுமல தோட்டத்துல நடக்குற மாதிரி நாம ஒத்துமையா போராடணும்''

''பசுமல தோட்டத்து போராட்டத்தைப்பத்தி நம்ம யூனியன் பேப்பர்ல போட்டிருக்காங்க. தொங்கத் தோட்டத்துல டிவிசன் தலேவரு அவன்தான் ஒனக்குப் பேசின மரகதத்தைக் கூட்டிட்டு ஓடினுனே—அவன் தோட்டத்த அளக்க வந்தவங்க ஜீப்புக்கு முன்னுக்கு வுழுந்து அவுங்கள திருப்பி அனுப்பியுட்டானும்''

''ஆமா அவனப்பத்தி றெம்ப ஓசத்தியா நம்ம பெரதிநிதியும் சொன்னுரு. அவன் பெயர் மலேயப்பனும். நம்ம பணியகணக்குல நாம எல்லாரும் மலேயப்பன் மாதிரி போராடணும்''

''நாம ஒத்துமையா இருந்தா என்னதான் செய்ய முடியாது. சரி நேரமாவுது நாவாரன். நாளக்கி கூட்டத்த போட்டு ஆளுகளுக்கு சங்கதிகளே சொல்லுவோம்''

சோமாவதிக்கு ஆப்தீனின் காம்பராவிற்குள் நடைபெறும் உரையாடல்கள் தெளிவாகக் கேட்கிறது. உரையாடல் முடிந்ததும், பெருமாள் கட்டாயம் தன்னிடம் வருவான் என்ற நம்பிக்கையுடன் எழுந்து கண்ணுடியில், நோயால் வாடியிருக்கும் தன் முகத்தைப் பார்த்து, சுடுநீ

ரால் முகத்தைக் கழுவிக் கொண்டு கதவைத் திறப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறாள்.

'பெருமாளிடம் எனது மனதைத் திறந்து சொல்லி இன்று எப்படியும் ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும்'

நேரம் செல்கிறது. பெருமாள் வரவில்லை. பெருமாள் ஏன் வரவில்லை. நான் சுகமில்லாமல் வீட்டில் இருக்கிறேன் என்று ஆப்தீன் சொல்லவில்லையோ? பெருமாள் சங்கம், சங்கம் என்று சாகிறாரே தன் வாழ்க்கையைப் பற்றி சிறிதேனும் அக்கறை கொள்வதில்லையே. சிறிசேனாவை நான் கல்யாணஞ் செய்ய மறுத்ததன் காரணத்தை அவர் இன்னும் சரிவரப் புரிந்து கொள்ளவில்லையே! தோட்டத்துப் பிரச்சினைகளை எப்படியெல்லாமோ புரிந்து, வழிவகை சொல்லும் இவர் ஒரு பெண்ணின் உள்ளத்தைப் புரியாமல் இருக்கிறார் என்று எப்படிச் சொல்ல முடியும். இனம் மாறிக் கல்யாணஞ் செய்வதை விரும்பவில்லையோ? இவர் கட்டாயம் எனக்கு வாழ்வு தருவார் என்ற எண்ணத்தில்தானே சிறிசேனாவை வேண்டாமென்று ஒதுக்கினேன். சிறிசேனா வீரக்கோனிலும் பார்க்க எவ்வளவோ நல்லவர்......! ஆப்தீன் கூட என்னை விரும்பியிருக்கிறாரே......?

பெருமாளுக்கும் தனக்கும் உள்ள உறவுக்கு என்ன பெயரென்று சோமாவதிக்குப் புரியவில்லை. ஆப்தீன் காதல் பற்றிக் கூறியதை எண்ணிப்பார்க்கிறாள். 'ஒரு ஆண் மட்டும்' அல்லது பெண் மட்டும் விரும்பினால் அது காதல் இல்லை! ஆப்தீனின் சொற்கள் அவள் காதுகளில் ரீங்காரம் செய்கிறது

சோமாவதி பழைய சம்பவம் ஒன்றைப் பெருமூச்சுடன் நினைக்கிறாள்:-

பெருமாள் மாட்டுப்பட்டி லயத்தில் இருந்த காலம் அது. முதல் நாள் பார்த்து விட்டு வந்த படமொன்றின் கதையை அடுத்த காம்பராவிலிருந்து சோமாவதிக்குச்

சொன்னான் பெருமாள். அப்போது தான் அவனுக்கு அந்த சிக்கல் ஏற்பட்டது. கதாநாயகன் கதாநாயகியைக் காதலிக்கிறான்—கதை ஆரம்பித்தது.

''காதல் என்றால் என்ன?''— சோமாவதி கேட்டாள்.

பெருமாள் பெருங் கஷ்டப்பட்டு ஒரு வசனத்தில் விளக்கங் கொடுத்தான் ''ஓர் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் மிச்சம் மிச்சம் விரும்பினால் அது காதல்''

சோமாவதி பெருமாளின் முகத்தைச் சிறிது நேரம் பார்த்து ஏதோ யோசித்துவிட்டுக் கேட்டாள். ''காதல் கட்டாயம் கலியாணத்துலதான் முடியணுமா?''

பெருமாள் சிரித்துவிட்டு சொன்னான். உண்மையான காதல் கலியாணத்தில்தான் முடியும். இல்லாட்டி அது பாவம்''.

இப்போது சோமாவதிக்கு ஒன்றுமே விளக்கமாகப் புரியவில்லை. 'பெருமாள் உண்மையில் என்னைக் காதலிக்கவில்லையா? நேரில் கேட்டால்தான் உண்மை தெரியும். நேரில் கேட்டறிய சந்தர்ப்பம் கிடைக்குமா!'

நாலு மணிச் சங்கடித்து எல்லோரும் வேலை விட்டுப் போகிறார்கள். பொடிமெனிக்கா வேலை முடிந்ததும் தோட்டத்து ஆஸ்பத்திரிக்குப் போய் சோமாவதிக்கு மருந்து வாங்கிக் கொண்டு வருகிறாள். சோமாவதி மருந்தைக் குடித்து விட்டு மீண்டும் தன்னைப் போர்த்திக் கொண்டு படுக்கிறாள். பொடி மெனிக்கா அன்றாட அலுவல்களில் ஈடுபட்டிருக்கிறாள்.

''பொடிமெனிக்கா'' வெளியே யாரோ கூப்பிடும் சத்தம் கேட்கிறது

''யாரு குமாரிகாமியக்காவா, உள்ளுக்கு வந்து உட்காருங்கள், ஒரு கிழமையா சுதுநோனா வேலைக்கு வரவில்லையே

ஏதாவது சுகமில்லையா'' தாய் மொழியில் பொடிமெனிக்கா கேட்கிருள்.

''ஒரு சங்கதி நடந்து போச்சு. நான் எப்படிச் சொல்வேன்''— தோளில் போட்டிருந்த துவாயை எடுத்து முகத்தை புதைத்துக்கொண்டு குமாரிகாமி விம்முகிருள்.

''என்னக்கா நடந்தது. பொடிமெனிக்கா அவசரமாகக் கேட்கிருள்.

''சுதுநோனு வாந்தி யெடுக்கிருள். இரண்டு மாசமாம் .....''

பொடிமெனிக்காவிற்குப் புரிந்து விட்டது. ''ஐயோ! அவளுக்கு என்ன நடந்து விட்டது? ஆள்யார் என்று சொல்லவில்லையா?''

''உங்க மருமகன் வீரக்கோன் தானும் இவளை கலியாணம் செய்யிறண்ணு வாக்குகொடுத்துட்டு இப்படி ஏமாற்றி விட்டான். ஐயோ இப்ப நான் என்ன செய்வேன்?''—என்கிருள் குமாரிகாமி அழுது கொண்டே

''நீங்க போய் வீரக்கோனைக் கேட்டீர்களா?''

''நான் இப்ப அங்கப் போயிட்டுத்தான் வாறேன். அவன் சுதுநோனுவை தான் தொடவே இல்லையாம், வேறு யாரோ கெடுத்து விட தன்னை நான் மாப்பிள்ளையாக எடுப்பதற்கு திட்டம் போடுகிறேனும்''

''அடபாவி! இப்படியும் செய்யிறதா? நான் இவனுக்கு சோமாவதியைக் கல்யாணஞ் செய்து கொடுக்கலாம் என்றிருந்தேன். அந்த யோசனைய இன்றையோட விட்டாச்சு. அக்கா இனி என்ன செய்வோம்.''

''அதுதான் பொடிமெனிக்கா உன்னைத்தேடி வந்தேன். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை''

பொடிமெனிக்கா சிறிது யோசித்துவிட்டுச் சொல்கிருள். ''இந்த சங்கதி நாட்டில ஒருத்தருக்கும் தெரியாது தானே! முதலில் மானத்தைக் காப்பாத்தனும். மூங்கில் குத்து லயத்துப் பிரமாயியை உங்களுக்குத் தெரியுந்தானே! அவ இந்த விஷயத்தில் கை தேர்ந்தவள். டவுனிலிருந்து கூட காரில் வந்து அவளைக் கூட்டிக்கொண்டு போவார்கள். இதுக்குச் சல்லி கொஞ்சம் செலவாகும்.''

''எவ்வளவு சல்லி போனாலும் பரவாயில்லை. வாங்க இப்பவே பிரமாயிடம் போவோம்''

சோமாவதி தூங்குகிருள் என நினைத்துக் கொண்டு பொடிமெனிக்கா அவளை எழுப்பப் போகிருள்.

சோமாவதி தூங்கவேயில்லை குமாரிகாமி சொன்னதைக் கேட்ட நேரம் தொடக்கம் குப் பென்று வேர்த்து அவளது உடலும் உள்ளமும் நடுங்கிக் கொண்டிருக்கிறது. போர்வைக்குள் புகுந்து கிடக்கும் அவள் முகம் எத்தனையோ மாற்றங்களுக்குட்பட்டு சுதுநோனுவுக்காக கண்ணீர் சிந்துகிறது.

,,சோமாவதி நாங்கள் ஒரு சங்கதியா மூங்கில் லயத்துக்குபோயிட்டு வாரோம். மகன் நிமல் பயல்கள் கூட விளையாடப் போய் இன்னும் வரவில்லை. நீ கதவை அடைத்துவிட்டு உள்ளுக்கு இரு. நான் சுணங்காம வந்துவிடுகிறேன்'' பொடிமெனிக்காவும், குமாரிகாமியும் பிரமாயி 'வென்று தருவாள்' என்ற நம்பிக்கையுடன் மூங்கில்குத்து லயத்தை நோக்கிப் போகின்றூர்கள்.

பிரமாயி 'இதனல்' இந்தத் தோட்டத்தில் மட்டுமல்ல அடுத்த தோட்டங்கள் பலவற்றிலும் பிரபல்யம் அடைந்துள்ளாள் நல்ல பிழைப்பு. பிரமாயி கைவச்சா எத்தனை மாசம் என்றுலும் வெளியே எடுத்திடுவாள்' என்ற நம்பிக்கையைத் தோட்டத்தில் ஏற்படுத்தி பல வெற்றிகளைக் கண்டவள். வசதியுள்ளவர்களிடம் பிரமாயி 'றேற்' கேட்

கும் விதம் ஒரு தனிரகம். இரண்டு மாதம் என்றால் இரு நூறு ரூபாவும் ஒரு வெள்ளைப் போத்தலும் பத்துக் கோழி முட்டையும், மூன்றுமாதம் என்றால் முன்னூறு ரூபா...... ஏழை எளியதுள்க என்றால் கொடுப்பதை வாங்கிக் கொள் வாள்.

சோமாவதிக்கு, சுதுநோனுவுக்கு நடந்ததை எண்ணும் போது தலைக்குள் ஏதோ செய்கிறது. சுதுநோனு கொஞ்ச நாட்களாக வேலை விட்டதும் அவசரமாக வீட்டுக்கு ஓடிய தும், தன்னுடன் மனந்திறந்து பேசாமல் இருப்பதற்குரிய காரணத்தையும் எண்ணிப் பார்க்கிறாள். 'பாவம் சுது நோனு! அவளைக் கெடுத்துவிட்டு அவன் இல்லை என்கிறானே. கடவுள்தான் அவளைக் காப்பாற்றவேண்டும். அவனை எனக்கு கலியாணஞ் செய்து கொடுப்பதில்லை என்று அம்மா சொல்லி விட்டாதானே!'

சுதுநோனு, வீரக்கோன், பெருமாள் ஆகியோர் அவள் சிந்தனையை அலைக்கழிக்கின்றனர். சோமாவதிக்கும் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிகிறது.

கதவு தட்டப்படும் சத்தம் சோமாவின் சிந்தனையைக் கலைக்கிறது. மெல்ல எழுந்து வந்து கதவைத் திறக்கிறாள். ஒருவரையும் காணவில்லை. அவளுக்கு நெஞ்சம் திக் என்று அடிக்க மீண்டும் படுக்கைக்குப் போகிறாள்.

மீண்டும் கதவு தட்டப்படும் சத்தம் கேட்கிறது. அவள் கதவைத் திறக்காது "யார் அது" என்று கேட்கிறாள்.

''நான் தான் அக்கா''— என சோமாவதியின் தம்பி நிமல் சத்தமாகக் கூற, அவள் எழுந்து வந்து ''சுட்டிப்பயலே! இப்பதான் வாறியோ?'' என்று சொல்லிக் கொண்டு கத வைத் திறக்கிறாள்.

''அக்கா பெருமாள் அண்ணே இங்க வந்தாரா'' நிமல் கேட்கிறான்.

''இல்லே ஏன் உன்னேக் கண்டவரோ?

''ஆமா அக்கா! என்னேப் பிடித்து முத்தமிடுறேன்னு சொல்லி கன்னத்த கடிச்சிட்டாரு. இங்க பாரக்கா சிவந்து போச்சு''

சோமாவதி தன்னே மறந்து சிரித்துக்கொண்டு, பெருமாள் கடித்த நிமலின் பட்டுக் கன்னத்தை தடவிக் கொண்டு பெருமூச்சு விடுகிருள்.

## ( 25 )

ஒரு பிரளயமே நடைபெற்றது போன்று புதுத் துரை தோட்டத்திற்கு வந்து இரண்டு வாரங்களுக்குள் எத்தனேயோ மாற்றங்கள்! சின்னத் துரைக்கு வேருெரு சிறிய தோட்டத்திற்கு சின்னத் துரை பதவிக்கே மாற்ற உத்தரவு தந்தி மூலம் கிடைத்துப் போய்விட்டார். மேற்கணக்கு கண்டக்டருக்கும், டீமேக்கருக்கும் வேலே நீக்கக் கடிதம் ஒப்படைக்கப்பட்டு விட்டது. மேற்கணக்குக் கொழுந்துக் கணக்குப்பிள்ளே பணியக் கணக்குக்கு மாற்றப்பட்டுவிட்டார். வீரபுத்திரன் கங்காணிக்கு இப்பொழுது கொழுந்தெடுக்கும் மலேயில் கங்காணி வேலேயில்லே அரிசிக் கிளாக்கரென்று அழைக்கப்படும் 'ஸ்டோர்கீப்ப'ருக்கு இப்படி ஒரு முடிவுவருமென யாருமே எதிர்பார்க்கவில்லே.

சென்ற செவ்வாய்க்கிழமை தான் அது நடந்தது. தோட்டத்துப் பங்கீட்டரிசியை டவுனில் உள்ள கூட்டுறவுப் பண்டசாலேயிலிருந்து லொறியில் ஏற்றிக் கொண்டு வந்து, தோட்டத்தில் உள்ள அரிசிக் காம்பராவில் இறக்கத் தொடங்கும்போது, லொறியைத் தொடர்ந்து வந்த காரில் இறங்கிய மூவர் அரிசிக் கிளாக்கரிடம் ஒரு கடிதத்தைக் காட்டி, தாங்கள் யாரென்பதை உறுதிப்படுத்தி விட்டு, அரிசியைக் கணக்கெடுத்தனர். கூட்டுறவுப் பண்ட

சாலையில் கொடுத்த பற்றுச் சீட்டுடன் ஒப்பிட்டுப் பார்த்த போது இரண்டு மூடைகள் குறைவாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.. அரிசிக் கிளாக்கர் சற்றும் எதிர்பார்க்க வில்லை. உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்திலிருந்து வந்து இப்படியெல்லாம் செய்வார்களென அரிசி குறை வாக இருப்பதற்கு இவர்கள் சொன்ன காரணங்கள் ஒன் றையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. உணவுக் கட் டுப்பாட்டு அதிகாரிகளின் பிரதிநிதிகள், இவர் அரிசி மூடைகளை டவுனில் கறுப்பையா கடையில் கொடுத்து விட்டுத் திரும்பியவுடன் அவற்றைக் கைப்பற்றி, கறுப் பையா முதலாளியிடம் இந்தத் தோட்டத்து ஸ்டோர்கீப் பரிடம் இருந்து பெற்றுக் கொண்டதாக அத்தாட்சித் துண்டும் வாங்கி வந்திருந்தனர். உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் நடந்தவற்றுக்குத் தோட்டத் துரையிடம் விளக்கம் கோர, துரை உடன் நடவடிக்கை எடுத்ததன் விளைவாக அரிசிக் கிளாக்கர் வேலை நீக்கம் செய்யப்பட்ட துடன் அவர்மேல் வழக்கும் தொடரப்பட்டுள்ளது

பெரிய கிளாக்கருக்கு ஒரே அவமானமாக இருந்தது. மருமகனை டீமேக்கருக்கு நடந்ததையெண்ணி வெட்கத் துடன் நடமாடிய அவருக்கு, சகலனுக்கு நடந்ததை எண்ணி வெளியில் தலைகாட்ட முடியாதவராக இருந் தார். சுகவீனம் என்ற காரணம் காட்டி வேலையிலிருந்து விலகிக் கொள்வதாகப் பெரிய கிளாக்கர் அறிவித்தல் கொடுத்துவிட்டார். இவ்வளவு காலமும் ஆபீஸ் வேலை யின் பெரும்பாகத்தைத் திறமையாகச் செய்தும் பெரிய கிளாக்கரால் அமுக்கி வைக்கப்பட்டிருந்த இரண்டாவது கிளாக்கர் பெரிய கிளாக்கராகப் பதவி உயர்வு பெற் ருர்.

புது யுகத்தில் பிரவேசித்துள்ளவர்கள் போன்று தொழிலாளர்கள் பூரித்துள்ளனர், புதிய மாற்றங்களுக் குச் சிகரம் வைத்தாற்போல், புல்லு வெட்டிக் கொண்

டிருந்த மலையாண்டி தோட்டத்துப் பாடசாலையில் இன்று முதல் ஆசிரியராக நியமிக்கப்பட்டிருக்கிறான்.

பணியக்கணக்கிலுள்ள ஆத்து லயத்து அந்தக் காம்பராவில் எல்லோரும் மகிழ்ச்சியில் மிதக்கின்றனர்.

'எவ்வளவோ கஷ்டப்பட்டுப் படிக்க வைத்த மகன் புல்லு வெட்டும் காட்சியைப் பார்க்கவிடாது தன் இரு கண்களையும்பறித்துக் கொண்ட கடவுள். காதால் கேட்டு மனதைத் துடிக்க வைக்காது உயிரையே எடுத்திருக்கக் கூடாதா' என அன்று ஏங்கிய குருட்டு வேலு, 'இன்று மகன் மலையாண்டி மாஸ்டராகப் புறப்பட்டுப் போகும் காட்சியைக் கண்ணால் காணக் கொடுத்து வைக்காது போய்விட்டோமே' என்று ஆனந்தக் கண்ணீர் சிந்த நிற்கிறான். மலையாண்டியின் தங்கை வீரம்மா தலையில் கூடை தொங்க, தோழிபோல கூடவே மலைக்குப் போய்வரும் தொங்கற் காம்பரா சீதையுடன் அண்ணாவை மாஸ்டர் உருவில் கண்டு சிரித்த முகத்துடன் நிற்கிறாள். காத்த முத்து, மாஸ்டரின் அண்ணன் என்ற பூரிப்பில் வெளியே காத்து நிற்கிறான்.

''போயிட்டு வாறேன்''— என எல்லோருக்கும் சொல்லிவிட்டுப் புனிதத்தொண்டு செய்யப் புறப்பட்ட செயல்வீரன்போல மலையாண்டி பாடசாலையை நோக்கிப் போகிறான்.

மலையகத்தில் கல்விக் கண் திறக்கும் பணி தனக்குக் கிடைக்க வேண்டுமென்பது மலையாண்டியின் இளவயது இலட்சியங்களில் ஒன்றாக இருந்தது. அவனது சிந்தனை விரிகிறது. ''நாம் இந்த நிலையில் என்றும் அடிமைகளாகவே இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், எங்களை இந்நாட்டிற்குக் கொண்டு வந்த வெள்ளையர்கள் கல்வியில் அக்கறை காட்டாது விட்டுவிட்டார்கள். புதிதாக நடப்படும் தேயிலைக் கன்றுகளைச் சிறார்கள் பிடுங்கி விடா

மல் பாதுகாப்பதற்காகப் பிள்ளைகளை அடைத்து வைக்கும் நோக்குடனேயே தோட்டங்களில் வெள்ளைக்காரன் பாடசாலையை ஆரம்பித்தான். கையெழுத்துப்போடக் கேட்டால் கட்டை விரலை நீட்டி நிற்கும் எம்மவர், எப்படிச் செக்ரோலில் 'பேர்'க்கணக்கை அறிய முடியும். பெரிய கங்காணிமார் தங்களது பிள்ளைகளுக்கு ஒரு கல்வி முறையும் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ஒரு கல்வி முறையும் ஏற்படுத்தினர். அடிப்படைக் கல்வியின்றிப் பின் தங்கியதால் எதையும் சிந்திக்காது 'ஆமாஞ்சாமி'களாக ஏமாற்றப்படுகிறோம்.

மலையகத்துப் பிள்ளைகளுக்கு கல்வி போதிப்பதென்பது ஒருசேவையென்ற நற்சிந்தனையுடன் பாடசாலைப் படிகளிலே ஏறுகிறான் மலையாண்டி. பிறந்து வளர்ந்த தோட்டத்திலுள்ள அரிச்சுவடி கற்ற பாடசாலையில் ஆசிரியராகப் போவதால் மலையாண்டியின் உள்ளத்திலே ஒரு பாச, சமூக நேச உணர்வு பற்றிக் கொள்கிறது. இப்பொழுதுள்ள பெரிய மாஸ்டர் தான் அவனது குரு. அவரிடம் தான் ஐந்தாம் வகுப்புவரை படித்தான். மாஸ்டரைக் கண்டதும் இருகரங்களையும் கூப்பி வணங்குகிறான். வேண்டா வெறுப்பாகத் தலையைமட்டும் ஆட்ட விரும்பிய மாஸ்டர், சக ரீச்சரான மனைவியின் பார்வைபட முகத்தை எங்கோ திருப்பிக் கொள்கிறார்.

''வணக்கம் டீச்சர்'' என்ற மலையாண்டியை முறைத்துப் பார்த்துவிட்டு டீச்சர் முகத்தைத் திருப்புகிறாள். மலையாண்டிக்கு ஒரே கவலையாக இருக்கிறது. 'நான் என்ன குற்றம் செய்தேன். ஏன் இவர்கள் இப்படிப் பாராமுகமாக இருக்கிறார்கள்.'

சிறிது நேரத்திற்குப் பின் மலையாண்டி கேட்கிறான்: ''சேர் நான் எந்த வகுப்புக்கு படிச்சு குடுக்கிறது'' மாஸ்டர் மலையாண்டியின் முகத்தைப் பார்க்காது சுவரோரம்

இருக்கும் தொங்கல் வகுப்பைக் காட்டிச் சொல்கிறார் ''இரண்டாம் வகுப்பையும் ஐந்தாம் வகுப்பையும் எடும்.''

மலையாண்டி பிள்ளைகளின் இரைச்சல்களை வெகுகஷ்டத்துடன் அடக்கிவிட்டுப் படிப்பிக்க ஆரம்பிக்கிறான். சில மாணவர்களின் தோற்றம் மலையாண்டிக்குக் கவலையைத் தருகிறது. வடியும் மூக்கு, வடிந்து உறைந்து வடுக்கள் உள்ள வாயோரங்கள், பொத்தான்கள் பூட்டாது கழன்று விழாமல் இழுத்துக் கட்டப்பட்டிருக்கும் காற்சட்டைகள். தொழ தொழக்கும் சட்டைகள். வகுப்பில் அரைவாசிக்கு மேல் பிள்ளைகள் வரவில்லை. மலைக்குத் 'தேத்தண்ணி' கொண்டுபோக, கவ்வாத்து மலையில் மிலார் பொறுக்க, வீட்டில் சின்னப் பாப்பாவைப் பார்த்துக்கொள்ள என்ற காரணங்களால்தான் வரவில்லை என்பது மலையாண்டிக்குத் தெரியும். இரண்டாம் வகுப்புப் பிள்ளைகளின் தீராத இரைச்சல்களுக்கிடையில் ஐந்தாம் வகுப்பு பிள்ளைகளுக்கு இன்று சிலவற்றைப் படித்துக் கொடுக்க வேண்டுமென்ற விருப்பத்துடன் பாடத்தை ஆரம்பிக்கிறான் மலையாண்டி. அஞ்சலையின் மகள் காளிமுத்துவின் திறமை மலையாண்டியைத் திகைக்க வைக்கிறது. அடுத்த வகுப்பில் பாடம் நடத்தும் டீச்சரின் குரல் மலையாண்டியின் காதுகளில் வந்து மோதுகிறது. ''மூதேசிகளுக்கு மூளையில என்ன களிமண்ணே, வீட்டுவேலை கொடுத்தால் செய்து கொண்டு வாறதில்லை. உங்களோடை மாரடிக்கிற நேரம் ஊரிலை போய் ஆடு மாடுகள் மேய்ச்சுச் சீவிக்கலாம். சனியன்களுக்கு இதுதான் எந்தநாளும் பஞ்சம்.''

மலையாண்டிக்குத் தலை சுற்றுவதுபோல் இருக்கிறது. வளரும் பிள்ளைகளுக்கு ஓர் ஆசிரியர் வழங்கும் வாழ்த்துரைகளா இவை! பாடசாலையில் கொடுத்துவிடும் வீட்டு வேலைகளை லயத்தில் செய்வதென்றால் இலேசான காரியமா? சன இரைச்சல் ஒருபுறம், மலையில் பகல் பூராவும் வேலை செய்துவிட்டு அலுப்புடன் வீட்டிற்கு வரும் பெற்

ருர், சகோதரர்கள் எட்டுமணிக்கெல்லாம் தூங்கி விடுவார்கள். அதன் பின் விளக்கெரித்துப் படிப்பதென்ருல்...'

தொடர்ந்து டீச்சர் மாஸ்டருடன் உரையாடுவது கேட்கிறது. ''என்னப்பா உங்களுக்கு எந்தநேரமும் யோசனைதானே. நான் அப்பவும் சொன்னனுன் பெரிய கிளாக்கருக்கு எல்லாம் சரிவந்தாப்போலை குடுக்கலாமெண்டு. இனி அந்தக் காசு பாழ்கிணத்துக்குள்ள போட்டது போலத்தான். சரி இதை யோசிச்சு இனி என்ன செய்யிறது. ஊரிலை பிள்ளை தபால்காரனைப் பார்த்துக் கொண்டிருக்கப் போகுது. இண்டைக்கெண்டாலும் மணியோடர் அனுப்பவேணும். ஐந்தாம் வகுப்புக் காளிமுத்தைத்தான் போஸ்ற் ஒவ்வீசுக்கு அனுப்ப வேணும். அவன் தான் கவனமாகச் செய்வான். நான் அவனைக் கூப்பிடுகிறேன். நீங்கள் காசைக் கொடுத்தனுப்புங்கோ. ஊரில எஞ்சினியற்ற பெண்சாதி கெட்டிக்காரப் பொடியனை ஒரு வேலைக்காரப் பொடியனை அனுப்பச் சொல்லி ரெண்டு கடிதம் போட்டிருந்தா. எஞ்சினியற்ற உதவி எங்களுக்கு எந்தநாளும் வேணும். அஞ்சலையைக் கேட்டு காளிமுத்துவை அனுப்புவம். அதோடை அஞ்சலைக்கு காசு பத்து ரூபா குடுத்துவிடுவம். அவளின்ரை ரேஷன் மல்லியையும் சீனியையும் வாங்கவல்லோ வேணும்.''

மலையாண்டியின் வகுப்புக்கு ஒரு பையன் வந்து, 'காளிமுத்துவை டீச்சர் கூட்டிக் கொண்டு வரச் சொன்னுங்க' என்று கூற பெருமூச்சுடன் காளிமுத்துவை அனுப்புகிருன். மலையாண்டி மாஸ்டருக்கு காளிமுத்து இல்லாததால் ஆரம்பித்த பாடத்தை தொடர முடியவில்லை. அதற்குள் பன்னிரண்டு பதின்மூன்று வயதிருக்கும் ஒரு மாணவி ''சேர் அங்கமுத்து கிள்ளுருன்'' என்று கூற இருவரையும் கூப்பிட்டு விசாரணை செய்கிருன் மலையாண்டி. அந்த மாணவி அசிங்கமான நிகழ்ச்சியை சாதாரணமாகச் சொல்கிருள். ''சம்பளத்தன்னிக்கு ராத்திரி அவுங்கவீட்டு அப்பாவும்

அம்மாவும் இப்படித்தானும்'' மலையாண்டி தண்டனை வழங்கும் முன்பு பையனைக் கேட்கிறுன். 'உங்கப்பன் யார்' ''நா விருந்தாடி வேலுவூட்டு மகனுங்க'' மலையாண்டி ஆழமாக யோசிக்கிறுன். இதுவும் அறியாமையின் வெளிப் பாடுதான். இதற்குரிய காரண காரியத் தொடர்பை எண் ணிப் பெருமூச்சு விடுகிறுன்.

பாடசாலை முடிகிறது. மலையாண்டி பலவிதமான சிந் தனைகள் சித்திரவதை செய்ய, வீட்டுக்குப் போகுமுன் பெருமாளைச் சந்திக்க வேண்டுமென்ற விருப்பத்துடன் மேட்டு லயத்தை நோக்கிப் போகிறுன்.

எதிரே வேலுச்சாமி வருகிறுன். ''என்ன தம்பி மாஸ் டர் வேல கெடைச்சிருக்கு. மிச்சம் சந்தோசம். நம்மளுக்கு பெமிட் கெடைச்சிருக்கி, இன்னிக்கு ராத்திரி கண்டிக்குப் போறேன். குடும்பக்காட் நெரப்பிக்கிட்டு வரணும். தம் பிக்குத் தெரியுந்தானே! ஈந்தியாவிலுள்ள நம்ம சொந் தக்காரங்க ஏச்சுப்புட்டாங்க. குடும்பக்காட்டை நெரப்பி ஈந்தியா அரசாங்கத்துகிட்ட ஏதாச்சும் ஒதவிப் பணம் எடுத்துக்கணும். தம்பி இந்த கடுதாசியில என்ன எழுதி யிருக்காங்கனு ஒருக்கா பார்த்து சொல்லுங்க''— என்று கூறிக் கொண்டே வேலுச்சாமி ஒரு கடிதத்தைக் காட்டு கிறுன். மலையாண்டி அதைப் படித்துப் பார்த்துவிட்டு எல்லாவற்றையும் சொல்லிவிட்டு கேட்கிறுன். ''எப்ப ஊருக்குப் போறீங்க?'' ''நம்ம தோட்டத்துல ஆடிப் பூசைக்கு இன்னும் ரெண்டு கெழமதானேயிருக்கு, அது முடிஞ்சவுடனே பயணம் வெச்சுடுவோம். சரி தம்பி நா போயிட்டு வாறேன்.''

மலையாண்டி பெருமாளின் லயத்தை வந்தடைகிறுன். உள்ளே பெருமாளும் சிறிசேனுவும் பேசிக் கொண்டிருக் கிறுர்கள். சிறிசேனு தனது அத்தியந்த நண்பனுன பெரு மாளுக்கு தனது குடும்பத்தில் சமீபத்தில் நடந்த கசப் பான அனுபவங்களை சொல்லிவிட்டு அதைப்பற்றிப் பேசிக்

கொண்டிருக்கிறன். சிறிசேனுவின் முகம் ஒருவாரமாக வாடியிருந்ததைப் பெருமாள் அறிவான். சம்பந்தப்பட்ட சங்கதியையும் வீரக்கோனின் கயமைத் தன்மையையும் அறிந்ததும் மனங் குமுறினுன். பிரமாயின் தனித்திறனுல் சுதுநோனுவின் மானங் காப்பாற்றப்பட்டு விட்டதை யெண்ணி சிறிசேனுவின் மனம் ஆறுதலடைந்திருப்பதைப் பெருமாள் கவனிக்கிறன். இப்போது சிறிசேனுபுதியதொரு பிரச்சினைக்குத் திசை திரும்பியிருக்கிறன்.

''மாஸ்டர் வாங்க!''— என்று பெருமாள் கூறிக் கொண்டே தான் உட்கார்ந்திருந்த நாற்காலியை விட் டெழுந்து ''வணக்கம் சார்!'' என்கிறன்.

''ஓய் என்ன கில்லாடியா பண்ணுற''— மலையாண்டி கூறிக்கொண்டே வேருெரு நாற்காலியில் உட்காருகிறன்.''

''நாங் குடியிருக்கிற நெலம் சில்வா மொதலாளிவூட்டு தானே. அவுங்க காணியைவுட்டு எப்ப போறதுன்னு யோசிச்சிட்டிருக்கேன். பணிய கணக்கு மூண்டுநூறு ஏக் கரை நாட்டாள்ளுங்களுக்குப் பிரிச்சுக் கொடுக்கிறுங்க. நம்மளுக்கு ரெண்டேக்கர் கெடைச்சிதுன்ஞ ரெம்ப நல் லது நாட்டாளுக்கு நெலம் கொடுக்கிறது சரியில்லன்னு சொல்விறீங்க''— என்கிறன் சிறிசேனு.

''நாட்டாள்களுக்கு காணி கொடுக்கிறத நாங்க சரி யில்லேண்ணு சொல்லல. ஆனு அது தோட்ட ஆட்கள் அனுபவித்து வந்த வசதிகள் பாதிக்கக் கூடாது. வேலே வெட்டியில்லாம, தோட்டத்தவிட்டு துரத்துரதாக இருக் கிறதத்தான் சரியில்லண்ணு சொல்லுருேம்''—என்கிறன் பெருமாள்.

''தோட்டத்தப் பிரிச்சுக் குடுத்தாக்க தோட்டத்தாள் கள வேற தோட்டத்துக்கு அனுப்புறது தானே''—சிறி சேனு கேட்கிறன்.

''ஒரு தோட்டத்த பிரிச்சு குடுத்தா அந்தத் தோட்டத்து ஆளுங்கள அப்புடியே கொண்டுபோயி இன்னொரு தோட்டத்துல போட மாட்டாங்க. நம்ம பணியக்கணக்க எடுத்துக் கொள்ளுவமே இதப்பிரிச்சு கொடுத்தா நம்ம தோட்டத்துல இருக்கிற ஆளுங்கள எல்லாம் பிரிச்சு ஒவ்வொரு தோட்டத்துல போடுவாங்க. நம்மளுக்கு இப்ப இருக்கிற ஒரு தோட்டத்து ஆளுங்கங்குற ஒறவு இல்லாம போயிடும். நாம போற தோட்டத்தில புதுசா ஒரு ஜீவியத்த தொடங்கணும்''— மலையாண்டி விளக்கமாகச் சொல்கிருன்.

''இதுக்குத்தான் நம்ம தோட்டத்தப் பிரிச்சுக் குடுக்கிறதை எதுத்துக்கிட்டு இருக்கிரும். நம்ம தோட்டத்து ஆள்களப் பாதிக்காம நாட்டாளுகளுக்கு நெலங் குடுக்கலாம். ஏன் நம்ம ஆளுகளிலும் பெரசாவுரிம உள்ளவங்களுக்கு காணி கொடுக்கலாந் தானே. நாமதானே காடாக இருந்த பூமியெல்லாம் அழகான தோட்டமாக்கினது''— பெருமாள் கூறுகிருன்.

சிறிசேஞ சிறிது யோசித்துவிட்டுக் கூறுகிருன்: ''ஆமா நீங்க சொல்லுறதுங் சரிதாங். நாட்டில உள்ளவங்க இப்படி யோசிக்கமாட்டேங்கிருங்க. நேத்து ஆரியதாச, பீற்றர் அய்யாவூட்டு கடயில சொல்லிக்கிட்டிருந்தான், 'தோட்டத்தாள்கள் இந்தியாவிலிருந்து கூலியாள்களாக நம்ம நாட்டுக்கு வந்தாங்க. அவங்கள அடிச்சி தொரத்திட்டு நம்ம ஆள்களுக்கு காணி குடுக்கணும், நம்ம பெரிய தொர தோட்டத்தாள்களுக்கு சப்போட்டு அப்புடிங்கிருன்.''

''நெசந்தான் பெரிய தொரைக்குத் தோட்டத்தப் பிரிச்சுக் குடுக்கறதுக்கு கொஞ்சங்கூட விருப்பமில்ல, அன்னிக்கி ஆபிசில சொல்லிக்கிட்டு இருந்தாரு தோட்டத்த பிரிச்சு கொடுத்தா நம்ம தேயிலே தோட்டத்துத் தொழில் பாழாய்ப் போயிடுமாம். கம்பளே, புசல்லாவ பகுதியில

நாட்டாளுங்களுக்கு குடுத்த தோட்டமெல்லா ரொம்ப மோசமான நெலயில இருக்காம். நெல்லு வெட்டுற மாதிரி கொழுந்த அறுத்திருக்காங்களாம்''— பெருமாள் கூறுகிறான்.

''தோட்டத்த பிரிச்சு குடுக்கிற இந்தப்பெரச்சனயால ரொம்ப காலமா பழகிட்டுவாற நாட்டாள்களுக்கும் தோட்டத்தாளுங்களுக்கும் ஒரு கசப்பு வந்திருச்சு. ஒவ்வொருவரும் மத்தவங்கள எதிரின்னு நெனக்கிறாங்க''— பெருமாள் தான் மிக்க கவலையுடன் சொல்கிறான்.

சிறிசேனு தலையாட்டிக் கொண்டு சொல்கிறான் ''நாங் கூட மொதல்ல அப்படித்தான் நெனச்சேன். இப்பதான் விளங்குது.'

பெருமாள் ஆழமாக யோசிக்கிறான்.

சிறிசேனு எழுந்து நின்று கொண்டு சொல்கிறான். 'பெருமாள் நாங்கபோயிற்றுவாறோம். வாங்க மலையாண்டி போவோம்.'

மலையாண்டியும் எழுந்து 'பெருமாள் போயிட்டு வாறோம்' என்கிறான்.

''என்ன மாஸ்டர் ஸ்கூல் புதினங்க ஒண்ணுஞ் சொல்லாம...'' பெருமாள் கேட்கிறான்.

''மலையக கல்விப் பெரச்சன பெரிய பெரச்சனயாச்சே. புதுமுறைக் கல்வியைப் பற்றிப் பேசிக்கிறாங்க. நம்மளுக்கு ஆரம்ப கல்வியே இல்ல. அதப்பத்தி ஆறுதலாப் பேசுவமே''— என்கிறான் மலையாண்டி.

''ஆமா ஒரு லட்சம் மலையகப் புள்ளைங்கபடிக்க வசதியில்லாம இருக்காங்கணு நேத்தயப் பேப்பர்ல படிச்சேன்.

என்னைக்கு மலையக கல்விப் பெரச்சன தீருதோ அன்னிக் கித் தான் நம்மளுக்கு விடிவு காலம் பொறக்கும்''—இது பெருமாள்,

சிறிசேனுவும் மலையாண்டியும் கறுத்த ரேட்டுக்கு வந்துவிட்டார்கள்.

ஒரு பெரிய ஏற்றம். சிறிசேனு நாட்டில் வாழும் காணியற்றோர் பிரச்சினையைப் பற்றியும் மலையாண்டி மலையக கல்விப் பிரச்சினையைப் பற்றியும் யோசித்தவாறே அந்தச் செங்குத்தான, ஏற்றத்தை, மூச்சிழைக்க ஏறு கிறார்கள்.

## ( 26 )

கடந்த இரு வாரங்களாக நுவரெலியா - மஸ்கெலியா தேர்தல் தொகுதியில், தோட்டக் காணிச் சுவீகரிப்பை எதிர்த்து நடைபெற்றுவரும் வேலை நிறுத்தத்திற்கு ஒரு தீர்வு காணாத காரணத்தால் நாளைமுதல் நாடெங்கும் நடைபெறவிருக்கும் பொது வேலை நிறுத்தத்திற்கான ஆயத்தங்களையெல்லாம் செய்துமுடித்துவிட்டு வீட்டிற்கு வந்த பெருமாள் தனிமையிலிருந்து இப்புதிய பிரச்சினை பற்றிப் பல கோணங்களிலிருந்தும் சிந்தித்துக்கொண்டிருக் கிறான்.

வெளிநாட்டாருக்குச் சொந்தமான தோட்டங்களை யெல்லாம் அரசாங்கம் கையேற்கவேண்டும் என்ற கொள் கையைப் பெருமாள் என்றும் மனப்பூர்வமாக வரவேற் றான்.

'தோட்டங்களைக் கண்களால் கூடப் பார்க்காத சொந் தக்காரர்களான வெள்ளையர்கள், காலாட்டிக்கொண்டு வருமானத்தைப் பெறுகிறார்கள். நமது தேசியச் செல்வம்

சுரண்டப்படுகிறது. நாம் மாடாக உழைத்துக்கொடுக்கிறோம். எமது நாட்டிற்கே எமது உழைப்பின் பிரயோசனம் வரவேண்டும். தோட்டத்தொழில் பொதுவுடமையாக்கப்பட்டால் நாமெல்லாம் தோட்டச் சொந்தக்காரர்கள் போலாகிவிடுவோம். நமது வசதிகள் பெருகும்' என்றெல்லாம் அன்று மகிழ்ந்த பெருமாளுக்கு இன்று இவையெல்லாம் சொல்லளவில் இருப்பதாகவே படுகிறது.

'இன்று குடியிருக்க வீடுகள் இல்லாமல் விரட்டியடிக்கப்படுகிறோம். வேலைவாய்ப்புகள் பறிபோவதையும் எண்ண மனங் குமுறுகிறதே. வெள்ளைக்காரர்களுக்குச் சொந்தமாக தோட்டம் இருந்த காலத்தில் மரக்கறித் தோட்டம் போட்டால், குடியிருக்க ஒரு சிறு வீடு கட்டினால், மாட்டுப் பட்டி கட்டினால் வேலை நிறுத்தப்பட்டு தோட்டத்தைவிட்டு வெளியேற்றப்பட்டோம். இன்று ஏதோ காரணங் காட்டி பிறந்து வளர்ந்த தோட்டத்தைவிட்டு வேறு தோட்டங்களுக்கு வெளியேற்றப்படுகிறோம்.'

பசுமலைத் தோட்டத்துப் போராட்டத்தைப்பற்றிப் பெருமாள் எண்ணிப் பார்க்கிறான். அங்கு மலையப்பன் என்ற தலைவரின் அணியிலே, தொங்கத் தோட்டம் என்ற டிவிசனைக் கொலனிக்குக் கொடுப்பதை எதிர்த்துப் போராடுகிறார்கள். தோட்டத்தை அளக்க வந்தவர்களை விரட்டுமளவுக்கு அவர்களது போராட்டம் சென்றுவிட்டது. நமது பணியக்கணக்கிலும் அதுபோன்ற ஒரு போராட்டத்தை நாம் ஆரம்பிக்கவேண்டுமென்ற வைராக்கிய முடிவுடன் தலையை ஆட்டுகிறான் பெருமாள்.

குசினிக்குள்ளிருந்த செல்லாயி வெற்றிலைச் சக்கையை வாய்க்குள்ளிருந்து கைக்கு எடுத்து வெளியில் வீசிவிட்டுப் பெருமாள் இருக்கும் இடத்துக்கு வருகிறாள்.

''பெருமாள், நம்ம தோட்டத்து ஆடிப் பூசைக்கு பொறவு ஒனக்கு எப்புடியும் ஒரு கலியாணம் பேசி முடிச்

சிரணும். பசுமலத் தோட்டத்துல ஒன் அக்கா புருஷனுட்டு சித்தப்பன் ஊட்டுல ஒரு பொண்ணு இருக்குன்னு ஒன் அக்கா சொல்லிச்சி, அத ஒனக்கு பாக்கணும். நா போனுத் தான் சரியாவும். ஆடிப் பூசை முடிஞ்சதும் பசுமலைத் தோட்டத்துக்கு நானே போயிட்டு வாறேன்.''

''ஆயா பசுமலத் தோட்டம் கொலனிக்கு போவப் போவுதுன்னு ஆளுங்க கஷ்டப்பட்டுகிட்டு இருக்குது. ஒனக்கு கலியாணப் பேச்சு வேறயா?''

''நீ யெப்பவும் கலியாணப் பேச்செடுத்தால் ஏதாச்சும் சொல்லிட்டுத்தான்ராயிருக்க. பாத்தியா அன்னிக்கு பீலிக்கரையில கங்காணி பொஞ்சாதி என்ன சொன்ன? ஒன்னால பாவம் கம்மனுட்டி அஞ்சலக்கும் கெட்ட பேரு.''

யாரோ காம்பராக்குள் நுழைய பெருமாள் வாசலைப் பார்க்கிறுன்.

''பெருமாள்.''

மலையாண்டியின் குரல் கேட்டு பெருமாள் எழுகிறுன்.

''அத்த எப்புடி சொகங்களா? பெருமாளுக்கு ஒரு கால் கட்டு போட்டாத்தான் அத்தைக்குத் தூக்கம் வரும் போலருக்கு.''

''ஆமா தம்பி, அந்தந்த காலத்துல அந்தந்த வெஷயங்களை அப்பப்ப முடிச்சிடணும். நீ வாத்தியாரு ஒனக்கு நல்லா வெளங்கும். ஓம் மச்சானுக்கு நல்ல புத்தி சொல்லு. சொல் புத்தி கேக்கணும். இல்லாட்டி சொய புத்தி இருக்கணும்.''

''சரி அத்த'' மலையாண்டி சொல்லிக்கொண்டே உட்காருகிறுன். செல்லாயி குசினிக்குள் போகிறுள்.

மலையாண்டி பெருமாளைப் பார்த்து தான் கொண்டு வந்த செய்தியைக் கூறுகிறுன்.

''நம்மளுக்கு வெத்தி கெடச்சிருச்சி. இன்னக்கி தொழிலாளியாளர் தலமையில காணி சுவீகரிப்புச் சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கும் நம்ம மலையக தொழிற்சங்கத் தலைவருக்கும் ஒரு மாநாடு நடந்திச்சுத்தானே, அதுல தோட்டத்துலயிருக்கிற நம்மள வீடுகளிலருந்து அகற்றுறதுல்ல, தோட்டத்தாளுங்களுக்கும் பாகுபாடின்றி காணிகளைப் பிரிச்சு கொடுக்கிறதுன்னு ஒரு முடிவுக்கு வந்திருக்காங்க. நாளையிலருந்து வேல நிறுத்தத்த கைவுட்டுறதுண்ணு நம்ம தலவர்மாரும் ஒப்புக்கொண்டுட்டாங்க.''

''ரொம்ப நல்லதாப் போச்சு. இப்புடி ஒரு தீர்மானத்துக்கு வந்தது'' பெருமாள் மகிழ்ச்சியுடன் சொல்கிருன்.

அப்பொழுது ''அண்ண'' என்ற குரல் கேட்டு இருவரும் திரும்புகிருர்கள்-

மூச்சு வாங்க ஓடிவந்த சூசை காம்பராவிற்குள் நுழைகிருன்.

''என்ன சூச நம்மளுக்கு 'வெத்தி கெடச்சிருச்சின்னு ஓடி வந்தியா?'' பெருமாள் கேட்கிருன்.

''என்ன அண்ணே நம்மளுக்குச் சந்தோசம்? தலவாக் கொல்ல பசுமலத் தோட்டத்து தலவரு மலயப்பனை பொலிஸ் சுட்டு சாகடிச்சிட்டாங்களாம். டவுனுக்குப் போயிருந்தேன். நம்ம சங்கப் பிரதிநிதி சொன்னுரு. ஒங்கள வந்து சந்திக்கச் சொன்னுரு.''

பெருமாள் திடுக்குற்று சிலையாக நிற்கிருன்.

மலையாண்டி பேசுகிருன்: ''பாருங்க கொழும்புல இன்னக்கி மாநாட்டுல சமரச முடிவுக்கு வந்திருக்காங்க. இங்க ஒரு உசிரு அநியாயமாப் போச்சு.''

பெருமாள் இது பற்றி முழு விபரத்தையும் அறிந்து 'தோட்டப் பிரச்னை ஒன்றுக்காக உயிரைப் பலிகொடுத்த

அந்தத் தியாகிக்கு எப்படித் தனதனுதாபங்களைத் தெரிவித்து இறுதி மரியாதை செலுத்துவது' என்ற நோக்கத்துடன் தொழிற்சங்கப் பிரதிநிதியைச் சந்திப்பதற்காக மலையாண்டியை அழைத்துக்கொண்டு டவுனுக்குப் போகிறான்.

* * *

மறுநாள் தோட்டம் முழுவதும் மலையப்பன் பிரிவுக்கு அனுதாபம் தெரிவித்து ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்ய பெருமாளும் சூசையும் மலையப்பனுக்கு இறுதி மரியாதை செலுத்த பசுமலைத் தோட்டத்தைப் போய் அடைகிறார்கள்.

பெருமாள் பிரமித்துப் போகிறான், மலையகம் திரண்டு வந்தது போல மலையப்பனுக்கு இறுதி மரியாதை செலுத்த மக்கள் கூடி நிற்கிறார்கள். பசுமலையிலுள்ள பெருமாளின் அக்கா அவனைக் கண்டதும் கதறியழுகிறாள். ''மரகதம் வூட்டோட ராசியாகி ஒரு மாசங்கூட ஆவல, அதுக்குள்ள இப்புடி நடந்திருச்சு. நீ மரகதத்துக்கு மாப்பிளையா இந்த தோட்டத்துக்கு வரணும்னு நெனச்சே, இன்னிக்கு அவளோட புருஷனூட்டு சாவுக்குத்தான் இந்த தோட்டத்துக்கு வந்திருக்க''

மரகதம் தலைவிரிகோலமாக அந்தத் தலைவரின் மையப் பெட்டிக்கருகில் உட்கார்ந்திருக்கிறாள். பெருமாளைக் கண்டதும் அவளது கண்களிலிருந்து தாரைதாரையாக கண்ணீர் வடிகிறது. பெருமாள் பெருமூச்சுடன் தனது இறுதி மரியாதையைச் செலுத்திவிட்டு, கலங்கிய கண்களுடன் வெளியேறுகிறான்.

பெருமாளின் மச்சான் அந்தத் தோட்டத்தில் நடந்தவற்றை விபரமாகக் கூறுகிறான். 'ஒரு வாரத்துக்கு முன்பு தோட்டத்தை கொலனிக்கு எடுப்பதற்காக அளப்பதற்கு அரசாங்க அதிகாரிகள் ஜீப்பில் வந்திருக்கிறார்கள். அந்த ஜீப்பின் முன்னால் உயிரையே பணயம் வைத்து மலையப்

பன் கிடந்தான்- நேற்றுக்காலையில் மீண்டும் அளக்கும் அதிகாரிகள் வந்தார்கள். தோட்டத்திற்குள் அவர்களை நுழைய விடாது, மலையப்பன் தலைமையில் தொழிலாளர்கள் அவர்களை விரட்டிவிட்டார்கள். அன்று மாலை பொலிஸாருடன் அந்த அதிகாரிகள் வந்து, மலையப்பன்தான் தொழிலாளர்களின் தலைவன் என்பதை இனங்கண்டு அவனை அடையாளம் காட்ட, பொலிஸ் ஒருவன் அவனைத் திட்டமிட்டுச் சுட்டான். சூசை இதைக் கேட்கும்போது உணர்ச்சி வசப்படுகிறான்.

தான் வாழ்வதற்கு நிலங் கேட்டல்ல, தன்னைச்சேர்ந்த சமூகத்தினரின் விடிவுக்காகப் போராடிய செயல் வீரனும் மலையகப் பிரச்சினை ஒன்றுக்கு தன்னைப் பிரதிநிதித்துவப் படுத்தி உயிர்நீத்த தியாகியுமான மலையப்பனின் இறுதி யாத்திரை செல்கிறது. வெள்ளம்போல் செல்லும் மக்கள் கூட்டத்துடன் மலையகத் தொழிற்சங்கத் தலைவர்களும், அரசியல்வாதிகளும் தங்கள் கட்சி பேதத்தை மறந்து செல்கிறார்கள். எந்தத் தோட்டத்திலிருந்து மலையப்பனை அகற்ற வேண்டுமென்று கங்கணம் கட்டினார்களோ, அவர்களுக்கு சவாலிட்டுவிட்டு, அந்தத் தோட்டத்து மண்ணிலேயே மீளாத் துயில் கொள்ள அடக்கம் செய்யப்பட்டுள்ள புதை குழிக்கு ஒரு பிடி மண்ணைப் போட்டுவிட்டு பெருமாளும் சூசையும் பண்டாரவளைக்குத் திரும்புகிறார்கள்.

* * *

தோட்டத்திற்குத் திரும்பிய பெருமாளிடம் பசுமலைத் தோட்டத்தில் நடந்தவற்றை ஆவலுடன் பலர் வந்து கேட்டுச் செல்கின்றனர்.

பொழுது இருண்டுவிட்டது. செல்லாயி மகனிடமிருந்து பசுமலைத் தோட்டத்து மகளின் குடும்பத்தைப்பற்றிய செய்தியைக் கேட்டுவிட்டு, மண்டை வெட்டிக் கணக்கப்பிள்ளையின் மகள் வீரபுத்திரன் கங்காணியின் மகனுடன் வீட்டிலி

ருந்து நகைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு இரவு ஓடிவிட்ட சங்கதியைக் கூறுகிறான்.

அப்போது வெளியில் யாரோ அழைக்கும் குரல் கேட்கிறது.

''தம்பி நாந்தான் மாரிமுத்துக் கங்காணி.''

''அண்ணே வாங்க என்ன சங்கதி'' பெருமாள் எழுந்து ஸ்தோப்புக்கு வந்துகொண்டே கேட்கிறான்.

''இப்பதான் தம்பி நாட்டுக்குப் போயிட்டு வாறன். சிறிசேனவூட்டு தங்கச்சியிருக்காளே சுதுநோனா அவள் அந்தியப்போல தவறிப்போயிட்டா. ஒனக்குத் தெரியுமோங்குற சந்தேகத்துலதான் சொல்லிட்டுப் போவலாம்னு வந்தேன்.''

''ஐயோ பாவம்'' என்கிறான் பெருமாள்.

''சரி தம்பி இருட்டிருச்சி நா போயிட்டு வாறேன்'' மாரிமுத்து கங்காணி போகிறான்.

பெருமாள் சிறிசேன வீட்டிற்குப் போகமுன், சுதுநோனாவுக்கு நடந்ததை அறிய விரும்பி பொடிமெனிக்கா வீட்டை நோக்கிப் போகிறான்.

பொடிமெனிக்காவும் சோமாவதியும் ஏதோ சத்தமாக உள்ளே உரையாடிக்கொண்டிருக்கிறார்கள்.

உள்ளே சென்றதும் பெருமாள் விடயத்தை அறிகிறான். செத்துப்போன தன் சிநேகிதியைத் தானும் போய்ப் பார்க்கவேண்டுமென்று சோமாவதி பிடிவாதமாக இருக்கிறாள்.

பெருமாளின் சமரச முயற்சியால் சோமாவதியைக் கூட்டிக்கொண்டு பொடிமெனிக்காவும் பெருமாளும் நாட்டிற்குப் போகிறார்கள்.

பொடிமெனிக்காவிடமிருந்து சுதுநோனு இறந்த காரணத்தைப் பெருமாள் அறிகிருன். பிரமாயியின் முயற்சியால் சுதுநோனுவின் மானம் காப்பாற்றப்பட்டது. ஆனுல் அதிலிருந்து அவளுக்கு காய்ச்சல் ஏற்பட்டது. டாக்டரிடம் போனுல் ஏதாவது விபரீதம் ஏற்பட்டுவிடும் எனப் பயந்து அவ்வாறு செய்யாது'வெதமாத்தி'யாவிடம் நாட்டு வைத்தியம் செய்தனர். அதனுல் வியாதியைக் கட்டுப் படுத்த முடியவில்லை. மயக்கமுற்று 'ஜன்னி' பிடித்து சுதுநோனு மரணமாகியிருக்கிருள்.

சோமாவதியை நடுவில் விட்டு பெருமாள் முன்னும் பொடிமெனிக்கா பின்னும் செல்கிருர்கள்.

தோட்ட எல்லையும் நாட்டிலிருந்து வரும் ரோட்டும் சந்திக்கும் முற்சந்தியில் வீரக்கோன், ஆரியதாச, பொடிசிங்கோ மூவரும் ஊர்வம்பு அளந்துகொண்டிருக்கிருர்கள். சோமாவதியை விழுங்குவதுபோல வீரக்கோன் பார்க்கிருன். உருண்டு திரண்டிருக்கும் அவளது உடலுறுப்புகளை அவனது கழுகுக் கண்கள் கூர்ந்து பார்க்கின்றன,

முச்சந்திக்கு அருகேயுள்ள அஸ்லின் வீட்டுக் கோழிக் குஞ்சைத் தனதிரையாக்கிவிட்டு, வேறு எங்கோ இரை தேடிவிட்டு பதுங்கிப் பதுங்கி வரும் ஒரு கீரி, முச்சந்திக் கெதிரேயுள்ள ஒரு வீட்டில் கோழிக்குஞ்சு சத்தமிடுவதைக் கேட்டு கறுத்த ரோட்டைக் கடந்து ஓடுகிறது.

## ( 27 )

ஆடி பிறந்துவிட்டது. அடுத்த மாதத்திற்குரிய தனித்துவமான காற்று அந்தப் பிரதேசம் முழுவதும் வீசிக் கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு காற்று வேகமாக வீசுகிறது. வடகீழ்ப்பருவப் பெயர்ச்சிக் காற்றில் மழை பெறும் இந்த ஊவாமாகாணத்திலே ஆடிமாதத்தில் வெப்பத்தின் கொடுமையும் கூடவேயிருக்கும். கடைசியாக மழை பெய்து ஒரு மாதமாகிவிட்டது. ஆனால் பலமாத வரட்சி கொண்டதுபோல அந்தத் தோட்டம் காணப்படுகிறது, தேயிலைச் செடிகள் வெயிலில் காய்ந்து, காற்றில் சருகாக அசைந்தாடுகின்றன. புல்லுமலைகள் கொழுத்தப்பட்டு, மாணாப்புல்லின் சாம்பல் சுழல் காற்றில் மிதக்கின்றது. 'திடுதிடு'வென ஓடிவரும் தண்ணீர்க் கான்கள் இப்போது திக்கற்று நீர்ப்பசுமை குன்றி அரசியல் உரிமை பறிபோனவர்கள்போல ஒடுங்கிக்கிடக்கின்றன.

இயற்கையின் கொடுமைகள் உச்சக்கட்டத்தையடையும்போது இறைவனை நம்பி வழிபடுவது மனித இயல்பு என்பதை சுட்டிக் காட்டுவதுபோல் ஆடிமாதத்திலே ஊவாமாகாணத்தில் சாமிகும்பிடும் திருவிழா என்றழைக்கப்படும் ஆடிப்பூசை நடைபெறும்.

இந்தத் தோட்டத்தில் ஆடிப்பூசை ஆரம்பித்துவிட்டது. பெருமாள் இந்தாண்டு நடைபெறும் ஆடிப்பூசை சிறப்பாக இருக்க வேண்டுமென்று பல நாட்கள் இராப்பகலாக ஓடியாடி உழைத்து வருகிறான். தோட்டம் புதுக்கோலம் பூண்டு காணப்படுகிறது. துரை ஆறுந் திகதியே சம்பளம் போட்டுவிட்டார். அட்வான்சும் ஐம்பது ரூபா கொடுத்திருக்கிறார். மூன்று நாட்களாகத் தோட்டத்தில் வேலையில்லை.

லயத்துக் காம்பராக்கள் எல்லாம் வெள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. சிறுவர்களும் பெரியோர்களும் புத்தாடை அணிந்து தீபாவளிப் பெருநாளாகக் காட்சியளிக்கின்றனர். வெளியூரில் வேலை செய்தவர்கள் ஆடிப்பூசைக்காக லீவில் வந்திருக்கின்றனர். தினமும் உடல் உழைப்

பில் உழல்பவர்கள் உழைப்பின் கடுமையிலிருந்து விடுதலையும் ஆறுதலும் அளிக்கும் தொழிலாளர் விழாவாக இத் திருவிழா அமைந்திருக்கிறது. எல்லோர் முகங்களிலும் நம்பிக்கை ஒளி வீசுகிறது.

இன்று திருவிழாவின் இரண்டாவது நாள். மாரியம்மன் கோவில் வாழை, மாவிலைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. நேற்று மாரியம்மன் கோவில் கொடியேற்றம் நடைபெற்று, இரவு கரகம் பாலித்தல் ஆரம்பித்தது. பண்டாரம், பூசாரி பூவலிங்கம் தோட்கமிட்டி அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள், சிறுவர்கள் ஆகியோர் தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் நிரம்பிய தட்டம் ஒன்று, செம்புகள், வேப்பிலை, காதோலை, கடுகமணி சகிதம் தெப்பக்குளத்தில் கூடினர்.

தெப்பக்குளம் ஒரே கலகலப்பாக இருந்தது. ஐஸ் அய்யாச்சாமி உடுக்கடித்து மாரியம்மனை அழைக்க, வைத்த குறிப்பை எடுத்து மாரியம்மன் அருள் தனக்கு வந்ததை உறுதிப்படுத்திய பூசாரி பூவலிங்கம் அங்கே நின்ற அஞ்சலையின் மகன் காளிமுத்துவையும் மாரிமுத்துக் கங்காணியின் மகன் கண்ணுசாமியையும் இழுத்து வந்து நீராட்டி, காப்புக்கட்டி, புத்தாடை புனைவித்து அழகாக உருவாக்கப்பட்ட இரு கரகங்களையும் தூக்கி வைத்தான். தீச்சட்டி ஏந்தி மாரியம்மன் உருப்பெற்று, வரும் வழியில் உள்ள சந்திகளில் எதிர்ப்படும் பேய் பிசாசுகளை தேசிக்காய் வெட்டி மறித்து, மாரியம்மன் கோவிலுக்கு கரகத்தைக் கொண்டு வர இரவு இரண்டு மணி ஆகிவிட்டது. கோவிலுக்கு வந்ததும் பூசை செய்து அன்னப் பூசைக்கு உலை மூட்டினார்கள்.

இன்று தெப்பக்குளத்திலிருந்து வந்த காவடிகள் கோவிலை வந்தடைந்ததும் அன்னப் பூசை செய்து, தோட்டத்து மக்களுக்கு மாரியம்மன் சந்நிதானத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது.

சாமி தோட்டத்தை வலம்வரும் நிகழ்ச்சியுள்ள இரவு வந்து விட்டது.

இதோ, ஆட்கள் மாரியம்மன் கோவில் வந்தடைகிறார்கள். ஒலிபெருக்கி அலறிக் கொண்டிருக்கிறது. லயிற் மெஷின் தனது ஒலியுடன் கோவிலை ஒளிமயமாக்கிக் கொண்டிருக்கிறது. குழந்தைகள் குதூகலத்துடன் மின்சார ஒளியில் ஓடி விளையாடுகின்றனர். அவர்கள் கையிலே பொட்டணிக்காரனின் 'உறுலோஸ்' காப்புக்கள் மின்னுகின்றன. பலூன்கள் ஊதி, உப்பி, உடைகின்றன.

இளவயதினரின் பருவக்கோளாறு விளையாட்டுக்களும் திருவிழா அளிக்கும் சந்தர்ப்பம் சூழ்நிலைகளில் நடப்பதுண்டு. களியாட்ட விழாக்கோலமும் திருவிழாவில் கலந்திருக்கும்.

மாரிமுத்துக் கங்காணி தலையில் முண்டாசு இல்லாததால் சொட்டைத் தலையுடன் வேறு ஆள்போலக் காட்சியளிக்கிறான், ''கும்பிடுறேனங்க'' எல்லோரையும் கும்பிட்டுக் கொண்டேயிருக்கிறான். பெருமாளை நோக்கி, 'தம்பி நான் கெஞ்சி கஞ்சி குடிக்கவும் மாட்டன், அஞ்சிக் காட்டிக் கொடுக்கவும் மாட்டன்' என்று சொல்கிறான் சூசையும் ஆப்தீனும் குடித்திருக்கிறார்கள். பெருமாள் உண்மைப் பக்தனாகக் காணப்படுகிறான். சூசை ஒலிபெருக்கியில் 'கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்ற பாடலையும், ஆப்தீன் 'அல்லா அல்லா...' என்ற பாடலையும் பாடுகின்றனர். இன்னும் பல மலையகத்துப் பாடல்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாது மைக்கில் அரங்கேற்றி, தோட்டத்தில் அறிமுகமாகிறார்கள்.

இடிமுழக்கம் காதைச் செவிடாக்குகிறது. இவ்வளவு நாளும் வீசிய வெப்பக் காற்றுமாறி இப்பொழுது கூதல் வாடை அடிக்கின்றது. லயமே கோவிலில் கூடுகிறது.

பூவாயி பூசைத் தட்டுடன் வருகிருள். பெருமாள் அவளைப் பார்க்கிருன். இதுதானே பூவாயிக்குக் கடைசித் திருவிழா. அடுத்த ஆடிப் பூசைக்கு அவள் இந்தியாவில் இருப்பாள்.

பெருமாளுக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை. பூவாயிக்கு அடுத்திருப்பது அஞ்சலையா? கணவன் இறந்த பின்பு இந்த வருடம்தான் அவள் கோவிலுக்கு வந்திருக்கிருள்.

மின்னலும் முழக்கமும் வானத்தில் போட்டிபோட மழை தூறத் தொடங்கியது. கோவிலுக்கு வெளியே நிற்பவர்கள் கோவிலுக்கு உள்ளே வருகிருர்கள். பெருமாளுக்குப் பெருங் கவலையாக இருக்கிறது. மழை சாமி வலம் வருவதைக் குழப்புமோ?

நாட்டிலிருந்து வேலைக்கு வருபவர்களும் தோட்டத்து வாலிபர்களும் மழை பெய்வதையும் பொருட்படுத்தாது 'பைலா'ப் பாட்டு பாடுகிருர்கள். அந்தக் கூட்டத்தைப் பெருமாள் பார்க்கிருன். ஆரியதாச, வீரக்கோன், பொடிசிங்கோ மூவரும் நிற்கிருர்கள். ஒவ்வொரு வருடமும் பைலாப் பாட்டு பாடியாடும் சிறிசேன இவ்வருடம் கோவிலுக்கே வரவில்லை.

சிறிசேனவில் ஆரம்பித்த பெருமாளின் சிந்தனை சோமாவதியில் படர்கிறது. சோமாவதியை அவனின் கண்கள் தேடுகின்றன. அவளைக் காணவில்லை. 'ஏன் வரவில்லை? கட்டாயம் வருவதாகக் கூறினளே!'

நேற்றுக் காலையில் சோமாவதியைச் சந்தித்தது பெருமாளுக்கு நினைவுக்கு வருகிறது. வழக்கம்போல திருவிழாவை முன்னிட்டு புது உடுப்புக்கள் எடுக்க டவுனுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்த பெருமாளுக்கு, ஒவ்வோர் ஆண்

டும் சோமாவதிக்கு உடுப்பு வாங்கிக் கொண்டு வந்து கொடுப்பது நினைவுக்கு வந்தது. மாட்டுப்பட்டி லயத்துக் குப் போய் 'என்ன உடுப்பு வேண்டும்' என்று சோமாவதி யைக் கேட்டான்.

''எனக்கு என்ன வேணுமுன்னு ஒங்களுக்குத் தெரியுந் தானே'' என்றுமட்டும் சொல்லிவிட்டு பணத்தைமட்டும் கொண்டு வந்து கொடுத்தாள். டவுனுக்குச் சென்று திரும் பிய பெருமாள், சிவப்பு நிறத்தில் காப்பும் சிவப்பு நிறத் தில் ஒரு சேலையும் அதற்குரிய ரவிக்கைத் துணியும், தலை முடிக்குக் குத்தும் சிவப்பு நிறக் கிளிப்— இவையெல்லாவற் றுடனும் வருவதைக் கண்ட சோமாவதி மகிழ்ச்சிப் பிர வாகத்தில் தத்தளித்தவளாகச் சொன்னாள்; ''நீங்க ஒருத் தர்தான் என்னைச் சரியாப் புரிஞ்சு வெச்சிருக்கிறீங்க'' அவள் தொடர்ந்து சொன்னாள்: ''என்கிட்டே எல்லாமே பச்ச சேலயாத்தா இருக்கு. செவப்பு ஒண்ணு வாங்கணு ம்னு ரொம்ப நாளா ஆசை. நீங்கதான் என் ஆசய நெற வேத்தினீங்க'' பெருமாளுக்கு இப்பொழுது அவள் கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன.

வானமே பிய்த்துக் கொட்டி விட்டாற்போல் மழை பெய்கிறது. ஊதற்காற்று மூர்க்கத்தனமாக வீசி, மணல் மூட்டைகளுக்குக் கீழ் உள்ள லயத்துக் கூரைகளைப் பிய்க் கிறது. மின்னலைத் தொடர்ந்து இடி முழக்கம் கேட்கிறது. மாட்டுப்பட்டிலயத்துப் பக்கமாக எங்கோ இடி விழுந்து விட்டதோ!

* * *

மாரியம்மன் கோவிலில் ஆரியதாசாவும், வீரக் கோனும், சோமாவதி திருவிழாவிற்கு வரவில்லையென் பதை உறுதிப்படுத்திக் கொண்டதும், மாட்டுப்பட்டி லயத் துக்குக் கீழ் உள்ள கறுப்பந்தைலக் காட்டுப்பக்கமாகக் காரில் போகிறார்கள். காருக்குள் பொடிசிங்கோவும் இருக்கிறான்.

வீரக்கோனுக்கு ஒரே மகிழ்ச்சி. அவன் போட்ட திட்டம் இன்று நிறைவேறப் போகிறது. இன்னும் சிறிது நேரத்துக்குள் சோமாவதி அவனுக்குச் சொந்தமாகப் போகிருள். வீரக்கோன். ஆரியதாச, பொடிசிங்கோ மூவரும் முகமூடி அணிந்து கொண்டு, மாட்டுப்பட்டி லயத்திலுள்ள பொடிமெனிக்காவின் காம்பராவை நோக்கி வருகிருர்கள்.

மாட்டுப்பட்டி லயத்தில் தாயும் சோமாவதியும் மாத்திரம்தானிருப்பார்கள். மற்றவர்கள் எல்லோரும் கோவிலுக்குப் போய்விடுவார்கள். பொடிமெனிக்காவைக் கட்டிப்போட்டுவிட்டு, சோமாவதியைக் கொண்டு வந்துவிட வேண்டும். அதற்குப் பிறகு அவளை அவன் என்ன செய்ய வேண்டுமாஞலும் செய்வான்.

ஆரியதாச, பொடிமெனிக்காவின் காம்பராவைக் காட்ட, பொடிசிங்கோ கதவைக் காலால் உதைக்கிருன். பொடிமெனிக்கா அவசரமாகக் கதவைத் திறக்க, பொடிசிங்கோ அவளைக் கட்டிப்பிடித்து வாயைத் துணியால் கட்டுகிருன். ஆரியதாசாவும் வீரக்கோனும் சோமாவதியைத் தேடி உள்ளே செல்கின்றனர். அவளை அங்கே காணவில்லை. ஒரே ஏமாற்றமாக இருக்கிறது. பொடிசிங்கோ சோமாவதி போன இடத்தைச் சொல்லும்படி பொடிமெனிக்காவைக் கேட்கிருன். மயக்கமுற்றுக் கிடக்கும் பொடிமெனிக்கா ஒன்றுமே பேசவில்லை.

* * *

எல்லோருக்கும் பெரு வியப்பாக இருக்கிறது. மாரியம்மன் அற்புதம் பற்றிக் கட்டை வெட்டிக்கிழவன் பிரஸ்தாபிக்கின்ருன். ஒருமாத காலமாக நிலவிய வெப்பத்தைப் போக்கி சாமி வலம் வரும் நேரத்தில் மழை ஓய்ந்து வானம் வெளுத்துவிட்டது.

செல்லாயியும் சோமாவதியும் இப்பொழுதுதான் கோவிலுக்கு வருகிறுர்கள்.

பெருமாள் தாயிடம் கேட்கிறுன்: ''ஏன் ஆயா இவ்வளவு நேரம் சொணங்கிச்சு.''

''மொதலில சோமாவும் நானும் பொறப்பட்டோம், இடயில மழ வந்து கெடுத்துரிச்சி.'' செல்லாயி சொல்லிவிட்டு அருகில் நின்ற சோமாவதியைப் பார்க்கிறுள். அவள் சிவப்புச் சேலை கட்டி காப்பு, கிளிப்பெல்லாம் சிவப்பு மயமாக இருக்க, கன்னஞ் சிவக்கச் சிரித்துக் கொண்டு பெருமாளை உற்றுப் பார்க்கிறுள்.

பட்டுவேட்டி கட்டி, முழுக்கையும் மறைய வெள்ளை 'சேட்' அணிந்து, நெற்றியில், சந்தனமும் குங்குமமும் கலந்த பொட்டுத் துலங்க, சீப்பின் வலிமைக்கு ஈடுகொடுக்க முடியாத மயிற் கற்றைகள் சுருண்டு நெற்றியில் விளையாட நிற்கும் பெருமாள் இன்று தனியழகுடன் பொலிகிறுன்.

சிறிது நேரத்துக்குப் பின்பு பொடிமெனிக்கா வியர்த்து விறுவிறுக்க கோவிலுக்கு வந்து, சோமாவதியைத் தேடுகிறுள். அவள் பாதுகாப்பாக செல்லாயியுடன் இருப்பதைக் கண்டு மனமகிழ்வுடன் இனபேதமின்றி அருள்பாலிக்கும் மாரியம்மனை வணங்குகிறுள்.

பெண்கள் கூடி நின்று கும்மியடிக்கிறுர்கள். பூவாயியும் சோமாவதியும் கும்மியடிப்பதில் பங்கு கொள்கிறுர்கள். வீரச்சாமி சிலம்படி வித்தை காட்டுகிறுன்.

முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் புழுதியையும் சருகுகளையும் மழை கழுவிவிட்ட பாதையில் வலம் வருகிறுர். மக்கள் கூட்டம் தொடர்கிறது. சோமாவதியும் பூவாயியும் முன் செல்ல, செல்லாயியும் அஞ்சலை

யும் ஏதோ பேசிக்கொண்டு பின் செல்கிறார்கள். பெருமாள் அசம்பாவிதம் ஒன்றுமே விடியும்வரை நடக்கக் கூடாது என மாரியம்மனை வேண்டிக்கொண்டு முருகப் பெருமானின் வீதிவலத்தின் முன் செல்கிறான்.

தொழிலாளர்கள் வசிக்கும் லயங்களுக்கு அருகில் உள்ள ரோட்டு வழியே சாமிபவனிவர, மக்கள் அபிஷேகம் செய்து பக்திப்பரவசத்துடன் முருகன் அருளை வேண்டி நிற்கிறார்கள். எல்லா லயன்களையும் சாமி சுற்றிக் கோவிலுக்குத் திரும்ப நன்றாக விடிந்துவிட்டது.

## (28)

திருவிழா தொடங்கி இன்று மூன்றாவது நாள். மாரியம்மனுக்கு மாவிளக்குக் கொண்டு பெண்கள் ஊர்வலமாகப் போகிறார்கள். கூடை தோளிலே தொங்க, படங்கு கட்டி வாடிய முகத்துடன் மலைக்குப் போகும் பெண்கள் அழகாக உடுத்தி, மாவிளக்குச் செய்து வாத்திய இசை முன் செல்ல மாரியம்மன் கோவிலை நோக்கிப்போவது கண்ணுக்கு பெரு விருந்தாக இருக்கிறது.

பூவாயியும் சோமாவதியும் முன் செல்கிறார்கள். பெருமாளுக்கு பூவாயியைப் பார்க்கப் பெருங் கவலையாக இருக்கிறது. 'அடுத்த ஆடிப் பூசைக்கு பூவாயி தோட்டத்தில் இருக்கமாட்டாளே!'

அன்று இரவு நடைபெறப்போகும் நாடகம் பற்றியும், பெரிய துரை எட்டு மணிக்கு வருகை தந்து நாடகத்தை ஆரம்பித்து வைப்பார் எனவும் ஒலி பெருக்கியில் அறிவிக்கப்படுகிறது.

பெரிய துரை அறிவித்தபடி சரியாக எட்டு மணிக்கு கோவிலுக்கு வந்துவிட்டார். புதுக் கண்டக்டர், டீ மேக்

கர், பெரிய கிளாக்கர், டாக்டர் மற்றும் தோட்ட உத்தியோகத்தர்களும் வருகை தந்திருக்கிறார்கள். கோவில் கமிட்டி அங்கத்தவர்களும், தோட்டக் கமிட்டி அங்கத்தவர்களும் துரையை எதிர்கொண்டு வரவேற்கிறார்கள். மாரிமுத்துக் கங்காணி துரை கோவிலுக்குப் புகமுன் அவரது பாதத்தைக் கழுவுகிறான். பெருமாள் பெரிய மாலை ஒன்றை துரைக்குப் போடுகிறான். கட்டைவெட்டிக் கிழவன் துரைக்கு சந்தனமும் குங்குமமும் இடுகிறான், துரைக்காக ஒரு தனிப் பூசையே நடைபெறுகிறது.

அடுத்த நிகழ்ச்சியாக கோவிலுக்கு எதிரேயுள்ள மேடைக்கு துரை அழைத்துச் செல்லப்படுகிறார். துரை அன்று மேடையேறும் 'ஒரு குறமகள் தெய்வமகளாகிறாள்' என்ற நாடகத்தை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்துவிட்டு அமைதியாக எல்லோரையும் நாடகத்தை கண்டுகளிக்கும்படி கேட்டுவிட்டுப் போய்விடுகிறார்.

நாடகம் பார்ப்பதற்கு தோட்டமே குழுமியிருக்கிறது. கயிறு கட்டி ஆண்களும் பெண்களும் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நாடகம் ஆரம்பமாகிறது. 'பபூன்'களாக விருந்தாடிவேலுவும் ஐஸ் அய்யாச்சாமியும் திறம்பட நடிக்கிறார்கள். கதாநாயகன் முருகனாக பெருமாளும், கதாநாயகி வள்ளியாக ஆப்தீனும் நடிக்கிறார்கள். நாரதராகப் பாத்திரமேற்ற மாரிமுத்துக் கங்காணி அப்பாத்திரமாகவே மாறிவிடுகிறான். ஆப்தீனுக்கு வேஷப்பொருத்தம் நன்றாகவே இருக்கிறது. வள்ளி முருகனை 'சுவாமி, பிரபு' என்றழைத்தாலும் காதல் காட்சிகள் நவீன சினிமாப் பாணியில்தான் அமைகின்றன. இன்று பிரபல்யம் அடைந்த சினிமாப் பாட்டுக்களைப் பாடி புகழ்பெற்ற தமிழ் நடிக நடிகைகளுக்கு ஈடுகொடுத்து முருகனும் வள்ளியும் காதல் கொள்ளும் காட்சிக்கு சீழ்க்கை அடித்தும், 'ஊ' எனக் குரலெழுப்பியும் ரசிகர்கள் நல்ல வரவேற்புக் கொடுக்கிறார்கள்.

பெண்கள் பகுதியில் அஞ்சலை, பூவாயி, சோமாவதி ஆகிய மூவரும் பெருமாளின் காதல் காட்சியை ரசித்துக் கொண்டிருக்கிறார்கள். அஞ்சலைக்கு சிறுவயதில் பெருமாள் ராஜாவாகவும், தான் ராணியாகவும் நடித்த நாடகம் நினைவுக்கு வருகிறது; மனம் சித்திரவதைப்படுகிறது; கண்கள் கலங்குகின்றன. பூவாயியின் தலைக்குள் ஏதோ செய்கிறது. அவளையறியாமல் பெருமூச்சுகள் வெளிவருகின்றன. சோமாவதி தன்னை மறந்து காதற் காட்சிகளைப் பார்த்து விழுந்து விழுந்து சிரிக்கிறாள்.

அடுத்து 'மூட்டம் விலகட்டும்' என்ற ஓரங்க நாடகம் அரங்கேறுகிறது. அந் நாடகத்தில் தொழிலாளர்களை அடிமையாக நடத்தும் வெள்ளைக்காரத் துரை வருகிறார்; பெரும் கொடுமைகள் செய்யும் பெரிய கங்காணி காட்டப்படுகிறான். தோட்டத்தைச் சுரண்டும் பெரிய கிளாக்கர், தொழிலாளர்களை உறுஞ்சும் கண்டக்டர் தோட்டச் செல்வமான தேயிலையைக் கடத்தும் டீ மேக்கர், ஏழைத் தொழிலாளர்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் டாக்டர் முதலியோர் வந்து போகிறார்கள்.

'ஒரு குறமகள் தெய்வ மகளாகிறாள்' என்ற நாடகத்தைக் கற்பனையில் கண்டு களித்த மக்கள், 'மூட்டம் விலகட்டும்' என்ற நாடகத்துடன் தங்களை மறந்து ஒன்றிவிடுகிறார்கள். நாடகம் முடியப் பொழுதும் விடிகிறது.

மறுநாள் கரகம் குடிவிடும் நாள்.

கோவிலில் பூசைசெய்து, காளிமுத்துவும் கண்ணுசாமியும் கரகங்களைத் தூக்கிக்கொண்டு மக்கள் கூட்டம் பின்தொடர தெப்பக் குளத்தை நோக்கிப் போகிறார்கள்.

லயம் பூராவும் கலகலப்பாக இருக்கிறது. கருவாடு சுட்டுக் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு செல்லும் வழியெல்லாம் மஞ்சள் நீராடிய வண்ணம் தெப்பக் குளத்தில் காப்பு வெட்டி கரகத்தைக் குடிவிடச் செல்கிறார்கள்.

கரகம் குடிவிட்ட பின்பும் 'மஞ்சள் தண்ணீர்' விளையாட்டுத் தொடர்கிறது.

பச்சிளம் குழந்தைகள் தொட்டு பென்சன் எடுத்தகிழடுகள் வரையும் மஞ்சள் தண்ணீரில் நனைகிறார்கள். யாருமே தப்பிவிடக்கூடாதே என்று சிறுவர்களும் இளவட்டங்களும் துரிதமாக இயங்குகிறார்கள். பதுங்கிவந்து ஊற்றுபவர்கள், துரத்திப் பிடித்து ஊற்றுபவர்கள், யுவதிகள் கவனத்திற்காக லயத்தைச் சுற்றும் இளைஞர்கள், எதிர்பார்த்தவர் கையால் தாங்கள் குளிப்பாட்டப்படவேண்டும் என்று ஏங்குபவர்கள். இப்படி எத்தனை எத்தனை ரகங்கள்!

இன்றைய திருவிழா வரை எல்லாமே சிறப்பாக நடந்ததையிட்டு திருப்தியடைகிறான் பெருமாள். இதற்கிடையில் தோட்டக் கமிட்டியின் அடுத்த திட்டம் பற்றியும் யோசிக்கவேண்டியிருக்கிறது.

தோட்டத்தில் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வாசிகசாலை ஒன்றும், குறைந்த விலையில் தட்டுப்பாடின்றி பாவனைப் பொருட்களைப் பெற கூட்டுறவுக் கடையொன்றும் நிறுவுவது பற்றி ஏற்பாடு செய்ய ஆப்தீன் வீட்டை நோக்கிப் போகிறான் பெருமாள்.

அஞ்சலை வீட்டைக் கடக்கும் பொழுது மஞ்சள் நீர் பெருமாளின் முதுகுப்புறமாக ஊற்றப்படுகிறது. திரும்பிப் பார்க்கிறான், கதவிற்குப் பின்னால் அஞ்சலை ஒதுங்குகிறாள். காளிமுத்து சிரித்துக்கொண்டு நிற்கிறான். யார் ஊற்றினார்கள். காளிமுத்துவா? அஞ்சலையா?

பலா மரத்து லயத்துக்கு வரும்பொழுது ''தலவருணுப்புல தப்பமுடியுமா என்ன? இதான் நா ஒங்களுக்கு ஊத்துற கடைசித் தண்ணி'' என்று வெண்கலக் குரல் ஒலிக்க பூவாயி செம்பிலிருந்து 'மஞ்சள் தண்ணி'யை பெருமாளுக்கு ஊற்றுகிறாள். மஞ்சள் நீர் இலக்கு விலகி பெரு

மாளின் வேஷ்டியில் மட்டும் தெறித்துக் கறையை ஏற்படுத்துகிறது.

மாட்டுப்பட்டி லயத்தை பெருமாள் வந்தடைகிருன். யாரோ பிற்பக்கமாக ஓடிவரும் சத்தம் கேட்கிறது. பெருமாள் திரும்பிப் பார்க்கமுன் ஒரு வாளி மஞ்சள் நீரால் பெருமாள் குளிப்பாட்டப்படுகிருன். மூச்சுத்திணறி பெருமாள் திரும்பிப் பார்க்கிருன். சோமாவதி கைகொட்டிச் சிரிக்கிருள். குளித்ததால் கூந்தலே தோளிலே கலேத்துவிட்டுத் தங்கப் பதுமையாக நிற்கும் சோமாவதி பெருமாளே உற்றுப் பார்க்கிருள்.

''பாவம் பெருமாள் ரொம்ப நனஞ்சிப் போனீங்க'' என்று கூறிக்கொண்டு தனது காம்பராவுக்குப் பெருமாளே அழைத்துச் சென்று துவாயை எடுத்துத் தலேயைத் துவட்டுவதற்குக் கொடுக்கிருள்.

பெருமாள் சேட்டைக் கழற்றி, அவள் கொடுத்த துவாயால் ஈரத்தைத் துவட்டுகிருன். சோமாவதி அவனது உரோமம் நிறைந்த நெஞ்சைப் பார்த்து வெட்கத்தால் தலேகுனிகிருள். அதற்குள் ஆப்தீனின் தங்கை சலிமா சோமாவதிக்கு மஞ்சள் நீரை வீசுகிருள். சோமாவதி நன்ருக நனேந்துவிடுகிருள். அவளின் மேலாடை ஈரத்தில் ஒட்டிக் கிடக்கிறது. பருவப் பூரிப்பில் பொங்கி நிற்கும் உள்ளுறுப்புகள் அவளின் யௌவனத்தை பிழிந்து காட்டுகிறது. பெருமாள் ரசித்தும் ரசிக்காத தன் பார்வையை எங்கோ பாய்ச்சியவண்ணம் துவாயை அவளிடம் கொடுத்துவிட்டு வெளியேறுகிருன்.

சோமாவதியின் உடலிலும் உடையிலும் ஊற்றப்பட்ட மஞ்சள் நீர் துவட்டாததால் சுவடுகளே ஏற்படுத்துகிறது.

## ( 29 )

விடிந்தால் வேலுச்சாமியும், பூவாயியும் இந்தத் தோட்டத்தை விட்டு நிரந்தரமாகவே பிரிந்து இந்தியாவுக்குப் புறப்பட்டுவிடுவார்கள்.

ஆடிப்பூசையால் வேலுச்சாமி பயணத்தைப் பின்போட்டுவிட்டான். பூவாயி நோயுற்றிருந்தபோது குலதெய்வமான புல்லுமலே மாரியம்மனுக்கு வைத்த நேத்திக்கடனே, ஆடிப்பூசையில் தீபவிளக்கு ஒன்றை வாங்கிக் கொடுத்து நிறைவேற்றியிருந்தான் அவன்.

வேலுச்சாமிக்கு இந்தியாவுக்குப் போவதை முன்னிட்டு தோட்டத்தில் வேலே நிறுத்திய நாளிலிருந்து ஒரே கவலே. நாட்கள் நெருங்க நெருங்க அவன் உள்ளத்திலே கவலே அதிகரித்துக்கொண்டுவருகிறது.

வேலுச்சாமி இலங்கைக்கு வரும்போது அவனொரு கைக் குழந்தை. வந்த கதையை அவனது அப்பா சொல்லக் கேட்டிருக்கிருன்.

இந்தியாவில் அவர்கள் கிராமத்தில் பஞ்சம் நிலவியதால் பண்ணேயாருக்குத் தினமும் வேலே செய்தும், வயிறு வளர்க்கமுடியாமல், குடியிருந்த நிலத்தை அடகு வைத்து 'கண்டிச் சீமைக்குப் போனுல் கோடீஸ்வரனுகலாம்'என்ற நம்பிக்கையுடன் உழைப்பு ஒன்றையே மூலதனமாகக் கொண்டு இலங்கைக்கு வந்தார்கள். இங்கு வந்தபின் பிறந்த நாட்டில் கண்ட மன அமைதியைக் காணமுடியவில்லே. காலேயிலே சங்கொலி கேட்டெழுந்து மாலேவரை மழையிலும் கூதலிலும் மாடாக உழைக்கவேண்டியிருந்தது. அங்கு பண்ணேயாருக்கு கடனுளியாக இருந்தவர்கள். இங்கு பெரிய கங்காணிக்கு கடனுளியானுர்கள். வேலுச்சாமியின் அப்பன் கடும் உழைப்பாலும் சிக்கனத்தாலும்

ஊரில் அடகுவைத்த காணியை மட்டும் மீட்டான். ஊருக்குப் போகவேண்டுமென்ற ஆசையுடன் மனைவி இறந்த ஒரு வாரத்திற்குள் இந்த நாட்டின் தேயிலைச் செடிக்கே உரமானான். வேலுச்சாமிக்கு இந்த ஊர் பழக்கப்பட்டுவிட்டது. கல்யாணம் செய்து பல பிள்ளைகளைப் பெற்று தேயிலைக்கு உரமாக்கியது போக, எஞ்சிய பூவாயியுடன் மட்டும் இப்போது இந்தியாவுக்குத் திரும்பப்போகிறான்.

கைக்குழந்தையாக வந்த வேலுச்சாமி, இன்று கடின உழைப்பால் வயதுக்கு மீறின தோற்றத்துடனும், வாடி வதங்கிய முகத்துடனும் ஊருக்குப் போகப்போகிறான்; பிரஜாவுரிமையற்றவர்கள் இந்தியாவுக்குப் போவதில் கட்டுப்பாடு வந்தவுடன் அவன் ஊருக்குப் போகவில்லை. அதற்கிடையில் இந்தத் தேசத்தில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. ஆனால் தோட்டத் தொழிலாளர் வாழ்வில்தான் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஊருக்குப் போய் வருபவர்கள் சொந்த ஊர் நன்றாக முன்னேறிவிட்டது என்று சொல்வது கேட்டு ஊருக்குப் போகவேண்டுமென்று விரும்பினான்.

''இந்தியச் சுவாத்தியம் ஒத்துவருமோ? முன்பு இந்தத் தோட்டத்திலிருந்து இந்தியாவுக்குப் போனவர்களில் எத்தனையோ பேர் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார்கள். இங்கிருந்து போவோர் ஏதோ சம்பாதித்து வருகிறார்கள் என்று தொல்லை கொடுக்கும் சொந்தக்காரர்கள், புதிதாக அங்கு போய் வாழ்க்கையை ஆரம்பிப்பதில் உள்ள கஷ்டம் — இவற்றையெல்லாம் எண்ணியவாறு கொண்டு போகும் சாமான்களைப் பெட்டியில் அடைக்கிறான் வேலுச்சாமி.

பூவாயிக்கும் இந்தியாவுக்குப் போவது கொஞ்சம் கூட விருப்பமில்லை. இந்தியா எப்படியிருக்கும் என்றே அவளுக்குத் தெரியாது, அவர்களுக்கு அது அந்நியநாடு.

'பிறந்து வளர்ந்த இந்த நாட்டைவிட்டுப் போகப் போகிறோம்' என்பதை எண்ணும்போது அவளுக்கு எல்லாவற்றையும் இழந்ததைப் போன்று ஒரு நிலை. பழைய நினைவுகள் அவள் மனதை அலைக்கழிக்கிறது. அவளுக்கு விபரம் தெரிந்த நாள் முதலாய் எத்தனை சம்பவங்கள் நடந்து முடிந்துவிட்டன. ஒன்றை மட்டும் அவளால் மறக்கமுடியவில்லை. நெஞ்சில் ஒரு முள்ளாக அது குத்துகிறது. பெருமாள்...? அவன்மேல் சிறுவயதிலிருந்தே அவளுக்கிருந்த அன்பு, பெரியவனான பெருமாளின் அடக்கம் கன்னியான அவள் உள்ளத்தைக் கவர்ந்தது. அப்பாதான் அவளுக்கு இப்படி ஒரு ஆசையை ஏற்படுத்தினார். இந்தியாவில உள்ள சொந்த ஊரில் திட்டமிட்ட கல்யாணம் சரிவராது என்றவுடன் பெருமாளைப் பற்றிய எண்ணத்தை ஏற்படுத்தியதால் அது நிறைவேருது போக பூவாயியின் மனதில் பூகம்பம் ஏற்பட்டது.

பூவாயி ஒவ்வொரு லயமாகப் பயணம் சொல்லிக் கொண்டு வருகிருள். 'நிரந்தரமாகவே தங்களை விட்டுப் பிரியப்போகிருள்' என்றவுடன் அவளுடன் மலையேறிய 'தாய்—பிள்ளைகள்' போன்று வாழ்ந்த பெண்கள், அழுதே விட்டார்கள். பூவாயி அழுதழுதே அவர்களுக்குப் பயணம் சொல்கிருள்.

பூவாயி கொழுந்துக் காட்டில் அடுத்த நிரையில் வேலை செய்த அஞ்சலையைக் கூட்டிக்கொண்டு கொழுந்துக் காட்டிலுள்ள மலைமாரியைக் கும்பிட்டாள்.

கையில் ஒரு பார்சலுடன் மேட்டு லயத்துப் பெருமாளின் காம்பராவிற்கு வருகிருள்.

''அத்தை'' அவளின் குரல் கரகரக்கிறது.

''யாரு பூவாயியா, உள்ளுக்கு வா. ஆயா ஒத்தக் கடக்கி போயிட்டாங்க'' பெருமாள்தான் வரவேற்கிறன்.

பூவாயி குசினிக்குள்ளிருந்த பலகைக் கட்டையை எடுத்துக்கொண்டுவந்து பெருமாளின் முன் வைத்து உட்காருகிருள், அவளால் ஒன்றுமே பேசமுடியவில்லை.

பெருமாளே ஆரம்பிக்கிருன்: ''நாளக்கி இந்நேரம் தலைமன்னுருக்கு போயிடுவீங்க.''

பூவாயி ஒன்றுமே பேசாது பெருமாளை ஏறிட்டுப் பார்க்கிருள். கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிகிறது. திடீரென விம்மல் ஒலி வெடிக்க பூவாயி சத்தமாக அழுகிருள்.

''பூவாயி''—பெருமாளின் கண்கள் பனிக்கின்றன.

''இனி நா ஒங்கள எப்ப காம்பேனே தெரியாது. இம்புட்டு நாளா மனசுல வைச்சிருந்தத இன்னிக்கி சொல்லுறன் ஒங்கள கல்யாணம் செஞ்சுக்கணும்னு ரொம்ப ஆசையாயிருந்தேன். அத்த நாங்க ஈந்தியாவுக்கு போறதுநால விருப்பமில்லன்னு எங்க அப்பாகிட்ட சொல்லிருச்சி. நா அத்த இப்புடி சொல்லுமுன்னு நெனச்சிருக்கவே இல்ல.''

பெருமாள் ஒருகணம் திகைப்பில் ஆழ்கிருன். மறுகணம் தன்னைச் சுதாரித்துக்கொண்டு, ''பூவாயி நீ ஈந்தியாவுக்குப் போறப்போ சந்தோஷமா போவணும். சும்மா மனசப்போட்டு அலட்டிக்காத,''

''இந்தப் பொறவியிலதான் ஒங்கள அடைய எனக்கு கொடுத்து வெக்கல. அடுத்த பிறவியிலயாவது ஒங்கள நா அடையணும்.''—பூவாயியின் குரல் கரகரக்கிறது.

அவள் மீண்டும் தொடர்கிருள்: ''நா ஒங்கள ஒண்ணு கேக்குறேன், நீங்க நெஞ்சில உள்ளத சொல்லுங்க. நா ஈந்தியாவுக்கு போவாம இருந்திருந்தா என்ன கல்யாணம் செஞ்சிருப்பீங்களா?''

பெருமாள் சிறிது நேரம் யோசித்துவிட்டுச் சொல்கிருன்: ''கண்டிப்பா ஒன்ன கல்யாணஞ் செஞ்சிருப்பேன்''

பூவாயி பெருமூச்சு விட்டுக்கொண்டே கையிலிருந்த பார்சலை மேசையில் வைக்கிறாள்

''இதில ஏவூட்டு படமிருக்கு. இத நீங்க வைச்சுக்கிட்டு ஒங்க வூட்டு படத்த தாங்க. அங்கே சுவத்துல தொங்கற ஒங்க படத்த எடுத்துக்கிட்டு ஏம் படத்த வெக்கிறேன்'' —அவளது குரல் தடுமாறுகிறது.

பெருமாளின் பதிலை எதிர்பார்க்காது அவள் படத்தை மாற்றுகிறாள். பெருமாள் அவள் செய்வதைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

''பூவாயி இங்கயா ஆயா இருக்க? நா ஒன்ன தேடி ஒன் வூட்டுக்கு போயிட்டுவாறேன். ரவைக்கு எங்கவூட்டுல ஒங்களுக்கு சாப்பாடு. வேலுசாமி அண்ணேங்கிட்ட சொல் லிட்டேன். இன்னிக்கி ஏங்கையால ஒனக்கு ஆக்கிப் போட ணும். இனி எப்ப ஆயா ஏன் வூட்டுல சாப்பிடப் போற'' ......செல்லாயி குரலில் சோகம் தொனிக்க சொல்லிக் கொண்டே காம்பராவிற்குள் நுழைகிறாள்.

அன்றிரவு பூவாயியும் வேலுச்சாமியும் பெருமாள் வீட்டில் இரவு உணவு சாப்பிட்டார்கள்.

விடிந்துவிட்டது. தோட்டத்து லொறி வேலுச்சாமி யையும், பூவாயியையும், அவர்களது சாமான்களையும் ஏற் றிக்கொண்டு போவதற்கு பலாமரத்து லயத்துத் தொங்க லில் போய் நிற்கிறது. பெருமாளும் செங்கோடனும் பெட் டிகளைத் தூக்கி லொறிக்குள் ஏற்றுகிறார்கள். வேலுச்சாமி யும் பூவாயியும் குழுமி நிற்கும் எல்லோரையும் கரம் கூப்பி வணங்குகிறார்கள். அஞ்சலை கலங்கும் கண்களைக் கட்டுப்படுத்தியபடி பூவாயியைக் கட்டியணைக்கிறாள். பூவாயி கண்ணீரைக் கட்டுப்படுத்தமுடியாமல் உடல் குலுங்க அழுதுகொண்டே அஞ்சலையின் பிடியிலிருந்து விலகி லொறிக்குள் ஏறுகிறாள்.

''போயிட்டு வாறேன்''—பூவாயியின் குரல் அத் தோட்டத்தில் இறுதியாக ஒலிக்கிறது. லொறி புறப்படு கிறது.

வேலுச்சாமியும் பூவாயியும் அனுதினமும் ஏறி இறங்கி உழைத்த மலைகள், வளைந்து செல்லும் ரோட்டுக்கள், கொழுந்து மடுவம், மாரியம்மன் கோவில், ஸ்டோர், தோட்டப் பாடசாலை, ஆசுப்பத்திரி எல்லாம் பின்னேக்கிச் செல்கின்றன. இவற்றையெல்லாம் இன்றுதான் கடைசி யாகப் பார்க்கமுடியும். நெஞ்சையள்ளும் துக்கம் திரண்டு வந்து விம்மல் ஒலியுடன் கண்ணீர் சிந்தவைக்கிறது. பொங்கிவரும் சோகத்திற்கு ஈடுகொடுக்கமுடியாது சால் வைக்குள் முகத்தைப் புதைக்கிறுன் வேலுச்சாமி. பூவா யிக்கு பெற்ற குழந்தையை தாயிடம் இருந்து பிரித்தெடுப் பது போலிருக்கிறது.

பண்டாரவளை ஸ்டேசன் நிரம்பி வழிகிறது. வேலுச் சாமி குடும்பத்தைப்போல வேறு தோட்டத்லிருந்தும் நிறையப்பேர் கூடியிருக்கிறுர்கள். அவர்களும் இந்தியாவுக்கு நிரந்தரமாகப் போகிறவர்களே. அவர்களைப் பலர் அழு தழுது வழியனுப்புகிறுர்கள்.

மகளை விட்டுச் செல்லும் தாய், தங்கையைப் பிரிந்து செல்லும் அக்கா ..... இன்னும் எத்தனை எத்தனையோ!

பெருமாள் இந்தச் சோக நாடகத்தைப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறுன்:

யாரோ ஒரு முதியவர் சொல்வது அவன் காதுகளில் வந்து விழுகிறது.

''நம்ம முன்னேர் அழுதழுதுதான் இந்நாட்டுக்கு வந் தாங்களாம். நாம இப்ப அழுதழுதான் அக்கரைக்குப் போறம். ஈந்தியாவுக்குப் போறதுக்கு அப்பிளிகேஷன்

போட்ட நாள்லயிருந்து 'சம்திங்'குக் கொடுத்த சல்லிய மொத்தங்கட்டிப்பாத்தா ஒரு தொக வரும். இனி அக் கரைக்குப் போயி நம்ம ஊர போயி சேர எம்மட்டு வேணுமோ? நாம கடசியா போற பயணமாச்சும் சொகமா யிருக்கா பாருங்க. கோச்சில தலவாணிக்குப் பஞ்சடச்ச மாதிரித்தான் போவணும். பிக்பொாக்கற் அடிக்கறவண் ணுட்டு சேட்ட வேற. நாம பாடுபட்டுச் சம்பாரிச்சுக் கொண்டு போற சாமான் பெட்டிய ஒடச்சு அது வேற வம்பு பண்ருங்க."

புகையிரதம் மேடைக்கு வந்துவிட்டது. எல்லோரும் முண்டியடித்துக்கொண்டு ஏறுகிருர்கள். பூவாயி ஆறுதலா கச் சென்று ஏறுகிருள்.

பெருமாளின் கண்கள் கலங்குகின்றன. பூவாயிக்காக மட்டுமல்ல, இந் நாட்டிற்குத் தங்கள் உழைப்பைத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு நிரந்தரமாகவே பிரிந்து செல் லும் அத்தனை பேருக்காகவும் பெருமாள் பெருமூச்சு விடு கிருன்.

புகையிரதம் புறப்படுகிறது.

பூவாயி பெருமாளைப் பார்த்தவாறு குரல் கரகரக்க "நாங்க போயிட்டு வாறம்" என்று சொல்லிக்கொண்டு கையை ஆட்டுகிருள்.

பூவாயியின் உருவம் தேய்ந்து மறைகிறது.

ஆங்கிலேயர் தேயிலைத் தோட்டப் பயிர்ச்செய்கையை முன்னிட்டுப் போட்ட தண்டவாளத்தில், பல தொல்லை களை அனுபவித்துவிட்டுத் தாயகம் திரும்பும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைச் சுமந்துகொண்டு புகை யிரதம் ஈனக் குரல் போன்ற இரைச்சலுடன் செல்கிறது.

காவல் தெய்வங்களுக்குத் தோட்டத் தொழிலாளர்கள் விழா எடுக்கும் பூசை நேற்று நடைபெற்றது. தொழிற்சாலேயில் ஆபத்து வரக்கூடாதென 'ரோதை' முனியை வேண்டிக் கும்பிட்டார்கள். கொழுந்தெடுக்கும் பெண்கள் 'வரி பிடித்து' மலேமாரியைக் கும்பிட்டார்கள். ஆடிப் பூசைக்குப் பின் அடைக்கப்பட்ட மாரியம்மன் கோவிற் கதவு நேற்றுத் திறக்கப்பட்டு பூஜை நடத்தப்பட்டது.

ஆடி முடிந்து, ஆவணி பிறந்துவிட்டது.

ஆடிப் பூசைக்குரிய வரவு செலவுக் கணக்குகளேப் பார்த்த தோட்டக் கமிட்டிக் கூட்டம் முடிந்து பெருமாள் வீட்டுக்கு வருகிறான். அங்கே மலேயாண்டியும் சூசையும் கூடியிருந்து சென்ற வாரம் நடைபெற்ற நாடகத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

'மூட்டம் விலகட்டும்' ஓரங்க நாடகம் எனக்கு ரொம்ப புடிச்சிருக்கு. நம்ம தோட்டத்துல இப்ப சொரண்ட வில்லே. சொரண்டலுள்ள தோட்டத்தில் இந்த நாடகத்தைப் போட்டா ஆளுகள் சிந்திச்சுப் பாப்பாங்க'—என்கிறான் சூசை.

''நம்ம தோட்டத்தில இப்போதைக்குன்னு சொரண்டலில்லே. திடுதிப்புன்னு பெரியதொர மாறிப்போனு, இப்பயிருக்கிற தொரமாரும் மாறிப்போயிட்டா நம்மதோட்டத்திலும் சொரண்டல் வேலே நடக்குந்தான்''—மலேயாண்டி கூறுகிறான்.

''அண்ணே! இந்த சொரண்டல எப்பவும் இல்லாமடிக்கிறதுக்கு ஒரு வழியுமில்லேங்களா''? —சூசை கேட்கிறான்.

''ஏன் இல்ல. அதுக்கு தோட்டத் தொழிலாளர் மட்டும் போராடினுல் பத்தாது. எல்லா தொழிலாளர்களும் சேர்ந்து போராடணும். சமுதாயத்தை மாத்தி அமைக்கணும். தொழிலாளர் அரசாங்கம் வரணும்'' மலையாண்டி சொல்கிருன்.

''நம்ம தோட்ட தொழிலாளிகள் மட்டும் போராடி உரிமைபெற இன்னும் எத்தனையோ பெரச்சனைகள் இருக்கு''—என்கிருன் பெருமாள்.

''ஆமா நாம இன்னும் போராடுறதுக்கு எத்தனையோ பெரச்சனயிருக்கு. மாதச் சம்பளம், ஆண்—பெண் சம சம்பளம், நம்ம குடியிருப்பையும் வேலை வாய்ப்பையும் பிணைத்திருக்கிற அடிமைத் தொழிலிலிருந்து விடுவிச்சுத் தொழிலாளர்களுக்குச் சுதந்திரக் குடியேற்றப் பகுதிகள் அமைக்கப்படணும், தோட்ட நிர்வாகம் மூலம் விநியோகிக்கப்படும்சேவை முறைகளை மாற்றி, கல்வி, சுகாதாரம், உணவு உடை விநியோகம் எல்லாமே நாட்டிலமத்தசமூகத்திற்கிருக்கறமாதிரி இருக்கணும்''— மலையாண்டி விளக்கமாகக் கூறுகிருன்.

வெளியே ஓர் ஈனக் குரல் கேட்கிறது. எல்லோரும் திடுக்குற்று வெளியே வருகிருர்கள்.

''ஐயோ இந்த அநியாயத்தை யாருக்கிட்ட சொல்லுவேன். மூணும் கட்டயில பஸ்ஸ நிற்பாட்டி, தோட்டத்தாளுங்கள வெளியில இழுத்து ஒதைக்கிருனுங்க. என்னை பஸ்சலேருந்து வெளிய இழுத்து போட்டு நெஞ்சில மிதிச்சிட்டானுங்க. பொடிமெனிக்கா வூட்டு மவேனும் அந்த பஸ்சிலதான் வந்தான். பேச்சு வெளங்காம நம்ம ஆளுங்களு நெனைச்சு நல்லா ஒதச்சிட்டாங்க''—எனச் செங்கோடன் நெஞ்சில் கையை வைத்தபடி சொல்லிக் கொண்டே பெருமாளைத்தேடி காம்பராவிற்குள் நுழைகிருன்.

பெருமாள் பதட்டத்துடன் செங்கோடனிடமிருந்து நடந்ததைக் கேட்கிறுன். செங்கோடன் சொன்னதைக் கேட்டதும் சூசை உணர்ச்சி வசப்படுகிறுன்.

மலையாண்டி, எங்கோ எப்படியோ தோன்றிய வன் செயல் தோட்டப் பகுதிகளுக்கும் பரவிவிட்டதை எண்ணிக் கவலை கொள்கிறுன்.

''அக்கா அவர ரொம்ப அடிச்சிப்புட்டாங்களா''?— என்று செல்லாயியை இரகசியமாகக் கேட்கிறுள் அஞ்சலை. செங்கோடனுக்கு சாணி ஒத்தடம் கொடுக்கச் செல்லாயி விரும்பியதால், அஞ்சலை சாணி தேடி பலாமரத்து லயத்துக்குப் போகிறுள்.

பெருமாள் பஸ்ஸில் தாக்கப்பட்ட பொடிமெனிக்காவின் மகன் நிமலேப் பார்க்க மாட்டுப்பட்டி லயத்துக்குப் போகிறுன். மலையாண்டி பணியக்கணக்கை நோக்கிப் போகிறுன்.

எண்திசையும் பனிமூட்டம் சூழ்கிறது.

## (31)

பணியக் கணக்கு ஆத்துலயம் உயிர்த்துடிப்புடன் இயங்கிக் கொண்டிருக்கிறது. இரு பக்கமும் மொத்தம் இருபத்திரண்டு காம்பராக்களைக் கொண்ட ஆத்துலயம், சன நெருக்கடியுள்ள சேரியைப் போலவே இருக்கிறது. வேலையால் வீடு திரும்பியவர்கள் இரவுச் சாப்பாட்டை ஆக்கிக் கொண்டிருக்கிறுர்கள். சிறுவர்கள் ஆக்கப்படும் சோற்றை உண்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறுர்கள்.

நன்றுக இருட்டிவிட்டது. எங்கோ ஒரு காம்பராவில் பூசாரி பூவலிங்கம் சாமி பார்க்கும் உடுக்கின் ஒலி தெளி

வாகக் கேட்கிறது. மாடன் வந்திருக்க வேண்டும்! வயிற்றுப் பிழைப்புக்குச் சென்ற கன்னி மங்கைக்கு முச்சந்தியில் அடித்த முனியைப் பற்றிச் சொல்கிறுன். தொங்கற் காம்பராவில் ஒரே பரப்பரப்பும் சந்தடியும். இந்தத் தோட்டத்தின் அழகு ராணி என்று சொல்லக் கூடிய சீதை என்ற பெண்ணுக்கும் அடுத்த தோட்டத்து ராமன் என்ற தொழிலாளிக்கும் நாளை கல்யாணம்.

இந்த நாட்டைவிட்டு நிரந்தரமாகவே இந்தியாவுக்குப் பயணமாகும் கவ்வாத்துக் கங்காணி சாமான்கள் எல்லாவற்றையும் பெட்டியில் போட்டு அடைத்துக் கொண்டிருக்கிறுன்.

நேற்று பிரஜாவுரிமை விசாரணைக்குக் குடும்பத்துடன் கொழும்புக்குப் போய், அதிகாரிகள் கேட்ட எத்தனையோ கேள்விகளுக்குப் பதில் சொல்லி, சத்தியப் பிரமாணம் செய்து கையுடன் பிரஜாவுரிமைப் பத்திரத்தை வாங்கி வந்த பிரதாபத்தை யாருக்கோ பெருங் குரலில் பீக்கர் பிச்சை சொல்லிக் கொண்டிருக்கிறுன்.

ஆப்பிரேஷனுக்குப் பிறகு நாட்டுக் 'கள்ளுத் தண்ணி' யைக் கைவிட்ட காத்தமுத்து பெரியெழுத்து விக்கிரமாதித்தன் கதையை ராகத்துடன் படித்துக் கொண்டிருக்கிறுன்.

மலையாண்டி மலையகத்துப் பிரச்சினைகள் அனைத்தையும் சமூகவியல் பின்னணியில், காரண காரியத் தொடர்புடன் ஆராய்ந்து மானிடப் பரிவுடன் பரிகாரம் காட்டும் ஒரு நல்ல நாவலின் நல்ல கட்டத்தை வாசித்துக் கொண்டிருக்கிறுன்.

வெளியே ஒரு வெடிச் சத்தம் கேட்கிறது.

ஒரே நேரத்தில் தேயிலைப் புதர்களுக்குள்ளிருந்து காடையர்கள் ஆத்து லயத்திலுள்ள அத்தனை காப்பிரா

விற்குள்ளும் நுழைகிறார்கள். லயத்து நாய்கள் குரைக்கின்றன. காடையர்கள் மேலாடையின்றி அரைக் காற்சட்டையும் முகமூடியும் அணிந்திருக்கிறார்கள். அவர்கள் கையில் கம்பு, இரும்புக் கம்பி, கத்தி, வாள், கிரீஸ்: அவர்கள் வாயில் அர்த்தமற்ற அசிங்கமான கோசங்கள். லயத்திலுள்ளவர்கள் பீதியால் 'குய்யோ முறையோ' எனக் கூக்குரலிடுகிறார்கள்.

என்ன செய்வதென்ற திகைப்புடன் திக்கற்று நிற்கிறார்கள் லயத்து வாழ் மக்கள்.

''ஏய் ஒருத்தனும் சத்தம் போடாது வெளியே போறது'' காடையர்கள் சொல்கிறார்கள்.

காடையர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டுகிறார்கள். பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடிக்கிறது ஒரு கூட்டம். அபகரித்த பொருட்களைச் சிறிது தூரத்திலுள்ள லொறிக்கு எடுத்துச் செல்கிறது இன்னொரு கூட்டம். ஒரு காடையன் சொல்கிறான் ''வத்தே மினிசுற்றத் உங்காக் சல்லி தியனவா''

மலையாண்டியின் காம்பராவிற்குள் நுழைந்த காடையன் ஸ்தோப்பில் முடங்கிக் கிடந்த குருடனான மலையாண்டியின் கழுத்திலே கத்தியை வைத்துப் பயமுறுத்திவிட்டு, அங்கிருந்த பொருட்கள் யாவற்றையும் அபகரிக்கிறான். மலையாண்டியின் தங்கையான வீரம்மா வெளியே ஓடுகிறாள்.

''ஐயோ'' என்று பீக்கர் போடும் சத்தம் பெரிதாகக் கேட்கிறது. பீக்கரின் சம்சாரம் நேற்றுக் கொழும்புக்குப் போயிற்று வந்ததால் இன்னும் காதிலே தொங்கும் நகையைக் கழற்றவில்லை. ஒரு காடையன் அவளிடம் பால் குடித்துக் கொண்டிருந்த குழந்தையை பிரித்துத் தூரத்தே வீசிவிட்டு, காதிலே தொங்கும் நகையை அவசரத்தில காதைப் பிய்த்தெடுக்கிறான்.

''ஐயோ சாமி என்னவுட்டுடுங்க நா மாசமாயிருக்கேன்'' பொட்டு அலறுகிருள்.

''இது சரியில்ல சோக்கானது ஒன்றிருக்குது''— என்று ஒரு காடையன் தனது தாய்மொழியில் சொல்கிருன்.

இரு காடையர்களால் நாளை மணப் பெண்ணுகப் போகும் சீதை தொங்கற் காம்பராவிலிருந்து வெளியே இழுத்து வரப்பட்டு, லயத்துக் கோடிக்குத் தூக்கிச் செல்லப்படுகிருள்.

அவள் உடுத்திருந்த சேலையாலேயே அவளது வாய் பொத்தப்படுகிறது. சீதையின் கற்பு மிருக வெறிபிடித்த மூன்று காடையர்களால் சூறையாடப்படுகிறது. நாளை மலர இருந்த மொட்டு காடையர்கள் கைப்பட்டு கருக்கிக் கிடக்கிறது.

'மலையாண்டி சொத்துக்கள் யாவற்றையும் பறிகொடுத்து, தந்தையைத் தோளிலே சுமந்து கொண்டு தேயிலைக்காட்டை நோக்கிப் போகிருன். பலர் தேயிலைக் கானுக்குள் ஒளித்திருக்கிருர்கள். எல்லோர் நெஞ்சிலும் பீதி குடிகொண்டிருக்கிறது. அடுத்தது என்ன நடக்குமோ?

ஏழைத் தொழிலாளர்களிடமிருந்து கொள்ளையடித்த பின் மிகுதியாக விடப்பட்ட பொருட்களுடன் ஆத்துலயம் தீப்பற்றி எரிவது தேயிலைக்கானுக்குள்ளிருந்து பார்க்கும் போது தெரிகிறது.

வாயில்லாப் பிராணிகளான கோழிகள் குடாப்புடனும், மாடுகளும் ஆடுகளும் பட்டியுடனும் பொசுங்குகின்றன. இவ்வளவு காலமும் இரத்தத்தை வியர்வையாக்கி உழைத்த யாவற்றையும் இழந்து, அடுத்த வேளைக்கு உணவும், மாற்றிக் கட்டத் துணியுமின்றி தேயிலைக்காடே தஞ்சமெனக் கைக் குழந்தைகளுடன் தாய்மார்கள், நோய்

வாய்ப்பட்டவர்கள், வயோதிபர்கள் இருப்பதைப் பார்க்கும்போது மலையாண்டிக்குக் கண்கள் கலங்குகின்றன.

இவர்கள் என்ன தவறு செய்ததற்காக இத்தண்டனையைப் பெற்றிருக்கிறார்கள். தங்கள் வயிற்றுக்கு உழைப்பதைத் தவிர வேறு என்ன குற்றம் செய்தார்கள்? இவர்களின் உழைப்பிற்தானே இந்நாட்டின் முதுகெலும்பான தேசிய வருமானம் தங்கியிருக்கிறது. இந்த வருமானத்தைக் கொண்டுதானே எமது தேசத்தைப் பிறதேசங்கள் மதிக்கின்றன. தமது தொழிலுண்டு தோட்டமுண்டு என்று எட்டடிக் காம்பராவிற்குள் ஒடுங்கிக் கிடப்பவர்கள் எதற்காகப் பழிவாங்கப்படுகிறார்கள்?

எங்கோ சாக்குருவி சத்தமிட்டுச் செல்கிறது. வெளவால்கள் அங்குமிங்கும் பறந்து செல்கின்றன.

'காடையர்கள் மீண்டும் வருவார்களா?'— எல்லோர் நெஞ்சங்களிலும் பயம் நிறைந்திருக்கிறது.

தேயிலையின் அரவணைப்பில், பன்றிகள், தீங்கு செய்யும் பிராணிகளுக்குப் பயந்து அட்டைக்கடியுடன் அன்றிரவு ஊர்கிறது.

மலையாண்டியின் சிந்தனை விரிகிறது. 'நூற்றைம்பதாண்டுகளுக்கு முன்பு மந்தைகள் போலக் கூலிகளாக இந்தியாவிலிருந்து இந்நாட்டிற்கு வந்தோம். பயங்கரமான மிருகங்கள் வாழ்ந்த காட்டை வெட்டிக் கோப்பியும் பின்பு தேயிலையும் நாட்டினோம். பெரிய கங்காணிமாரின் கெடுபிடிகளுடன் வெள்ளைக்காரரின் அடிமைகள்போல் வாழ்ந்தோம். எமது அரசியல் உரிமைகள் பலாத்காரமாகப் பறிக்கப்பட்டன. பொருளாதார கலாசாரத்துறைகளில் முன்னேற வழியற்றவர்களானோம். காலத்துக்குக் காலம் எம்மைப் பற்றி இந்திய அரசாங்கத்துடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு நாம் பேரம் பேசப்பட்டு பகடைக்காயாகிப் பங்கு போடப்பட்டோம். நாட்டில் நிலவிய பஞ்சத்தில்

நகைகளைமட்டுமல்ல எல்லாவற்றையுமே விற்று வயிற்றுப் பசி தீர்த்தோம். தோட்டங்கள் பங்கு போடப்பட்ட போது பரதேசிகளாக்கப்பட்டோம். நாட்சம்பளத்துடன் அடிப்படைத் தேவைகளற்ற நாம் இந்த மண்ணுக்கு வஞ்சகம் செய்யவில்லை. நாம் வஞ்சிக்கப்படுகிறோம். இந்த மண்ணிலே நமது வாழ்க்கை என்றும் சோதனையும் வேதனையும் நிறைந்ததாகவே இருக்கிறது.'

''ஐயோ நேத்துத்தானே கொழும்புக்குப்போய் பிரஜாவுரிமை எழுதிக்கிட்டு வந்தேன். எத்தன கேள்வியளக் கேட்டு தொலச்சாங்க. எவ்வளவு கஷ்டப்பட்டு எடுத்த அந்த பிரசாவுரிமைப் பத்திரம் நெருப்பில எரியுது''— பிச்சை சத்தமாகச் சொல்கிறான்.

''இந்த பெரஜாவுரிம இருந்துதான் நம்மளுக்கு என்ன புரோசனம். இது ஒரு லைசன் மாதிரித்தான்''—காத்தமுத்து சொல்கிறான்.

கூதலாலும் மனச் சஞ்சலத்தாலும் உடல் நடுங்க மலையாண்டியின் தந்தை வேலு சொல்கிறான்: 'ஒருகாலமும் நடக்காத அக்குரமங்க நடக்குது. நாம ஒருத்தருக்கு கெடுதல் செய்யல்ல. நாம்மள ஏ இப்புடி வதைக்கிறாங்க. நம்மள காக்கிற முனியாண்டி சாமி கோயிலையே ஒடைச்சிட்டாங்களாமே. முனியாண்டி சாமி லேசில வுடமாட்டா. மூண்ணு நாளையில ஒடைச்சவன்ட உசிரையே எடுத்துடுவான்.'

''எல்லாம் போச்சி' நா இனி ஈந்தியாவுக்கு எப்புடிப் போறது? நா சம்பாரிச்சது எல்லாம் போச்சு. வெறுங் கையோட அகதிகளாகத் தான் போவணும்''— தலையில் கையை வைத்துக் கொண்டு புலம்புகிறான். நாளை இந்தியாவிற்குப் போக இருந்த கவ்வாத்து கங்காணி.

''ஐயோ எம்வூட்டு மாடும் கன்னுக்குட்டியும் நெருப்புல வெந்திருக்குமே. எம் பென்சன் சல்லி பூரா கொட்டி ஒரு மாடு புடிச்சேன். அந்த சீதேவிதான் எனக்கு சோறும் போட்டுச்சு. நா இனி பிச்சதா எடுக்கணும்'' ஒரு வயோதிபன் அழுதழுது கூறுகிறான்.

எல்லோரும் பாதிக்கப்பட்டதால் ஒருவருக்கொருவர் ஆறுதல்கூற முடியாத நிலையில் கலங்கிய வண்ணம் இருக்கிறார்கள். அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்கத்துடன் வானமே கூரையாக, நிலமே படுக்கையாக தேயிலைக்காடே தஞ்சமென இருக்கும் அவர்களுக்கு அந்த இரவு நீள்கிறது.

பெருமாள், சூசை, ஆப்தீன் மூவரும் பணியக்கணக்குத் தலைவருடன் ஓடி வருகிறார்கள். மலையாண்டிக்குப் பெருமாளைக் கண்டதும் சிறிது நேரம் என்ன சொல்வதென்றே தெரியவில்லை. 'இந்த வகுத்தெரிச்சல என்னென்டு சொல்றது மச்சான். இப்ப இதப்பத்தி பேசிக்கிட்டிருக்கறதில பிரயோசனமில்ல. அகதிகளாக இருக்கிறவங்களுக்கு உடன் நிவாரணம் அளிக்கணும்.'

பெருமாளும் பணிகணயக்குத் தலைவரும் பாதிக்கப்பட்டவர்களை மற்றைய லயங்களிலுள்ள ஒவ்வொரு காம்பராவிருற் ஒவ்வொரு குடும்பமாக விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றனர்.

இன்னும் விடியவில்லை. சிறிசேனு ஒட்டமும் நடையுமாக நாட்டிலிருந்து வருகிறான், அங்கு நின்ற வாலிபர்கள் அர்த்தமற்ற கோஷங்கள் எழுப்பி அவனைத் தாக்கமுனைகின்றனர். என்றும் பழகியவர்களையே சந்தேகிக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு வருந்திய வண்ணம் சிறிசேனுவுக்குப் பாதுகாப்பளிக்கிறான் பெருமாள். சிறிசேனு தான் கொண்டு வந்திருந்த பொட்டலத்தைக் காட்டிச் சொல்கிறான். 'காடையங்க வழியில தவறவுட்டுட்டுப் போயிருக்காங்க.'

அந்தப் பொட்டலத்தில் தங்க நகைகள் இருக்கின்றன.

அவை திருமணப் பெண்ணுன சீதையின் நகைகள் என இனங்கண்டு பிடிக்கப்படுகிறது. மலையாண்டி அதனை வெறித்துப் பார்க்கிருன்.

அவளிடம் அபகரித்த நகைகள் திரும்பி கிடைத்து விட்டன. ஆனல் சூறையாடப்பட்ட கற்பு...? இந்தச் சீதையை நாளை அந்த ராமன் ஏற்பானு?'

பெருமாளிடம் சிறிசேனு ஏதோ இரகசியமாகச் சொல்கிருன்.

நாட்டிலுள்ள பௌத்த விகாரையின் மணி ஒலிக்கிறது. எரிந்த பட்டியிலிருந்து குற்றுயிராக எடுத்துக் கொண்டு வந்த ஆட்டுக்குட்டியொன்று எழுப்பும் மரண ஒலி புத்த கோவிலின் மணியோசையில் அமுங்குகிறது.

## ( 32 )

இரவிலிருந்த பயம் நீங்கவில்லை. 'பகலிலும் காடையர்கள் தோட்டத்திற்கு வருவார்களா?'

தோட்டம் முழுவதும் பயப்பிராந்தியமாகிவிட்டது. யாருமே வேலைக்குப் போகவில்லை. பணியக் கணக்கிலுள்ள ஆத்து லயத்தில் நடந்த கொள்ளையும் தீயும் எல்லோர் நெஞ்சிலும் வேதனையையும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

பெரியதுரை செய்தி கிடைத்ததும் ஆத்து லயத்துக்கு வந்தார். 'ஆத்துலயம்' இன்னும் எரிந்து கொண்டுதான் இருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களது அடிவயிறு பற்றி எரிவதை அவர்களது சோக முறையீடுகளிலிருந்தும்,

கூடாரமடித்துத் தங்கி நின்று கலைந்து போகும் குறவர்களின் குப்பத்தைப்போல, ஆத்துலயம் இருப்பதையும் பார்த்துப் பெரியதுரை மனவருத்தமடைந்தவராய் பொலிசுக்கு முறையீடு செய்துவிட்டு பதுளைக்கு இராணுவ உயர் அதிகாரியைச் சந்திக்கப் போய்விட்டார்.

பெருமாளும் சூசையும் டவுனுக்குப் போவது ஆபத்து என்று பலர் கூறியும், மனத் தைரியத்துடன் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறையீடு செய்தனர்.

இது போன்ற பல முறையீடுகள் வந்ததாகவும், வன் செயலில் ஈடுபட்டவர்கள் யார் என்று சொன்னால் தாங்கள் உடன் நடவடிக்கை எடுப்பதாகவும், யாராவது தோட்டத்திற்கு வந்தால் அடித்துக் காயப்படுத்தாமல் பிடித்துத் தரும்படியும் பொலிசார் சொன்னார்கள்.

பெருமாளும் சூசையும் தொழிற்சங்க ஆபிசுக்குப் போனார்கள். பிரதிநிதி தொலைபேசி மூலம் யாவற்றையும் அறிவித்துவிட்டதாகவும் இன்னும் மத்திய கமிட்டியில் இருந்து ஒரு பதிலும் வரவில்லை எனவும் சொன்னார்.

தோட்டத் தலைவர்கள் எல்லோரும் ஒன்று கூடுகிறார்கள். பெருமாள் கூறுகிறான்: 'பாதுகாப்புக்கு நாம யாரையும் நம்பிப் பிரயோசனமில்லைங்க. தோட்டத்திலே உள்ளவங்க காவல்படை ஒண்ணை உண்டாக்கி ராத்திரியில ரோந்து சுத்தணும்.'

உடல் வலி, மன வலி உள்ள ஆண்கள் அனைவரும் காவல் படையில் சேர்கிறார்கள். சூசையின் வீடு கொல்லன் பட்டறை போலாகிறது. கவ்வாத்துக் கத்தி தொட்டு உலக்கைவரையும் ஆயுதங்களாகின்றன.

இன்றிரவு மேற்கணக்கில் உள்ள மாட்டுப்பட்டி லயத்துக்குக் காடையர்கள் வரக்கூடும் என சிறிசேனா கொடுத்த

துப்பைக் கொண்டு சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாட்டுப்பட்டி லயத்தில் உள்ளவர்கள் எல்லோரும் மற்றைய லயங்களுக்கு முக்கியமான சாமான்களுடன் தற்காலிகமாக மாற்றப்படுகிறார்கள். இரவு பூராவும் தேயிலைக்குள் ஒளித்திருப்பது, காடையர்களை முதலில் காம்பராவுக்குள் நுழையவிடுவது, காடையர்கள் உள்ளுக்குள் புகுந்ததும் ஓடிச் சென்று கதவுகளை அடைத்துவிடுவது'— இதுவே இவர்களது திட்டம்.

பயங்கரம் கலந்த பகல் முடிந்து, ஏக்கம் நிறைந்த இரவு வருகிறது.

நேரம் செல்லச்செல்ல எல்லோர் நெஞ்சிலும் பீதி அதிகரிக்கிறது. பெண்களும் சிறுவர்களும் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆக்கிய சாப்பாட்டைக் கூட யாருமே நிம்மதியுடன் உட்கொள்ளவில்லை எங்காவது சிறு சத்தம் கேட்டால் எல்லோரும் பயமும் பரபரப்பும் அடைகிறார்கள்.

மேட்டு லயத்துக்கு மேலேயுள்ள மலையில் ஏதோ ஒரு சத்தம் கேட்கிறது. கத்தியும் கம்பும் கொண்டு காவற் படையினர் ஓடுகிறார்கள். தேயிலைக்குள் சரசரத்துக் கேட்கிறது. கானுக்குள் யாரே ஓடுவது போலத் தெரிகிறது. பன்றிக் கூட்டம் ஒன்று காவல் படையினரின் சத்தம் கேட்டுப் பின்னோக்கி ஓடுகிறது. மாட்டுப்பட்டி லயத்திற்கருகில் காவல் படையினர் தேயிலைக்குள் ஒளித்திருக்கிறார்கள்.

நடுச்சாமம் இருக்கலாம். கறுப்பந்தைலக் காட்டுத் தொங்கலில் ஒரு கார் வந்து நிற்கும் சத்தம் கேட்கிறது. பந்தம் ஒன்று மாட்டுப் பட்டி லயத்தை நோக்கி வருகிறது. லயத்துக் கருகில் வந்ததும் பந்தம் அணைக்கப்படுகிறது. முகமூடி அணிந்த மூவர் ஓடிவந்து பொடிநோனாவின் காம்பராவைத் திறந்து உள்ளே நுழைகிறார்கள். சூசையும் வீரச்சாமியும் ஒரே பாய்ச்சலில் சென்று காடையர்களை உள்ளே விட்டுக் கதவைப் பூட்டி விடுகிறார்கள்.

முன்னேற்பாட்டின்படி மாரியம்மன் கோவில் மணி தொடர்ந்தடிக்கிறது. பக்தி பரப்ப வேண்டிய கோவில் மணி ஆபத்து மணியாக ஒலிக்க, எங்கோ எல்லாம் காவல் காத்துக்கொண்டிருந்த காவல் படையினர் மாரியம்மன் கோவிலை நோக்கி ஓடி வருகிறார்கள். அங்கிருந்தவாறே எல்லோரும் மாட்டுப்பட்டி லயத்தை நோக்கி ஓடுகிறார்கள்.

உள்ளுக்குப்போன காடையர்களிடமிருந்து எதுவித சமிக்ஞையும் வராததால், ஏனைய காடையர்கள் மாட்டுப் பட்டி லயத்தை நோக்கி ஓடி வருகிறார்கள். காடையர் களின் கைக் குண்டுகள், மண் அடைத்த போத்தல்கள் யாவும் 'வாச்சர்' வீரச்சாமியின் சிலம்பு வீச்சில் சிதறிச் சின்னாபின்னப்படுகின்றன. காவல் படையினரின் கை வரிசைக்கு முன் காடையர்கள் தோற்றுப்போய் இரத்தம் சிந்தும் காயங்களுடன் வந்த வழியாக ஓடுகிறார்கள். காவல் படையினரில் சிலரும் சிறிது காயப்படுகின்றனர்.

உள்ளே அகப்பட்ட காடையர்கள் பொறிக்குள் சிக்கிய எலியாக உள்ளுக்குள் ஓடுவதும், கதவை உடைப்பதும் வெளியே கேட்கிறது.

'உள்ளுக்குள் இருப்பவர்கள் யாராக இருக்கும்? இதுவே எல்லோர் நெஞ்சங்களிலும் கேள்விக் குறி.

''தெய்யனே'' உள்ளே ஒரு ஈனக் குரல் கேட்கிறது. ''ஐயோ! நான் காயப்பட்டுட்டேன். இரத்தம் கொட்டி மயக்கம் வருது. தயவு செய்து கதவைத் திறவுங்கள்'' ஒரு குரல் சிங்களத்தில் ஒலிக்கிறது.

சூசை சொல்கிறான்: 'ஜாலம் போடுறாங்க. தப்பிச்சு ஓடுறதுக்கு. பொலிஸ் வந்துதான் கதவைத் திறக்கணும்''

பதுளையிலிருந்து இராணுவத்துடன் தோட்டத்திற்கு வந்த துரை, இந்தச் செய்தி கேட்டதும் மாட்டுப்பட்டி

லயத்துக்கு இராணுவத்தினருடன் வருகிறூர். நடந்த தைக் கேட்டதும் இராணுவத்தினர் துப்பாக்கியை நீட்டிய படி கதவைத் திறக்கின்றனர். முகமூடி அணிந்த ஒருவன் இரத்த வெள்ளத்தில் மயங்கிக் கிடக்கிறுன்.

மற்றவர்கள் அருகில் நிற்கிறுர்கள். முகமூடி கழற்றப் படுகிறது. யார் இவர்கள் என ஆவலுடன் எதிர்பார்த் துக்கொண்டிருந்த எல்லோரும் திகைப்புற்றனர். மயக்க முற்றிருப்பவன் வீரக்கோன், அருகில் நிற்பவர்கள் ஆரிய தாசாவும் பொடிசிங்கோவும்.

இந்தத் தோட்டத்திலே பாக்கும் பலாக்காயும் தூக் கிப் பிழைத்து, இன்று பெரிய முதலாளியான சில்வாவின் மகனும், இந்தத் தோட்டத்தில் வேலே செய்து பிழைக்கும் ஆரியதாசாவுமா இந்த அநியாயத்தைச் செய்கிறுர்கள் எனத் தோட்டத்துச் ஜனங்கள் வாயில் விரலே வைக்கிறுர் கள்.

பெரியதுரை வன்செயலுக்குக் காரணமான மூன்று சக்திகளே, இந்த மூவர் மூலம் இனங் காண்கிறுர். மண் கொள்ளேயடிப்பவர்களின் பிரதிநிதியாக ஐ. ஆர். சி. பொடிசிங்கோ: இனத்துவேசத்தின் பிரதிநிதியாக ஆரிய தாசா; தனிப்பட்ட குரோதங்களின் பிரதிநிதியாக வீரக் கோன்.

இராணுவத்தினர் வீரக்கோனுக்கு எப்படிக் காயப் பட்டதெனக் காடையர்களிடம் கேட்கிறுர்கள். உள்ளே யிருந்து வர முயன்று ஆரியதாசா கதவுக்குக் குத்தியதாக வும், இருட்டில் குறி தவறி வீரக்கோனின் வயிற்றைத் தாக் கியதாகவும் விடை கிடைக்கிறது.

அதற்குள் காவற்படையில் ஒரு பகுதியினர் கார் நிறுத் திய கறுப்பந்தைலக் காட்டுத் தொங்கலில் காரை முற்றுகை யிட்டபொழுது 'றைவர்' கைகளே உயர்த்திச் சரண் அடைந்

திருப்பதாகக் கேள்வியுற்று, இராணுவத்தினர் அங்கே போகிருர்கள். சரண் புகுந்த 'றைவரை' விசாரித்த பொழுது, லயத்தில் ஒரு பெண்ணைக் கடத்திச் செல்லத் தனது காரை வீரக்கோன் பிடித்து வந்து வந்ததாகச் சொல்கிருன்.

இராணுவ மேலதிகாரி காவற்படையினரின் செயற்திறனைப் பாராட்டிவிட்டு, தற்பொழுது வந்துள்ள இராணுவத்தினர் காவலுக்குப் போதாது எனவும், காவற்படையினரைத் தொடர்ந்து காவல் செய்யும்படியும், நாளை காலையில் தோட்டத்தில் தங்கியிருந்து காவல் செய்ய இராணுவத்தினரை அனுப்புவதாகவும் கூறிவிட்டு வீரக்கோன், ஆரியதாச, பொடிசிங்கா ஆகியோரை ஜீப்பில் ஏற்றிக் கொண்டு செல்கிருர்.

தற்காலிகமாகக் குடிபெயர்ந்த பொடிமெனிக்காவும் சோமாவதியும் பெருமாளின் காம்பராவில் இருக்கிருர்கள்.

சோமாவதியைக் கடத்திச் செல்வதற்காகவே காடையர்கள் மாட்டுப்பட்டி லயத்திற்கு வந்ததாகச் செய்தி தோட்டம் முழுவதும் 'டும் டும்' எனப் பரவுகிறது. பொடிமெனிக்கா இதனைக் கேட்ட நேரம் தொடக்கம் வெட்கமும் வேதனையும் கொண்டவளாக இருக்கிருள், சோமாவதி பேயறைந்தவளாகக் காணப்படுகிருள்.

பொடிமெனிக்கா தன் வேதனையை மகள்மேல் கோபமாகக் கொட்டுகிருள்: ''எல்லாம் உன்னுலதான் வந்தது. சிறிசேனுவை கல்யாணம் பேசினபொழுது நீ சம்மதித்திருந்தால் இந்தக் கஷ்டமெல்லாம் வருமா? இப்ப சிறிசேனுவுக்கு தனது தங்கச்சி செத்ததுக்குப் பிறகு கல்யாணம் செய்யவே விருப்பமில்லையாம். இந்தச் சேதி இப்ப பெரிய துரை மட்டும் போய்விட்டது பெரிய கேவலம் உயிரோட இருக்கிறதில வேலையில்லை. சின்ன மகனைப்பற்றித்தான்

யோசிக்கிறேன்.இல்லாட்டால் இப்போதே கோவா மருந்து குடித்துச்செத்துப் போவேன்.''

சோமாவதிக்கு தலைக்குள் ஏதோ செய்கிறது. ஆறுதல் சொல்லி அணைக்கவேண்டிய தாயே சீறியதைக் கண்டு தன் னம்பிக்கையை இழக்கிறாள். யாருக்காக சிறிசேனவைக் கல் யாணம் செய்ய முடியாதென்றாளோ, அந்த பெருமாள், அவளது அன்பைப் புரிய எவ்வித சிரத்தையும் இதுவரை எடுக்கவில்லை. வீரக்கோனும் தொடர்ந்து அவளுக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டேயிருப்பானே.

செல்லாயியாவது ஏதாவது ஆறுதல் சொல்வாளென் றால், அவள் பணியக்கணக்கில் தனது மகள் பொட்டு வின் குடும்பத்திற்கு ஏற்பட்ட பேரிழப்புப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறாள். ''இனி நாம இந்த ஊரிலயிருந்து வேல யில்ல. நா தான் மடச்சியா போனேன். வேலுச் சாமியண்ணே நம்ம பெருமாளை பூவாயிக்குக் கட்டி வைச்சு ஈந்தியாவுக்குக் கூட்டிக்கிட்டுப் போக எவ்வளவு ஆசையாக இருந்தாங்க. அவங்க இஷ்டம்போல செஞ்சிருக் கலாம். வேலுச்சாமி அண்ணனுக்கு ஒரு காயிதம் போட்டு நாமளும் ஈந்தியாவுக்கு போறதுதான் நல்லம்.''

சோமாவதிக்கு எதிர்கால வாழ்க்கையில் நம்பிக்கை யற்றுப் போகிறது. மனதில் ஏதோ ஒரு குற்ற உணர்வு மேலோங்கி நிற்கிறது. உறக்கம் வரவில்லை. அஸிலின் மக ளும், சுதுநோனவும் நினைவிற்கு வருகிறார்கள். இவர்களைப் போல மானமிழந்தபின் இறப்பதிலும் பார்க்க முன்பே உயிரை மாய்த்துவிட்டால்......?

வேறு வழி எதுவும் சோமாவதிக்குப் புலப்படவில்லை. தற்கொலை செய்துகொள்வதே ஒரே வழியாகப்படுகிறது.

மாட்டுப்பட்டி லயத்துக்கருகில் காவல் காத்துக் கொண்டிருக்கும் தொழிலாளர்கள் நெருப்பு மூட்டிக் கூதல்

காய்ந்தவண்ணம் வன்செயல் பற்றி உரையாடிக்கொண்டிருக்கிறார்கள்.

''நாம எல்லோரும் ஈந்தியாவுக்குப் போறதுதான் நல்லம். இந்த ஊரிலே இனி இருக்கிறதில வேலையில்லை''—சூசை சொல்கிறான்.

''மூட்டை முடிச்சுகளைக் கட்டிட்டு நாம ஒரு பக்கமா ஒதுங்கிறதுதான் நம்மளுக்கு பாதுகாப்பு. எவ்வளவு நாளைக்கு இப்படி இருக்கிறது''—ஆப்தீன் கூறுகிறான்.

''மலையகத்தில நாம பொறந்தம். நாம மலையகத்தில உரிமையோட வாழ போராடணும். அமெரிக்காவில் கறுப்பு இன மக்கள மாதிரி நாம போராடினு மானத்தோட வாழலாம்'' —பெருமாள் உறுதியுடன் சொல்கிறான்.

விடிவின் வரவைக் கட்டியம் கூறுவதுபோல எங்கிருந்தோ சேவல்கள் கூவுகின்றன.

## (33)

அடுத்த நாள் பெருமாளைப் பெரியதுரை அழைத்து பணியக்கணக்கில் வன்செயலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவும் உடையும் வாங்கிக்கொடுத்து, ஒழுங்காகப் பகிர்ந்தளிக்கும் பணியை அவனிடம் ஒப்படைக்கிறார்.

பொடிமெனிக்கா கோவாவிற்கு மருந்தடிக்க மாட்டுப்பட்டி லயத்திலுள்ள மரக்கறித் தோட்டத்திற்குப் போய்விட்டாள்.

சோமாவதியின் தீர்மானம் நேரம் செல்லச் செல்லத் திடமாகிறது. மாட்டுப்பட்டி லயத்துக்குப் போய், தாய் கோவாவிற்கு அடித்துவிட்டு வைத்த கிருமிநாசினியை யாருக்கும் தெரியாமல் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறாள்.

மீண்டும் இரவு வந்துவிட்டது. தோட்டம் முழுவதும் இராணுவத்தினர் ரோந்துசுற்றுகின்றனர். தோட்டத்து மக்கள் பல நாட்களுக்குப் பிறகு இன்று நிம்மதியாகத் தூங்குகின்றனர்.

சோமாவதிக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. இன்னும் கொஞ்ச நேரத்துள் கிருமிநாசினி குடிக்கப்போகும் அவளின் சிந்தனையில் கடந்த கால நினைவுகள் தோன்றுகின்றன. பெருமாளுக்கும் தனக்கும் இளவயதிலிருந்து இருக்கும் பிணைப்பை வேதனையுடன் எண்ணுகிறாள். தன்னை அவன் புரிந்துகொள்ளாதது பூர்வீகப் பாவமென நம்புகிறாள்.

திடீரென அவளது சிந்தனையில் ஒரு பொறி. 'விடிந்தால் நான் இந்த உலகுக்குச் சொந்தமற்றவள். ஆனால் பெருமாளின் வீட்டில் நஞ்சு குடித்துச் செத்தால் தோட்டத்தில் ஏதாவது சொல்வார்களே' தெளிவற்ற சிந்தனையுடன் பெருமாள் படுத்துறங்கும் காம்பராவிற்குப் போகிறாள் சோமாவதி.

பெருமாள் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருக்கிறான். அவள் மிக அருகில் போய் வைத்த கண் வாங்காமல் பெருமாளைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். 'இதுதானே கடைசித் தடவை. இனி இந்தப் பிறவியில் பார்க்கமுடியாதே.' படுக்கையில் புரண்ட பெருமாளின் கால்களுடன் சோமாவதியின் கால்கள் மோத அவன் திடுக்கிட்டு விழிக்கிறான்.

''யாரது''— பெருமாள் கேட்கிறான்.

''நான் தான்''—சோமாவதி கூறிக்கொண்டே 'ஓ' வென்று கதறியழுகிறாள்.

பெருமாள் படுக்கையை விட்டெழுந்து, ''ஏன் சோமா அழுகிறாய்? ஒனக்கு ஏதாவது கரைச்சலா?'' என மிக ஆதரவுடன் கேட்கிறான்.

சோமாவதி சுவாமியாருக்கு முன் பாவமன்னிப்புக் கோரும் கிறீஸ்தவப் பக்தனை போல தன்னை மறந்து உள்ளத்தில் உள்ளதை அப்படியே கொட்டிவிடுகிறாள்.

சோமாவதி தன்னைக் காதலிக்கிறாள் என்பதைக் கேட்டதும் பெருமாளுக்கு பெரு வியப்பாக இருக்கிறது.

''நீங்க ஒரு நாள், காதல் கல்யாணத்திலதான் முடியணும் அல்லது பாவம்னு சொன்னீங்களே! நான் பாவம் செஞ்சவள்'' —சோமாவதி அழுகிறாள்.

சிறிவயதிலிருந்து சோமாவதிக்கும் தனக்கும் இருந்து வரும் உறவைப் பெருமாள் எடைபோடுகிறான். ஒரே லயத்தில் அடுத்த காம்பராவில் தான் பிறந்தது, சோமாவதியுடன் மாட்டுப்பட்டி லயத்தில் மண் விளையாடியது, அவளது தகப்பனான அப்புகாமி இறந்தபின் அந்தக் குடும்பத்துக்கு வேண்டிய உதவியைத் தன்னால் இயன்றளவு செய்தது.........

மனத்திரையில் காட்சிகள் பல விரிகின்றன. இன்று இந்த உறவு இப்படி உருவெடுத்திருக்கிறதே ... மானிடப் பரிவு, மொழி, இனம் இவற்றைக் கடந்தது என்பது அவன் முன் நிதர்சனமாகிறது.

பெருமாள் சிறிது நேரம் யோசித்துவிட்டு ஆறுதலாகச் சொல்கிறான்.

''சோமா ஏன் அழுறாய்? நா இதுவரை ஒருத்தரையும் கலியாணம் செய்யிறதாக யோசிக்கல்லை. சரி ஒன்னையே கட்டிக்கிறன்.''

''நிஜமாவா?'' —சோமாவதியின் சோகக் கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக மாறுகிறது. தொடர்ந்து தனது தற்போதைய தற்கொலைத் திட்டத்தைச் சொல்கிறாள்.

பெருமாள் சிரித்துக்கொண்டே சொல்கிருன்: ''சோமா! நாம வாழத்தான் பொறந்தோம். சாகப் பிறக்கவில்லை. மிருகஜாதிகூட சாக விரும்புறதில்ல. பகுத்தறிவு படைத்த நாம சாக நெனைப்பது எம்புட்டு கோழத்தனம்.''

சோமாவதி எதையோ யோசித்துவிட்டுக் கேட்கிருள்: ''என்ன கலியாணஞ் செஞ்சிக்கிறதா சத்தியஞ் செய்து தாறிங்களா!''

பெருமாள் பெரிதாகச் சிரித்துக்கொண்டே சொல்கிருன்: ''என்ன சோமா என்னை நம்பமாட்டியா? நா என்னைக்கும் சொன்ன சொல்ல மாத்த மாட்டேன். ஓனக்கு தெரியுந்தானே! வாக்கு கொடுத்திட்டு ஏமாத்திறவங்களும் ஒலகத்தில இருக்கிருங்க.''

''நீங்க எல்லாம் ஈந்தியாவுக்கு போறதென்னு நானும் கூட வாறேன்.''

''இல்ல சோமா நா சிலோனவுட்டு போகப்போறதில்ல. இது நா பொறந்த நாடு. அதைவுட்டு ஒரு நாளும் போகமாட்டேன்.''

என்ன நினைத்தாளோ சோமாவதி திடீரென்று சொல்கிருள்; ''அடுத்த ஆடிப் பூசைக்கு மொதலிலே நாம எல்லாம் கதிர்காமம் போயிற்று வரணும்'' —சோமாவதி தனது நீண்ட நாளைய நேர்த்திக்கடனை நிறைவேற்றப் போகிருளோ!

''நா பாக்கியசாலிதான்'' என்று தொடர்ந்து கூறிய சோமாவதி, பெருமாளிடம் விடைபெற்று நிம்மதியுடன் செல்லாயியும் பொடிமெனிக்காவும் தூங்கும் காம்பராவில் போய் தூங்குகிருள்.

பெருமாளுக்குத் தூக்கம் வரவில்லை. தனது வாழ்க்கையில் விரைவில் ஏற்படப் போகும் திருப்புமுனை பற்றிச் சிந்திக்கிருன்.

ஏனோ முதலில் அஞ்சலை அவன் மனக்கண்முன் வரு கிறாள். அஞ்சலைக்கு விரைவில் செங்கோடன் புனர்வாழ்வு கொடுப்பான் என்ற நம்பிக்கை அவனுக்கு ஆறுதலைத் தரு கின்றது. அஞ்சலை இப்பொழுது மாறிவிட்டாள். ஆடிப் பூசைக்கு கோவிலுக்கு வந்தாளே. முன்பு ஒரு சம்பள நாளன்று வெறுங்கையோடு வீட்டுக்குப் போனபொழுது செங்கோடனிடமிருந்து கடலை வாங்கியதற்கு காளிமுத் துவை அடித்தவள் இந்த வருடம் ஆடிப்பூசைக்கு செங் கோடன் உடுப்பு வாங்கிக் கொடுத்ததற்கு ஒன்றுமே பேச வில்லையே.

இந்தியாவுக்குப் போன பூவாயி மனதில் தோன்று கிறாள். இந்தியாவில் கல்யாணம் செய்து அவள் பிள்ளை குட்டிகளுடன் வாழவேண்டுமென்று மாரியம்மனை வேண்டு கிறான் பெருமாள். எதிரே யுள்ள பூவாயியின் புகைப்படம் அவனைப் பார்த்துச் சிரிப்பது போலிருக்கிறது.

தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்குத் திறம்படத் தீர்வு காணும் பெருமாளுக்கு, வாழ்க்கை எவ்வளவு சிக்க லானது, உணர்ச்சிகள் எவ்வளவு மென்மையானவை என் பது இப்பொழுதுதான் புரிகிறதோ!

## ( 34 )

பொழுது விடிகிறது.

இன்னும் கொஞ்சநேரத்தில் சங்கடித்துவிடும். இரண்டு நாட்களுக்குப் பிறகு இன்று தோட்ட வேலை. தோட்டத் தொழிலாளிகளுக்கு என்ன மாதச் சம்பளமா கிடைக் கிறது? ஒரு நாள் 'பேர்' போட்டால்தானே வயிற்றுக் கொடுமை நீங்கும். இவர்களின் கை அசைந்தால்தானே இந்நாட்டில் செல்வம் கொழிக்கும், பசிக்கு உணவும் நோய் நீங்க மருந்தும் பிறநாட்டிலிருந்து வரும்.

பெருமாள் பிரட்டுக் களத்துக்குப் புறப்படுகிறான். செல்லாயியும் பொடிமெனிக்காவும் வெளிக்காட்டுக்குப் போய் விட்டார்கள்.

எதிர்காலக் கணவனை நோக்கி, தேநீர்க் கிளாசுடன் வருகிறாள் சோமாவதி. "ரொட்டி சுட்டாச்சுங்க! பெரட்டுக்குப் போக முந்தி சாப்பிட்டிட்டுப் போங்க!"

"நீ சாப்பிட்டுட்டு மலைக்குப் போ சோமா! நா அப்புறம் சாப்பிடறன்."

"அய்யா சாப்பிட்டப்புறந்தானே அம்மா சாப்பிடுவாங்க"— சோமாவதி முகம் சிவக்கச் சிரித்தவண்ணம் பெருமாள் முன் நிற்கிறாள். தேநீரை வாங்கும் பெருமாள் அவளை ஏற இறங்கப் பார்க்கிறான்.

சோமாவதி கைகள் உரச தேநீரை அவனிடம் கொடுத்துவிட்டுச் சொல்கிறாள். "ஆடிப்பூசை அன்னிக்கி நாடகத்தில காதலுக்கு நல்லா நடிச்சீங்க!"

அவளது பார்வை எதற்கோ யாசிப்பது போல பெருமாளுக்குப் படுகிறது.

சோமாவதியின் கைகளை மெல்லப் பற்றி விரல்களைத் தடவியவண்ணம் சொல்கிறான்: "சோமா அது நாடகம், இது வாழ்க்கை. நாடகத்தில காதலியின் கையைத் தடவிச் சொன்னேன் பட்டு விரல்கள்னு. பார் சோமா ஒன் விரல் கொழுந்தெடுத்து வெடித்துக் கறுத்திருக்குது."

முதற் சங்கடிக்கிறது.

பெருமாள் பிரட்டுக் களத்தை நோக்கிப் போகிறான்.

பிரட்டுக் கலைக்கிறார் கண்டக்டர். அதிக ஆட்களைப் போட்டு, இன்றுடன் கவ்வாத்தை வெட்டி முடித்துவிட்டு,

நாளைக்குப் புதுமலை வேலையைத் தொடங்கவேண்டுமென்று கண்டக்டர் பெருமாளைப் பார்த்துச் சொல்கிறார்.

மாரிமுத்துக் கங்காணி "இன்றைக்கு கவ்வாத்துமலைச் சாமி கும்பிடுவோம்" என எல்லோருக்கும் சொல்கிறான்.

இரண்டாவது சங்கு அடிக்கிறது.

ஆண்களும் பெண்களும் வேலைக்குப் போகிறார்கள். இரண்டு நாளாக வெறிச்சோடிக் கிடந்த தோட்டம் விறுவிறுப்பாக இயங்குகிறது. கத்தி, முள்ளு, மண்வெட்டி ஏந்திய ஆண்கள் வேலைக்குப் போகிறார்கள். மருந்தடிக்கும் மெஷினின் சத்தம் மலையிலிருந்து தெளிவாகக் கேட்கிறது. கூடையைத்தலையில் சுமந்து குறுக்குப் பாதையில் கொழுந்தெடுக்கப் போய்க்கொண்டிருக்கிறார்கள் பெண்கள்.

கொழுந்துக் காட்டிலே பெண்கள் யந்திரமாக இயங்குகிறார்கள். சோமாவதி, "பொலி... பொலி..." எனக் கூவுவது மலைகளில் எதிரொலிக்கிறது.

பெருமாள் கவ்வாத்துக் கத்தியேந்தி கவ்வாத்து மலையை நோக்கிப் புறப்படுகிறான்.

அஞ்சலையின் மகன் காளிமுத்து பெருங்குரலில் பாடம் படிப்பது இன்று புதிய அர்த்தத்துடன் பெருமாளுக்கு கேட்கிறது.

"ஈழம் எங்கள் தேசம். சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஈழ மாதாவின் புதல்வர்கள்."

தூரத்தே சிறிசேனா வேலைக்கு வருகிறான். வீரக்கோன் பதுளை ஆஸ்பத்திரியில் செத்துப்போன செய்தியைப் பெருமாளுக்குச் சொல்லவேண்டுமென்ற அவசரம் அவனுக்கு. தங்கை சுதுநோனா இறந்த பின் இன்றுதான் அவன் சிரிக்கிறான்.

காளிமுத்து பாடம் படிப்பது தொடர்கிறது.

''பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் எல்லாம் இந்நாட்டின் மதங்கள்.''

ஆப்தீனும், நெஞ்சு தெரியச் சேர்ட் அணிந்த சூசையும் பெருமாளுடன் இணைந்து கவ்வாத்து மலையை நோக்கிப் போகிறார்கள்.

அவர்கள் காலை இளங்கதிர்கள் ஒளிவீசும் வானத்தைப் பார்க்கிறார்கள். தோட்டத்து எல்லைக்கு அப்பால்— கண்ணுக்கு எட்டிய தூரம்வரை — உள்ள கிராமங்கள், நகரங்கள் அடங்கிய பிரதேசத்தை மூடியுள்ள மூட்டம் இளங்கதிர்களின் ஒளிவீச்சில் கலைவதைப் போலிருக்கிறது. தோட்டம் சார்ந்த — தொடுவானம் வரையும் உள்ள — பச்சையும் பசுமையும் நிறைந்த பிரதேசத்தை நம்பிக்கை ஒளியுடன் அவர்கள் நோக்குகிறார்கள்.

— முற்றும் —

## வீரகேசரி பிரசுரம்-75

இது ஒரு மலையக நாவல். மலையகம் என்றால் என்ன? வெறும் மலையும், மலைசார்ந்த இடமும் மலையகமாகி விடாது. வரலாற்று நிர்ப்பந்தத்தால் பிழைப்புத்தேடிப் பிறந்த மண்ணை விட்டு இந்நாட்டிற்கு வந்த ஒரு மக்கட் கூட்டத்தின் சோகச் சரித்திரமே மலையகத்தின் வரலாறு. குடியுரிமை பறிக்கப்பட்ட நவீன அடிமை விலங்கு ஒரு புறம்! பலவித உருவில் அமுக்கி உருப்பட விடாத சுரண்டலின் சுமை மறுபுறம்!! இந்நாட்டிற்குள் அடியெடுத்து வைத்த நாள் தொட்டு இற்றை நாள் வரையுள்ள சோதனையும் வேதனையும் நிறைந்த மலையகத்தின் வரலாறு இந்நாவலில் இழையோடுகிறது.

574